


ரமண மகரிஷி

கே. சுவாமிநாதன்

ரமண மகரிஷி

பேராசிரியர்: கே. சுவாமிநாதன்

தமிழாக்கம்

லா. சு. ரங்கராஜன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

First Published 1980 (1901)

Reprinted 1988 (1909)

RAMANA MAHARISHI (TAMIL)

Rs. 12.-2

Published by the Director, National Book Trust, India, A-5, Green Park, New Delhi-110016 and Printed at J.K. Offset Printers, Matia Mahal, Delhi-110006

நன்றியுரை

ஸ்ரீ ரமணாச்ரமம் வெளியிட்டுள்ள நூல்களிலிருந்து பற்பல பகுதிகளை ஆங்காங்கே பயன்படுத்த அனுமதி வழங்கிய ஆச்ரம நிர்வாகிகளுக்கு இந்நூலாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள்.

தமிழாக்கத்தைக் கருத்தாய்ப் படித்துப் பார்த்துத் திருத்தமாய் அமைத்துத் தந்த பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்களுக்கு மொழி பெயர்ப்பாளர் மனமார்ந்த நன்றி செலுத்துகிறார்.

பொருளடக்கம்

பாகம் 1—வாழ்க்கை வரலாறு

பாகம் 2—போதனை விளக்கம்

—

பாகம் I

வாழ்க்கை வரலாறு

T.N. Alagamathan.,

அத்தியாயம் 1

பின்னணி: வரலாறும் புராணக் கதையும்

புண்டைய உபநிடத ரிஷிகள் முதல், புத்தர், சங்கரர் உள்பட பல்வேறு மகான்கள் சொல்லாலும் செயலாலும் ஞானமார்க்கம் என்ற அறிவு நெறியை மக்களுக்குக் காட்டி வந்துள்ளனர். அம் மகான்களின் வரிசையிலே தோன்றியவரே ரமண மகரிஷியும் ஆவார்.

ஆதிசங்கரர் (கி.பி. 788-820) காலத்திற்குப்பின் இந்த ஞான வழியைத் தெளிவாக விளக்கியவர் மகரிஷி அவர்களே எனலாம். பேராசிரியர் தி. சு. சர்மா கூறுவதாவது: "வரலாற்றில் சங்கரருக்குப்பின் அறிவு நெறியின் சிறப்பை இவரைப்போல் உறுதியுடன் வேறெவரும் வலியுறுத்தவில்லை எனலாம். சங்கரர் தம் அத்வைத சித்தாந்தத்தை நிலைநாட்டிய பின்னர் அனேக பக்தி இயக்கங்கள் தோன்றி ஞானயோக முறையை மூழ்கடித்து விட்டன. ராமானுஜரும் மத்துவரும் துவக்கிய வைணவ பக்தி சம்பிரதாயங்களும், சைவசித்தாந்தமும் அவ்வியக்கங்களுள் முதன்மையானவை. அதன் பின் வட இந்தியாவில் 15-16 நூற்றாண்டுகளில் தோன்றிய பக்தி இயக்கங்களோ இஸ்லாமிய கடவுள் வழிபாட்டையும் அம்மதத்தின் பிரசாரங்களையும் கருதி பக்தி முறையையே மேற்கொள்ள நேர்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோன்றிய

சமாஜ இயக்கங்களும் சிறிஸ்தவ சமயக் கொள்கை களுக்குப் போட்டியாக கடவுள் வழிப்பாட்டையே வலி யுறுத்தின. பின்னர் இந்துமதம் பலதுறைகளிலும் ஒரு மித்து மறுமலர்ச்சி கண்டபோதும்கூட, ஸ்ரீ ராம கிருஷ்ணர் பக்தி நெறியே தற்கால உலகில் எளியது என்று அழுத்தமாய் அறிவுறுத்தினர். இவ்வாறு கடந்த பதினேரு நூற்ருண்டு காலமாய்ப் பெருக்கெடுத்தோடும் பக்திப் பிரவாகத்தை எதிர்த்து, அசையாது, பாறையாய் நிற்பது ஸ்ரீ ரமணரின் பேச்சற்ற வெற்றுருவம். மனித னின் ஆன்மிக ஒழுங்கில் பக்திக்கும் ஓர் இடம் உண்டு என்பதை அவர் உணர்ந்தவரே! அது மட்டுமா? பல உருக்கமான துதிப் பாடல்களை அருளிய சங்கரரைப் போலவே ரமணரும் அருணசல சிவனை ஐந்து துதி களால் அழகாகப் போற்றியுள்ளார். அவற்றுள் ஒரு பாடலில் அவர் தலைவன்-தலைவி காதலாக பக்திப் பிரேமையை உருவகப்படுத்தி நம்மை வியப்புறச் செய் கிருர். எனினும், அவர் இடையருது போதித்த விசார மார்க்கம் ஞானயோகத்தை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதே ஆகும். ரமணரின் சாதனை இதுதான்: தாம் வாழ்ந்த காலத்திற்கேற்ப, ஞான யோகத்தை அதைத் தோற்றுவித்த சமயச் சூழலி னின்றும் தூக்கி நிறுத்தி அதைப் பிற சமயத்தோரும் பயில வழிகோலினர்."

ஜிம்மர் (Zimmer) இயற்றிய இந்தியாவின் மெய் விளக்கங்கள் (Philosophies of India) என்னும் நூலின் பின்னே சேர்த்துள்ள சம காலத்தவரின் அட்ட வணையில் ஸ்ரீ ராமகிருஷ்ணரை (1836-1886) சார்லஸ் டார்விைேடும், ஸ்ரீ ரமணரை ஐன்ஸ்டைனேடும் ஒப்பிட்

டுள்ளனர். ஒரே காலத்தவர் என்பது ஒருபுறமிருக்க, புரிந்த சாதனையிலும், குறிப்பிடத்தக்க சரித்திரச் சிறப்பிலும் கூட, முதல் ஜோடிக்கு இணையாகக் கருதத் தக்கவர்கள், இரண்டாம் ஜோடியினர். பல்வேறு மக்களின் ஆன்மிக உணர்வு தோன்றுதொட்டு அன்றுவரை விரிந்து வளர்ந்த வரலாற்றை பரமஹம்ஸர் தொகுத்துப் படம் பிடித்துத் தந்தார். மகரிஷியோ புதுமைகாண விழையும் விஞ்ஞானியைப் போல 'மெய்ப்பொருளின் ஆழத்தைப் புதுமுறையில் ஆராய்ந்து ஆன்ம விசார உபாயத்தைச் சீர்படுத்தி எளிதாக்கித் தந்துள்ளார். அதன்மூலம் தாம் செய்த சோதனையைப் பிறரும் செய்து, தான் கண்ட உண்மையைப் பிறரும் தாமே நேராகக் காண வழி வகுத்துள்ளார்.

ஆன்மிகக் காற்று எங்கு வீசும், ஆன்ம ஒளி யாருக்குத் தோன்றும் என்று சொல்வதற்கில்லை; ஜீவன் முக்தி சித்திப்பதற்குக் காரணம் காட்ட முடியாது என்பதெல்லாம் உண்மையே. ஆயினும், இன்று செந்தாமரை மலர்வதற்கு மாபெரும் சக்தி வாய்ந்த சூரியனே ஆதி காரணம் என்றாலும்; சிறு குளத்திற்கும் இந்த நிகழ்ச்சியில் ஒரு பங்கு உண்டு அல்லவா?

மெய் வெளிப்பாடு அருள் வாய்ப்பே; அதற்கு முன்னறிவிப்போ முன்னேற்பாடோ கிடையாதாயினும், நிகழ்ந்தபின் அதற்கும் நியாயம் கூற முடியும். இந்த வகையில் மரத்திலே மலர்போல, உணர்ச்சிவேகம் மிக்க வங்கப் பண்பாட்டில் ஸ்ரீ ராமகிருஷ்ணரும், சுறுசுறுப்பும் செயலாற்றலும் மிக்க கூர்ச்சரப் பண்பாட்டில் காந்திஜியும் தோன்ற, அறிவுத் துறையில் கடுமையும், தெளிவும், நேர்மையும் மிக்க தமிழ்ப் பண்பாட்டிலே ஸ்ரீ ரமணர்

தோன்றினர். இது மட்டுமா? இந்த விஞ்ஞான யுகத்தி லும் கூட அன்னை வழிபாடு ஸ்ரீ ராமகிருஷ்ணரை மெய் யுணர்வின்பத்தில் திளைப்பிக்க, இடையரு ராம ஸ்மரணை காந்திஜியின் அகவாழ்வையும் புறவாழ்வையும் அறநெறி யிலே செலுத்த, சைவத் தொடர்பு பள்ளிச் சிறுவன் ரமணனுக்கு மரணக்காட்சியைத் தோற்றுவித்து ஆன்ம அனுபூதியையும் தந்தருளியது.

நமது முன்னோர்கள் வகுத்த நான்கு நெறிகளை யும்—பக்தி, கர்மம், யோகம், ஞானம் ஒவ்வொன்றையும் தெளிவாகவும் வெற்றிகரமாகவும் பின்பற்றி நமது கண் முன் அண்மையிலே கடைத்தேறிய ஆன்மீக வீரர்கள் முறையே ஸ்ரீ ராமகிருஷ்ணர், காந்திஜி, ஸ்ரீ அரவிந்தர், மகரிஷி ரமணர் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

மகரிஷியின் வாழ்வோடு இணைந்த ஒவ்வோர் இட மும் புனிதமான நினைவுகள் மண்டிக்கிடக்கும் திருத்தலம் ஆகும். திருச்சுழி சிவ பூமி; பல நூற்றுண்டுகளுக்கு முன்பே சுந்தரமூர்த்தி நாயனும் மாணிக்கவாசகப் பெருமானும் பாடிப் போற்றிய சிற்றூர். இந்த நூற்றுண்டு மத்தியில் வினேபாபாவே தமது பூதானப் பாத யாத்திரையின் போது, வழி விலகிப்பல மைல்கள் நடந்து இவ்வூரில் மகரிஷி பிறந்த வீட்டினுள் மௌன மாய்ச் சிறிது நேரம் தியானத்திலமர்ந்தார். மகரிஷியைப் பெற்றெடுத்து உலகிற்களித்த அச்சிற்றூர் மக்களுக்குத் தமது ஆசியை அன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இளைஞன் வெங்கடராமன் தன்னையே தானடைந்த மதுரை; சங்கத் தமிழ் வளர்த்துப் புராதனப் புகழ் பெற்ற மாநகர்; சிவபெருமான் மீனுட்சிசுந்தரராகத் திருவிளை

யாடல் புரிந்த திருத்தலம்; அன்னை பராசக்தி அரியணை மீது அமர்ந்திருக்கும் சக்தி பீடம்; ஆண்டவன் அடியாரோடு உறவுக் கலப்பு வந்து ஒன்றுவதைப் பாடியும் சடங்கு முறையில் ஆடியும் காட்டிய ஆன்ம பூமி. அவ்வூர் ஆலயத்தில் அறுபத்து-மூவர் திருவுருவங்கள் குழந்தைகள் கவனத்தையும் கவர்ந்து நிற்கின்றன. அங்கே, அக்கோவிலின் நிழலில் தாய்மடிச் சேயென அன்பில் வளர்ந்தான் சிறுவன் ரமணன். அருணாசலத்தின் நாமம் கேட்டான்; தந்தையின் குரல் எனத் தாவி எழுந்து, விரித்த கையினுள் ஓடிப் புகுந்தான்.

வடமொழி மகாகவி கணபதி சாஸ்திரியும் தமிழ்ப் புலவர் முகவைக்கண்ண முருகனாரும் ரமணமகரிஷியை முருகக் கடவுளாக வைத்துப் பாடுகிறார்கள். சாந்தோக்கிய உபநிடத்தில் ஸ்கந்தரைப் பற்றிய ஒரு குறிப்பு உளது: கல்விக் கரை கடந்த நாரத முனிவரே நித்ய யுவனான சனத் குமாரனிடமிருந்து பூமா வித்தையை, அறிவுக் கெட்டாது இருளுக்கப்பால் வீசும் ஒளியைக் காண கற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதைப்போலவே இந்த மாபெரும் புலவர்கள் இளந்துறவியிடமிருந்து நூலைத் தாண்டி நிற்கும் வாலறிவைக் கற்று மகிழ்ந்தனர்.

"சுப்பிரமண்ய புஜங்கம்" என்னும் சிறு நூலிலே ஆதிசங்கரர் பரமசிவன் மைந்தன் குமரனை அழைத்து அணைத்துக்கொள்ளும் காட்சியை வருணித்துள்ளார். தந்தை இருகை விரித்து "இங்கே வா குழந்தாய்" எனக் கொஞ்சியழைக்க, அன்னையின் மடியிலிருந்து தாவி எழுந்து பறந்தோடிவர, ஈசன் குழந்தையை மார்புறத் தழுவுகிறாராம். இந்த நாடகம் மீண்டும் ஒரு முறை நிகழ்வதுபோல, தந்தை குரல் கேட்டவுடன்

சிறுவன் ரமணன் தாய் மடியாம் மதுரையை விட்டுத் தந்தையின் அணைப்பாம் அருணாசலத்தை நோக்கி மெய்ம் மறந்து பயணப் பட்டான், என்கிறார் கவி கணபதி சாஸ்திரி.

'சத்' என்றும் மெய்ப் பொருளாம் சிவனும், 'சித்' என்னும் மெய்ப் பொருளாம் சக்தியும் ஒன்றித் தோன்றும் ஆனந்தமே—இடையறு, புதுமை மாறா இன்பமே—முருகக் கடவுளாவர். 'இதயம்', 'குமரன்' இரண்டையுமே 'குகேசன்' (குகை ஈசன்) என்ற ஒரு பெயரால் மகரிஷி மீண்டும் மீண்டும் அழைக்கிறார். மனித உள்ளத்திலும் மக்கள் வாழ்விலும் மறைந்து வளரும் அறிவின்பத்தை—மும்முகமுடைய சோமாஸ் கந்த (தந்தை-தாய்-குமர) மூர்த்தத்தை பற்பல வகையில் விளக்கி, அண்டியவர் வீட்டின்ப வேட்கையை மூட்டி, வீடு பெறவும் வழி காட்டுகிறார். ராம சேவையின் மூலம் அறத்தை அறியவும் ஆற்றவும் வழி காட்டுகிறார் தற்கால அனுமானாகிய காந்திமகான். இத்தகைய சீரிய, தெளிவான முறையிலேயே தற்காலக் கந்தனாகிய மகரிஷியும் வீட்டின்ப வழியை விளக்குகிறார்.

1896 ஆண்டு செப்டம்பர் 1 அன்று காலை அருணாசலம் என்னும் திருவண்ணாமலையிலே வந்துசேர்ந்த ரமணர் அங்கேயே ஐம்பத்து நான்கு ஆண்டுகாலம் தங்கினார். 'நினைத்ததும் முக்தி நல்கும்' தலம் எனத் தொன்றுதொட்டுப் புனிதப் பெயர் பெற்ற ஊர் திருவண்ணாமலை. பாரதத்திலும் நேப்பாளத்திலும் உள்ள பற்பல ஆலயங்களிலே சிவபெருமான் லிங்கமாகவோ மூர்த்தியுருவிலோ காட்சியளிக்கிறார்; ஆனால் திருவண்ணாமலையிலோ அக் குன்றாகவே, மலை வடிவத்தி

லேயே தோன்றுகிறார் என்பார்கள். அங்கே ஆதிகாலத்தில் பரமசிவன் ஓர் ஒளிப் பிழம்பாய் வளர்ந்தோங்கி நிற்க, அதன் அடியையும் முடியையும் காணமுயன்று பிரும்மாவும் விஷ்ணுவும் தோல்வியுற்றனர், என்கிறது புராணக் கதை.

அண்ணாமலை சிவபெருமானின் மெய்யே என்பதின் உட்பொருளானது சிவன் அறிவும் அறியாமையையும் கடந்த தூய அறிவே என்பதாம். எனவே, மெய்யுணர்வை நாடுவோர்க்கு இந்த மலையும், மலையாய்ச் சமைந்து நிற்கும் சிவதத்துவமும் தனிச் சிறப்புடன் திகழ்கின்றன.

அத்தியாயம் 2

பிள்ளைப் பருவமும் ஞானோதயமும்

டிஸம்பர் 29-30, 1879, நள்ளிரவு கழிந்ததும் (மார்கழி புனர் பூசத்திலே) வெங்கடராமன் பிறந்தான். தந்தை திருச்சுழி என்ற சிற்றூரில் வக்கீல் தொழில் புரிந்து வந்த சுந்தரமையர். தாயாரின் பெயர் அழகம்மாள். உள்ளூரிலேயே ஆரம்பக் கல்வி பயின்ற பையன் நடுப் பள்ளிப் படிப்பிற்காக ஓராண்டு திண்டுக்கல் சென்றான். 1892-ஆம் ஆண்டு தந்தை திடீரெனக் காலமானபின் வெங்கடராமனையும் அவன் தமையன் நாகசாமியையும் அவர்கள் சிற்றப்பனான சுப்பையர் மதுரைக்கு அழைத்துப் போய்விட்டார். நாகசுந்தரம், அலமேலு என்கிற இரு சிறு குழந்தைகளுடன் தாயார் மானாமதுரையிலே மைத்துனர் நெல்லையப்ப அய்யர் வீட்டிலே தங்க வேண்டிய தாயிற்று.

வெங்கடராமன் மதுரையில் அமெரிக்கன் மிஷன் ஸ்கூலில் சேர்ந்தான். படிப்பிலே அதிகம் கவனம் செலுத்தவில்லை. ஆயினும் கூரிய புத்தி. நல்ல ஞாபக சக்தி. ஆகவே ஆண்டுதோறும் மேல் வகுப்புக்கு மாற்றப் பட்டான். அப்போதெல்லாம் அவனுக்கு ஆன்மீக ஈடுபாடு உண்டு என்று எவர்க்கும் தோன்றிய தில்லைதான். நல்ல உறுதிக் கட்டான உடம்பு. விளை-

யாட்டுக்களில் விருப்பமும் ஊக்கமும். எந்தக் குத்துச் சண்டையிலும் நீச்சல் போட்டிகளிலும் வெற்றியே காண்பான். உறக்கமோ கைவந்த கலை! ஆழ்ந்து உறங்கி விட்டால் அவனை யாரும் எளிதில் எழுப்பிவிட முடியாது. பள்ளி நாட்களில் அவனோடு நெருங்கிப் பழகிய நண்பர்களுள் ஒருவன் அப்துல்வஹாப். சப்ஜான் என்று செல்லப்பெயர் கொண்டவன். அவன் விளை யாட்டுத்தோழன் மட்டும் அல்ல; வெங்கடராமனுடன் கோவிலுக்கும் போவான். திருச்சுழியில் தாய் வீட்டிலும் முழுமனதுடன் வரவேற்கப்பட்டு விருந்துண்ணுவான். பிற்காலத்தில் போலீஸ் இலாகாவில் சேர்ந்த அப்துல் வஹாப் சாகிப் மகரிஷியாய் விளங்கிய தமது பழைய நண்பனைக் காண அவ்வப்போது ஆசிரமத்துக்கு வந்து போவதுண்டு.

வீட்டு வேலைகளிலும் சிறுவன் சிற்றம்மைக்குக் கை கொடுத்து உதவினான். தெருவைத் தாண்டிக் குடம் நிறையத் தண்ணீர் பிடித்துத் தூக்கிவருவான். பல ஆண்டுகளுக்குப்பின் ஓர் அன்பர் கேட்ட கேள்விக்கு விடையாய் மகரிஷி விளக்கினார்:—“அனாதைக் குழந்தையை இப்படி வேலை ஏவுகிறார்களே என்று என் தாயார் மனம் நொந்துகொள்வாள். ஆனால் அவள் மதுரைக்கு வந்தபொது அவளாலே தினமும் அவ்வளவு பெரிய குடத்தைத் தூக்கித் தண்ணீர் கொண்டுவர முடியவில்லை. ‘நீ தூக்கிண்டு வாயேண்டா’ என்று சொன்னாளே பார்க்கலாம்! எனக்கு சிரிப்பாய் வந்தது. ‘சின்னம்மாவை தாயே, நீ மட்டும் என்னவாம்?’ என்று கேட்டுவிட்டேன்”, என்றாராம்.

வீட்டுவேலை எதையும் வெங்கடராமன் திறமையுடன்

செய்வான். எனவே அவனுக்கு "தங்கக் கை" என்றே பெயர் வந்துவிட்டது. அப்பளம், வடாம் இட உட்காரும் போது ஊரார் இவன் கையால் தொட்டபின்னே வேலையைத் தொடங்குவார்களாம்.

1895 நவம்பரில் வயது முதிர்ந்த உறவினர் ஒருவர் தாம் அருணாசலத்திற்குப் போய்வந்ததைப் பற்றிச் சொன்னார். இளம் பருவம் முதற்கொண்டே அருணாசலம் என்ற பெயர் சிறுவன் உள்ளத்தில் ஒலித்து இனந்தெரியாத ஆவலைத் தூண்டி வந்திருந்தது. இப்போதுதான் உறவினர் அந்தப் பெயரைச் சொல்லக் கேட்டதும் அது திருவண்ணாமலையே, வெறும் பெயரில்லை, மெய்ம்மை வாய்ந்த, அருகேயுள்ள ஊராகும் என்பது புரிந்தது.

சில நாட்களுக்குப்பின், *பெரிய புராணம்* பிரதி ஒன்று அவன் கைக்கு எட்டியது. அதைப் படித்துவிட்டு, சிவனருட்செல்வர் அறுபத்துமூவர் வரலாற்றைப் படித்தறிந்து எண்ணி எண்ணிப் பேரின்பத்தில் மூழ்கித் திளைந்தான்.

மகரிஷியின் வாழ்விலும், இன்றைய மனிதனின் நிஜ ஸ்வரூப விசாரணையிலும் மகத்தான திருப்பத்தை ஏற்படுத்திய மாபெரும் சம்பவம் 1896 ஜுலை மாத நடுவில்—பையன் மதுரையை விட்டுச் செல்வதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னதாக—நிகழ்ந்தது. சிறிய தந்தையின் வீட்டில் (கோவிலுக்கருகே சொக்கப்ப நாய்க்கன் தெரு, 11 இலக்கமிட்ட வீட்டில்) பதினாறு வயது இளைஞன் தனித்து உட்கார்ந்திருந்தான். உடல் திடமாயிருந்தும் ஒரு காரணமற்ற மரண பயம் அவனைத் திடீரெனக் கவ்வியது. அதனைக் குறித்துச் சிந்தனையி

லாழ்ந்தான். அச்சிந்தனையின் போக்கு ஏறக்குறைய இவ்விதம் இருந்தது:

'இதோ நான் செத்துப் போய்க்கொண்டிருக்கிறேன்...சாவு என்றால் என்ன? சாவது எது? இவ்வுடல்தானே?"...

மரண அனுபவத்தை மேலும் மேலும் உள்ளாழ்ந்து நோக்கினான். கை கால்களை நீட்டி உடலை மரத்தாற் போலாக்கினான். மூச்சை யடக்கி உதட்டை இறுக்கினான். மவுன விசாரத்தைத் தொடர்ந்தான்:

'சரி, இருக்கட்டும். இந்த உடல் இறந்து விட்டது. இந்த விறைத்த கட்டையைப் பாடையிலே கட்டி சுடுகாட்டிற்குத் தூக்கிப் போய், எரித்துச் சாம்பலாக்குவார்கள்...ஆனால் நான் இறந்து விட்டேனா?... இந்த உடலா நான்? இவ்வுடல் பேசாது; சடப்பொருள். ஆனால், நான் என்ற தன்மையை, சக்தியை, நான் முழுமையாக உணர்கிறேன்! 'நான்' என்ற ஒலியை, அலையைக் கேட்கிறேனே! 'நான்' என்னும் குரல், ஸ்புரணம் தெரிகிறதே!... ஆகவே, நான் என்பது, சரீரத்தைக் கடந்த உணர்வு. அழிவற்ற ஆன்மாவே நான்.'

இவ் விசாரணை புத்தி பூர்வமான வறட்டு தர்க்க வாதம் இல்லை. "உள்ளது நானே" என்ற தூய அஸ்மித உணர்வின் முழு அனுபவம், "உணர்வே நாம்" என்ற உண்மையின் சொல்லற்ற, எண்ணற்ற அடி வயிற்று மெய்ப்பாடு.

பள்ளிச் சிறுவனைப் பரம ஞானியாக மாற்றிய இந்த

மரண நாடக ஆன்மானுபவத்தை கதை, வேதாந்தம், அறநெறி முதலிய பல்வேறு கோணங்களில் கருதலாம். ஆதிமூலமே என அலறிய கஜேந்திரனை முதலைவாய் மரணப் பிடியினின்றும் மீட்டாட்கொண்டான் தாயை யொத்த திருமால். சிறுவன் ஆதிசங்கரனை மற்றோர் முதலையின் பிடியினின்று விடுவித்து பரம குருவாக்கினார் தூய உணர்வாம் பிதா மகேசன். பிந்தைய வரலாற்றுக் கீடாய், இளைஞன் வெங்கடராமன் தனது உடல் மறைந்தும் தெளிந்த சலனமற்ற நினைவு வெளியில் தன்னுள் தான் ஆக இயங்கும் தூய உணர்வை அடைந்த அக் கணமே மரண பயத்தை முடிவாய் மீண்டும் அண்டாத வாறு உதறி எறிந்துவிட்டான். இந்தக் குறுகிய தனித்த அனுபவம் ஒன்றே புத்தர்பிரான் மனித வாழ்க்கையின் இன்னல்களையும் இறுதி மரணத்தையும் குறித்து நீண்டு தொடர்ந்து நடத்திய தியான முயற்சி யனைத்தையும் தன்னுள் கொண்டது எனலாம். "மக்களைத் தின்னும் சாவைத் தான் தின்ன, சாவு சாக அவன் சாகான்" என்ற ஷேக்ஸ்பியரின் மணிமொழிக் கிசைய இந்த அனுபவம் அமைந்தது.

இந்த உச்ச நிலை அனுபவத்தில் சிறுவன் கண்ட உண்மையாவது: 'உணர்வே நான்; உடலன்று, மன மன்று,' என்பதே. இவ்வனுபவம் பொருளியல் அறிவியல் (சத்-சித்) இரண்டிற்கும் இடை நின்ற சுவரைத் தகர்த்தெறிந்ததோடு, அனைவரையும் அரவணைக்கும் ஓர் அன்பூற்றையும், அரை நூற்றாண்டு காலம் வற்றாது பெரு வெள்ளமாய்ப் புரண்டோடிய ஆன்மிக ஆற்றலையும் அளிப்பது.

அக்கணம் முதற்கொண்டு இடையறாது ஆன்மா

னுபவத்திலேயே ஆழ்ந்துவிட்டான். "சங்கீதத்தில் சரளி வரிசை மாதிரி மற்ற நினைப்புக்கள் வரும், போகும். ஆனால் 'ஸ்புரணை' அல்லது தன்னுணர்வோ ஆதார சுருதியைப் போல சதா ஒலித்துக் கொண்டேயிருக்கும். மற்ற சுரங்கள் அதையொத்து இழையவேண்டி யவையே", என்று சூரி நாகம்மா, சுவாமி ஸித்தேசுவரா நந்தா, தி.சு. சர்மா போன்ற அன்பர்களின் கேள்வி களுக்குப் பிற்காலத்தில் பதிலளிக்கையில் ரமணர் விவரித்துள்ளார்.

காலனை நேர்நோக்கித் தலை குனியவைத்த அவ் அனுபவம் அரைமணி நேரத்திற்கு மேல் நீடித்திருக்காது. ஆயினும் அது இளைஞனின் வாழ்வில் மாபெரும் திருப்பத்தை உண்டாக்கியது மட்டுமின்றி, எளிய, அழகிய, எல்லாம் வல்ல, ஆன்மிக ஆயுதமாகிய 'நான் யார்?' என்னும் வினாவைப் பிறப்பித்தது.

இந்த நிகழ்ச்சிக்குப்பின் வெங்கடராமன் மேலும் மேலும் தன்னுள்ளாழ்ந்து தனிமையையே நாடினான். பள்ளிப் படிப்பில் மனம் செல்லவில்லை. மற்றவருடன் பழகுவதில் பணிவும் தாழ்மையும் பூண்டான். உளம் நெகிழ அடிக்கடி ஆலயம் போய்வரலானான். பெரிய புராணத்து வரலாறுகளும் கோவிலுள் அறுபத்துமூவர்து சிலைகளும் பையனுக்குப் புதுப் பொருள் தாங்கி நின்றன. பல ஆண்டுகளுக்குப் பின்னால் இதனைக் குறித்து இவ்வாறு நினைவு கூர்ந்திருக்கிறார்: "என் புது வாழ்வில் விழிப்புற்ற பின்னர் தினந்தோறும் மாலையிலே தவறாமல் கோவிலுக்குப் போவேன்; தனியாகத்தான் போவேன். சுந்தரேசுவரர் முன்னிலையில், மீனாட்சியன்னை முன் னிலையில், நடராஜர் முன்னிலையில், அல்லது அறுபத்து

மூன்று நாயன்மார் முன்னிலையில் வெகுநேரம் நிற்பேன். உணர்ச்சி அலை அலையாய் மோதி அதில் நான் மூழ்கு வதை உணர்வேன். ஆன்ம அனுபவத்தின் காரணமாய் உடல்மீது முன்பிருந்த பற்று கரைந்து விட்டிருந்தது. விடுபட்ட ஆன்மா வேறு ஏதாகிலுமொன்றைப் பற்றிப் படர எங்கிற்று. ஆகவேதான் கோவிலுக்கு அடிக்கடி போய்வந்தேன். மீனாட்சி சுந்தரேசுவரர் முன்னால் சிலையாய் நிற்பேன். 'அப்பனே, என் உள்ளன்பைப் பெருக்கு. அறுபத்துமூவருக்கருளியது போல எனக்கும் அருளி என்னையும் ஆட்கொள்ள மாட்டாயா?' என சிற் சில சமயம் வேண்டுவேன். பெரும்பாலும் பிரார்த்தனை ஏதும் புரியேன். என்னுள்ளுணர்வை மெய்யுணர்வுப் பெருங்கடலில் மவுனமாய்ச் சேர்ப்பிப்பேன். இவ் வுணர்ச்சி வெள்ளத்தின் அறிகுறியாய் கண்ணீர் பெருகுமே தவிர அது சுகமோ துக்கமோ உணர்ந் திலேன்."

"மோட்சமோ பிறவா வரமோ வேண்டி இறைஞ்சி யிருக்கிறீர்களா?" என்ற வினவுக்கு மகரிஷியின் விடை இதுதான்; "அறுபத்துமூவர் போல எனக்கும் உள்ளன்பு பெருகவேண்டும் என்பதே நான் வேண்டியது. பந்தம், பிறப்பறுத்தல் என்பவனபற்றி யெல்லாம் எனக்கு அப்போது ஒன்றும் தெரியாது."

1896-ஆம் ஆண்டு ஆகஸ்டு, 29, முற்பகல். ஆறும் ஃபார மாணாக்கன் வீட்டிலமர்ந்து பெயின் ஆங்கில இலக்கணம் (Bain's English Grammar) என்ற புத்தகத்தி லிருந்து ஓர் பாடத்தை எழுதிக் கொண்டிருந்தான். அவன் அதை மும்முறை எழுதியாகவேண்டும். என்று தண்டனை விதிக்கப் பட்டிருந்தது. இரண்டு பிரதிகள்

எழுதியாகிவிட்டது. மூன்றும் பிரதியை எழுதத் துவங்கு முன் இந்தத் தலைவலி வேலையிலே சலித்து முகம் சுளித்தான். ஒரு மூலையிலிருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அவனுடைய தமையன் ஏசினான்: 'குடும்பத்தில் இருந்துகொண்டு படிப்பது போல பாசாங்கு பண்ணிக் கொண்டு ஏனடா இப்படி யோகி போல் கண்ணை மூடிக் காலம் கழிக்கிறாய்?'

வெங்கடராமன் குறிப்புணர்ந்தான். வீட்டை விட்டு வெளியேறி அருணாசலம் போய்ச்சேர அக்கணமே முடிவு செய்துவிட்டான்.

பள்ளியில் நடைபெறும் பிரத்தியேக வகுப்பில் பாடங்கற்கப் போவதாக அண்ணனிடம் சொன்னான். "அப்படியானால் கீழே பெட்டியிலிருந்து ஐந்து ரூபாய் எடுத்துப்போ. போகிற வழியில் என் காலேஜ் சம்பளத்தையும் கட்டிவிடு" என்றான் அண்ணன்.

இந்த நிகழ்ச்சியை 1949-ஆம் ஆண்டு நினைவு கூர்ந்த மகரிஷி, சிற்றன்னையிடம் சொல்லாமல் அப்படி அந்த வீட்டை விட்டு வெளியேற நேர்ந்ததைக் குறித்துக் குறைபட்டுக் கொண்டார். "என்னிடம் அவளுக்கு முழு நம்பிக்கை. பாவம்! எல்லாவற்றிலும் அவள் விருப்பம் போலவே நடப்பேன். பொய்யே சொன்னது கிடையாது. ஓடிப்போவதற்கு முன்னால் ஒரே ஒரு பொய் சொல்லும்படி நேர்ந்துவிட்டது. 'எங்கேடா கிளம்புகிறாய்?' என்று அன்னா கேட்டதும் உடனே 'ஸ்கூலில் ஸ்பெஷல் கிளாஸ் நடக்கிறது; அங்கேதான்' என்றேன். சாப்பாடு ஆனபிறகு பெட்டிச்சாவியைப் பற்றி கேட்டபோது சித்தியிடமும் அப்படியேதான் சொன்னேன்.

அவளுக்கு என்ன தெரியும்? பாவம், நான் சொன்னதை அப்படியே நம்பிவிட்டாள்......நடக்கவேண்டியது நடந்தது."

திருவண்ணாமலை போய்ச்சேர வழிச் செலவுக்கு மூன்று ரூபாய் போதும் என்றே வெங்கடராமன் நினைத்தான். அந்தத் தொகையை மட்டுமே எடுத்துக்கொண்டு ஒரு சீட்டு எழுதி அதை மிகுந்த பாக்கி இரண்டு ரூபாயுடன் வைத்துவிட்டுக் கிளம்பிவிட்டான். சீட்டில் கண்டது இதுதான் :

> நான் என் தகப்பனாரைத் தேடிக்கொண்டு அவருடைய உத்திரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிட்டேன். இது நல்ல காரியத்தில்தான் பிரவேசித்திருக்கிறது. ஆகையால் இந்தக் காரியத்திற்கு ஒருவரும் விசனப்பட வேண்டாம். இதைப் பார்ப்பதற்காகப் பணமும் செலவு செய்ய வேண்டாம்.
>
> .இப்படிக்கு
>
> ....
>
> உன் சம்பளத்தை இன்னும் செலுத்தவில்லை.
> ௹ 2 இதோடுகூட இருக்கிறது.

கடிதத்தில் 'இது' என்று தன்னைக் குறித்தலும், கையொப்பமின்மையும் சிறுவனது மனோ நிலையை நன்கு விளக்குகின்றன.

நடுப்பகலுக்குச் சற்றுமுன்னால் ரயில் நிலையத்தையடைவதற்கும் வண்டி வருவதற்கும். சரியாக இருந்தது. திண்டிவனத்திற்கு டிக்கட் வாங்கிக் கொண்டான். அதுதான் திருவண்ணாமலைக்கு அருகேயுள்ள ஸ்டேஷன்

என்பது அவனது ஊகம். டிக்கட்டின் விலை ரூ. 2 அணா 13. விழுப்புரத்திலேயே இறங்கி வண்டி மாறி புது லைனில் திருவண்ணாமலைக்கே ரயிலில் போய்ச் சேரலாம் என்றும் அதற்குரிய சத்தம் ரூ. 3 என்றும் அவனுக்குத் தெரியாது. அதே பெட்டியிலே முஸ்லிம் மௌல்வி ஒருவர் இருந்தார். வண்டி புறப்பட்டதும் அவனுடன் பேச்சுக் கொடுத்தார். திருவண்ணாமலை போகவேண்டிய பையன் தவறுதலாய் திண்டிவனத்திற்கு டிக்கட் வாங்கி யிருப்பதை அறிந்ததும் அவர் அவனை விழுப்புரத் திலேயே இறங்கிவிடுமாறு கூறினார்

விடியற்காலை விழுப்புரத்தில் இறங்கியவன் கையி லிருந்த காசுக்கு 10 மைல் தொலைவிலுள்ள மாம்பழப் பட்டுக்கு டிக்கட் வாங்கி ரயிலேறினான். மாம்பழப்பட்டு ஸ்டேஷனிலிருந்து 10 மைல் நடந்து கீழூர் சேர்வ தற்குள் கால் ஓய்ந்து விட்டது. இனி நடை தாளாது, மீதி தூரத்திற்கு (20 மைல்) ரயிலில்தான் போக வேண்டும் எனத் தீர்மானித்தான். கையிலோ காசு கிடையாது. பொன்னில் கட்டிய சிவப்புக் கடுக்கன் காதில் இருப்பது நினைவுக்கு வந்தது. கீழூரில் முத்து சாமி பாகவதர் என்பவரிடம் அதை நான்கு ரூபாய்க்கு ஒற்றி வைத்தான். அன்று கோகுலாஷ்டமி ; கண்ணன் பிறந்தநாள். பாகவதரின் மனைவி சிறுவனுக்கு நல்ல உணவளித்து, கையில் கோகுலாஷ்டமி பட்சணங்களையும் கட்டிக் கொடுத்தனுப்பினாள். ரயில்வே ஸ்டேஷனை அடையும் முன்னரே பாகவதர் கொடுத்திருந்த அடைமான ரசீதைக் கிழித்துப் போட்டான். அவனுக்குக் காதணிகளை மீட்கும் சிந்தைதான் கிஞ்சித்தும் கிடையாதே!

செப்டம்பர் முதல் தேதி (1896) விடியற்காலை திருவண்ணாமலை அடைந்தான். நேராய் அருணாசலேசுவரர் ஆலயத்திற்கு விரைந்து தந்தையின் முன் நின்றான் தனயன். பேரின்பம் பொங்கிப் பெருகியது. இதுகாறும் உடலை எரித்த காய்ச்சல் மறைந்து உள்ளத்தைப் போல் உடலும் குளிர்ந்தது.

பயணம் முற்றுப் பெற்றது.

மெய்யே வீடு வந்துற்றான் வெங்கடராமன்!

அத்தியாயம் 3

பரவச ஆண்டுகளும், புதிய பிணைப்புகளும்

கோபுரத்திலிருந்து வெளிவந்த இளைஞன் தலையை மொட்டையடித்துக் கொண்டான். உடமைகளைக் களைந் தெறிந்தான் — பூணூல், மீதியிருந்த மூன்று ரூபாய், தின் பண்டப்பொட்டலம், சட்டை-வேட்டி எல்லாம் நீங்கின. இடுப்பு வேட்டியிலிருந்து கிழித்த சாண் அகலத் துணி கோவணமாயிற்று.

மீண்டும் ஆலயம் புகுமுன், வழியிலே திடீரென தாரையாய்ப் பொழிந்த மழையில் நனைந்தான். கழுவித் தூய்மையான உடலுடன் ஆயிரக்கால் மண்டபத்தில் அடைக்கலம் புகுந்தான். அசையா மவுன நிலையில், ஆழமான தியானத்தில் அங்கே சில வாரங்கள் கழித் தான்.

அந் நாட்களில் அவனைப் பராமரித்த நல்லோருள் சேஷாத்திரி சுவாமியும் ஒருவர். புலமையும் ஆன்மிக முழுமையும் பெற்ற துறவி அவர். எனினும், சூழும் குறும்புக்காரச் சிறுவர்கள் இவ்விருவரையுமே துன் புறுத்தத் தொடங்கினர். அவ் இன்னல்களைத் தவிர்க்க 'பிராமண சுவாமி' (அப்போது நம் இளம் துறவியை அப்பெயர்கொண்டே அழைக்கலாயினர்) ஆயிரக்கால் மண்டபத்தின் கீழ்த் தளத்திலுள்ள பாதாள லிங்கம்

எனும் இருட்டுக்குகையறையில் தஞ்சம்புகுந்தார். அங்கு அவர் நிட்டையிலிருந்த பலவார காலமும் எறும்பு, பூச்சி, கொசு முதலியன அவரது உடலை உண்டு களித்தன. ஆயினும் மெய்ம் மறந்து பரம்பொருளில் லயித்துவிட்ட இளந்துறவியோ ஒன்றையும் பொருட்படுத்தவில்லை

1949-ஆம் ஆண்டு மே மாதம் அந்நாள் கவர்னர்-ஜெனரலான ராஜாஜி அவர்கள் இந்தப் பாதாளக் குகையில் ரமண மகரிஷியின் திருவுருப் படத்தைத் திறந்து வைத்தார். ஆலயத்தை அடுத்துள்ள புனிதப் பகுதிகளுள் ஒன்ருக அது இன்றும் விளங்குகிறது.

பாதாள அறையில் தன்னை மறந்து, புழுத்துச் சீழ் வடியும் உடல் நிலையை உணராதவராய் சமாதியில் ஆழ்ந்திருந்த பிராமண சுவாமியைக் கண்டுபிடித்த சில அன்பர்கள் அவரை அருகிலிருந்து கோபுர சுப்பிரமணிய சுவாமி கோயிலின் கல் மண்டபத்திலே கொண்டு சேர்த்தனர். அதன் பிறகும் வெளியார் இழைக்கும் துன்பத்தைத் தவிர்க்க ஊரின் எல்லையிலுள்ள வெவ்வேறு சிறு கோயில்களிலும் தோப்புக்களிலும், அவரை இருக்கச் செய்தனர். இவ்விடங்களிலெல்லாம் சில துறவிகளும், பக்தர்களும், கோயிற் பணிபுரியும் நல்லோர்களும் அவரைக் கவனித்துப் பேணிவந்தனர்.

ஆன்ம தியானத்திலேயே மூழ்கி, புற உலகைப் பொறுத்தவரை சட உடலாய் ஆகிவிட்ட அந்தச் சில மாதங்களில் அவருக்குச் சுய நினைவூட்ட தோளைப் பிடித்து நன்ருக உலுக்குவார்கள். பின்னரே கண்ணை விழிப்பார். அன்பர் கோணரும் உணவையும் நீரையும் நாளுக்கு ஒரு வேளையே அருந்துவார்.

"திருவண்ணமலையில் தங்கி நான்கு மாதங்கள் சென்ற பிறகுதான் முதல் ஸ்நானம்! அம்மையார் ஒருவர் என்னை அமுக்கி உட்கார வைத்துத் தலையிலே தண்ணீரைக் கொட்டினர்", என்று பல ஆண்டுகள் கடந்து அச் சம்பவத்தை நினைவு கூர்ந்து மகரிஷி சொல்லியிருக்கிருர். அதன்பின் பனிரண்டு மாதங்கள் கழித்து குரு மூர்த்தத்தில் மற்ருேர் அன்பர் இவருக்கு இரண்டாவதாக ஸ்நானம் செய்வித்தாராம். அதேபோல, சுமார் ஓராண்டு காலம் தலைமயிர் வெட்டாமல் தாடி மீசையுடன் திரிந்தாராம். நாகம்மா என்பவரிடம் பல ஆண்டுகளுக்குப்பின் இவ்வாறு கூறியுள்ளார்: "என் தலை பூராவும் சடை பிடித்து கூடைமாதிரி பின்னிக் கிடந்தது. ஒரே புழுதி படிந்து சின்னஞ் சிறிய கற்களும் கூடப் புகுந்து கொண்டு தலையே கனத்தது. விரல்களில் நகங்கள் நீண்டு வளைந்து பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தேன். க்ஷவரம் செய்துகொள்ளும்படி எல்லோரும் வற்புறுத்தினர்கள். ஒருவழியாய் ஒப்புக் கொண்டேன். முடியைச் சிரைத்தபின் தலை இருந்ததா இல்லையா என்றே சந்தேகம்? அப்படி ஒரே இலேசாய்ப் போய்விட்டது. மண்டையை அப்படியும் இப்படியும் நன்ருய் ஆட்டிப் பார்த்துக் கொண்டேன், கழுத்து மீது தலை உள்ளதா என்று நானே உறுதியாய் நம்ப!'

1897-ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே அவரை குருமூர்த்தத்திற்கு இட்டுச் சென்றனர். ஆலயத்தி லிருந்து வெகு தூரத்தில் அமைதியான சூழ்நிலையில் அமையப் பெற்றிருந்த ஓர் மடம் அது. அங்கே 19 மாதங்கள் தங்கினர். அகமுகமாய் தன்மயானந்தத்திலே மூழ்கிக் கிடந்த அவரைப் பேணி வந்தவருள் உத்தண்ட

நாயனர் என்னும் சாதுவையும் அவரது நண்பர் அண்ணுமலைத் தம்பிரானையும் குறிப்பிடலாம். அவ்விரு வருள் ஒருவர் நாளுக்கு ஒரு முறை மட்டும் பகல் உச்சி வேளையில் அவருக்கு உணவு கொண்டுவந்து கொடுப் பார். இவர்கள் வெளியே போகும்போது அவரை அறையினுள் பூட்டி வைத்துவிட்டே செல்வர்.

ஒருநாள், இளந்துறவிக்கு உணவு அளிக்குமுன் அவருக்கு மாலையிட்டு, மலர் தூவி, தூப தீபம் காட்டி பூஜை செய்விக்கலாமே என்று தம்பிரான் ஆர்வம் கொண்டார். பூஜைக்கான ஆயத்தம் முடிந்து தம்பிரான் சற்றே வெளியே சென்ற சமயம் அங்கே நடக்க விருந்ததை மகரிஷி கண்ணுற்ருர். உடனே கரித்துண் டொன்றை எடுத்து இவ்வுடலுக்கு உணவு அளிப்பதே போதும் என்ற பொருள்பட "இதற்குத் தொண்டு இதுவே" என்று சுவரில் எழுதினர். சில நாட்கள் கடந்து, பல அன்பர்கள் சுவாமியின் ஊரையும் பெயரை யும் வற்புறுத்திக் கேட்டதற்கிணங்கி அவர் "வெங்கட ராமன். திருச்சுழி" என்று ஆங்கிலத்தில் எழுதிக் காட்டினர். காட்டாளாய்க் காட்சியளிக்கும் அவ் இளைஞன் படித்தவன், ஆங்கிலமும் அறிந்தவன் என்று அப்போதுதான் முதன்முதலில் அனைவருக்கும் தெரிய வந்தது.

இளந்துறவியின் பராமரிப்பை பழனிசாமி என்னும் மலையாள சாது ஒருவர் ஏற்றுக் கொண்டார். பழனிசாமி தொலைவில் ஓர் மண்டபத்து வழிப் பிள்ளையாருக்குப் பூஜை செய்து வந்தார். 'உயிருள்ள சுவாமியை வந்து தரிசியும் ஐயா' என்று சில பக்தர்கள் அவரை குரு மூர்த்தத்திற்குக் கூட்டிச் சென்றனர். விநாயகர்

பூஜைக்கு வேறு ஏற்பாடு செய்துவிட்டுப் பிராமண சுவாமியைக் கவனிப்பதையே தமது முழுநேரத் தொழிலாக ஏற்றுக் கொண்ட பழனிசாமி இருபது ஆண்டுகளுக்கு மேலாக அக் கைங்கர்யத்தைப் புரிந்தார்.

இதற்கிடையே, வெங்கடராமனுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாதவர்களாய் மதுரையிலும் மானாமதுரையிலுமிருந்த உறவினர் கவலைப் பட்டனர். இருபது மாதங்களாக பல இடங்களில் தேடியும் செய்தி ஏதும் கிட்டாமல் திகைத்தனர்.

சிறிய தகப்பனார் சுப்பையர் மதுரையில் 1898 மே முதல்தேதி காலமான சில நாட்களுக்குப் பின்னரே தற்செயலாக இளைஞன் இருப்பிடத்தைப் பற்றித் தகவல் கிடைத்தது. மானாமதுரையிலிருந்த தாயார் அழகம்மாளும் அவர் மைத்துனர் நெல்லையப்ப அய்யரும் இறுதிச் சடங்கிற்காக மதுரை வந்திருந்தனர். இளந்துறவியின் பெயரையும் ஊரையும் நன்கு அறிந்தவரான அண்ணாமலைத் தம்பிரான் அதே சமயம் மதுரை சென்றிருந்தார். ஓர் உபந்நியாச நிகழ்ச்சியின்போது அவர் தம் அருகில் அமர்ந்திருந்த இளைஞனொருவனிடம் திருச்சுழியைச் சேர்ந்த வெங்கடராமன் என்பார் தற்சமயம் திருவண்ணாமலையில் பலர் அறிந்த மகா ஞானியாய் விளங்குகிறார் என்று பேச்சோடு பேச்சாகச் சொல்லிவைத்தார். இதைக் கேட்ட இளைஞன் சுப்பையரின் குடும்ப நண்பன். அவன் காலமாகிவிட்ட சுப்பையரின் வீட்டுக்கு நேராகப் போனான். தான் கேட்ட செய்தியை நெல்லையப்ப அய்யரிடமும் அழகம்மாளிடமும் தெரிவித்தான்.

நெல்லையப்ப அய்யர் உடனே திருவண்ணாமலைக்குப் புறப்பட்டுவிட்டார். குருமூர்த்த மடத்தை அடுத்துள்ள

மாந்தோப்பை அடைந்தார். தோப்புச் சொந்தக்காரரின் அழைப்பிற்கிணங்க பிராமண சுவாமியும் அவருக்குப் பணிவிடை புரிபவரும் அங்கே இரண்டு சிறு குடிசைகளில் தங்கியிருந்தனர். தலைமயிர் சடைமண்டி, நீண்ட நகங்களுடன் என்றும் கண்டிராத கோலத்திலிருந்த வெங்கடராமனை நெல்லையப்பரால் எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆயினும், வலது பாத அடிப்புறம் இருந்த இளஞ்சிவப்பு மச்சத்தைக் கண்டதும் சந்தேகமின்றி அவன் வெங்கடராமனே எனத் தெரிந்தது.

இளந்துறவியோ மவுனம் கலையவில்லை. ஊருக்கு மீண்டு வருமாறு நெல்லையப்ப அய்யர் எவ்வளவோ மன்றாடியும் துறவி அசைந்து கொடுக்கவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின்னர் நாகம்மாவிடம் அச் சம்பவத்தைப் பற்றி மகரிஷி கூறியதாவது: "சுப்பையர் மட்டும் உயிரோடு இருந்திருந்தால் என்னை அங்கே விட்டு விட்டு ஊருக்குத் திரும்பிச் சென்றிருக்க மாட்டார். குண்டு கட்டாய்த் தூக்கிக் கொண்டே போயிருப்பார். சிற்றப்பா சுப்பையருக்கு நெஞ்சழுத்தம், இறுமாப்பு அதிகம். இந்த ஆசாமியோ பசுவைப் போலப் பரம சாது. நான் அங்கேயே தங்குவதுதான் விதித்திருந்தது. இல்லாவிட்டால் சுப்பையர் உயிரோடு உள்ளவரை நான் இருந்த இடம் யாருக்கும் தெரியாமல் போயிருக்குமா? நெல்லையப்ப அய்யரோ ஆன்மிக சிந்தையுடையவர். இணக்கமான நடையுடையவர். 'இவனைப்போய்த் துன்புறுத்துவானேன்?' என்று என்னை அங்கேயே விட்டு விட்டுப் போய்விட்டார்."

ஆனால் நெல்லையப்ப அய்யரோ துக்கம் நெஞ்சை

யடைக்கத்தான் மதுரைக்குத் திரும்பினர். மாந்தோப்பை விட்டு வெளியேறும் சமயம், பண்டிதர் ஒருவர் தமது உபந்நியாசத்தை முடித்துத் திரும்பி வந்துகொண்டிருந்தார். அவரைத் தற்செயலாய்ச் சந்திக்க நேர்ந்தது. மன உளைச்சலுடனிருந்த சிற்றப்பன் அவரிடம் இளந்துறவியைக் குறித்து அவரது கருத்தை வேண்டினர். பண்டிதரின் பதிலைக் கேட்டுத் தம்முள் பதறினர். "அந்தப் பையனு?...படிப்பு கிடிப்பு இல்லாமல் அங்கே வெட்டியாய் உட்கார்ந்து கிடக்கிருன். தத்துப்பித்து என்று வேதாந்தம் பேசுகிருன். என்ன வேண்டிக் கிடக்கிறது?" என்பதுதான் பதில்!

ஆனுல், பின்னர் பிராமண சுவாமி விருபாட்ச குகையில் இருக்கும்போது நெல்லையப்ப அய்யர் யாரும் அறியாமல் மூன்ரும் முறையாக வந்தவர், ஆதிசங்கரரின் தட்சிணுமூர்த்தி தோத்திரத்திற்கு விளக்கம் உரைத்துக் கொண்டிருந்த வாலிப ஆசானை தூர நின்று கவனித்தார்; தம் மருமகனின் உன்னத ஞான நிலையை உணர்ந்தார். கவலை யொழிந்தார். அதுவே அவரது கடைசி வருகை. அதன்பின் சிறிது காலத்திற்குள் அவர் காலமாகிவிட்டார்.

குருமூர்த்த மடத்திலும் அடுத்துள்ள மாந்தோப்பிலுமாக சுமார் 19 மாதம் கடத்திய பின், இளந்துறவி 1898-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அருணுசலநாதர் ஆலயத்திற்கு இடம் பெயர்ந்தார். தனித்து வாழும் எண்ணம் கொண்ட அவர், பழனிசாமியை அவன் போக்கில் சென்றுவிடுமாறு பணித்தார். ஆனுல், பழனிசாமியோ தாய்ப் பசுவை விட்டு நீங்காத கன்றுபோல அன்றுமாலையே திரும்பி வந்துவிட்டான். அக்கோவிலில்

வாசம் புரிந்த ஒருமாத காலம் முழுவதும் இளந்துறவி ஓர் பிட்சாண்டியாய் திருவண்ணுமலைத் தெருக்களில் உணவை இரந்துண்டு வந்தார். ஒரு வீட்டின் வாயிலில் நின்று கைகளைத் தட்டுவார். யாராவது அன்னம் கொண்டுவந்தளித்தால் இரு கரம் ஏந்திப் பெற்று தெருவில் நின்றவண்ணமே புசிப்பார். ஒரே வீட்டில் இரண்டாம் முறை யாசிக்க மாட்டார். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வீதிக்குப் பொவார். இவ்வாறு பிச்சை எடுத்துத் திரிந்த அந்நாட்களைப்பற்றிப் பிற்காலத்தில் ஓர் அன்பரிடம் இவ்வாறு கூறியுள்ளார் :- " பிச்சை வாங்குவதை எவ்வளவு மாண்பும் உயர்வும் உள்ளதாய் உணர்ந்தேன் என்பதை எவரும் கற்பனைகூடப் பண்ண முடியாது! முதன் முதலில் குருக்களின் மனைவியிடம் கை நீட்டியபோது பழைய வழக்கம், படித்த தோஷம், ஆகையால் சற்று கூச்சமாகத்தானிருந்தது. ஆனால், அப்புறம் கொஞ்சம்கூட நாணம் எழவில்லை. ராஜா மாதிரி—ஏன், அதைவிட உயர்வாக உணர்ந்தேன். சில வேளைகளில் சில வீடுகளில் பழங்கஞ்சியோ கூழோதான் கிடைக்கும். அதை அப்படியே ஏந்தி, உப்போ ஊறுகாயோ இல்லாமல் நடுத் தெருவில் நின்று கொண்டே அருந்துவேன். பண்டிதர்களும் மற்றப் பிரமுகர்களும் கூட என்னை நமஸ்காரம் பண்ணுவதற்கு வந்துபோய்க்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிரிலேயே இப்படி சாப்பிட்டுவிட்டு, தலையிலேயே கையைத் துடைத்துக்கொண்டு பூரண திருப்தியுடன், மன்னுதி மன்னரெல்லாம் எனக்கு முன்னுல் ஒரு துரும்பே என்ற மனப்பான்மையுடன் மேலே நடப்பேன். இப்படி ஒரு வழி இருப்பதால்தானே அரசர்களும் நாட்டைத் துறந்து

ஆண்டியாய்த் திரிந்ததாக புராணக் கதைகளிலே காண்கிறோம்?"

அருணகிரிநாதர் கோயில் அக்கிரகாரத்திற்கருகில் இருந்ததால் பிராமண சுவாமியைக் கண்டு வியக்க வருபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகியது. அருணசலேசுவரர் ஆலய மண்டபங்களிலும், பிறகு பிரகாரத்தினுள் அமைந்த அலரித் தோட்டத்திலுமாக சில நாட்கள் கழிந்தன. அதன்பின் அவர் ஊர் எல்லையைவிட்டுச் சென்று அண்ணுமலையின் கிழக்குச் சரிவில் பவழக்குன்று என்னுமிடத்தில் வசிக்கலானர். அங்கே ஒரு சிறு சிவன் கோயிலும், நீரூற்றும், குகையும் இருந்தன. பவழக் குன்றில் அவர் ஆறுமாதகாலமே வாசம் புரிந்த போதிலும் அதன்பின் பிச்சைக்காகவோ வேறு அலுவலாகவோ ஊருக்குள் திரும்பிச் செல்லவில்லை. ரமணச்ரமம் என்று பின்னல் பெயர் கொண்ட தலத்திற்கு 1922-ஆம் ஆண்டு முடிவில் இடம் மாறும் வரையில் அண்ணுமலைச் சாரலிலேயே காலங் கழித்தார்.

அவர் பவழக்குன்றில் தங்கிய சமயத்தில்தான் அவரது தாயார் முதன் முறையாகக் காண வந்தார். மதுரையில் சிறிய தகப்பன் வீட்டிலிருந்து வெங்கடராமன் மறைந்து அப்போது 28 மாதங்களாகிவிட்டன. பெரியப்பா நெல்லையப்ப அய்யர் இளைஞனை வீட்டிற்குத் திரும்பக் கூட்டி வரும் முயற்சியில் தோல்வியுற்றுத் திருவண்ணுமலையிலிருந்து திரும்பியவுடன், தாயார் அழகம்மாள் தாமே நேரில் சென்று அழைக்க விரும்பினர். ஆயினும் உடனே கிளம்பிவர இயலவில்லை. அரசாங்க அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலைசெய்து வந்த மூத்த மகன் நாகசாமி கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது

திருவண்ணுமலைக்கு அழைத்துப்போகும்வரை தாயார் காத்திருக்க நேரிட்டது. ஊரை அடைந்ததும், பிராமண சுவாமி என்று நாடறிந்த தங்கள் வெங்கடராமன் அப்போது மலைச்சரிவில் பவழக்குன்றில் இருப்பதாகக் கேள்விப்பட்டு இருவரும் அவ்விடம் விரைந்தனர்.

அங்கே ஓர் பாறை மீது இளந்துறவி வீற்றிருக்கக் கண்டனர். வீடு திரும்புமாறு வற்புறுத்தத் தொடங்கியதும் அவர் இமை மூடினுர். வாய் திறந்தாரில்லை. அழகம்மாளும் நாகசாமியும் அடுத்தடுத்து நாள்தோறும் வந்தனர். அன்னை மன்ருடியவண்ணமிருந்தும், அவரோ அசலமாய், மௌனமாய் வீற்றிருந்தார். தாயார் துக்கம் மேலிட்டுக் கண்ணீர் உகுத்து ஓவெனக் கதறும் போது எழுந்து மெதுவாய் நடந்து அப்பாற் போய் விடுவார்.

முடிவில், அன்பர் ஒருவர் 'சுவாமிகள் பேசக்கூடாது என்ருல் பதிலை எழுதிக்காட்டலாமே' என விண்ணப்பித் தார். அதற்கிணங்கி, அவர் பொதுப்படையாக இவ்வாறு எழுதிக் கொடுத்தார் :

"அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவை யவனுங் காங்கிருந் தாட்டுவிப்பான். என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது; நடப்பது என்ன தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆதலில் மௌனமாயிருக்கை நன்று."

தாயார் துயரார்ந்த மனதுடன் மானுமதுரை திரும்பினுள். சுவாமி முன்போலவே அமைதியாயிருந்தார்.

1899-ஆம் ஆண்டு தொடக்கத்தில் இளந்துறவி பழனிசாமி சகிதம் பவழக்குன்றை விடுத்து விருபாட்ச

குகையில் குடி புகுந்தார். ஓர் ஞானியின் சடலம் அடக்கம் செய்யப்பட்ட இடம் அது ஆகவே, அவர் பெயரே அக்குகைக்கு ஏற்பட்டது. இங்கு பதினேழு ஆண்டுகாலம் மகரிஷி தங்கினார். கோடை காலத்தில் அருகிலுள்ள ஓடை நீர் வற்றிவிடுமாதலால், அப்போது மட்டும் மாமரத்திற்கு எதிரிலமைந்த வேறொரு குகைக்குப் போய்விடுவார். அதற்கருகில் முலைப்பால் தீர்த்தம் என்ற பெயரில் ஓர் வற்றாக் குளம் உள்ளது. பழனிசாமி மட்டும் தினமும் ஊரினுள் சென்று தனக்கும் குருவுக்கு மாக ஆகாரம் கொண்டு வருவான். படிப்படியாக அதற்கும் தேவையின்றிப் போயிற்று. அன்பர்களின் வருகை பெருகப் பெருக, அவர்கள் கொணரும் நிவே தனங்களே நிறைவாய் இருந்தன. நாள்தோறும் நீராடும் வழக்கமும் இப்போது நிலைத்தது.

இளந்துறவி அகமுகமாகவே முழு மவுனமாய்ச் சும்மாவிருக்கும் நிலை கழன்று வெளித் தோற்றத்திலே சகஜமாய்ப் பழக மெல்ல மெல்லத் திரும்பிய மாற்றம் இவ் விருபாட்ச வாச காலத்திலேதான் நிகழ்ந்தது. இதற்கு முன்பே குருமூர்த்தத்திலே பழனிசாமியோடு ஒரு சில வார்த்தைகள் பேசத் தொடங்கிவிட்டார். இந்த அன்பர் ஆன்மீக ஆர்வம் மிக்கவராயினும் ஆன்மீக போதனை நூல்களைப் படித்ததில்லை. ஆதலால், "அத்யாத்ம ராமாயணம்", "யோக வாசிஷ்டம்", "கைவல்ய நவநீதம்", "வேதாந்த சூடாமணி" போன்ற நூல்களை நகர நூல் நிலையத்திலிருந்து எடுத்துவந்து அவற்றின் பொருளை விளக்குமாறு குருவைக் கேட்பார். அதன் பொருட்டு அவரும் பழனிசாமியின் உதவியைக் கொண்டு மலையாளம் பயின்று விரைவில் அம்மொழி

விலே நல்ல தேர்ச்சி பெற்ருர். இதைப் போலவே பின்னர் பல புலவர்களும் பண்டிதர்களும் வெவ்வேறு மொழிகளில் அவரவர்க்குப் பிடித்தமான ஞான நூல்களுடன் இவரை அணுகி விளக்கமும் விமரிசனமும் வேண்டுகையில் இந்தக் கற்கை முறை மீண்டும் மீண்டும் நிகழ்ந்தது. கோயம்புத்தூர் சேஷய்யாவின் தொடர்பால் தெலுங்கு மொழியிலும், காவ்யகண்ட கணபதி முனியின் உதவியால் வடமொழியிலும் மகரிஷி பாண்டித்தியம் பெற்ருர்.

திருவண்ணுமலை வந்தடைந்தது 1896-இன் பிற்பகுதி. சாதகர் விளுக்களுக்கு எழுத்துமூலம் விடையளிக்கத் தொடங்கியது 1899-இல். இடையிலுள்ள 30 மாதங்களிலும் இளந்துறவி தவநிலையிலே, சாதனையிலே கழித்ததாகத் தோன்றினும், அது தோற்றமே. அவரது தனிமை, பேச்சின்மை, உடல்-மறதி, அவரது கவனத்தை எவ்வளவு முயன்றும் எவராலும் கவர முடியாத அகமுக நாட்டம், இவை எதுவும் தீவிர சாதனை முயற்சி என்று கொள்ளலாகாது. முக்தி என்ற தன்னியல் சார்ந்த சாந்த நிலையின் விளைவுகளே அவை எனலாம். " நான் உணவருந்தவில்லை ; ஆகவே உபவாசம் கிடக்கிறேன் என்ருர்கள். பேசவில்லை; மவுனவிரதம் என்ருர்கள் ", என்று பிற்காலத்தில் மகரிஷியே அந்நிலைக்கு விளக்கம் கூறியுள்ளார்.

அன்பர் கேள்விகளுக்கு அளித்த விடைகளிலே திருவண்ணுமலை சேர்ந்தபின் சில மாதங்கள் தம் உள்ளத்தை நிரப்பிய ஆனந்தத்தினுல் தாம் சொல்லற்று, மெய்மறந்து இருந்ததையும், பிறகு மெள்ள மெள்ள புற உணர்வு பெற்று, மனம் மீண்டும் உலகையும் சுற்றி

யுள்ளோரையும் காண முடிந்ததையும் விளக்கியுள்ளார். இவ்வாறு படிப்படியாக வெளி நடப்பில் பிறர்போல் பழகி பிறருடன் சகஜமாக அளவளாவிய மாற்றத்தை என்ன வென்று சொல்வது! ராஜஸ, தாமஸ குணங்கள் அறவே நீங்கி, வாசனைகளோ, நினைவுகளோ சிறிதும் இன்றி, முற்றிலும் சாத்விகமே உருவெடுத்த ஒரு தனி மனிதன் எனலாமா? எரிந்து சாம்பலாகிவிட்ட கயிறு பார்வைக்குத் தாம்பாகத் தோன்றினும் வலுவும் செயலும் அற்றதுபோல, மனிதனைகத் தோன்றினும் அகந்தை முனைப்பற்ற உடல்-மனக்காட்சியோ அவர்? சினிமாப் படத்தைத் தாங்கும் வெள்ளைத் திரை போலவும், எதிர் நிற்பதைப் பிரதிபலிக்கும் ரசக் கண்ணாடி போலவும், அவர் சூழ்நிலையால் பாதிக்கப் படாமல் அசைவற்று அசலமாய் இருந்தார். புறச் சூழல்களில் எழும் புதிய ஸ்வரங்கள் அவரது சகஜ உணர்வின் ஆதார சுருதி யுடன் கலந்திழைந்தன. அந்தச் சகஜ உணர்வே அவரது நடை, உடை, பாவனைக்கு அடிப்படையாயும், அப்பாலும் இடையருது நின்றது.

பல ஆண்டுகளாக அவர் கடைபிடித்த தனிமை யும் மவுனமும் அவரது ஆன்ம சித்தி பிறழாது, எத்தகைய சூழ்நிலையிலும் நீடித்து நிலைத்திருக்கத் தேவையாய் இருந்தன என்று நினைப்பது தவருகும். ஜூலை 1896-இல் ஒருநாள் அவருள் நிகழ்ந்த முதல் மரணக் காட்சியால் அவர் அடைந்த ஆத்ம சித்தி முழுமை யானதும் முடிவானதும் ஆகும். ஆகவே, வெளி உலகத் தோடு' இயல்பான தொடர்பு கொள்வதற்குத்தான் நீண்ட காலத் தனிமையும், மவுனமும் வேண்டியிருந்தன; எனக் கூறுவதே பொருந்தும். நமது உலக நடைமுறை

களையும், பேச்சுவார்த்தைகளையும் மீண்டும் பழகுவதேபடிப் படியாய் நிகழ்ந்த ஒரு நீண்ட காலப் பயிற்சியாய் அமைந்தது. ஏற்கனவே, ஞானோதயம் பெற்றதை அடுத்து மதுரை ஆலயத்திற்கு அடிக்கடி சென்று நடராஜர் முதலிய கடவுளரின் திரு உருவத்தின் முன்னே அசைவற்று நின்று வந்தார். "ஆன்மா, உடற்பற்றை விட்ட பின் வேறு புதிய பிடிப்பை நாடியது" என்று அக்காலத்து மனப்பான்மையைக்குறித்துப் பின்னர் விவரித்திருக்கிறார். தாம் அனுபவப்பூர்வமாக உணர்ந்து, தமக்குப் பழக்கமாகி விட்ட மெய்ப் பொருளின் சாயலையே பிறகு, திருவண்ணாமலையிலே அன்பர் மூலம் பரிச்சயமான ஞான நூல்களின் வாசகங்களில் கண்டார். எனினும், 1912-ஆம் ஆண்டு ஆமைப் பாறைக்கருகில் பிறர் முன்னிலையில் அவருக்கு ஏற்பட்ட இரண்டாவது மரண அனுபவத்திற்குப் பிறகே பாரமார்த்த உண்மையிலும், வியாவகாரிக உலகிலும் ஒரே மாதிரி சர்வ சகஜமாய்ப் பழகிவரலானார்; என்று தோன்றுகிறது. வியாவகாரிக வாழ்க்கையை ஆன்மத் திரையில் நிழலாடும் சலனப் படம் போலவோ, அல்லது அனைவருக்கும் பொதுவான ஓர் கனவுத் தொடராகவோ பாவித்தவராய், மக்களுள் தாமும் ஒருவராகக் கலந்து வாழ்ந்து, பேசிப் பழகி தமது கடைக் கண்ணால் அருளமுதை அனைவருக்கும் வாரி வழங்கினார்.

பலவாய் வெவ்வேறாய் மாறித் தோன்றும் இவ்வையகத்தைக் கலைக் கண்ணாலே கண்டு ரஸித்து அதனிடையே பற்றற்று இயங்குவதாய்த் தோற்றமளிக்கும் ஜீவன் முக்தரின் வாழ்வு நமக்கு மாபெரும் நன்மை நல்குகிறது என்கிறார் தத்துவ ஆசிரியர் டாக்டர் T. P. ராமச்சந்திரன். எவ்வாறெனில், மாயையுள்

உழலும் நம் போன்ருர்க்கு, வியாவகாரிகம், பரமார்த்தம் இரண்டும் சந்திக்கும் பொது விடமாக அவர் வாழ்வு அமைகிறது ; நாம் அனைவரும் உணர்வில் ஒன்றே என்ற உண்மையை நிகழ்கால அனுபவமாக நாமும் ரசிக்க அது உதவுகிறது. ஒருமையாம் அம் மெய்யுணர்வை இம்மை யிலே, நடைமுறையிலே நாம் பெறலாம் என்ற நம்பிக்கை யளிக்கிறது. உலக வாழ்க்கை ஒரு சினிமாப் படமாகவும் அதனைக் காண்பவரும் படத்தில் வந்து போகும் பாத்திரங்களும் நாமே; படத்துக்கு வெளிப்பட்டுத் தனித்து நிற்பவன் கிடையாது; கனவு அதைக் காண்ப வனின் உள்ளே இருக்கிறது, அவன் கனவினுள் இல்லை, என்கிற பேரறிவை ஞானியின் முன்னிலையில் அவருடன் பகிர்ந்துகொள்ள முடிகிறது.

மேற்சொன்ன கருத்திற்கு ஆதரவு மகரிஷியின் வாய் மொழியிலேயே காணலாம். முக்தி பெற்ற பின்னரும் உடலைத் தாங்கி உயிர் வாழ்வதைக் குறித்து அவர் பின்வருமாறு கூறியுள்ளார்: "ஆன்ம ஞானம் எய்தியவுடன் உடலைக் களைய வேண்டியதே என்றிருந் தால், அந்த ஆன்ம அறிவும், முக்தி நிலையும் பிறருக்கு எங்ஙனம் அவர் வழி வரக்கூடும்? ஆன்ம ஞானத்தை நூல்கள் மூலம் தந்தருளியுள்ள மகான்கள், தாம் ஞானம் பெற்ற பின்னரும் தொடர்ந்து வாழ்கிருர்களே என்பதற் காக அவர்கள் உண்மை ஞானிகள் அல்லர், என்று முடிவுகட்டிவிடலாமா? ஒருவர் உலகியற் செயல்களைத் தொடர்ந்து ஆற்றுகிருர் (மனமின்றி செயலும் இல்லை) என்பதால் அவர் ஞானியில்லை என்று கருதினுல், ஞானம் எய்திய பின்னரும் பல்வேறு காரியங்களைத் திறமையுடன் ஆற்றிய பரம ஞானிகள் அனைவருமே அஞ்ஞானிகள்

என்பதோடல்லாமல், ஏனைய தேவதைகளும், ஏன் பரமேசுவரனுமே அப்படியே அஞ்ஞானிகள் தாம் என்று ஏற்படும். ஏனெனில், ஆண்டவனும் பிரபஞ்சத்தைத் தொடர்ந்து இயக்கியவண்ணமிருக்கிறனே! உண்மை யாதெனில், ஞானியொருவன் பற்றற்று, செயல் புரிபவன், 'நான்' என்ற நினைவே இன்றி எத்தனையோ செயல்கள் நிறைவேறக் காரணமாயிருக்கலாம். அவற்றைத் திறன் படவும் நிறைவேற்றலாம். அவன் மூலம் அதித சக்தி செயலாற்றுகிறது; காரியம் சித்தி பெற அவனைக் கருவி யாக்குகிறது", என்கிறர் மகரிஷி.

ஜீவன் முக்தன் உணர்வின் உறைவிடமாய், நம் முள்ளே உள்ள மெய்யுணர்வின் வெளியுருவாய் நம் மிடையே வாழ்ந்து வருகிறன். அனைத்துயிரின் உள்ளும் அனைத்துயிராகவும் வாழ்கிறன். நாமோ அறியாமையால் அவனை மனிதருள் ஒரு மனிதனுகவும், ஊனுடலைத் தாங்கும் ஒரு தனி உயிராகவும் கருதுகிறேம்.

அத்தியாயம் 4

விருபாட்ச குகை வாசம் : ஞானியின் சகஜ நிலை

தாயாம் பிரகிருதியை விட்டு மறந்து, தந்தையாம் வாலறிவைச் சார்ந்து நின்றது—உறவைத் துறந்து அறிவோடு ஒன்றித் தூய அறிவாய் நின்றநிலை— தற்காலிகமானதே. பரமார்த்தத்துக்கும்,. விவகாரத் துக்கும், ஆவிக்கும், உடலுக்கும் இடையே உள்ள இயற்கைப் பிணைப்பு இளந்துறவியின் விருபாட்ச குகை வாசம் தொடங்கியபின் சில ஆண்டுகளில் மெல்ல மெல்ல மீண்டும் தோன்றியது.

இவர் தற்போதம் பெற்ற ஞானி என்ற புகழ் பரவப் பரவ, பக்தர்களும், தரிசிக்க வருவோரும் பெருகினர். அவர்களுள் படிப்பு வாசனையற்ற பாமரர்களும் உண்டு; பல்வேறு வாழ்க்கைத் தொழில் நடத்திய—ஆன்மிகப் பற்றுள்ள—அறிவாளிகளும் உண்டு. அவ்வாறு தம்மைக் காண வந்தவர்களிடம் அவர் வேண்டா வெறுப் பாகவோ தனியாய் விலகியோ பழகுவதில்லை. மனத் துயருடன் அவரை அணுகியவர்கள் பேச்சு வார்த்தை ஏதுமின்றி அவரது அன்பும் பரிவும் கலந்த பார்வை யாலேயே நிம்மதி கிடைக்கப் பெற்றனர். ஞானியைக் காணவந்த பண்டிதர் பலரோ கதிரவன் ஒளிபோல்

அவர் பரப்பிய அமைதியிலே சமைந்து, தமது மனத்தில் எழுந்த ஐயங்களும், வினக்களும் கரைந் தொழிவதை உணர்ந்தனர். அவரது கனிவுத் தோற்றம் சிறு குழந்தைகளையும் கவர்ந்ததால் இவர்களும் அவர் முன் னிலையில் சகஜமாய்ப் பழகினர்கள். குன்றின் மீது பல இடங்களில் அவர் சஞ்சரிக்கும்போது எதிர்ப்படும் இடையர்களோடும், புல் வெட்டுவோருடனுங் கூட அவர் அப்படியே இயற்கையன்புடன் பழகுவார். 'பிராமண சுவாமி' ஒரு தோழர், ஜாதி வேறுபாடு, உயர்வு-தாழ்வு பாராட்டாதவர் என்பதை அவர்கள் கண்டனர்.

அமைதியால் ஆட்கொள்ள வல்ல திருவருணை ஞானியை நாடிவந்தவருள் குறிப்பிடத் தக்கவர் எச்சம்மா என்பவர், இம் மாது இளம் வயதிலேயே அடுத்தடுத்து கணவன், மகன், மகள் யாவரையும் இழந்த பின், 1906-ஆம் ஆண்டில், சோகமே உருவாய் வந்து சேர்ந்தாள். மகரிஷியின் முன்னிலையில் அசைவற்று, சொல்லற்று நின்றிருக்கையிலேயே அவரது கண்கள் வீசிய கருணையின் விளைவாய் தனது துயரச் சுமை குறை வதை உணர்ந்தாள். அன்று முதல் வாழ்நாள் முழு வதும் அவருக்கே அன்படிமையானுள். ஊர்க்கோடியில் நான்கு மைல் தள்ளி வசித்து வந்தாலும் 'சாமி'க்காக சமைத்த உணவை நாள்தோறும் நடுப்பகலில் தாமே எடுத்துப் போவாள், அல்லது யாரிடமேனும் கொடுத் தனுப்புவாள். சிறிது காலம் கழிந்தபின் அவரது அனுமதியுடன் செல்லம்மாள் என்னும் சிறுமியை வளர்ப்புப் பெண்ணுக எச்சம்மாள் ஏற்று, வயது வந்ததும் அவளுக்கு மணமும் செய்வித்தாள். பேரக் குழந்தை பிறந்ததும் மனமகிழ்ந்தாள். அக் குழந்தைக்கு ரமணன்

என்ற பெயரையே சூட்டினுள். ஒரு நாள் திருவண்ணுமலையில் எச்சம்மாள் தன் வீட்டிலிருக்கையில் மருமகனின் கிராமத்திலிருந்து பேரிடியாய் ஓர் தந்தி, 'செல்லம்மாள் இறந்து விட்டாள்' என்ற செய்தியைத் தாங்கி வந்தது. சுவாமியிடம் ஓடிவந்து தந்தியைக் காட்டினுள். அதைப் படித்தவுடன் அவர் கண்ணிலே நீர் சுரந்தது. சாவுச் சடங்கிற்காக எச்சம்மாள் கிராமம் சென்று திரும்பியதும் பேரக்குழந்தையைக் கொண்டுவந்து அவர் கையில் கொடுத்து அவர் ஆசியை வேண்டி நின்றபோதும், மீண்டும் அவர் கண்ணிலே நீர் சுரந்தது.

எச்சம்மாளின் துயர்களைத் தாம் தாங்கி நின்ற நிலை, மகரிஷி ஒருமுறை கூறியதை நினைவூட்டுகின்றது:

"ஞானி என்பான் அழுபவருடன் தானும் சேர்ந்து அழுவான்; சிரிப்பவருடன் சிரிப்பான்; விளையாடுபவருடன் விளையாடுவான். பாடுபவருடன் தாளந் தவருமல் ஒத்துப்பாடுவான். அவனது முன்னிலை நிர்மலமான நிலைக் கண்ணுடி போன்றது. உள்ளதை உள்ளபடி அது காட்டும். வாழ்க்கையில் நாம் பல்வேறு பாத்திரங்களாய் நடிக்கிறேம் நிலைக் கண்ணுடியோ அதைத் தாங்கும் சட்டமோ பிரதிபலிப்பால் பாதிக்கப்படுமா? யாதும் அவற்றைப் பாதிக்காது. ஏனெனில் அவை வெறும் ஆதாரங்கள் தாமே,"

சோக நாடகத்தைப் போலவே ஞானியின் பார்வையும் துன்பத்தை மாற்றித் தெளிவித்துத் தருகிறது. எச்சம்மாள் போன்ற பலரின் துயர்கள் வாழ்நாள் முழுதும் நீடித்த பக்தியாய்ப் பரிணமித்தன.

அகந்தையை முற்றும் துறந்த மகரிஷி உண்மையாய்ச் சந்நியாசியாகிவிட்ட போதிலும், முறைப்படி சந்நியாசம் வாங்கிக்கொள்ள அவர் இணங்கவில்லை. விருபாட்ச குகைவாச ஆரம்பத்தில், பிரபல மடம் ஒன்றைச் சேர்ந்த சாஸ்திரியொருவர் அவரை அணுகி தீட்சை பெறுமாறு வேண்டினர். அச்சம்பவத்தை 1949-ஆம் ஆண்டு நினைவு கூர்ந்து பின்வருமாறு மகரிஷி கூறியுள்ளார்:

"...மடத்து சாஸ்திரி ஒரு நாட்காலை வந்து சேர்ந்தார். என்னுடன் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். பிராமணனாய்ப் பிறந்த நான் நியமப்படி சந்நியாசம் வாங்கிக் கொள்வதே முறையாகும் என்று வாதாடினர். 'புராதன சம்பிரதாயம் அது. உமக்குத் தெரியாததில்லை. உம்மை எங்கள் ஆசாரிய வரிசையில் சேர்த்துவிட எனக்குப் பேரவா. நீர் 'சரி' என்று மட்டும் தலையை ஆட்டிவிட்டால், நான் போய் எங்கள் மடத்திலிருந்து அதற்குரிய பொருள்களைக் கொணர்ந்து துறவறம் பூண வைக்கிறேன். அகண்ட காஷாயம் அணிய விருப்பமில்லாவிடின் கௌபீனம் மட்டும் காஷாயத் துணியாக இருந்தாலே போதும். நன்ருக யோசித்து உமது சம்மதத்தைத் தெரிவிக்கவும். இப்போது நான் போஜனத்திற்காக குன்றைவிட்டுக் கீழே இறங்கிப் போய் மத்தியானம் மூன்று மணிக்குத் திரும்ப வருவேன். எங்கள் மடத்தைச் சேர்ந்தவர்கள் உங்கள் மகிமையைக் கேள்வியுற்று என்மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். உமது சம்மதம் எங்கள் பாக்கியம்' என்ருர்.

சாஸ்திரிகள் சென்ற கொஞ்ச நேரம் கழித்து, புத்தகக் கட்டுடன் ஓர் கிழவனர் வந்து சேர்ந்தார். கட்டை என்முன் வைத்து, 'சுவாமி, இந்த மூட்டையைக்

கொஞ்சம் பார்த்துக் கொள்கிறீர்களா? நான் கீழேபோய் நீராடி உணவருந்தி வருகிறேன்' என்ருர். அவர் சென்றதும், கட்டைப் பிரித்து அவை என்ன புத்தகங்கள் என்று பார்க்கத் தோன்றியது; கண்ணில் பட்ட முதல் தலைப்பு "அருணுசல மகாத்மியம்" என்ற சமஸ்கிருத நூல். அந்நூல் சமஸ்கிருதத்திலும் உள்ளது என்பது அதுவரை எனக்குத் தெரியாது. புத்தகத்தைப் பிரித்ததும் எனது கண்ணுக்குத் தென்பட்ட செய்யுள் இது:— "இவ் அருணுசல மலையருகில் மூன்று யோசனை (25 மைல்) தூரத்திற்குள் வசிப்பவர்களுக்குத் தீட்சை ஏதும் இன்றியே பந்தம் அறுபடும், என்னுடன் ஐக்கியம் கிட்டும் என்று உறுதியளிக்கிறேன்."

மடத்து சாஸ்திரி பிற்பகல் திரும்பி வந்ததும் அவரது வேண்டுகோளுக்கு விடையாக அவரிடம் இந்த சுலோகத்தைக் காண்பித்தேன். கற்றறிந்த அவர் வேறேதும் பேசவில்லை. விழுந்து நமஸ்கரித்துப் போய் விட்டார்."

அருணுசலத்தின் சக்தியை இவ்வாறு மகரிஷி வலியுறுத்தி மெய்ப்பித்தார். அந்தச் சக்தி புராணக் கற்பனைசெறிந்த உள்ளத்தின் சக்தியே அன்றி வேறென்ன? குறிப்பிட்ட சமூகத்தில் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுக் குறிப்பிட்ட சிலருக்கே கிடைக்கப் பெறும் ஆசாரவிதி வழியை இவ்வாறு மகரிஷி நிராகரித்துத் தமது சுதந்திரப் போக்கைக் காப்பாற்றியது மன்றி, இத்தகைய திட நம்பிக்கையுள்ள பிறருக்கும் புறத் துறவின்றியே அகத்துறவு நிகழ்த்தும் வழியைக் காட்டினுர். எதுவாயினும், பிற்காலத்தில் அவர் தாம் ஒரு சந்நியாசி அல்ல, 'அதியாச்ரமி' (ஆச்ரம பேதத்தைக்

கடந்தவர்) என்று சட்டவட்டமாக உரிமை கோர முடிந்தது.

இளந்துறவியை நாடிவந்த அறிஞர்களுள் முக்கியமானவர் வடமொழிப் புலவரும் கவிஞருமான காவ்ய கண்ட கணபதி சாஸ்திரி ஆவார். 1903-ஆம் ஆண்டு முதற்கொண்டே அவர் பிராமண சுவாமியை அணுகி வந்தவராயினும் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே அவரைத் தம் சற்குருவாக ஏற்றார். சாத்திரங்களைக் கரை கண்டவர். கடுமையான தவங்கள் புரிந்தவர். ஆயினும், தெளிவும் உறுதியும் பெறமாட்டாமல் மனம் வருந்தினார். 1907-ஆம் ஆண்டு விருபாட்ச குகைக்கு அவர் ஒருமுறை சென்றபோது தவத்தின் உட்பொருளை உணர்த்துமாறு வேண்டினார், சிறிது நேரம் மவுனம் சாதித்தபின் சுவாமி பதிலுரைத்தார். "நான் என்னும் எண்ணம் எங்கே எழுகிறது என்று கவனித்தால், மனம் அங்கே அதனுள் அடங்கும். இதுவே தவம். ஒரு மந்திரத்தை ஜபிக்கையில் அம் மந்திரத்தின் ஒலி எங்கிருந்து எழுகிறது என்று கவனித்தால், மனம் அங்கே அதனுள் அடங்கும். இதுவே தவம்.'

காவ்யகண்டர் தாம் பிராமண சுவாமிக்குப் 'பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி' என்ற நாமம் சூட்டி முதன் முதலில் அவரைக் குமரக் கடவுளின் அவதாரமாகப் போற்றிப் பாடினார். காவ்ய கண்டரும் அவரது புலமை மிக்க சீடர்களான டி. வி. கபாலி காஸ்திரி, தெய்வ விரதர் முதலியோரும் விடுத்த வினாக்களையும் அவற்றிற்கு மகரிஷி அளித்த விடைகளையும் கொண்டதே ரமணகீதை என்கிற பிரபல சமஸ்கிருத நூல் ஆகும். கபாலி சாஸ்திரி எழுதியுள்ளார்: 'உலக மகான்களின் சரித்திரத்திலே ரமண

மகரிஷிக்கு ஒரு தனி இடம் உண்டு. முக்தி பெற்றபின் ஐம்பத்து நான்கு ஆண்டுகள் உயிருடனிருந்து, இருந்த இடத்திலிருந்தவாறே எத்தனையோ பேரைத் தன் வயப் படுத்தி எவரும் எந்த நேரத்திலும் தம்மை அணுக அனுமதித்து, வெள்ளமாய் புரண்ட சந்தேக வாதத்தை அடக்கினார். இத்தகைய மாபெரும் சாதனைகள் முன்பு காணாதவையே."

மகரிஷியின்பால் கபாலி சாஸ்திரி நீடித்த அன்பும் மதிப்பும் கொண்டவராயினும் அவரது உபதேசம் "மிகவும் நேரடியானது; செங்குத்தான வழி; எளிதாய்த் தோன்றினும் தொடக்கத்துக்கும், முடிவுக்கும் இடையே முறையான படிக்கட்டு அற்றது; நான் இருப்பது போன்ற சூழ்நிலையிலுள்ளவர்களுக்குப் பயன்படாது" எனத் தீர்மானித்தவராய் ஸ்ரீ அரவிந்தரைப் பின்பற்றலானார்.

ஒரு சமயம், சைவசித்தாந்த மகாநாடு ஒன்றிலே கலந்துகொள்ளுமாறு கணபதி சாஸ்திரிக்கு அழைப்பு வந்தது. அவருக்கு தர்மசங்கடமாகிவிட்டது. ஏனெனில் பெரும்பாலும் தமிழில் உள்ள அச் சமய நூல்களில் அவருக்குப் பரிச்சயம் கிடையாது. இந்த நிலையில், *சிவஞான போதம்* என்ற சித்தாந்த நூலின் சாரத்தை மகரிஷி அவருக்கு எடுத்துரைத்து, அதன் வடமொழி சூத்திரம் பன்னிரண்டையும் கொடுத்தார். மகாநாட்டில் கணபதி சாஸ்திரியின் பேச்சு அருமையிலும் அருமை, ஆதார பூர்வமானது, என்று போற்றப் பெற்றது.

ரமண மகரிஷியைக் குறித்து கணபதி சாஸ்திரி பல துதிப்பாடல்களை இயற்றியுள்ளார். மேலும், கடினமான சமஸ்கிருத யாப்பு வகைகளில் மகரிஷி தாமாகவே பாடல் கள் இயற்றும் முயற்சிக்குக் காரணமானார். காவ்ய

கண்டர் இயற்றிய சத்தரிசனம் (மகரிஷியின் 'உள்ளது நாற்பது' என்ற நூலின் சமஸ்கிருத மொழி பெயர்ப்பு) தற்காலத்திய தத்துவ நூல்களுள் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுவது நியாயம்தானே.

ரமண கீதையின் வடமொழி நடையின் மினுமினுப்பும் ஓசை மாண்பும் பண்டிதர்களைப் பரவசப் படுத்துவனவாம். அது மட்டுமல்ல, மொழிபெயர்ப்பிலுங் கூட அதன் கருத்துகள், வேதாந்த மரபில் பரிச்சய மற்றவர்கள் உட்பட, பொது வாசகர்களின் கவனத்தைக் கவரும் ஆற்றல் உடையனவாம். அதன் மூன்றும் அத்தியாயம் மானிட ஜன்மத்தின் தலையாய கடமை யாதென வரையறுத்துக் கூறுவதாவது: "செயல் அனைத்திற்கும், அதன் பலன் அனைத்திற்கும் இருப்பிட மான தனது உண்மையை உணரவேண்டும். அவ் வுண்மையை உணர்வதற்குத் தேவையான முழு முயற்சி யாதெனில், வெளிவிஷயங்களிலிருந்து எண்ணங்களை உள்ளே திருப்பி, அலைவும் சார்வும் இல்லாத ஆன்ம விசாரணையிலேயே நிலைக்க வேண்டும்.'; ஐந்தாம் அத்தியாயம் இதய வித்தையை விளக்குகிறது. 'இதயம்' என்பது தூல உடலின் மார்பின் இடதுபுறம் அமைந் திருக்கும் உறுப்பு அன்று. வலதுபுறம் உள்ளதாகக் கற்பனை செய்யக் கூடிய ஆன்மாவேயாகும். அதுவே 'நான்' என்ற நினைப்பும் மற்றெல்லா எண்ணங்களும் தோன்றும் இடம் ஆகும்.

யோக முறைகளின் சிக்கல்களை ஒதுக்கித் தள்ளி விட்டு, நமது இயற்கை நிலையின் மறைபொருளை ஸ்ரீ ரமணர் வெளியிடுகிறார்: "உலகனைத்தும் உடலி லும் உடலனைத்தும் இதயத்திலும் அடங்கியுள்ளதால்

உலகனைத்தும் இதயத்தில் அடக்கமாம். சூரியன் சந்திரனுக்கு ஒளியளிப்பதுபோல் இவ் விதயமே மனதிற்கு ஒளியளிக்கிறது. சூரியன் துலங்கா இரவினில் சந்திரனிடம் ஒளி காண்பதுபோல, இதயத்தே நிலைபெருதவன் தன் மனதை மட்டுமே காண்கிருன். ஒளியின் மூலமாம் தன் உண்மை வடிவைக் காணுது, மனத்தாலே பொருள் வெவ்வேருய்க் கண்டு பாமரன் மயங்குகிருன். இதயத்தே நிலைத்த ஞானியோ பகலின் வெயிலிலே நிலவொளி ஒன்றி மறைவதைப் போல, மனவொளி இதய ஒளியில் ஒன்றி மறைவதைக் காண்கிருன். காண்பான் வேறு காணப்படும் பொருள் வேறு என்ற எண்ணம் மனத்திலே தான் உள்ளது. இதயத்திலே வீற்றிருப்போர்க்குக் காண்பானும் காணப்படும் பொருளும் ஒன்ருகிவிடும்."

ரமண கீதையின் 10-ம் அத்தியாயம் "சங்க வித்தை" அல்லது சமுதாய சாஸ்திரத்தைப் பற்றியது. சமூக இயல், அரசியல், மனித சகோதரத்துவம் ஆகியவை இதனுள் அடங்கும். "தனக்கான கடமை, தன்னைச் சார்ந்தோர்க்கான கடமை, நாட்டுக்கான கடமை, மனித குலத்திற்கான கடமை, இவற்றிற்கிடையே முரண்பாடு எழத்தேவையே இல்லை; வெவ்வேறு வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுபவர்கள் அடங்கிய சமூகமானது உடலைப் போன்றது; சமூகத்தினர் அவ்வுடலின் உறுப்புக்களைப் போன்றவர். அவயவம் உடலுக்கு உதவுவது போல, சமூகத்திற்கு உதவும் மனிதனும் மேன்மை யடைகிருன். வாக்காலும், மனத்தாலும், உடலாலும் சமூகத்திற்கு உதவுமாறு தான் எக்காலும் ஒழுகி, தன்னைச் சார்ந்தவர்களையும் தெளிவிக்க வேண்டும்." சமூக வாழ்வு நலம்பெற சாந்தி, சக்தி

இரண்டும் தேவையே. தன் மனம் தூய்மையுற அமைதியும், சமூகம் ஓங்குவதற்கு ஆற்றலும் வேண்டும். வெவ்வேறு இனத்தார்க்கும் வகுப்பினருக்குமிடையே பிணக்குகளைத் தவிர்ப்பதைப் போலவே, தேசங்களுக்கிடையேயும் தவிர்த்தல் வேண்டும். "சமவுணர்வுள்ள சகோதரப் பான்மையே மனித சமூகம் அனைத்தும் ஒருங்கே அடைவதற்குரிய சீரிய நிலையாம். மக்கள் ஒருவரோடொருவர் சகோதரப்பான்மை எய்தினால் உத்தம சாந்தி நிலவும். அப்போது இவ்வுலகம் முழுவதும் ஓர் குடும்பம் எனவே திகழும்,"

ஆடவரைப் போலவே மாதருக்கும் துறவறம் பூண உரிமையுண்டு, ஏனெனில், விடுதலை ஞானம் இவற்றில் ஆண்-பெண் என்ற பேதம் கிடையாது, என்று பதின் மூன்றும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

"அனுபவத்தின் மூலமே ஐயம், திரிபு அகலும், நூற்றுக் கணக்கான சாத்திரங்களைப் படிப்பதால் அன்று", என்று 15-வது அத்தியாயத்தில் கண்டுள்ளது.

மகரிஷியை நாடி வந்த மேலைநாட்டவர் வரிசையில் முதலாமவர் எஃப். எச். ஹம்ப்ரீஸ் (*F H. Humphreys*). அவர் ஒரு இந்திய போலீஸ் அதிகாரி 1911-ஆம் ஆண்டு மலையின் மீது துறவியைத் தரிசித்தார். இருபத்தோரு வயது இளைஞரான ஹம்ஃப்ரீஸ் சமய நூல்களை ஆர்வத்தோடு கற்றவர். தம்மிடம் சில அற்புத சக்திகள் குடிகொண்டுள்ளதாக உணர்ந்த அவர் சித்திகளைப்பற்றி அறிய விரும்பினார். மகரிஷியோ அந்த ஆவலைத் தடுத்தார்:

" இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளை அதிகம் நினைத்தல் கூடாது. புலனின்றிக் காண்பது, கேட்பது, இத்தகைய ஆற்றலால் எவ்விதப்பயனுங் கிடையாது; ஏனெனில், அவை ஏதும் இன்றியே பேரொளியும் அமைதியும் கைகூட முடியும். ஞானி எவரும் சித்திகளை நாடியதில்லை. அவற்றைத் துச்சமாக மதித்துள்ளனர். ஏனெனில், அன்றாட வாழ்வில் அவற்றால் பயன் ஏதும் இல்லை.

" நாம் காணும் நிகழ்ச்சிகள் விநோதமாய், வியக்கத் தக்கனவாய் இருக்கலாம். ஆனால், அவற்றிற்கெல்லாம் மேலான அற்புதத்தை நாம் உணருவதில்லை. அந்த அற்புதம் யாதெனில், நம் கண்முன் நிகழ்வன, அவற்றை நாம் காண்பது அனைத்துக்கும் காரணமான அளவற்ற ஆற்றலே. மாறுபடும் வாழ்க்கைக்கோலங்கள். சாக்காடு, அதிசய நிகழ்ச்சிகள் இவை மீது கவனத்தை வைக்காதே. அவற்றைக் கண்ணால் காண்பதையும் உணர்வதையும் பற்றி கூட எண்ணாதே. அவையாவற்றையும் காணும் அந்த அறிவை நினை; அவற்றினுக்கெல்லாம் காரணம் அதுவே. அது உன்னுள்ளே உள்ளது. இவ்வித ஒருமுகமுனைப்பின் விளைவாக, தாமாகவே சித்திகள், மன அமைதி, துன்பம் துடைக்கும் பற்பல ஆற்றல்கள் தோன்றும்; எங்கும் ஆற்றல் தோன்றும்; ஆனால், எப்போதும் நமது விருப்பமின்றியே தோன்றும்.

" கிறிஸ்தவ சமயம், பௌத்தம், இந்துமதம், பிரும்ம ஞானம் போன்ற ஒழுக்கமுறைகள் அனைத்துமே, நம்மை அம்முறைகள் யாவும் ஒன்று கூடும் ஒருமுனை மட்டுமே இட்டுச் செல்லும்; அதற்குமேல் அவை போகா. அந்த ஒரு முனையாவது 'எங்கும் கடவுள்' எல்லாம்

கடவுள்' என்ற உண்மையை உணர்வதே; மறை பொருளாய் அல்லாமல், இவ்வுலக வாழ்வுக்குரியதாய், அன்றாட வாழ்வுக்குரியதாய் இந்த உண்மையை உணர்வதே அந்த ஒரு முனையாகும்". ஆனால், கடவுள் எங்குமாய் அனைத்துமாய் உள்ளதை புத்தி பூர்வமாக மட்டுமே நினைப்பதோடு நின்றுவிடாமல், இந்த உண்மை இடைவிடாத பயிற்சியின் மூலம் செயலுருவாகி மெய்யனுபவமாய் நிலைக்க வேண்டும்.

உலகுக்கு உதவும் வழி பற்றி ஹம்ஃப்ரீஸ் கேட்க, மகரிஷி அளித்த விடை இது:- "உனக்கு நீயே உதவிக்கொள்; அதுவே நீ உலகிற்கு உதவும் வழியாம். நீ உலகினின்றும் வேறல்ல; உலகமும் உன்னிடமிருந்து வேறன்று". உத்தியோகக் கடமைகளையாற்றிக்கொண்டு அதே சமயம் தியானத்திலும் ஈடுபடுமாறு அவருக்கு ஆலோசனை கூறினர். உலக வாழ்விற்குரிய கடமைகளுக்கும், சமயவாழ்விற்கும் இடையே தோன்றும் முரண்பாடுகளால் சஞ்சலமுற்ற அன்பர்கள் பலருக்கும் மகரிஷி இந்த நல்லுரையையே வழங்கினர்.

லண்டனிலிருந்த நண்பரொருவருக்கு ஹம்ஃப்ரீஸ் எழுதிய கடிதத்தில் (அக் கடிதம் பிற்பாடு அறிவு வளம் நிறைந்த பத்திரிகையொன்றில் வெளியிடப்பட்டது) மகரிஷியின் இந்த அறிவுரையை வடித்தெழுதியதோடு மட்டுமின்றி, அவரது முன்னிலையில் தாம் உணர்ந்த அனுபவத்தைப் பின்வருமாறு விவரிக்கிறார்; "குகையை அடைந்ததும் நாங்கள் அவரது காலடியில் வாய் திறவாமல் அமர்ந்தோம். இவ்வாறு வெகுநேரம் பேசாமல் இருக்கையில் நான் என் வயமிழந்து எழுச்சியுறுவதை உணர்ந்தேன். அரைமணி நேரம் நான் மகரிஷியின்

கண்களையே உற்று நோக்கிய வண்ணமிருந்தேன்; ஆழ்ந்த தியானத்தில் செருகியிருந்த அக் கண்கள் நிலைபெயரவே யில்லை. புனித ஆவியின் ஆலயமே உடல் என்பதை நான் ஒருவாறு உணர்ந்தேன். சொல்லொணு உணர்ச்சிகளுக்குள்ளானேன்... மகரிஷி யைக் காணவரும் ஏராளமான சின்னஞ் சிறுவர்களைக் கண்டு என்னெஞ்சம் நெகிழ்ந்தது. எல்லோரும் சுமார் ஏழு வயது குழந்தைகள். அவர்களாகவே மலையேறி வந்து மகரிஷியின் அருகில் உட்கார்ந்து விடுகிறுர்கள். அவர் நாட்கணக்கில் அவர்களைப் பார்க்காவிடினும், அவர்களோடு பேசாவிடினும் அங்கு வந்து அமர்கிறுர்கள். அவர் முன்னிலையில் ஏதும் விளையாடாமல் அமைதியாய்ப் பூரண மன நிறைவுடன் அமர்ந்திருக்கிறுர்கள்..."

ஆயினும், வேறு சில சமயங்களில் அங்கு வரும் சிறுர்கள் விளையாடுவார்கள்; மகரிஷியும் அவர்களது விளையாட்டிலே கலந்து கொள்ளுவார். "விருபாட்ச குகை வாசத்தின் போது குழந்தைகளுடன் நீங்களும் கோலி-குண்டு விளையாடினீர்களாமே, உண்மையாகவா?' என்று பல ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் அன்பர் கேட்ட போது அவர் அதனை ஆமோதித்துச் சொன்னுர்; "அதற்காகத் தோண்டிய குழிகள் அங்கே இன்னமும் இருக்கலாம். சில சமயங்களில் குழந்தைகள் பை நிறைய மிட்டாய் கொண்டு வருவார்கள். அதை எல்லோருமாகப் பங்கு போட்டுச் சாப்பிடுவோம். தீபாவளியின் போது என் பங்கிற்குப் பட்டாஸ் எடுத்து வருவார்கள். பட்டாஸ் களை நாங்கள் ஒன்ருய்ச் சேர்ந்து வெடிப்போம். ரொம்ப வேடிக்கையாக இருக்கும்."

விருபாட்ச குகையில் விளையாடுவதற்காகக் குன்று ஏறிவரும் குழந்தைகள் சில சமயங்களில் பொம்மைகளை யுங்கொண்டு வந்து பொம்மைக் கல்யாணங்கள் நடத்து வார்கள். எச்சம்மாவின் பெண் செல்லம்மாவும் அவர் களுள் ஒருத்தி, சின்னஞ் சிறுமியாயினும் சஷ்டி, கிருத் திகை போன்ற உபவாச தினங்களில் தன் தாயாரோடு சேர்ந்து பட்டினிக் கிடப்பாள். அன்னை சமைத்த உண வைச் சிறுமி பல சமயம் மகரிஷிக்கு எடுத்து வரும்போது, பட்டினியால் அக்குழந்தை அயர்ந்து சோர்ந்திருப்பதை அவர் கவனித்திருக்கிறார். பிற்காலத்தில் அவற்றை நினைவு கூர்ந்து இவ்வாறு கூறியுள்ளார். "அவள் பட்டினிக் கிடந்தாலும் எனக்கு உணவு கொண்டு வந்து கொடுத்தாள். அப்படி அவள் ஒன்றும் உண்ணாதபோது நான் மட்டும் சாப்பிட எப்படி மனம் வரும்? 'நீ ரொம்ப சின்னப் பெண், இப்படி யெல்லாம் உபவாசம் இருக்கும் வயது இல்லை என்றெல்லாம் மன்றாடி அவளையும் சாப்பிட வைத்தேன்." சொல்லிவைத்தாற்போல், அதற்கு மறு நாளே உணவுடன் அவள் குன்றேறி வரும் வழியில் ஓர் காகிதத் துண்டைக் கண்டெடுத்தாள். அதில் சுலோகம் எழுதியிருப்பது போலத் தோன்றவே அதைக் கொண்டு போய் மகரிஷியிடம் காட்டினாள். வடமொழி யிலிருந்த அந்தச் சுலோகத்தை அவர் செல்லம்மாவுக் காகத் தமிழ்ப்படுத்திக் கூறியதன் வாசகம் இதுதான்:

சாதுக்கள் ஆவார் சகவாசம் நண்ணினால்
ஏதுக்காம் இந்நியமம் எல்லாமும்—மேதக்க
தண்தென்றல் மாருதம்தான் வீசவே விசிறி
கொண்டென்ன காரியம்நீ கூறு.'

அன்றிலிருந்து அச்சிறுமி உபவாசம் இருப்பதை விட்டொழித்தாள்.

ஏழை எளியோருடன் அவரது ஒருமை மனப்பான்மை, எண்ணற்ற நிகழ்ச்சிகள் மூலம் வெளியாயிற்று. அவற்றுள் ஒன்றை அவர் வாய் மொழியாலேயே கூறுவோம்:

"கோடையில் விருபாட்ச குகையில் தண்ணீர் கிடையாது; ஆகவே, மாமரத்தடி குகைக்கு வந்து விடுவோம். அப்போது நடுப்பகலில் கீழ்க்குடிப் பெண்கள் சிலர் தலையில் பெரிய புல்லுக்கட்டுக்களைச் சுமந்து கொண்டு ரொம்பக் களைப்புடன் குகைக்கு வருவது வழக்கம். பாவம், ஏழை மக்கள் கொஞ்சம் கஞ்சியைக் கலக்கிக் குடித்துவிட்டு விடியற்காலையிலேயே கிளம்பி குன்றின்மேல் போய் புல்லைச் செதுக்குவார்கள். குகையை வந்தடைந்தவுடன் புற்கட்டுகளைக் கீழே போட்டு விட்டு, முதுகைக் குனித்து, 'சாமி, ஒரு குவளைத் தண்ணியை நடு முதுகிலே கொட்டுங்க' என்பார்கள். நான் வராந்தாவில் நின்று கொண்டு அவர்கள் விருப்பப்படி ஊற்றுவேன். சோர்வு நீங்கப்பெற்ற அவர்கள் 'உஸ், அப்பாடா, எம்மா சுகமா இருக்குது' என்று சிலிர்ப்பார்கள். பிறகு இரு கைகளையும் கிண்ணமாகக் குவித்து வயிறு நிறம்பத் தண்ணீர் அருந்தி, முகங் கழுவி, மரத்தடி நிழலில் ஒதுங்கிச் சற்றே இளைப்பாறிய பின்பே புறப்படுவார்கள். அவர்கள் வரும் வேளை அறிந்த நான் தயாராகத் தண்ணீருடன் அங்கே காத்திருப்பேன். அவர்கள் என்ன செய்வார்கள்? முலைப்பால்தீர்த்தத்தில் தண்ணீர் எடுக்க அவர்களுக்கு உரிமை கிடையாது. பாவம், வேறு எங்கும் தண்ணீர் கிடையாது. புல்லை

ஏற்று காசு கிடைக்கும் வரை கஞ்சியைக் காணவும் முடியாது!. குழந்தை குட்டிக்காரிகள் சீக்கிரம் குடிசைக்குத் திரும்பிப்போய் குழந்தைகளைக் கவனிக்க வேண்டும். இந்த ஏழை மக்கள் வேறு என்ன பண்ணுவார்கள்! பாவம்? 'சாமி தண்ணி ஊத்துவார்' என்ற நம்பிக்கையுடன் குகைக்கு வந்து விடுவது வழக்கம்.

"அந்தச் சமயம் நாங்கள் சமையல் வேலை மேற்கொள்ளவில்லை; ஆனால், என்றாவது ஒரு நாள் சமைத்தோமானால், அரிசி உலையில் நிறையத் தண்ணீரை ஊற்றி விடுவோம். வடித்தக் கஞ்சியை ஒரு பானையில் விட்டு ஜலத்தைத் தாராளமாகக் கொட்டி உப்பையும் போட்டுக் கலக்கி வைப்போம். சுக்குக் கிடைத்தால் அதையும் நான் அதில் பொடித்துப் போடுவேன். பெண்கள் வருவதற்குள் கஞ்சித் தண்ணீர் நன்றாகக் குளிர்ந்திருக்கும். ஒரு டம்ளர் நிறைய அதை அவர்கள் கையில் ஊற்றியதும் தேவாமிருதம் போல் அருந்திவிட்டுப் போவார்கள். அக் கஞ்சியின் சுவையும், அதை அருந்தும் இன்பமும் அவர்களுக்குத்தான் தெரியும்"

இந்த நிகழ்ச்சியைக் கூறும் நாகம்மா, 'மகரிஷி உணர்ச்சிவயப்பட்டவராய் அதற்கு மேல் ஏதும் பேசாமல் மவுனத்தில் ஆழ்ந்து விடுவார்' என்கிறார்.

ஒரு சமயம் மகரிஷியும், முதலியார் சுவாமியும் விருபாட்ச குகைக்குச் சற்று மேலே ஓர் குன்றின் மீது நடந்து கொண்டிருந்தனர். அங்கே, சுமார் 15 அடி உயரப்பாறை ஒன்று, உச்சியில் பிளவுடன் இருந்தது. அதன் மீது ஓர் இடையர்ச் சிறுமி நின்று அழுது கொண்டிருந்தாள். 'ஏனம்மா அழுகிறாய்?' என மகரிஷி

வினவ, ஓர் ஆட்டுக் குட்டி அந்தப் பாறைச் சந்தினுள் சறுக்கி விழுந்து விட்டது, அதை எடுக்க முடியவில்லை, என்றாள். அவர் உடனடியாக அப்பாறைச் சந்தில் இறங்கி ஆட்டுக் குட்டியைத் தம் தோளிலே போட்டுக் கொண்டு உயர ஏறி வந்து சிறுமியிடம் ஒப்படைத்தார். அவள் மகிழ்ச்சியால் துள்ளினாள்.

பதினாறு வயதிலே கிட்டிய மரண அனுபவம் 16 ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் 1912-இல் நிகழ்ந்தது. ஆனால், ஒரு வேறுபாடு. இந்த முறை பிறர் முன்னிலை யில் அது நிகழ்ந்தது. நாகம்மாவிடம் அதை இவ்வாறு விவரித்துள்ளார் :-

"ஒருநாள் நான், வாசுவோடு (வாசுதேவ சாஸ்திரி), இன்னுஞ் சிலருமாகச் சேர்ந்து பச்சையம்மன் கோவி லுக்கு எதிரேயுள்ள குளத்திலே குளித்து விட்டு ஒரு குறுக்கு வழியாகத் திரும்பி வந்து கொண்டிருந்தோம். ஆமைப் பாறையை நெருங்கிய போது எனக்கு அயர்வாக இருந்தது; மயக்கமும் வந்தது. என் கண்முன்னாலிருந்த இயற்கைக் காட்சி திடீரென்று மறைந்து ஏதோ ஒரு வெள்ளைத்திரை மூடினாற்போலாகி விட்டது. ஆனால், இயற்கைக் காட்சி மறைவும், திரையின் தோற்றமும் படிப் படியாக நிகழ்ந்தன. ஆகவே, ஒரு பகுதி பசுமை யும், மறு பகுதி வெண்மையுமாக ஒரே சமயத்தில் என் முன் தோன்றின. சில கணங்களுக்குப்பின் இயற்கைக் காட்சி முழுவதும் மறைந்து விட்டது. நான் மேலே நடக்காமல் அப்படியே நின்று விட்டேன். வெண்மை மறைந்த பிறகுதான் மீண்டும் நடக்கத் தொடங்கினேன். இதுபோல் இரண்டாம் முறை நிகழ்ந்த போது, என் உடற் சோர்வு அதிகமாயிற்று. ஆகவே, பாறை மீது

தாங்கலாகச் சாய்ந்தேன். மூன்றும் முறையும் இவ்வாறே நிகழ்ந்த போது பாறை மீது உட்கார்ந்து விட்டேன். என்னைச் சுற்றிலும் வெள்ளைத் திரை ஒன்றையே கண்டேன்.

"என் தலை கிறுகிறுத்தது. இரத்த ஓட்டமும் இதயத் துடிப்பும் நின்று விட்டன. உடலில் கருமை மெள்ள மெள்ள ஏற, ஏற நான் உண்மையில் இறந்து விட்டதாகவே வாசு எண்ணி விட்டான்! அழத் தொடங்கினான், என்னைக் கட்டிக் கொண்டான்.

"உடல் நிறமாற்றம், வாசுவின் அணைப்பு, அழுகை, அவன் உடல் நடுக்கம், என்னைச் சூழ்ந்துள்ளோரின் பேச்சு, இவை அனைத்தையும் நான் உணர்ந்தேன். கை கால்கள் ஜில்லிட்டுப் போவதையும் இதயத் துடிப்பு அடங்குவதையுங் கூட உணர்ந்தேன். ஆயினும், என்னுள் பயம் ஒன்றுமில்லை. என் எண்ண ஓட்டமும், அக உணர்வும் நிற்கவில்லை. என் உடல் நிலையைப் பற்றி எனக்கு ஒரு கவலையுந் தோன்றவில்லை. கால்களை மடக்கிப் பத்மாசனத்தில் அமர்ந்தேன். பின்னல் இருந்த பாறையில் நான் சாய்ந்திருக்கவில்லை. இரத்த ஓட்டம் நின்றது ஆயினும், ஆசனக்கட்டு மாருமல் நிலைத்தது. இவையாவும் சுமார் பதினைந்து நிமிடங்கள் நீடித்தன.

"திடீரென என் உடல் முழுவதும் சக்தி வியாபித்தது, இரத்த ஓட்டமும் இதயத்துடிப்பும் மீண்டும் கிளம்பின. உடலின் கரு நிறம் நீங்கியது. உடல் முழுவதும் மயிர்க்காலெங்கும் வியர்வைப் பெருகியது. கண்களைத் திறந்தேன். எழுந்தேன். 'வாருங்கள், போகலாம்' என்றேன். பிறகு நாங்கள் வேறு தடை ஏதுமின்றி விருபாட்ச குகை போய்ச் சேர்ந்தோம்.

" அந்தத் தருணம் மட்டுமே என் இதயமும் சுவாசமும் ஒருங்கே இயங்காமல் நின்றன. அந்த நிலையை நான் வேண்டுமென்றே தருவித்துக் கொள்ளவில்லை. இறந்த பின் என் உடல் எவ்வாறு தோற்றமளிக்கும் என்று பார்க்க நான் விரும்பவில்லை. முன்பு எனக்கு இம்மாதிரி அனுபவங்கள் நிகழ்ந்ததுண்டு. இந்த முறை அது மிகவும் தீர்மானமாக இருந்தது, அவ்வளவுதான்."

உடலில் உயிரோட்டம் திரும்புவதைக் கண்ணுற்ற வாசுதேவ சாஸ்திரி ஆனந்தத்தால் துள்ளிக்குதித்த போது, மகரிஷி 'நீ ஏன் அழுதாய்? நான் செத்தும் போய்விட்டேன் என்று நினைத்தாயா?' என்றாராம்.

கடைசியில், 1948-50 இல் நோய்வாய்ப்பட்டு நீண்டகாலம் வருந்திய போதும் மகரிஷி முற்றிலும் உடற் பற்றினை அறுத்தவர் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கினார். ஞானிகள் மறையும் போது அதிசயங்கள் நிகழும், உடல் ஒளிப்பிழம்பில் கரையும் என்பது போன்ற கதைகளில் மனத்தைச் செலுத்த வேண்டாமென அவர் எச்சரிப்பார். ஆன்ம விசாரணை மார்க்கம் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமேயில்லாமல் சகல மக்களாலும் பின்பற்றக் கூடியது என்று வற்புறுத்திய மகரிஷி, மற்ற உடல்களைப் போலவே, ஓர்ஞானியின் உடலுக்கும் நோயும், அழிவும் உண்டு, பிறந்து வளர்ந்த தேகம் இறப்பதும் இயற்கையே என்று காண்பித்தார்.

இதன் பின் மகரிஷியின் தனி வாழ்வில் குறிப்பிடத்தக்கச் சம்பவங்கள் வேறு ஏதுங் கிடையாது எனலாம். பின் தொடர்ந்த நாற்பது ஆண்டுகால வரலாற்றில் பல்வேறு பக்தர்கள், சாதகர்கள் அவரவர் குறைகளையும்

கேள்விகளையும் கொண்டு வந்தார்கள். அருள் ஒளியும் ஆறுதலும் நாடி அவரை அணுகியவர்களின் இன்ப துன்பங்களிலே தாமும் தொடர்ந்து இடைவிடாது பங்கு கொள்வதே ஜீவன் முக்தரின் வாழ்வாக அமைந்தது.

அத்தியாயம் 5

ஸ்கந்தாசிரமம்: அன்னை

மகரிஷியை வந்தடைந்து அவரது அருளைப் பெற்றவருள் அவரது தாயாரும் ஒருவர் என்று சொல்லவும் வேண்டுமா?

1898-ஆம் ஆண்டின் இறுதியில் திருவண்ணாமலையிலிருந்து ஏமாற்றத்துடன் திரும்பிவந்த பின்னர், அவ்வன்னையின் மூத்த மகன் நாகசாமி மரணமடைந்தான்; அது அவருக்குப் பேரதிர்ச்சியூட்டியது. பிறகு காசி யாத்திரை செல்லுகையில் ஒரு முறையும், 1914-ல் திருப்பதிக்கு யாத்திரை போனபோது மறு முறையும் துறவி-மகனைக் காண வந்தார்; பிந்தைய தருணம் நோய்வாய்ப்பட்டு இரண்டு மூன்று வாரம் காய்ச்சலிலே கிடந்தபோது மகரிஷி அன்னையை அன்புடன் கவனித்துக் கொண்டார். ஒரு சமயம் சுர வேகத்தில் நினைவு தப்பிக் கிடந்த தாயார் குணமடைவதற்காகச் சிவனைப் பிரார்த்திக்கும் முறையில் அவர் நான்கு வெண்பாக்கள் இயற்றினார். வெண்பா சற்றே சிலேடையானது:

ஞானங்கி யாயோங்கு
நல்லருணை யோங்கலே!
ஞானங்கி யால்அன்னை
நல்லுடலை —ஞானங்கம்

ஆசுச்செய் து(உ)ன் பதத்தில்
ஐக்கியமாக் கிக்கொள்வாய்
சாகத்தீ மூட்டுவதேன்
சாற்று.

'மாயையாம் காய்ச்சலிருந்து காப்பாற்றி ஒருமை யாம் உண்மையில் அவளைச் சேர்த்துவிடு' என்பதே அவ்வேண்டுதலின் உட்பொருளாம்.

உறவு கடந்த துறவி ஒருவர் கண்கண்ட மலை ஒன்றைக் கடவுளாய்க்கருதி விருப்பங் கூறி மன்றுடும் வேடிக்கையை விளக்கி அன்பர் ஜி இராமசாமிப்பிள்ளை என்பவர் பின்வரும் வெண்பா எழுதினர் :

அனைவர்க்கும் அன்னை அருணை ரமணன்
தனதன்னை மெய்வருத்தம் தாளாது—தனை யோங்கத்
தானே மலையாயத் தனதருளே வெண்பாவாய்ப்
பாநாலும் பாடினர் பார்.

உடல் தேர்வு பெற்ற அழகம்மாள் மானமதுரை திரும்பினர். ஆனல், இரண்டாண்டுகளில் அவரது மைத்துனன் நெல்லையப்பஅய்யர் காலமானர். தொடர்ந்து அவரது கடைசிப்பிள்ளை நாகசுந்தரத்தின் மனைவியும் கைக்குழந்தையை விட்டு விட்டுக் காலமானாள். இதன்பின் தமது இறுதி நாட்களைத் துறவி மகனுடன் கழிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்; 1916-ஆம் ஆண்டு அவர் மகரிஷி இருப்பிடந் தேடி விருபாட்ச குகை வந்தடைந்த போது துறவி மற்றெங் கேனும் இடம் பெயர்ந்து விடுவார் என்று சிலர் பயந்த தனர். ஆனல், இப்போது மக்களோடு சகஜமாய்ப்

பழகும் நிலையை அடைந்து விட்டமையால், தாயாரையும் ஆசிரமக் குடும்பத்தில் ஒருவராக ஏற்றூர். முன்பொரு முறை மகரிஷியைக் கண்டு சென்றிருந்த அவரது தம்பி நாகசுந்திரமும் கூடிய விரைவில் ஆசிரமம் வந்தடைந்து, துறவு பூண்டு நிரஞ்சனுநந்தர் என்ற பெயருடன் ஆசிரம அலுவல்களைக் கவனித்து வரலானுர்.

மகன்பால் அன்னை கொண்டிருந்த பாசம் பற்பல விதங்களில் வெளிப்பட்டது. அதனை நினைவு கூர்ந்து மகரிஷி பின்னர் மொழிந்தார்: "நான் அம்மாவிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்த்து விட்டேன்; கேட்டால்தானே! மெள்ள மெள்ள சமையல் செய்ய ஆரம்பித்து விட்டாள். முதலில் ஒரு கறி மட்டும் என்று தொடங்கி, அப்புறம் குழம்பு, அது இது என்று கூடி விட்டது. 'ரமணனுக்கு இந்தக் காய் பிடிக்கும், அந்தப் பழம் பிடிக்கும்' என்றவாறு எதையாவது சேகரித்து வருவாள்...என் மடியிலே தான் உயிர் விட வேண்டும் என்று அவளுக்கு ஒரே விருப்பம். அலமேலு [அவரது தங்கை] மானுமதுரை அருகே கிராமத்தில் புது வீடு கட்டி. 'நீ வந்து பார், அம்மா' என்று வருந்தி வருந்தி அழைத்தாள். வீட்டு நிலைப்படியை மிதித்து விட்டுப் போனுலும் போதும் என்று கெஞ்சினுள். ஆனுல், இவள் மறுத்து விட்டாள். அங்கே போய் நோய் வாய்ப் பட்டுப் படுத்து விட்டால் என்னிடம் திரும்பிவர முடியுமோ முடியாதோ என்று அவளுக்குப் பயம்? அடிக்கடி சொல்லுவாள்: "நான் செத்த பின் என் தேகத்தை இப்படியே இங்கே முள்-புதரிலே வீசி எறிந்தாலும் சரி அப்பா; ஆனுல், என் உயிர் பிரியும் போது என் தலை உன் கையில் தான் சாய வேண்டும்."

சிறிது சிறிதாய் அவர் தம் அன்னை ஆசார அனுஷ்டானங்களையும், தாம் ஓர் மகரிஷியின் தாயார் என்னும் தனிப் பெருமையையும் மறக்கச் செய்து இறுதியில் அவருக்கு விடுதலை பெறத் தகுதியும் தந்தருளினார்.

ஒருநாள் தாயார் அப்பளம் இட ஆயத்தங்கள் செய்து, இந்த வேலையில் மகனின் உதவியையும் வேண்டினார். இத்தகைய ஆடம்பர உணவு வகைகளைத் தன் தாயார் தயாரிப்பதில் அவருக்கு விருப்பமில்லை. ஆயினும், அந்நிகழ்ச்சியை யொட்டி இன்று பிரபலமாகிப் பலராலும் பாடப்பெறும் அப்பளப் பாட்டை இயற்றிப் பாடினார். அரிசிப் பாடல், குழம்புப்பாடல் போன்றவை களில் வேதாந்தப் பொருள் பொதிந்த எளிய நாடோடிப் பாடல்கள் அன்னைக்கு ஏற்கனவே பாடமாகி, அவர் பாடவும் பாடுவார். அவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் அமைந்தது மகரிஷியின் அப்பளப் பாட்டாகும். அப்பாடலைப் புனைந்து சிறிது காலங் கழிந்த பின் ஒரு முறை கிரிப்பிரதட்சணம் வந்த போது மகரிஷிதாமே அப் பாடலின் உட்பொருளைப் பக்தர்களுக்கு விளக்கினார். தொடர்ந்து வரும் கருத்து, உவமை, ஒவ்வொன்றிற்கும் இலக்கிய பூர்வமான மேற் கோள்களுங் காட்டினார். குன்றை வலம் வந்த பிறகும் விளக்கம் பூர்த்தியாக வில்லை.

“அப்பள மிட்டுப்பாரு—
அதைச்சாப்பிட்டுன் ஆசையைத் தீரு”

என்ற பல்லவியுடன் தொடங்கும் அப்பாடலின் சுருக்கம் இதுதான்: “தானிய உளுந்தைப் புடைத்து, இயந்திரத் தில் திரித்து, பிரண்டை ரசம், ஜீரகம், மிளகு, உப்பு,

வாசனைக்குப் பெருங்காயம் எல்லாம் சேர்த்துப் பிசைந்து உரலிலிட்டு உலக்கையால் இடித்துப் பலகை மேல் குழவியால் அப்பளமிட்டுப் பொரித்துப் புசிப்பதைப் போல, சரீரமாகிற நிலத்தில் விளைந்த 'தான்' எனும் அகங்காரத்தை 'நானார்?' எனும் ஞானவிசாரத்தில் திரித்துப் பொடித்து சத் சங்கமாகிற பிரண்டை ரசத்தோடு சேர்த்துப் பக்குவப் படுத்தி, ஞானக்னியாய்க்காயும் நெய்யிலிட்டுப் பொரித்தெடுத்து வாழும் தனக்கே 'நானை' அப்பளமாய் நொறுக்கித் தீனியாக்கி விட வேண்டியதே!"

ஒவ்வொரு சிறு செய்கையும் ஒரு சாதனைக்கு அடையாளமாக, அன்றாடத் தொழிலே இடைவிடாயோகமாக அமைந்து விடுகிறது.

ஆ சி ர ம வாசிகளுக்கும், வந்துபோவோருக்கும் தாயாரே சமைக்கத் தொடங்கினர். சற்று விசாலமான இடம் விரைவில் தேவைப்பட்டது. அவ்வாறே, உடல் வலிவு மிகுந்த உழைப்பாளியான கந்தசாமி என்ற பக்தரின் முயற்சியினால் குன்றின் மீது அதற்கான இடம் அமைக்கப்பட்டது. கந்தசாமி, சில கூலி ஆட்களையும் அமர்த்திக் கொண்டு, முட் புதர்களை அகற்றி, கற்களை உடைத்துப் பாறைகளைப் பரப்பிச் சமதளமாக்கி, ஓர் நந்தவனமும் எழுப்பி 1917-ஆம் ஆண்டில் அங்கே ஓர் ஆசிரமத்தை நிர்மாணித்தார். இதைச்சாதித்தவரின் பெயர் வடமொழியாகி, அது 'ஸ்கந்தாசிரமம்' என வழங்கப் பெறலாயிற்று.

ஸ்கந்தாசிரமம் கட்டப்பட்டு வரும் போது அன்பர்களுக்கும் கூலியாட்களுக்குமாக உணவு சமைப்பதில் மகரிஷியும் சேர்ந்து கொள்வார். பிற்காலத்தில் தேவ

ராஜ முதலியாரிடம் அதைப் பற்றி இவ்வாறு கூறியுள்ளார். "முதலில் அவ்விடத்திலிருந்த சப்பாத்திக் கள்ளிகளை அகற்றி நிலத்தைச் சமப்படுத்த அனேக ஆட்கள் வேலை செய்தனர். அவர்களுக்குக் கூலியைத் தவிர பகல் சாப்பாடும் போட்டு வந்தோம். அவர்களுக்கும் எங்களுக்குமாகச் சேர்த்து உணவு வகை இரண்டு மட்டுந்தான் உண்டு—ஒரு பெரிய பானை நிறைய கஞ்சி, மற்றொரு பானையில் கையில் கிடைத்த காய்கறிகளை எல்லாம் வெட்டிப் போட்டு மொத்தமாய் ஒரு கூட்டு. சமையல் அளவு எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்! ஒரு மரக் கிளைதான் அதைக் கிளறுவதற்கான கரண்டி என்றால்! பார்த்துக் கொள்ளுங்களேன்!"

ஸ்கந்தாசிரமத்தில் மகரிஷியுடன் தனிமையில் அமர்ந்திருந்தபோது நடந்த நிகழ்ச்சியொன்றை மற்றொரு பக்தர் விவரித்துள்ளார்: "வேலிக் கதவுக்கு வெளியே ஒருவன் தன் குடும்பத்துடன் வந்து நின்று என்னைக் கூப்பிட்டான். அவனிடம் சென்றதும், 'எங்கள் வணக்கத்தைச் செலுத்த சுவாமி கிட்டே, வரலாமா? என்று அவரைக் கேட்டுச் சொல்லுங்கள்,' என வேண்டினான். எனக்கு வியப்பாக இருந்தது. 'இதற்குப் போய் அனுமதி கேட்பானேன்?' என நான் வினவ 'நாங்கள் தீண்டாதோர் ஆயிற்றே' என்றான். 'பகவான் சாதி வேறுபாடு பாராதவர், நீங்கள் தாராளமாய் வரலாம்,' என்றேன். அக்குடும்ப நபர்கள் அனைவரும் உள்ளே வந்து பகவானின் முன்னால் தரையில் வீழ்ந்து வணங்கினார்கள். சுமார் பத்து நிமிஷ நேரம் அத் தீண்டாதோர் குடும்பத்தினர் மீது அவரது அருள் நோக்கு அன்புபொழிந்தவண்ணமிருந்த காட்சி இன்னும்

என் நினைவில் நிற்கிறது. எத்தனையோ செல்வந்தர் களும், பிரபலஸ்தர்களும் அவர் காலடியில் வீழ்வதைக் கண்டிருக்கிறேன்; ஆனால், அவர்கள்பால் அத்துணை கருணைப் பொழிவு கண்டிலேன்!"

பலரும் அறிந்த சாதுவும், சமூக சீர்திருத்தவாதியு மான கேரளத்து ஸ்ரீநாராயண குரு, ஸ்கந்தாசிரமத்தில் மகரிஷியைக் காண வந்தார். அவ்விருவரிடையே பேச்சுப் பரிமாறல் ஏதும் நடக்கவில்லை. சொல்லற நிகழ்ந்த சக்திவாய்ந்த மௌன உறவே அவர்களைப் பிணைத்தது. இமை கொட்டாமல் கண்விழித்து மகரிஷி வீற்றிருக்க, ஏராளமான பக்தர்கள் உள்ளே வந்து அவரைத் தரிசித்து வணங்கிச் சென்றவண்ணமிருந் தனர். ஸ்ரீ நாராயண குரு, மகரிஷியுடனும் ஆசிரமவாசி களுடனும் உட்கார்ந்து பகல் உணவு அருந்தினர். பிறகு தமது இருப்பிடம் திரும்பியதும், முக்தனின் பேரின்பத்தை விவரித்து நிர்விருத்தி பஞ்சகம் என்ற ஐந்து வடமொழிச் செய்யுட்களை இயற்றி ரமண மகரிஷிக்கு அனுப்பிவைத்தார்.

ஸ்கந்தாசிரமத்தில் அடியார்க்கு அடியாராய்ப் பணி யாற்றிவந்த அன்னை அழகம்மாள், மே 19, 1922 (வைகாசி, பகுள நவமி) அன்று காலமானர். இறுதி நேரத்தில் பக்தர்கள் அவரைச் சூழ்ந்தமர்ந்து வேத பாராயணமும், ராமநாம ஜபமும் செய்துகொண்டிருக்க, மகரிஷி தம் வலக் கரத்தை அன்னை இதயத்திலும், இடது கையை தலையிலும் இருத்திய வண்ணம் அவரருகிலேயே அமர்ந்திருந்தார். அந்த உத்தமி மகாசமாதி எய்திவிட்ட தாக அஃதாவது, தன்னுள் அடங்கி விட்டதாக— அனைவரும் உணர்ந்ததால், அவரது உடலைத் தகனம்

செய்யவில்லை; குன்றின் அடிவாரத்தில் பாலி தீர்த்தத்திற்கு அருகில் ஓரிடத்தில்அவ்வுடலை அடக்கம் செய்தனர். காசியிலிருந்து வருவித்த ஓர் லிங்கமும் அங்கே பிரதிஷ்டை செய்யப் பட்டது. அதைச் சுற்றி எழுப்பிய சிறு கோயில் 1948-ல் பூர்த்தியுற்றது. மாத்ருபூதேசுவரர் (அன்னையுருக் கடவுள்) என்ற இறை வழிபாடு அங்கு முறையாக நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

தாயார் அன்றோ உலகம் எங்கும் மனித குலத்தின் அன்புக்குப் பாத்திரமாகி அன்பார்ந்த வணக்கத்தைப் பூரண மனதுடன் பெறுகிறார்? தாய்மையைப் போற்றும் ஆலயமாய், சம்பிரதாய பாணியில் அமையப் பெற்று அங்கு வழிவழிவந்த முறையில் வழிபாடு நடைபெறுவது மகரிஷியை அவர் பிறந்த சமயத்துடன் பிணைக்கும் முறையாய் வந்து நேர்ந்ததும் சிறந்த பொருத்தமே யாகும்.

சம்பிரதாயம் செறிந்த பீடங்களும், மாடங்களும் பூஜைக்கிரியைகளுங் கொண்ட அக்கோயிலிலே அன்னை பராசக்தி உருவில் மாதா-பிதாவின் ஒருமையை உணரும் பக்தர்கள், தாய்மையாம் மகரிஷியின் கருணையே மாத்ருபூதேசுவரராக உருவெடுத்துத் திகழ்வதைக் காண்கிறார்கள்.

அக்கோயிலையடுத்து, மகரிஷியின் சமாதியின்மீது 1967-ம் ஆண்டில் எழுப்பப்பெற்ற தியான மண்டபமோ வெளில், பரந்த ஒளியும் காற்றும் நிலவ, எளிமை எழில் நிரம்பி நின்று, அன்னையின் ஆலயத்தை அலங்கரிக்கும் சிக்கலான சம்பிரதாயத்திற்கு நேர் எதிர்மறையாய்—பெருவெளியாய்—மிளிர்கிறது.

அன்னை வழிவந்து அன்னையைப்போல் அன்பு வழிபாடு ஏற்கும் பாரம்பரிய மரபு பக்தி ஆகும். வீரக் குமரனைத் தோன்றி, இதுவரை உருவம் பெறாத வருங் காலத்தை அச்சமின்றி ஆர்வத்துடன் எதிர்கொண் டழைக்குந் தூய ஒளியே ஞானம் எனலாம். பக்தியும் ஞானமுமே தாயும் சேயும் போல, சமய உணர்வின் இரு பெரும் உருவங்கள் ஆவன. இவ்விரு உருவங்களும் இரண்டாய்த் தோன்றினும், உண்மையில் ஒன்றே என்பதை அடுத்தடுத்து நிற்கும் அக் கோயிலும் தியான மண்டபமும் விளக்கிக் காட்டுகின்றன.

அத்தியாயம் 6

ரமணாசிரமம்: சீரிய வளர்ச்சி

1916-ஆம் ஆண்டு முதற்கொண்டு மகரிஷியின் இருப்பிடமாய் இருந்து வந்த ஸ்கந்தாசிரமத்தில், 1922 மே மாதம் அவர் தம் அன்னை இயற்கை எய்தினார். அருணையின் தென் சரிவில் ஓர் அன்பர் அளித்த சிறு நிலத்தில் அவரது உடல் புதைக்கப் பட்டது. வித்து விதைத்தாற் போல், அவ்விடம் ஒரு குடும்பத்தைத் தோற்றுவித்தது.

அன்னையின் மறைவின் பின் மகரிஷி அவ்விடத்திற்கு அடிக்கடி போய்வருவது வழக்கமாயிருந்தது. அவ்வாறு ஒருமுறை 1922 டிசம்பர் மாதம் அங்குச் சென்றவர் ஸ்கந்தாசிரமம் திரும்பாமல் சமாதிக் கருகில் மலையடிவாரத்திலேயே தங்கிவிட்டார். அதன் பின்னர் அதுவே அவரது நிரந்தர உறைவிடமாக அமைந்து, இன்று அது உலகறியும் ஸ்ரீ ரமணாசிரமமாக வளர்ந்துள்ளது.

இவ்வாறு இயல்பாய் எழுந்த அவ்வாசிரமம், முதலில் ஒரே ஒரு கூரைக் கொட்டகையாகத் தொடங்கி, நாளாவட்டத்தில் பெருகி, தற்போது பல்வேறு கட்டடங்கள் இணைந்தத் தொகுதியாய்ப் பரந்துள்ளது. அவற்றுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது 'பழைய கூடம்' என்பதே

பல சாதகர்களின் துணிபு. அக் கூடத்திலேதான் இருபது ஆண்டு காலத்திற்கு மேலாகச் சாய்மான மொன்றில் தொடர்ந்து நாள் முழுவதும் மகரிஷி வீற்றிருந்தார். அங்கே உறைந்துள்ள மோன முழக்கம் அன்பர் தம் உள்ளத்தே சொல்லுக்கெட்டாத அழுத்த மாய், தெளிவாய் ஒலிப்பதை உணர்கிருர்கள்.

மகரிஷியின் வாழ்நாளிலே தோன்றிய மற்றக் கட்டடங்கள் சமையலறை, பெரிய சாப்பாட்டுக் கூடம், கோ-சாலே, அன்னேயின் சமாதி மீது நேர்த்தியான வேலேப்பாடு மிக்க ஆலயம் ஆகியவையாகும். மகரிஷியின் தம்பி சின்னசாமி என்கிற சுவாமி நிரஞ்சனுநந்தர்தாம் ஆசிரமத்தின் வளர்ச்சிக்கும், திறமையான நிர்வகிப்புக்கும் முக்கியக் காரணமாக இருந்தார். அவர் அன்று ஏற்படுத்திய நடைமுறை செயல்களே தொடர்ந்து இடைவிடாது நிகழ்ந்து வருகின்றன. 1953-ல் அவர் காலமானபின் ஆசிரமத்தில் எழும்பிய கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கவை மகரிஷியின் சமாதி அமைந்த கோயி லும், (1967) அதனேச் சுற்றி 1970-ல் கட்டி முடிக்கப்பட்ட பரந்த, ஒளிவளி நிறைந்த தியான மண்டபமுமே ஆகும்

குன்றைச் சுற்றிப் பல்வேறு இடங்களில் ஏற்கெனவே 26 ஆண்டுகள் கழித்த பின்னர், மகரிஷி தொடர்ந்து 28 ஆண்டு காலம் ஆசிரமத்தில் வசித்து வந்தார். இவ்விதம் மலேக்கும் மாமுனிக்கும் இடையே நீடித்த நெருங்கிய தொடர்பு, புராதன நம்பிக்கைக்கும் அவர் போதித்த அத்வைதத்திற்கும் இடையே உள்ள தொடர்பையே உயிர்ப்பித்து வலியுறுத்துகிறது. அக் குன்றே சிவபெருமானின் திருவுரு, அனேத்தையும் கடந்த தூயமெய்யுணர்வின் பிழம்புத் தோற்றம், என்பது பழைய

கோட்பாடு. அதை மீண்டும் வற்புறுத்திக் காட்டவே அத் தலத்தின்மீது நிலைத்த பற்று வைத்து, அதன் உட்பொருளையும் விளக்கி, "முழு முனைப்புடன் மனம் ஆன்மாவில் ஒன்றினாலே போதும்; உறுதியாய் உள் நாடுபவர் ஒரு கணமேனும் வீடுபேறு எய்துவர்; எல்லையிலாப் பேரின்பம் துய்ப்பது திண்ணம்;" என்று மீண்டும் மீண்டும் உறுதி கூறிவந்தார்.

குன்றின் தென் சரிவில் அமையப் பெற்ற ஆசிரமத்தில் மகரிஷி நிரந்தரமாய்த் தங்க வந்த நாள் முதல் மக்களுக்குத் தரிசனம் அளிப்பதும், சொல்லற்று அல்லது சிற்சில சொல்லாமல் அம் மலை பரப்பும் விடுதலைச் செய்தியை அனைவருக்கும் அறிவுறுத்துவதுமே தம் வாழ்க்கைக் கடனாய்ச் சிரமேற் கொண்டார். ஆன்மீக வளர்ச்சியில் பல்வேறு நிலைகளில் நின்ற எண்ணிறந்த மக்கள் அருகிலிருந்தும், தொலைவிலிருந்தும் அவரைத் தேடி வந்தனர். அவரது முன்னிலையிலே அமைதியும், தெளிவும், உள்ளுறுதியும் கிடைக்கப் பெற்றனர். தம்மையணுகிவரும் எவரையும், அவர் காணத் தவறுவதில்லை. அவரது தரிசனம்—பார்ப்பது, பார்க்கப்படுவது, செவிசாய்ப்பது, நோக்கு, முறுவல், சைகையாய் மாற்றம் அளிப்பது ஆக இதுவே மகரிஷியின் அருள் விலாசமாய் அமைந்து விளங்கிற்று. எந்நேரமும் யாரும் அவரைக் காணலாம். ஸ்கந்தாசிரமத்தைவிட்டபின் அவர் பங்களூர் செல்லும் பெருவழியில் மலையடிவாரத்தில் அமைந்த ஆசிரமத்திலே நிலைத்து வசிக்க நேர்ந்தது; இந்தப் புதிய இடத்திற்கு எவரும் எளிதில் வர இயலும் என்ற காரணத்தாலேயாம்.

முன்னாளில் அவர் அடிக்கடி கிரிப்பிரதட்சணம்

செய்து வருவார். அவ்வாறு மலையை வலம் வருதல் உற்சாகமூட்டுகிறது, அசலமாய் நிற்கும் அந்த மகத்தான பஞ்சமுகக் குன்றின் மாறுபடும் சாயல்களைப் பல்வேறு திசையிலிருந்து பல்வேறு நேரங்களிலே கவனிக்கும் வாய்ப்பு உண்டு, என்று அவர்களுக்கு அப் பழக்கத்தைப் புகழ்ந்துரைத்துள்ளார். தன்னைத் தானே வலம் வருவதே மெய்ப்பிரதட்சிணம் ஆகும், நம்முள்ளே தான் எண்ணற்ற பிரபஞ்சங்கள் சுழலுகின்றன என்ற உண்மையைத் தீவிரமாய் நினைவூட்டக் கூடியது அதுவே, என்பது அவர் கருத்தாகும்.

ஆனுல், கிரிவலம் வரும் வழக்கத்தை 1926-இல் கைவிட்டார். அதை அடுத்துச் சில ஆண்டுகளில் சமையற்கட்டில் வேலை செய்வதையும் நிறுத்திக் கொண் டார். கூடியவரை கூடத்தைவிட்டு அகலாதிருத்தலே இதற்குக் காரணம். அவரது நீராட்டம், உணவு, காலை-மாலை உலவு, சிறிதே ஓய்வு இவற்றிற்கான கால அட்ட வணை அனைவரும் அறிய, நேரம் பிறழாமல் நிறைவேறி வந்தது. அவரையும் ஆசிரமத்தையும் பொறுத்தவரை எல்லாச் செயல்களும் தூய்மையும், துப்புரவும் நிறைந் தவை; முன்கூட்டியே தெரிந்தவை. அவர் பாரதத்தின் புண்ணியத் தலங்களுக்கு யாத்திரையாகச் சென்ருல், தேசத்தின் பல்வேறு பாகங்களில் உள்ள மக்களும் அவரைத் தரிசிக்கக் கூடுமே, என்று ஒருவர் கேட்டபோது அவர் சிரித்து மழுப்பிச் சொன்னுர்: “நான் போனுல் இந்தக் கோவணாண்டிப் பிச்சைக்காரனை யார் கவனிக்கப் போகிருர்கள்? அல்லது ‘இதோபார், வருகிருர் ஓர் மகரிஷி!’ என்று நெற்றியில் எழுதி ஒட்டிக்கொள்ளவா, இல்லை கழுத்திலே ஒரு பலகையை மாட்டிக்கொள்ளவா?

ஒரு பெரும் பரிவாரம் புடை சூழ, 'வருகிறார் உலகறிந்த எங்கள் ரமண மகரிஷி!' என்று கூப்பாடு போடச் சொல்லவா ?"

இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த போது கூட வருவார் எவரும் தம்மைத் தடையின்றித் தரிசிக்கலாம் என்று கடைசி மூச்சுவரை வற்புறுத்தினர். எண்ணற்ற மக்களின் அன்பை ஈர்த்த அவருடைய குணாதிசயங்களுள் சிறப்பாய்க் குறிப்பிடத்தக்கது அவரது சௌலப்யமும்—எளிமையுமே ஆகும். அவர் எளியவர்க்கு எளியவர் ; பணிவும் அடக்கமும் பொருந்தியவர் ; இந்த எளிமையைப் போலவே ரஞ்சகமானது அவரது சகஜ பாவம், என்றும் மாறா இயற்கை ஒழுக்கம்; எப்போதும் எங்கும் எல்லா விதத்திலும் பிறருடன் சமத்துவம் பேணிப் புரிதல். அனைவருடனும் அவர் எய்திய ஒருமைப்பாடு முழுமையும் வள்ளிதாய், தம்மைச் சுற்றியுள்ளோரோடு இழைந்து, ஒன்றி வாழ்ந்தார். பொதுவாக மனிதனுக்குரிய அவரது வாழ்க்கை முறையும், அவரது இயல்பான ஒளிவு மறைவற்ற நடை, உடை பாவனையும் எவரும்—புதிதாய் வருபவர் கூட—அவரோடு சகஜமாய்ப் பழகலாம் என்ற உணர்ச்சியை ஊட்டியது. தமக்கென அவர் தனிச் சலுகை கோரியதில்லை; தமக்கு ஏதோ தனிச் சக்தி உண்டென்றுங் கருதியதில்லை : 'கொட்டையூன்றிக் கணப்பொழுதில் மந்திரத்தால் மாங்காய் வரவழைப்பதா அதிசயம்? பல பருவங்கள் மண்ணில் வாழ்ந்து வளர்ந்த உண்மை மாமரம் உண்மைக் கனி தரும். இயற்கையாய் நிகழும் மறைபொருள் அன்றோ பேரதிசயம் !' என வியப்பார்.

பார்க்கவந்த ஒருவர், மகரிஷியின் மிகச் சாதாரண

மான அன்ருட அலுவல்களையும், எளிமையான பழக்க வழக்கங்களையும் கண்ணுற்று தேவராஜ முதலியாரிடம் கேலியாக, "என்னய்யா உமது பகவான்! பரம ஞானி, ஜீவன் முக்தர் என்றெல்லாம் சொல்லும்படியாக இவரிடம் என்னத்தைக் கண்டுவிட்டீர்? அவரும் சாப்பிடு கிருர், தூங்குகிருர். நம் எல்லோரையும் போலவே வேலை யும் செய்கிருர்" என்று கேட்டு வைத்தார். அதற்கு முதலியார், ஜீவன் முக்தரை வேறுபடுத்திக் காட்ட வெளிப்படையான அறிகுறிகள் கிடையாது; ஞானியே ஞானியை அறிதல் கூடும், என்றுரைத்தார்.

ஏன்? சில சமயங்களில் அவரைத் தனியாகவோ மற்றவரோடோ ஏதாவது வேலையில் ஈடுபட்டிருக்கையில் பார்க்க நேர்ந்த வெளியார்கள், அவரை யாரோ கொத்தன் அல்லது சமையற்காரன் என்று நினைத்துக் கொண்டு அவரிடமே போய் 'உலகறிந்த சுவாமிகள் எங்கே இருக்கிருர் ஐயா?' என்று அப்பாவித் தனமாகக் கேட்டும் இருக்கிருர்கள்!

அவரது சகஜ நிலைக்கு அறிகுறியாக ஓர் சிறிய செய்தியை எடுத்துக் கூறலாம். தம்மைக் குறித்துப் பேசும்போது அவர் "இது" என்று அக உணர்வை முயன்று அகற்றுவதுபோல் சொல்லாமல் "நான்" என்றே சாதாரணமாய்ச் சொல்லி வந்தார். 1896 ஆகஸ்டு மாதம் வீட்டை விட்டுச் சென்ற சீட்டிலே பொதுவாகத் துறவிகள் கையாளும் "இது" என்ற சொல்லையே எழுதினர். ஆனுல், அம் மாமுனிவரே அவர் தம்மை "நான்" என்று சொல்லிக் கொள்ளும் போது மற்றவர்கள் அவரைக் குறித்தோ அவரிடமோ

பேசும்போது "அவர்" என்று சொல்லக் கூசி 'அது' என்றே சொல்லுவது வழக்கமாய் விட்டது.

கொட்டாங்கச்சியால் கிண்ணங்களும், அகப்பைகளும் செய்து தேய்த்துத் துலக்கிக் கருங்காலி போல் மழு மழுவென்ருக்கி, "இவை தாம் வெள்ளிக் கிண்ணங்கள், தங்கக் கரண்டிகள்" என்று சொல்லி அவற்றைக் கவனத்துடன் கையாளுமாறு பணியாளர்களிடம் ஒப்படைப்பார். ஆரஞ்சுத் தோல்களை ஊறுகாய் போடச் சேமிப்பார். வாடிப்போன ரோஜா இதழ்கள் பாயசத்தில் மணங் கூட்டும். கையெழுத்துப் படிகளையும், அச்சுப்படி களையும் ஊன்றித் திருத்துவார். செய்யுட்களைப் பிழை யின்றி கோவையான கையெழுத்தில் பிரதியெடுப்பார். தொழில்-நேர்த்தியுடன் புத்தகங்களைப் 'பைண்டு' செய் வார். பிராணிகளும் குழந்தைகளும் அவரைத் தங்களுள் ஒருவராகவும், இயற்கையன்னையின் படைப்பாகவுங் கருதி அவரோடு ஒருமை பாராட்டின. ஆனல், பகுத்தறிவு படைத்த மக்கள் மட்டும் தமது பொது வழக்கிற்கொப்பத் தம்மை விட்டு அவரை ஒதுக்கி, ஆனல், உயரத்தூக்கி வைத்து, "பகவான்" என்றே அழைக்கலாயினர்.

எளிய வாழ்க்கை வாழ்வது எப்படி? சிக்கனம் என்ருல் என்ன? வீண் செலவு, ஆடம்பரங்களை எவ்வாறு தவிர்க்கலாம்? என்பதை யெல்லாம் போதனையின்றித் தாமே செய்து காட்டி ஆசிரம வாசிகளுக்குக் கற்பித்தார். தமக்கு வரும் கடிதங்களின் மேலுறைகளைத் திரும்ப எழுதவும், வேறு வகையிலே பயன்படுத்தவுஞ் சேகரித்து வைப்பார். காய்க்கறிகள் நறுக்குவார். இலை தைப்பார். சமையல் வேலையில் சேர்ந்துழைப்பார். இவ்வாறு உழைப் பின் பெருமையையும், எளிமையின் அழகையும் விளக்கிக்

காட்டினர். அவரைப் பொருத்தமட்டில் கர்மம் என்பது ஏதோ ஆசார அனுஷ்டானம் அன்று; நாம் அனைவரும் ஒவ்வொரு நாளும் செய்யக் கடமைப்பட்டப் பொதுப் பணிகளேயாகும்.

வேலூர் கல்லூரியொன்றில் தெலுங்கு ஆசிரியரான திரு அரங்காச்சாரி என்பவர் 1935-ல் நிகழ்ந்த் சம்பவத்தைக் கூறியுள்ளார். நிஷ்காம்ய கர்மம் என்பதன் பொருளை விளக்குமாறு அவர் மகரிஷியை வேண்டிஞராம், மகரிஷி அதற்குப் பதில் ஏதும் பேசவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு மகரிஷி, அவ் ஆசிரியர் உட்பட பல அன்பர்கள் உடன்வர, மலைமீது சென்ருர். தடித்த, உறுதியான முள்ளடர்ந்த மரக்கிளையொன்று வழியில் கிடந்தது. மகரிஷி அதைக் கையிலெடுத்து சீராக்கத் தொடங்கினர். அதன் சிறு கொம்புகளை வெட்டிச் சீவி சரி செய்தபின் சொரசொரப்பான இலையிஞல் அதை நன்ருகத் தேய்த்து வழவழப்பாக்கினர். நீண்ட நேரம் அவ்வாறு அக்கறையாய் வேலை செய்து ஓர் நல்ல கைத் தடியை உருவாக்கியபின், மகரிஷி அதை ஓர் இடைச் சிறுவனுவக்குப் பரிசாய் அளித்தார்.—பாவம், அவன் தனது வளைகோலை இழந்துவிட்டு வருத்தத்துடன் அவ்வழியே வந்துகொண்டிருந்தான். 'ஒரு புதிய போதனை முறை இன்று நான் கற்றேன்' என அந்த ஆசிரியர் வியந்தார். அவரது ஆர்வம் மிக்க விஞவுக்கு அந்த சொல்லற்ற செய்கையே கண்கூடான பரிபூரண விடையாக அமைந்து விட்டது அன்ருே!

ஆசிரம வாசிகளும், பார்க்க வருவோரும் ஆண்டுக்கு ஆண்டு எண்ணிக்கையில் பெருகிவரவே ஆசிரமத்தை விஸ்தரிக்க வேண்டி வந்தது. ஸ்கந்தாசிரமத்திலேயே

முறையாகச் சமையல் வேலை நடந்துகொண்டிருந்தது. 'இளைய சுவாமியின் ஆசிரமத்தில் ருசியான தின்பண்டங் களுக்குக் குறைவே கிடையாது' என்று அவரது பழைய நண்பர் சேஷாத்திரி சுவாமிகள் கேலியாகக் கூறுவ துண்டு. இன்னும் பலருங் கூட அவரது "பிரசாதம்" என்றால், தெய்வீக அருளோடு, சுவையான, உடலுக் குகந்த உணவுதானே என்றும், ரமணாசிரமத்தில் ஞானாக்னியும், சமையலறை நெருப்பும் ஆகிய இரண்டு தீக்களும் எப்போதும் சுடர்விட்டெரிந்து, வருவோர் அனைவரின் மனதையும் களிப்புறச் செய்த வண்ண மிருக்குமே!' என்றும் பேசுவார்கள். தெய்வீகம் என்பது ஒன்று, இயற்கை என்பது வேறா? இயற்கையை ஊடுருவி அதனை உருவாக்கும் உணர்வுதானே தெய்வீகம் என்பது.

பரந்த தியானக் கூடமும், சாப்பாட்டுக் கூடமும் கொண்ட புதிய பெரிய ஆசிரமத்திற்கு வருபவர்களுள் செல்வாக்கு மிகுந்தவர்கள் மகரிஷிக்கு அருகில் முதல் வரிசையைப் பிடித்துக் கொள்ளுவார்கள். ஆனால் அவரோ முன்போலவே எளியோரையும், தாழ்ந்தோரை யும் கண்ணுற்று வரவேற்று அவர்களும் உரிமையாய் அமர்ந்திருக்க அருளுவார். ஆலய உற்சவம் ஒன்று நடந்தபோது, ஆசிரமத்தில், விநியோகத்தின் பொருட்டு ஏராளமான தித்திப்புப் பண்டங்களை அன்பர்கள் கொண்டு வந்திருந்தனர். அதே சமயம் ஆலிலைச் சருகில் சில தோசைகளை வைத்துக்கொண்டு கிழவி யொருத்தி ஊன்றுகோலுடன் தட்டுத் தடுமாறி வந்து சேர்ந்தாள். கொண்டு வந்ததை அவளே கை நீட்டி மகரிஷியிடங் கொடுக்க முடியாதவாறு சில பணியாட்கள்

தடுத்த போது, மகரிஷி தாமே தமது கரத்தை நீட்டி அத் தோசைகளைப் பெற்றுக் கொண்டு அவளது உடல் நலம், குடும்பச் செய்தி பற்றி அன்புடன் வினவினர் பிறகு, சுற்றியுள்ளோரிடம் கூறினுர்: "பாவம் கிழவி தன்னுல் முடிந்ததைக் கொண்டு வந்திருக்கிருள். நான் மலை மேல் இருந்த காலத்தில், அவளும் அவள் கணவனும் அவ்வப்போது வருவார்கள்; கையோடு ஏதேனும் உணவு கொண்டு வருவார்கள். முதலில் அவள் கணவன் இறந்தான்; பிறகு அவள் உடன் பிறந்தானும் போய் விட்டான். அதன் பிறகு இவள் அங்குமிங்குமாக இருந்து கொண்டு இப்படித் தோசை சுட்டு விற்று வாழ்க்கை நடத்தி வருகிருள். அம்மா சமாதிக் கருகில் நான் உட்காருவதற்காக இவள்தான் ஒரு மேடை எழுப்பிக் கொடுத்தது. அதன்மேல் பனையோலைக் கூரையும் போட்டாள். அதற்கு முன்னுல் நான் மரத்தடியில் உட்கார்ந்திருப்பது வழக்கம். வயதாகிவிட்டதால் இப்போதெல்லாம் இவள் இங்கே அடிக்கடி வரமுடிகிற தில்லை." இவ்வாறு கூறி, ஆலயத்திலிந்து வந்த தின்பண்டங்களைத் தொட மறுத்து, கிழவி கொண்டுவந்திருந்த ஆறிப்போன தடித்த தோசைகளைச் சுவைத்து உட்கொண்டார்.

உணவுக் கூடத்தின் குறுக்கே போட்டுள்ள ஓர் தடுப்பின் முன்னுல் மகரிஷி உட்காருவார். அவரது வலது புறம் அமர்ந்திருக்கும் ஒரு சில மரபு வழுவா பிராமணர்களும், இடதுபுறம் அமர்ந்திருக்கும் பெரும்பான்மையான மற்றவர்களும் அவர் கண்முன்னே சாப்பிடுவார்கள். வைதிகர்களின் மனதைப் புண்படுத்த மாட்டார். "சமூகச் சீர்த்திருத்தம்" என்ற பெயரில்

உள்ளக்கனிவின்றி கட்டாயப்படுத்தும் முயற்சிகளுக்கு அவர் ஊக்கமூட்டுவதில்லை. தம்மைப் பொறுத்தமட்டில் அவர் தீண்டாதாரோடும், கீழ்க்குடி மக்களுடனும், ஜாதி பேதமற்ற வெளிநாட்டினரோடும் தயக்கமின்றி ஒன்று பட்டு உறவாடுவார். அவருக்குப் பணிவிடைபுரிபவர்கள், கைத் துண்டு அல்லது குடி நீர் கொடுப்பவர்கள் எவரும் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் இல்லை. மகரிஷி யாருக்கேனும் நேர்முகமாக "உபதேசம்" அளித்திருக்கிறார் என்றால், அந்தப் பேற்றினைப் பெற்ற ஒருவர் தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்தவரே ஆவர். ஆசிரமத்தை அடிக்கடிச் சுற்றிவந்து கொண்டிருந்த அந்த அடக்கமுள்ள அன்பர் ஒரு நாள் மகரிஷியை வாயிற் கதவருகில் கண்டார். கண்டதும் அவர்முன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். ஏதேனும் "உபதேசம்" அருளுமாறு மன்றாடினார். அந்த ஏழை யிடம் இரக்கம் கொண்ட மகரிஷியும் "'சிவ சிவ' என்று எப்போதும் சொல்லிக் கொண்டேயிரு. அதுவே உன்னைக் காப்பாற்றும்" என்று உறுதி கூறினார்.

வேத பாராயணம், பக்திப் பாடல்கள், மவுனத் தியானம், பார்க்க வருவோருடன் உளமார்ந்த உரையா டல் ஆகியவைகள் நாள்தோறும் நடைபெறும் நிகழ்ச்சி களாகும். அவைகளுக்கிடையே மகரிஷியின் பரிகாசப் பேச்சுகள் கிளுகிளுப்பூட்டும். அப்போது நெடுங்கால அன்பர்களும் பேச்சிலே கலந்துகொள்வார்கள். ஒரு சமயம், "ரமண சத்குரு ரமண சத்குரு, ராயனே" என்ற பல்லவியை எல்லோருமாய்ச் சேர்ந்து பாடிய போது மகரிஷி தாமுஞ் சேர்ந்து கொண்டு திரும்பத் திரும்பப் பாடித் தாளமும் போடலானார். ஒவ்வொரு

உள்ளத்தும் உறையும் மெய்க்குருவைப் போற்றிப் புகழும்போது கண்ணாற் கண்டு காதாற் கேட்கக் கூடிய தாமும், பிறரோடு சேர்ந்துகொண்டால் என்ன ?'' என்று பின்னர் விளக்கினர். மற்றொரு சமயம் உடனிருந்தவர்கள் அவரது முழங்காலில் ஏதோ தைலம் தடவி ஒருவர்பின் ஒருவராய்த் தேய்த்துக் கொண்டிருந்த போது, ஒருமுறை தாமே தேய்த்துக் கொண்டே "ஏன், நானும் கொஞ்சம் புண்ணியம் சம்பாதித்துக் கொள்கிறேனே !'' என்றார்.

திருச்சுழியிலே குழந்தைப் பருவத்தில்கூட விளை யாடிய பெண்பிள்ளை ஒருவர் ஒரு சமயம் ஆசிரமத்திற்கு வந்திருந்தார். கடவுள் முன்னிலையில் தேங்காய் உடைப் பது போல, அவர் முன்னும் உடைக்க, பயபக்தியுடன் கை யோடு கொண்டுவந்திருந்த தேங்காயின் நாரை உரிக்க லானார்; அவர் படும் பிரயாசையைக் கண்ணுற்ற மகரிஷி தேங்காயை அவர் கையிலிருந்து வாங்கி, தாமே நாரை உரித்தபின் உடைக்கவும் உடைத்து அனைவரையும் சிரிக்க வைத்தார். வழிபடுபவருக்கு உதவுதல் தவறாகுமா?

பல ஆண்டுகளாக மகரிஷியிடம் அன்பு பூண்ட முதலியார்ப் பாட்டி அவருக்குத் தினந்தோறும் ஏதாகிலும் உணவு கொண்டு வருவது வழக்கம். அளவுக்குமீறித் தமக்கு உணவு பரிமாறி விடுவதாக அவர் பாட்டியிடம் ஒரு சமயம் தெரிவித்தார். பாட்டியோ மிகவும் சகஜமாக "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை" என்று சொல்லி மேலும் ஒரு சிறங்கைச் சோற்றை அவர் இலையிலே தள்ளிப் "போதும், போதாது எல்லாமே மனதைப் பொருத்ததுதானே ?'' என்று கேட்க, மகரிஷி சிரித்துக் கொண்டே தம் தோல்வியை ஒப்புக்கொண்டார். "பாட்டி

என் பேச்சை வைத்தே என்னை மடக்குகிறுள் பார்த்தீர்களா?" என்று குறும்பாக விமரிசனமும் செய்தார்.

உணவுக் கூடத்தில் பழங்களும், மற்ற விசேஷத் தின்பண்டங்களும் முதலில் அனைவருக்கும் பரிமாறிய பின் கடைசியிலேதான் மகரிஷிக்குப் போட வேண்டும். அனைவர்க்கும் சமமாக விநியோகம் ஆகவேண்டும்; என்பதற்காகவே இந்த ஏற்பாடு. "ஒருக்கால் எனக்கு மட்டும் மிச்சம் இல்லாவிட்டால் பாதகமில்லை. இங்குள்ளவர்கள் எல்லோரும் சாப்பிட்டால் நான் சாப்பிட்டமாதிரிதான்" என்பார். பழம், வாதாம்பருப்புப் போன்ற சத்துமிக்க உணவு உட்கொள்ளுமாறு ஆலோசனை கூறினுல், "நானே ஒரு தரித்திர நாராயணன். எனக்கு அதெல்லாம் கட்டுப்படியாகுமா? நான் என்னத் தனி மனிதனு? இங்கே எவ்வளவு பெரிய குடும்பம் பாருங்கள்! இவர்கள் எல்லோருக்கும் பழமும் பாதாமும் கொடுக்க முடியுமா?" என்று கூறி மறுத்துவிடுவார்.

பூரி சங்கராசாரிய சுவாமிகள் ஆசிரமத்திற்கு விஜயம் செய்தபோது, சம்பிரதாயப்படி சரிகைக் கரையிட்ட சால்வை யொன்றும், ரொக்கமாக 116 ரூபாய்களும் மகரிஷிக்கு வழங்க விரும்பினுர். ஆசாரியர் ரொக்கப் பணத்தைத் திரும்பப் பெற நேர்ந்தது; ஆனுல், சால்வையை மட்டும் பெற்றுக் கொள்ள மகரிஷி இசைய வேண்டியதாயிற்று. ஆயினும், அதன்பின் அவர் அச் சால்வையின் கரையைக் கிழித்துவிட்டு ஓரம் தைத்து. குளிர் காலத்தில் போர்த்திக் கொள்வதற்காகவே அதைப் பயன்படுத்தினுர்.

ஒரு ஆந்திர தம்பதிகள் ஆசிரமத்தில் இரண்டு மாத காலம் தங்கிருந்தனர். மனைவி ஊருக்குத் திரும்ப

விரும்பினுள்; கணவனுக்கோ புறப்பட மனமில்லை. இதையறிந்த மகரிஷி அக் கணவனைக் கேட்டார்: "உமது சம்சாரத்தை விட்டுவிட்டு எங்கே ஐயா போவீர்? அப்படியே ஆகாசத்தில் இறக்கைக் கட்டிப் பறப்பீரா? என்ன இருந்தாலும் இந்த பூமியில்தானே இருந்தாக வேண்டும்? நீர் எங்கே இருந்தாலும் அங்கே ஒரு குடும்பமும் உண்டு. என்னைப் பாரும்? எல்லாவற்றை யும் துறந்துவிட்டதாய் எண்ணி வெளியேறினேன். ஆனுல் இப்போது எவ்வளவு பெரிய குடும்பம் பார்த்தீரா? உமது குடும்பத்தைக் காட்டிலும் நூறு மடங்கு பெரியது!"

மற்ருெரு சமயம் இப்படியும் இரங்கியுள்ளார்: "என் தாயார் காலமானபின், பந்தம் அறுந்தது, ஏதாவது ஒரு குகையில் ஏகாந்தமாய் வசிக்கலாம்; என்று எண்ணி னேன். ஆனுல், உண்மையில் இப்போதுதான் முன்னை விடப் பெரிய பந்தத்தில் கட்டுண்டு கிடக்கிறேன். வெளி யில் நகரக்கூட முடியாது."

சூரி நாகம்மா அவரது அந் நிலைக்குக் காரணம் கற்பிக்கிருர்; "அவருக்குத் தாயார் ஒன்றுதான்; ஆனுல், குழந்தைகளோ எத்தனையோ ஆயிரம்" என்று.

மற்ருெரு சமயம் (1945) மகரிஷி இவ்வாறு முறை யிட்டுள்ளார்: "சுவாமித் தொழில் மிகவும் கடின மானது. ஐம்பது ஆண்டு அனுபவத்தைக்கொண்டு பேசுகிறேன். இவர்கள் என்னைச் சுற்றிலும் மரச்சட்டங் கள் போட்டு வைத்திருக்கிருர்கள். அவற்றை நான் தாண்டக் கூடாதாம். என்னைக் கண்காணிப்பதற்காக ஒருவர் மாற்றியொருவராக ஆட்களை நியமித்திருக்கிருர் கள். நான் என் இஷ்டம்போல் வளையவர முடியாது. இதுவேறு, சிறைவாசம் வேருு என்ன?"

அத்தியாயம் 7

ரமணுசிரமம்: அமைதியின் ஆற்றல்

ஆசிரமத்திற்கு வந்து, மகரிஷியைக் கண்டு, அவர் புகழை மேலே நாடுகளில் பரப்பியவருள் பால் பிரண்டன் என்பவரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். அவரை, மகரிஷியிடம் அனுப்பி வைத்தவர் ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரியப் பெரியவர் தவத்திரு சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகளே என்பதும் குறிப்பிடத்தக்கது.

மகரிஷியின் திருமுன் நிலவிய அமைதியின் ஆற்றலை பால் பிரண்டன் இவ்வாறு விவரிக்கிருர்: "எனது பார்வையை அவரைவிட்டு அகற்ற இயலவில்லை. முதலில் உண்டான மனத் தடுமாற்றம், 'நம்மை அறவே புறக்கணித்துவிட்டாரே' என்ற திகைப்பு, யாவும் மெல்ல மெல்ல மங்கி மறைகின்றன. இந்தப் புதிய கவர்ச்சி வலையில் நான் மேன்மேலும் சிக்குண்டு வயமிழக்கிறேன். ஆனல், இந்த அசாதாரண நிகழ்ச்சியின் இரண்டாவது மணி நேரத்தில் என் மனத்துள் சந்தடியின்றி, தடுக்கமாட்டாமல் எழும் மாற்றத்தை நான் உணரத் தொடங்குகிறேன். ரயில் பிரயாணத்தின் போது நான் உன்னிப்பாய், திட்ப நுட்பமாய்த் தயாரித்து வைத்த கேள்விகள் ஒன்றன்பின் ஒன்ருய் ஒடுங்கிச் சரிகின்றன. என்னை இதுகாறும் வாட்டி

யெடுத்த ஐயங்கள் தெளிவுறுமா உருவா என்ற கவலை எனக்கு இப்போது இல்லை. அமைதி வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது, பேரமைதி என்னுள் ஊடுருவிப் பாய்கிறது, எண்ணங்களால் துன்புறும் மனம் சற்றே அடங்குகிறது என்பதை உணர்கிறேன்." ஓர் சித்தாந்தத்தின் சிறப்புக்கு அதன் மூலகர்த்தாவின் வாழ்க்கையே காரணம் என்ற உண்மையை அன்று உணர்ந்தார் அந்த ஆங்கிலப் பத்திரிகையாளர்.

இந்து மரபின் அங்கமான இதே கருத்தை ஸ்ரீ காஞ்சி ஆசாரியப் பெரியவர்களும் அண்மையில் வலியுறுத்திக் கூறிய வாசகமாவது: "எந்த மதமும் அதில் உள்ள தத்துவத்தினால் மட்டும் வளருவதில்லை... சாமானிய ஜனங்களுக்குத் தத்துவத்தைப் பற்றிக் கவலை இல்லை. நல்ல குணம், நல்ல பழக்கம் உள்ளவராக, கருணையும் சாந்தமும் உள்ளவராக ஒரு மகான் வந்தால் அவரைப் பார்த்த மாத்திரத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை உண்டாகிறது. அவர் எந்தத் தத்துவத்தைச் சொன்னாலும் அது சரியாகத்தானிருக்கும் என்ற திடமான நம்பிக்கையுடன் அவரது மதத்தில் ஜனங்கள் சேருகிறார்கள். மாறாக, ஒரு மதத்தின் கோட்பாடுகள் எத்தனைதான் பரம சத்தியங்களை விளக்கினாலும், அந்த மதப் பிரதிநிதியாக இருக்கிற தலைவர்களிடத்தில் ஒழுங்கு தப்பிவிட்டால் அந்த மதம் அழியத்தொடங்கி விடுகிறது."

மகரிஷி தாம் கண்ட உண்மையை வாழ்க்கையாலே பரப்பினார். அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் உயிருக்கு மெய்யாய், உண்மையின் உருவாய் அமைந்தது.

மகரிஷியின் வாய்மொழியை பிரண்டன் இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்: "மானிடர் அனைவரும் துன்பக் கலப்பே இல்லாத ஆனந்தத்தையே சதா தேடியலை கின்றனர்.... இது எல்லோருக்கும் உள்ள இயற்கையான உண்மை உணர்வு. ஆனால் அதே சமயத்தில் அவனவன் தன் மீது எல்லையற்ற அன்பு வைத்திருக் கிறான்...எப்படியாவது—குடிவெறியாலோ அல்லது ஆத்மிகத்தின் துணை கொண்டோ—ஆனந்தத்தை எட்டிப்பிடிக்க அடங்கா ஆவல் கொள்கிறான்... ஆனந்தமே மனிதனின் உண்மையான இயற்கைநிலை. அவன் அந்த ஆனந்தத்தைத் தேடுகையில் தன்னையு மறியாமல் தனது உண்மையான இயற்கை நிலையைத் தேடியலைகிறான். "நான்" எனும் எண்ணச் சரடை மனதினாலே தொடர்ந்து அதன் மூலத்திற்கே செல்வோ மானால் முதலில் தோன்றும் "நான்" என்கிற உணர்வே கடைசியில் மறைகிறது என்பது புலப்படும் .. இயற்கையிலே தான் பலவீனன் என்ற நினைப்பே மனிதனின் மாபெரும் பிழை. ஒவ்வொரு மனிதனும் தெய்வீகம் பொருந்தியவன். இயற்கையில் மனோபலம் மிக்கவன். பலமற்றவை, தீயவை அவனது பழக்கங்களும், ஆசைகளும், எண்ணங்களுமேயாம்; அவன் என்றும் பலவான்."

பால் பிரண்டனின் புத்தகத்தைப் படித்துவிட்டுத் திருவண்ணாமலைக்கு 1935-ல் வந்து சேர்ந்த மேஜர் சாட்விக் என்ற ஆங்கிலேயர் மகரிஷியை முதன் முதலில் கண்டதும் தம்முள் எழுந்த எதிர்வினையைப் பற்றிச் சொல்வதாவது:- "அவரது முன்னிலையில் நிலவிய அமைதியில், அருளாழத்தில் அமிழ்ந்தேன். அவரை அப்

போதுதான் நான் முதல் முதல் பார்த்ததைப் போலவே இல்லை. அவர், என்றும் தெரிந்திருப்பவர் என்றே தோன்றியது...நமது உணர்ச்சிகளை நம்பால் எதிர்வீசும் நிலைக் கண்ணாடியைப் போல் இருந்தார். நாம் வாய் பொத்தி அஞ்சி நின்றால் அவரும் சற்றுத் தனித்து ஒதுங்கி நிற்பதாகவே தோன்றும். ஆனால், அவர் முன்னிலையில் அனைவரையும் சூழும் அன்பிலே திளைத்தால் அவர் நம்மையும் தம்மவராகவே பாவித்து நடத்துகிறார்."

எண்ணங்களே மனம், யாவிலும் "நான்" எனும் எண்ணமே மூலமாம் என்கிற உண்மையை மகரிஷியிடம் கற்ற சாட்விக், 'யான்' எனும் அகந்தையின் சாவையும், அடக்கத்தையும் உருவகப்படுத்தி ஒரு மாடத்தை "அகந்தை சமாதி"யாக எழுப்பி, அது மீண்டும் தம்மைச் சுற்றி வந்து துன்புறுத்தாது அடக்க மாய்க்கிடக்க ஏற்பாடு செய்துள்ளார். ஆசிரமத்திலேயே இறுதிவரை தங்கிவந்த சாட்விக், வேதபாராயணம், ஆலய வழிபாடு முதலியன நன்கு நடைபெறுவதிலே அக்கறை காட்டினார்.

மகரிஷியை முதன் முதலில் (1940-ல்) தாம் தரிசித்தது தமது வாழ்க்கையிலே நிகழ்ந்த உன்னத உணர்ச்சிப் பெருக்கான அனுபவமாக வருணித்திருக்கிறார் கே சுப்பிரமண்யம் என்னும் கல்லூரி ஆசிரியர்: "...எண்ணங்கள் என் மனவெளியில் எழுமுன் மனமே அடங்கி ஒடுங்கிவிட்டது. அவ்வெளி முழுதும் பகவானின் மவுன-உணர்வே நிலவியது; அமைதியே அந்த மவுனத்தின் உள்ளுறைப் பொருளாய் நிறைந்து நின்றது. 'மவுனம்' என்று அதுகாறும் நான் கருதி

வந்திருந்தது முற்றிலும்வேறானது. அந்த மவுனமாவது, பின்னர் தொடர்ந்து பேசத் தெம்பு திரட்டுவதற்காகப் பேச்சைச் சற்று நிறுத்தி வைப்பது; மற்றவர்கள் செவிக்கு எட்டாத ஓர் உள்ளச் சளசளப்பு, தரிகெட்ட எண்ணத் தொடர்பு, இவையே நாம் முன்னறிந்த மவுனம். நானுணர்ந்த புதிய பேரமைதி மவுனம் ஒரு கணத்தில் மறைந்தது; ஆயினும், அதற்குள் வாழ்க்கைப் பேறு பெற்றுவிட்டேன். அதன்பின் மவுனத்தையும், தனிமையையும் குறித்து அஞ்ச வேண்டாம். நிர்வாணம், சூன்யதை என்ற சொற்கள் பயபக்தியோடு வரவேற்கத் தக்கவை, தடுமாறிப் பதறத் தேவையில்லை என்று கண்டு கொண்டேன்."

மனம் பேதித்து உளம் தத்தளித்து வரும் ஆடவரும், மாதரும் மகரிஷியின் முன்னிலையில் பேரமைதி பெற்றனர் என்றால், பறவைகளும் மிருகங்களுங் கூட அவரோடு சர்வசாதாரணமாய்ப் பழகின. குன்றிலிருந்து பல்வேறு குகைகளில் அவர் வசித்தபோது சில சமயங் களில் பாம்பும் தேளும் ஒரு தீங்கும் செய்யாமல் அவர் உடல் மீது ஊர்ந்து செல்லும்; அச்சம் உறுவதும், உறுத்துவதும் அங்கே இல்லை. ரமணாசிரமத்தில், அவரது அலாதி அன்பிற்குப் பாத்திரமான லக்ஷ்மி என்ற பசு தனிப் பிறவியாய் நிற்க, வேறுபல அணில்கள், குருவி கள், மயில்கள், நாய்கள், குரங்குகள் எல்லாம் சகஜமாக வளையவந்தன. மற்ற ஆசிரமவாசிகள், விருந்தினர் களைப் போலவே அவையும் மகரிஷியின் கருணையையும் கவனத்தையும் ஏராளமாய் அனுபவித்தன. வளர்ப்புப் பிராணி உயிர் நீத்தால் சில சமயம் அடக்கம் செய்து அதன்மீது ஞாபகார்த்தச் சமாதியும் எழுப்புவதுண்டு.

ஒரு சமயம், பங்களூரிலிருந்து வந்த ஓர் அன்பர் ஒரு ஜோடிப் புருக்களைத் தம் காணிக்கையாகக் கொண்டு வந்திருந்தார். புருக்களின் பராமரிப்மையும் ஆசிரமப் பணிகளிலொன்ருகச் சேர்த்துக்கொண்டு அவற்றிற்குத் தீனி போட்டு, பூனைகளிடமிருந்து காப்பாற்றி வளர்ப்பதற்கு மகரிஷி தயங்கினாலும், வற்புறுத்தலின்பேரில் அந்த அன்பளிப்பை ஏற்க இணங்கினர். புருக்களைக் கையில் எடுத்துச் சிறிதுநேரம் அன்புடன் வருடினர்; பின்னர், மவுன சமாதியில் ஆழ்ந்துவிட்டார். பறவைக் கூண்டு ஒன்றைத் தேடிக் கொணர சுமார் ஒரு மணி நேரம் பிடித்தது. அத்தனை நேரமும் அப். புருக்களும் மகரிஷியின் மடியிலேயே இருபெரு யோகிகளைப் போல அசையாது அமர்ந்திருந்தன. "யாருக்குத் தெரியும்? தாமாக வந்தன. போக மறுத்தன. ஏற்கனவே உள்ளவை போதாதென்று மற்றும் ஒரு குடும்பமும் என்னை வந்து சேர்ந்துவிட்டது" என்ருர் மகரிஷி.

பிராணிகளோ நமக்கு நண்பர் மட்டுமே அல்ல; போதகரும் கூட. "இந்த அணில்களைப்பற்றிய செய்தி தெரியுமா? அவற்றின் முன்னுல் எவ்வளவு ஆகாரம்தான் வையுங்களேன், தமக்குத் தேவையானதைத் தின்றபின் மிஞ்சியதை அப்படியே விட்டு விடும். எலி அப்படி அல்ல. கண்ணில் காண்பதையெல்லாம் இழுத்துக் கொண்டு போய் வளையில் பதுக்கி வைத்துக் கொள்ளும்" என்று ஒரு சமயம் குறிப்பிட்டார். அதற்கு அங்கிருந்த ஒருவர் சொன்னுர்: "ஒருக்கால் அணில் மந்த புத்தியுள்ள ஜந்துவாக இருக்கலாம்; எதிர் காலத்திற்காகத் திட்டமிட்டுச் சேமிக்காமல் அவ்வப்போது வேண்டியதை மட்டும் உண்டு வாழ்கிறது போலும்!" மகரிஷி பதிலுரைத்தார்:

"ரொம்ப சரி. திட்டமிட்டு நம்மைப்போல இழிவான வாழ்க்கை நடத்துவதுதான் புத்திசாலித்தனம் என்று நாம் நினைக்கிறோம். இந்த உலகத்தில் எத்தனை எத்தனையோ மிருகங்களும், பட்சிகளும் எவ்விதத் திட்டமும் போடாமல் பதுக்கியும் வைக்காமல் வாழ்கின்றன. பாருங்களேன். குரங்குகள் கூட வீடு கட்டுவதில்லை; பொருட்களைச் சேர்த்துவைத்துக் கொள்வதில்லை. கிடைப்பதை உண்டு, பொழுது சாய்ந்தவுடன் மரங்களின்மேல் ஒண்டிவிடுகின்றன. அவையும் மிக்க ஆனந்தமாய்த் தானே வாழ்கின்றன?" மற்றொரு சமயம் அவர் இவ்வாறு கூறியுள்ளார்: "அவற்றிற்குப் போதுமான உணவு இருக்கும்போது குரங்குகள் சண்டையிடுவதில்லை, கடித்துக் கொள்வதில்லை. தேவை, தட்டுப்பாடு இருந்தால்தான் தொல்லை எழுகிறது."

பறவை, பிராணிகளின் பாஷை மகரிஷிக்குப் புரிந்தது என்று நம்பவும் ஆதாரங்கள் உள்ளன. முன்னாள் சென்னைத் தலைமை நீதிபதி திரு. அனந்த நாராயணன் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"முனைந்து எழுதிக் கொண்டிருக்கும் பகவான் தாள்களை ஒதுக்கி, மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவைக்கிறார். பணியாளை அழைக்கிறார். 'இப்போது இங்கே ஒரு ஜதை குருவிகள் வந்து, தங்கள் கூட்டை யாரோ அகற்றிவிட்டார்கள் என்று என்னிடம் முறையிட்டன. மேலே பார்த்தால் கூட்டைக் காணோம்...மாதவா, குருவிக் கூட்டை யாராவது கலைத்தார்களா?' எனக் கேட்கிறார். கூட்டை அகற்றியது நான் தான் என்று கூறி, மகரிஷியின் இருக்கையின் மேல் உயரே தொடர்ந்து கூடு கட்டு

வது பெரிய தொல்லையாகப் போய்விட்டது என்று பணி யாள் காரணங் காட்டுகிருன்.

பகவான் பதிலுரைக்கிருர்: 'அப்படியா செய்தி? அதுதான் குருவிகள் முறையிடுகின்றன. சின்னஞ்சிறு பறவைகள், பாவம்...' அன்பே வடிவானவன். அனைத்தும் அறியவல்லவன். எல்லாப் பிராணிகளும் பறவைகளும் தமக்குள் பேசிக் கொள்வது போலவே மெய்யறிஞேடும் பேசுகின்றன."

ஒரு சமயம் காஷ்மீரத்து வேலையாள் ஒருவன் மகரிஷி தன்னுடன் தன் தாய்மொழியில் பேசியதாகத் தன் எஜமானனிடம் பயபக்தியுடன் தெரிவித்தான். அது உண்மையோ, மனமயக்கமோ எதுவாக இருந்தாலும், மகரிஷி போகிற போக்கில் கற்றுணர்ந்த சமஸ்கிருதம், மலையாளம், தெலுங்கு முதலிய மொழிகளிலும் அவரது ஞானம் சிறந்து விளங்கியது. ஆங்கிலத்தில் அவர் பேசுவது அரிதேயாயினும், அந்த மொழியும் அவருக்கு நன்கு தெரியும். தேவையான போதெல்லாம் "regressus ad infinitum," "automatic divine activity" போன்ற தொடர்களைக் கச்சிதமாய்க் கையாளுவார். ஆங்கில பைபிளிலும், ஷேக்ஸ்பியர், வோட்ஸ்வொர்த், ஷெல்லி, கீட்ஸ் ஆகியோர் கூறப்பெறும் நிரந்தரத் தத்துவங்களைக் கவனமாய்க் கேட்டு, உண்மையுணர்ந்து பாராட்டுவார். அன்பின் பெருமையைப் போற்றிப் புகழும் முதல் 'கொரிந்தியன்' 13-ம் அத்தியாயம் மகாத்மா காந்தியைப் பரவசப்படுத்தியது போலவே, மகரிஷியையும் கவர்ந்தது. கிறிஸ்துவர்களும் பிறருங் கேட்டுப் பயனுறுமாறு பைபளி னின்றும் பின்வரும் மகாவாக்கியங்களை அவர் அடிக்கடி எடுத்துக் கூறுவார்:-

சும்மா இரு; நானே கடவுள் என்று அறி	—	Psalms XLVI·10
உள்ளது நானே உளேன்	—	Exodus III.14
கடவுளின் ராஜ்யம் உன் உள்ளே உள்ளது	—	St. Luke XVII.21
ஏபிரகம் தோன்றுமுன் நான் உளேன்	—	St. John VIII.58
நானும் என் தந்தையும் ஒன்றே	—	St. John X.30

கீட்ஸ் இயற்றிய "நைட்டிங்கேல் பாடல்" (*Ode to a Nightingale*) பற்றி அவரது விமரிசனம் இது: "முதல் செய்யுளில் பாடும் பறவை ஜீவன்; பழத்தைத் தின்று சுவைத்துப் பாடுகிறது. ஏழாவது செய்யுளில் தோன்றும் 'இறக்கப் பிறவா அமரப் பறவை'யோ பார்த்து நிற்கும் அறிவுப் பறவை—உணர்வின் உருவகம்."

இஸ்லாம் என்ற பெயரின் சிறப்பையும், அந்தச் சமயத்தின் அடிப்படைத் தத்துவமாகிய இறைமைச் சக்திக்கு முற்றிலும் சரணடையும் பணிவையும் பாராட்டுவார். மகரிஷியின் தரிசனமும் சொற்களும் அலகாபாத் பல்கலைக் கழகப் பேராசிரியர் எம். ஹபீஸ் சையது அவர்களின் சமய நம்பிக்கைக்கு உறுதியும், வளமும் தந்தன. அதுமட்டுமல்ல. அவை இன்றைய விஞ்ஞானப் போக்கிற்குக்—குறிப்பாக மனவியலுக்கு—ஒப்பிய அனுபவமாக அமைந்தனவாம். டாக்டர் சையது கூறுகிறுர்:

அவர் போதித்த எளிய, தெளிவான, கலப்பற்ற மெய் விளக்கம் அவரது அன்றுட ஒழுக்கத்திலே ஒளிமயமாய்ப் பிரதிபலித்து, வாழ்க்கையின் மறை பொருளை வெளிப்படுத்தும் திறவுகோலாக உதவுகின்றது. சமூகம்,

அரசியல், சமயம், பொருளாதாரம் முதலிய துறைகளில் இன்று நம்மை எதிர்நோக்கும் பல சிக்கலான பிரச்னை களை நடைமுறையில் தீர்த்துவிடுகிறது. ஆயினும், அருணை மாமுனி ஒரு கொள்கையைப் பரப்பும் போதகரோ, மதப் பிரசாரகரோ, சீர்திருத்தவாதியோ அல்லர். உண்மையில் அவர் ஓர் ஆன்மிக விஞ்ஞானி; விஞ்ஞான முறையைக் கைப்பிடித்து, உள்ளுணர்வுத் திறமையால் பகுத்தறிவுக் கப்பாலுள்ள வாலறிவை ஆராய்ந்து மெய்ப்பொருளைக் காண வழி செய்து தந்துள்ளார். தமதேயான தன் முயற்சியால், முனைந்த உண்முக நோக்கால் ஆத்மபோதம் எய்தினர்.

தற்கால விஞ்ஞானி ஓர் உண்மையைக் கண்டு பிடிப்பது அவனுக்காக மட்டுமா? இனவேற்றுமை, தேசீய வேற்றுமை யாதுமின்றி மனித குலம் முழுவதும் பயன்பெறுவதற்காக அன்றோ! தான் பெற்ற அறிவைப் பிறரும் பெற்று அது பொது அறிவு ஆவதற்காக அல்லவா? இந்த விஞ்ஞானியைப் போலவே, ஸ்ரீ ரமண மகரிஷியும் தாம் முயன்று முனைந்து தேடிக் கண்டு பிடித்ததைச் சீடர்களும், ஆர்வத்தோடு உண்மையை நாடுவோர்க்கும் வாரி வழங்கி, ஆன்மிக ஞானம் தலை முறை தலைமுறையாகச் சுடர்விட்டெரியச் செய்கிறார்.

அத்வைதம், பௌத்தம் இரண்டையும்பற்றித் துல்லியமாய், விரிவாய் எழுதியுள்ள வே வூ வே (டெரன்ஸ்கிரே) என்னும் அறிஞர் இவ்விரு மரபுகளும் இக் காலத்தில் சந்திக்குங் கூடலாக மகரிஷியைக் காண்கிறார். வே வூ வே கூறுகிறார்:

"இக்காலத்திலே நம்மிடை அரை நூற்றாண்டு வாழ்ந்து, எல்லோரும் எப்போதும் அணுக, தனி

மனிதனுய்த் தோன்றி, எனினும், முக்தி நிலையில் பரத்துவத்துடன் ஒன்றிய ஒருவர் இவரைத் தவிர வேறு யாராகிலும் உளரோ? நம்மவர் நூற்றுக்கணக்கானவர்கள் இவரை இந் நிலையிலேயே கண்டிருக்கிறோம். இப்படி வேறுயாரைக் குறித்துக் கூற முடியும்? இத்தகைய சம காலத்தவர் ஒருவரை நாம் பெற்று, அவர் சொல்லையும் வாழ்க்கை முறையில் அச் சொல்லைச் செயலாக்கியதையும் நோக்கி, திருமறை நூல்களிலே காணப்பெறும் சொல். செய்திகளோடும், பண்டைக்கால மெய்ஞ் ஞானிகளோடும் இவற்றை ஒப்பிடமுடிகிறதே, இது என்ன ஆச்சரியம்! திருமறை நூல்களையும் அவற்றின் வாக்கியங்களையும் பகவானிடத்தில் மட்டுமே மாற்றுப் பார்க்க முடியும்; அவை வெறுங் கனவோ கற்பனையோ அல்ல என்பதை நாம் கண்ணுறக் காண முடியும்."

ஆர்த்தர் ஆஸ்பர்ன் என்னும் ஆங்கிலேயர் 1945-இல் திருவண்ணாமலைக்கு வந்து ஆசிரமத்தில் சேர்ந்தார். அங்கே, ஏற்கனவே அவரது மனைவியும் குழந்தைகளும் வசித்து வந்தனர். பின்னர், அவர் மகரிஷியின் வாழ்க்கை வரலாறு, போதனைகளைப் பற்றி விவரமாகவும் நுட்பமாகவும் பல நூல்கள் எழுதியுள்ளார். மலைப் பாதை (Mountain Path) என்கிற காலாண்டு சஞ்சிகையைத் தொடங்கி வைத்து அதன் ஆசிரியராக உயிருள்ளவரை பணியாற்றி, 1970-இல் காலமானார்.

மகரிஷியை முதன் முதலில் சந்தித்தபோது ஆஸ்பர்ன் எதிர்பார்த்ததற்கு மாருக அந்த தரிசனம் அவர் மனதில் அதிகம் பதியவில்லை. "புகைப் படங்களிலே தோன்றியதைவிட மிகச் சாமான்யமானவராகவே பட்டார்." சில வாரங்களுக்குப்பின் ஒரு நாள் மாலை

"மகரிஷி மஞ்சத்தில் சாய்ந்திருந்தார். நான் அவர் முன் முதல் வரிசையில் அமர்ந்திருந்தேன். நிமிர்ந்து உட்கார்ந்த அவர் என்னை நோக்கினுர். அவரது கூர்ந்த கண்கள் என்னை ஊன்று ஊடுருவி உற்று நோக்கின. அந்தப் பார்வையின் ஆற்றலைச் சொல்ல இயலாது. அதன்பின் அமைதி. ஆழ்ந்த அ...மதி. விவரிக்க வொண்ணுக் கவலையின்மை, பே ரின்பம். இதுதான் பார்வை மூலம் தீக்ஷை, இது என்னை உயிர்ப்பித்து, என் மன ஓட்டத்தை மாற்றியமைத்தது என்பதை நான் அப்போது அறியவில்லை. 'வேறு பக்தர்களுக்கும் அம் மாதிரி அனுபவம் ஏற்பட்டதுண்டு என்றும், அந்தக்கண முதலே அவர்களும் பகவான் முன்னிலையில் தீவிர 'சாதனை' துவங்கினுர்களென்றும், பின்னரே நான் தெரிந்து கொண்டேன்."

மகரிஷியின் முன்னிலையிலே ஏற்பட்ட அமைதியைப் பற்றி இவ்வாறு பல பக்தர்கள் சான்று கூறுவது, ஓர் அன்பரின் கேள்விக்கு அவர் அளித்த விடையை வலியுறுத்துகிறது. 'எத்தனையோ ஆன்மிக ஆசான்களிடம் ஈடுபாடு கொண்டிருக்கும் ஒருவன், அவர்களுள் எவரைத் தன் குருவாக ஏற்பது?' என்ற கேள்விக்கு அவர் "எவரிடமிருந்து நீ சாந்தி பெறுகிருயோ அவரையே உன் குருவாக ஏற்றுக்கொள்" என்ருர்.

குரு லட்சணத்தைப்பற்றிய ஒரு கதை மகரிஷி அடிக்கடி சொல்லுவதுண்டு. தனது குருவைத் துதித்து பரணி யொன்றைத் தொகுத்த தத்வராயன் அதனை அறங்கேற்ற சபை கூடுமாறு பல புலவர்களை வேண்டினுன். ஆயிரம் யானைகளைக் கொன்ற போர்வீரனைப் போற்றியே பரணி பாடுதல் தகும், ஒரு வெறும் சந்நி

யாசியைப் புகழ்ந்து பரணி பாடலாகாது என்று பண்டிதர் கள் ஆட்சேபித்தனர். 'சரி என் குருவிடம் நாமெல் லோரும் போய் அவர் முன்னிலையில் இதற்கு முடிவு காண்போம்' என்றான் தத்வராயன். அவ்வாறே அந்தக் குருவை அவர்கள் அணுகி அமர்ந்தபின், பண்டிதர் களின் ஆட்சேபணையைப் புலவன் எடுத்துரைத்தான். குரு வாய் திறவாது மவுனமாக அமர்ந்திருக்க, மற்றவர் களும் அவ்வாறே அவர் முன்னிலையில் சமைந்து விட்டனர். எவர் மனத்திலும் எவ்வித சிந்தனையும் தோன்றாமலே பல நாட்கள் ஓடின. இந்த நீண்ட மவுன அமர்வின் முடிவில் குரு தம் மனத்தைச் சிறிது அசைத் ததுதான் தாமதம், குழுமியிருந்தோர் அனைவரும் ஒரே குரலாய் "மத யானைகளாம் நமது அகந்தை அனைத்தை யும் அடக்கிய இந்தப் பெரியாரின் ஆற்றலின் முன் ஆயிரம் களிறுகளை வெல்வது ஒன்றும் பெரிதில்லை!" என கோஷித்தனர். பின்னர், தத்வராயன் அவனது பரணியை அறங்கேற்றுமாறு பணித்தார்

'உள்ளது ஒன்றே, அதுவும் காலம் கடந்ததே,' என்பது மகரிஷியின் போதனை. இதனை நோக்குங்கால், அவர் உடல் மறைவை அதிகம் பொருட்படுத்தலாகாது; எனினும், திட மனதுடைய அத்வைதிகளுள் கூட வெகு சிலரே ஆசை, பாசம் இவற்றின் ஈர்ப்பைக் கடந்தவர்கள். தேகத்தோடு மகரிஷி தங்களிடையே இருக்கவேண்டும் என்று விரும்பிய பக்தர்கள், அவர் இறுதி நோய்வாய்ப் பட்டது முதல் கவலையில் ஆழ்ந்தனர். 1949 பிப்ரவரி யில் அவரது இடது முழங்கையில் ஒரு புற்று நோய்க் கட்டி புறப்பட்டு மேலே பரவிற்று. இயற்கை தன் வழி நடக்கட்டுமே என்று அவர் சும்மா இருக்க விரும்பினார்;

ஆயினும், பிறர் வற்புறுத்தலின் பேரில் அடுத்தடுத்துப் பல அறுவைச் சிகிச்சைகளுக்கு உடன்பட்டார். தொடர்ந்து பல மாதங்கள் அவரை வருத்திய வலி எவ்வளவு வேதனை மிக்கது என்பது மருத்துவர்களுக்குத்தான் தெரியும். ஆனால், அவ்வேதனையைச் சற்றும் பொருட்படுத்தாது அவர் எப்படிப் பொறுத்து வந்தார். என்றும் இந்தப் பரம சாதுவுக்கு இத்தகைய துன்பம் வருவானேன் என்றும் டாக்டர்களும், பிறரும் பெரிதும் வியந்தனர். பலர் பாபங்களைத் தாம் இரங்கி ஏற்றதின் விளைவே இது என்று சிலர் கருதினர். ஆனால், உயிர் முடிவடைந்து வேதனை ஒழியவேண்டும் என்று எவரும் விரும்பவில்லை. உடலை இவ்விதம் நோயால் நீத்ததின் மூலம் அவர் முன்பு (1896 ஜூலையில்) நடந்த நாடகத்தை உலகம் அறிய மீண்டும் ஒருமுறை நிகழ்த்திக் காட்டினார் போலும் !

'உடல் அழிவுறும் என்ற விதியைத் தாம் பிறருடன் பகிர்ந்து கொண்டு பிறரும் பேரின்பத்தை—அனைத்தையும் கடந்த மெய்யுணர்வை—தம்முடன் பகிர்ந்துகொள்ள முடியும் என்று பக்தர்களுக்குச்சொல்லாமற் சொன்னார். அவரைப் பிரிந்தாக வேண்டுமே என்று கலங்குபவர்களிடம் மகரிஷி "நான் போகவில்லை; எங்கே போக முடியும்? இங்கேதான் உளேன்", என்பார். பிறப்பும் இறப்பும் உடலுக்கே உண்டு. 'நான்' ஆகிய மெய் யுணர்வோ இடம் காலம் இரண்டையும் தன்னுள் அடக்கித்தான் கடந்து நிற்பது. அதற்குப் போக்கும், வரவும், புணர்வும், பிரிவும் ஏது ?

1950-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் தேதி அவரது இறுதி நாள். பிரெஞ்சு பத்திரிகைப் புகைப்படக்காரர்

கார்டியர்-பிரஸன் என்பவர், ரமணாசிரமத்துக்கருகே தம் குடிசை வாயிலில் நின்று கொண்டிருந்தார். படர்ந்த பிரகாசமான ஓர் எரிமீன் தெற்கே தோன்றி, வான வெளியில் மெள்ள மெள்ள வடக்கே நகர்ந்து, அண்ணா மலைச் சிகரத்தின் பின்புறம் மறைவதைக் கண்டார். கைக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி இரவு 8-47. மகரிஷியின் மூச்சு நின்ற கணந்தான் அது.

பேரொளியுடன் எரிமீன் வானத்திலே தோன்றி மறைந்ததைத் தென்னிந்தியா முழுவதும் பலர் கண்ணால் கண்டனர். பத்திரிகைகளிலும் இந்தச் செய்தி பரவலாய் வெளிவந்தது. சென்னையிலும் மற்ற இடங்களிலும் எரிமீனைக் கவனித்தச் சில பக்தர்கள் அதன் உட்பொருளை உணர்ந்து, தமது கார்களில் புறப்பட்டு உடல் அடக்கத்துக்கு முன் அருணை வந்து சேர்ந்தனர்.

ரமணாசிரமத்திற்கு வருவோர் பலர் ஸ்ரீ ரமணர் வெகு காலம் வசித்தபின் அவரது உடலும் அடக்கமான தலத்தில் இன்றும் அமைதியின் ஆற்றலை உணர்வதைக் குறித்துச் சாட்விக் கூறுகிறார்: "நிச்சயமாய் இது இயற்கையான உணர்வே ஆகும். விலக்கு ஏதும் இல்லாமல் உலகின் எல்லா மதங்களிடையேயும் உள்ள மரபு தானே இது? முஸ்லிம்கள் தம் மகான்களின் சமாதிகளைப் புனிதமெனப் போற்றுகின்றனர். பௌத்தர் கள் ஏதோ ஒரு திருச் சின்னத்தைத் தொழுவதற்காக நீண்ட யாத்திரை புரிகின்றனர். தகுந்த காரணமின்றி மக்கள் இவ்வாறு சிரமங்களை ஏற்பதில்லை."

மகரிஷியை நேரில் பார்த்திராமல், ஆனால் அவரது பெயரைக் கேள்விப்பட்டு அல்லது படங்களைப் பார்த்து

(அவரது போட்டோக்கள் நூற்றுக் கணக்கில் உள்ளன) ஈர்க்கப் பட்ட பலரும் கூட அவரது சந்நிதிச் சிறப்பை உணருகின்றனர். அவர் அடிக்கடி சொன்னது போல, உண்மையான குரு எங்கும் நிறைந்தவர். ஏனெனில், குரு என்று உணர்வாய் ஒளிரும் ஆன்மாவே யன்றி வேறில்லை. ஒவ்வொருவர் இதயத்துள்ளும் உள்ள மெய்ப் பொருளை இன்பமாய் உணர்வதன்றி வேறு எதையும் காட்டத் தமக்குத் தனிச் சிறப்போ தெய்வத் தன்மையோ உண்டு என்று அவர் உரிமை கொண்டாடவில்லை. மகா கவி ஷேக்ஸ்பியரிடம் கீட்ஸ் கண்ட "இயற்கை இந்திரஜாலம்"—முழு மனிதத் தன்மையுடன் சும்மா இருக்கும் விந்தை—மகரிஷியாய் உருவெடுத்துத் திகழ்ந் தது. 'பிச்சைக்காரன் முன் குனியாது, மன்னர் முன் நிமிராது' அனைவரோடும் சரிநிகர் சமானமாக நின்றூர்.

நம்மெல்லோரையும் விட அதிகமான மனிதத் தன்மை வாய்ந்தவராக—முழுமையான, இயல்பான மனிதத் தன்மை வாய்ந்தவராக—வாழ்ந்து, இவ்வாறு மனிதனுக இருப்பதே உண்மையில் தெய்வீகமானது என்று காட்டினுர். அரை நூற்றுண்டு காலம் 'யான்' அற்று இயன்று, மனிதரிடை மனிதனுகவும், எல்லா மக்கள் உள்ளும் உள்ள உணர்வாகிய புருஷனுகவும் வாழ்ந்து காட்டியதன் மூலம், 'சமயம் என்பது தெய்வீகத் தின் வருகை இல்லை, மனிதத் தன்மையின் நிறைவே ஆகும்' என்று ரவீந்திரநாத் தாகூர் கூறுவதை மகரிஷி மெய்ப்பித்தார். "நமது அறிவு உலகப் பொது அறிவோடு ஒன்றுய் விரிந்து வீடு பெறுவதே விஞ்ஞானம் என்பது போல, நம் ஒவ்வொருவரின் தனித் தன்மை பிரபஞ்ச புருஷனுகிய மனிதத் தன்மையுடன் ஒன்றுய் விரிந்து வீடு பெறுவதே சமயம் ஆகும்."

பாகம் 2

போதனை விளக்கம்

அத்தியாயம் 8

நூற்றிரட்டு: வசனப் பகுதிகள்

"ஒரு கடவுள் சாவதைக் கண்டேன்" என்ற தலைப்பில் சாடர்டே ஈவினிங் போஸ்ட் என்ற பிரபல பத்திரிகையில் வெளிவந்த நீண்ட செய்திக் கட்டுரை ஒன்றில் அமெரிக்க விமரிசகர் "இடித்து நெரியும் மக்கள் திரளின் ஆவேச அமளிதுமளியையும், *அருணாசல சிவ! அருணாசல சிவ!* என்ற தாளவொண்ணாப் பேரிரைச் சலையும்" வர்ணித்து, அதன்பின் இத் தகவலையும் அறிவித்துள்ளார்: "அவ் ஆவேசம் உச்ச நிலையை எட்டியது; அச்சிறு அறையில் சுழன்று கொண்டிருந்த மின்விசிறி நின்றது. பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் மூச்சு நின்ற அதே கணம் வானத்தின் குறுக்கே எரிமீன் ஒன்று ஜோதிக் கீற்றை எழுப்பிய வண்ணம் ஸ்ரீ அருணா சலக் குன்றின் மீது ஏறி மறைந்தது."

சித்திகளை விரும்பாதவர்; அரசனையும், ஆண்டியை யும் ஒன்ருய் மதித்தவர்; 1896-இல் 'மறுபிறவி' பெற்றதி லிருந்து 1950-இல் உடல் நீத்தது வரை தொடர்ந்து ஐம்பத்து நான்கு ஆண்டு காலமும் 'முழுமையான சமத் துவத்தைத் துய்த்து மகிழ்ந்து பயிலுவதே உத்தம நிலை' என்ற அத்வைத உண்மையை விளக்கி வந்த ஒருவர்;

இவர் மறைவை வானுலகம் ஒளிவீசிக் காட்டியது விந்தை யிலும் விந்தையான நிகழ்வுப் பொருத்தமே.

ஆயினும், உலகம் அறிந்து பரவலாய் விளம்பரம் பெற்ற இந்த ஒளித்தோற்றம், மகரிஷியின் சரிதையிலே தற்செயலாய் நேர்ந்த பல நிகழ்வுப் பொருத்த வரிசை யிலே கடைசி அற்புதம் என்றுதான் கூறவேண்டும். காந்திஜீயும், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியும் தோன்றிய காலத்திலே இந்த ஞானியும் தோன்றினர். இந்தியப் பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சித் தோன்றி வந்த, மேலைநாடுகளில் ஜென் (Zen) அத்வைதம் பரவி வந்த, காலம் அது. கிறிஸ்துமஸை யொட்டிப் பிறந்து, ஈஸ்டரை யொட்டி அவர் மறைந்ததால் கிறிஸ்தவ பக்தர் பலர் இவரை செயின்ட் ஜான் சுவிசேஷத்தில் பதினுன் காம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள உள்ளுறை நண்பர், உண்மைத் தத்துவம், இவர்தானே என்று அவரிடம் ஈடுபாடு கொண்டுள்ளனர். அவரது சொந்த அன்னையே ஆசிரமத்தின் அன்னையாய் அமைய, அவ்வம்மையின் சமாதிமீது நிற்கும் ஆலயம் தாய்மைத் தத்துவத்திற்கே ஓர் ஆலயமாய் அமைந்தது. தாயின் பெயர் ‘அழகு’, தூய தமிழ்ச் சொல்லாகும். ‘சுந்தரம்’, ‘ரமணன்’ என்ற பெயர்கள் அழகையே குறிக்கும் வடமொழிச் சொற்கள். ராமபிரானின் நட்சத்திரமான புனர்வசுவில், சிவனுக்குரிய திருவாதிரை இரவில் பிறந்து, என்றும் இளமைப் புது வாழ்வளிக்கும் குமரக் கடவுளாய்ப் புலவர்களால் புகழ்ந்து போற்றப் பெற்ற இவர் இந்துக்களுள் பல பிரிவுகளுக்கும் மரபுகளுக்கும் ஒருங்கே உகந்தவராக விளங்கினர்.

1947-ஆம் ஆண்டில் பாரத சுதந்திர நாள் முன்னறிவிக்கப்பட்டு அந்தத்தேதி நெருங்கி வந்தபோது, ரமணகீதையைப் பயின்றிருந்த அன்பர் பலர் அருணை முனிவர் 1917-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் தேதி யன்றுதான் அந்த நூலின் பத்தாம் அத்தியாயமான சங்க வித்யை யை விளக்கி அதில் "அமைதியும், தூய்மையுமே அனைவரது உள்ளத்தே சகோதர மனப்பான்மையை வளர்க்கும் திறமையே சமூகத்தை ஓங்குவிக்கும், சமத்துவமே மானிடரை ஏக குடும்பமாய் ஒருங்கிணைக்கும்' என்று கூறியருளினர் ; என்பதை நினைவுகூர்ந்து மகிழ்ந்தனர்.

இவையாவற்றையும்விட நமது அதிர்ஷ்ட வசமாய், தற்செயலாய் நேர்ந்த நிகழ்வுப் பொருத்தம் யாதெனில், இந்த எளிய, அடக்கமுள்ள, தற்பெருமையற்ற மனிதர் அவர் அறியாமலே பரமாசாரியர் ஆனதே ஆகும். அது எவ்வாறெனில், அவரை நாடிவந்த சாதகர்கள் விடாப் பிடியாய் நச்சரித்துத் தமது வினாக்களுக்கு அவர் விடைகளைப் பெற்றனர் ; பழைய நூல்களுக்குச் சுருக்கமும் மொழிபெயர்ப்பும் வேண்டிப் பெற்றனர். அவற்றைக் கவனமாய்ப் பத்திரப்படுத்தினர். இதன் விளைவாகவே இன்று "ரமண நூற்றிரட்டு" என்ற ஒரு தொகுதி நம்மிடையே நிலவுகிறது. இந்தத் தொகுதி அளவிலே சிறிதேயாயினும், வேதாந்த தத்துவத்தை விசாரமார்க்கத் தோடு பிணைத்து ஆன்மிக வழிகாட்டும் நூலாக அமைந்துள்ளது. தாமே பின்பற்றிப் பலன்கண்ட அந்த விசார மார்க்கத்தைப் பிறரும் பின்பற்றிப் பலன் காணுமாறு திருத்தித் தெளிவுபடுத்தித் தந்துள்ளார்.

விசார சங்கிரகம்:

முதன் முதலாய் இளந்துறவியின் விடைகளைப் பெற்று அவற்றைத் துண்டுத் தாள்களில் குறித்து வைத்துக்கொண்ட சாதகர் **கம்பீரம் சேஷய்யா** என்பவர். அவர் 1900-1902-ல் விருபாட்ச குகைக்கு அடிக்கடி வருவார். தீவிர ராமபக்தர். யோக சாத்திரம் பயின்றவர். விவேகானந்தரின் விரிவுரைகளையும், அத்வைத சாரத்தை ராமர் லட்சுமணனுக்குப் போதிக்கும் நூலாகிய **ராம கீதை** யையும் படித்த சேஷய்யாவுக்குக் கருத்து வேற்றுமைகளை ஒருமைப்படுத்தி உட்பொருளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருக்காக சுவாமியும் அந்நூல்களைப் படித்து அவற்றின் கருத்துக்களைச் சுருக்கி வரிசைப்படுத்தி, மேலும் எழுந்த கேள்வி களுக்கும் விடையளித்துவர, இந்தக் குறிப்புக்களே "விசார சங்கிரகம்" என்ற நூலாய் அமைந்தன. சேஷய்யாவுக்கு ஈடுபாடும் பரிச்சயமும் உள்ள தியானம், பிராணாயாமம் முதலிய விஷயங்களே இந்நூலிலே கூறப்பட்டுள்ளன. சாதகர் விரும்பிச்சென்ற வழியிலே முன்னேற இவ்வாறு உதவி புரிந்ததோடு, மகரிஷி தமது சிறப்புப் பாதையான ஆன்ம விசாரணையைக் கொணர்ந்து அதனைச் சற்றே விரிவாய் விவரிக்கிறார். "நான் யார்?" என்ற நாட்டத்தின் மூலம் அவரவர் தமது உண்மையான தன்மையை ஆராய்ந்துணர்ந்தால் அதுவே இம்மையிலே நித்தியானந்த நிலையைப் பெறும் சாதனமாகும்.

"போதல், வருதல் போன்ற தொழில் உடலையே சார்ந்தவை. ஆகவே, 'நான் போனேன்', 'நான்

வந்தேன்' என்று ஒருவர் கூறும் போது உடலே நான் என்று சொல்லுவதாய்த் தோன்றுகிறது. ஆனால் பிறப்பதற்கு முன் இல்லாததாலும், பஞ்ச பூதங்களால் ஆனதாலும், ஆழ்ந்த தூக்கத்தில் இல்லாததாலும், இந்த உடலே 'நான்' என்கிற உணர்வாகச் சொல்லக் கூடுமா? மரக்கட்டை போல ஜடமான இச் சரீரம் 'நான், 'நான்' என ஸ்புரித்து வழங்கிவருமா? வராதே! ஆதலால், பிணமான தேகத்தைப் பிணம் போலவே இருத்தி, வாக்காலும் 'நான்' என்று சொல்லாமலிருந்து, ,இப்போது நான் என விளங்குவது எது?' என்று கூர்மையாய் விசாரித்தால், அப்போது இதயத்தில் நான் நான் என்று சத்தமில்லாமல் தனக்குத்தானே ஓர் வித ஸ்புரிப்பு மாத்திரம் தோன்றும். அதாவது, வரையறைகளுக்கு உட்பட்ட பற்பல எண்ணங்கள் யாவும் மறைந்து, எல்லையற்றதும் ஒன்றே யானதுமான தூய உணர்வு மட்டுமே தன்மயமாய்த் திகழும். அந்த அனுபவத்தை விடாது, அதனில் ஒன்றி, சும்மா இருந்தால் 'தேகம் நான்' என்றும் அகங்கார ரூப ஜீவபோதத்தை முற்றிலும் நாசமாக்கி, கற்பூரத்தில் பற்றிய நெருப்பைப் போல தானும் சாந்தமாகி விடும். இதுவே மோட்சம் என்று பெரியோர்களாலும் சுருதிகளாலும் சொல்லப்படுகிறது."

மனத்தை உள் நிறுத்தி இதயத்தில் அடக்குவதற்கு ஓர் உபாயமாக 'ஸோஹம்'* பாவனையை மகரிஷி விளக்கிக் கூறுகிறார்.

"தேகத்தில் இருக்கும் 'நான்' யார்?, என்று விசாரித்து, அசைவின்றி அந்த விசார நிலையில்

* ஸ:=பரமாத்மா. அஹம்=நானென விளங்கும் ஆன்மா

நின்ருல், 'அஹம் அஹம்' [நான் நான்] எனும் ஸ்புரிப்பு சூட்சுமமாய்த் தோன்றும்."

'தூய உணர்வே நான்' என்று உணர்வாய் உள்ளதே மிகச் சிறந்த தியானம் எனப்படும். மேலும் விளக்குகிருர் :—உடலை மறந்து ஒருவர் 'நான் யார்?' என விசாரித்தால், ஆன்ம சொரூபமாகிய நான் 'தான்' ஆகவே நிலைக்கும், யோக மார்க்கம் என்பது முரட்டுக் காளை மாட்டை அடித்துக் கட்டிப்போடுவது போன்றது; ஞானமார்க்கமோ பசும்புல்லைக் காட்டித் தடவி வசப் படுத்துவதைப் போன்றது. ஆகவே பெரியோர்கள் இதனையே "மிகக் குறுகிய, மிகச் சிறந்த மார்க்கம்" எனக் கூறுகிருர்கள்.

நான் யார்?

சிவப்பிரகாசம் பிள்ளை என்பவர் அக்காலத்து வரி வசூல் இலாகாவில் ஓர் அதிகாரி; வேதாந்தம் பயின்றவர்; மகரிஷியிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர். தாம் கேள்வி கேட்டு வருவித்த விடைகளை இவரும் குறிப்பெடுத்து வைத்துள்ளார். அவற்றை வரிசைப் படுத்தி "நான் யார்?" எனும் தலைப்பில் ஒரு சிறு நூலாக வெளியிட்டார். கட்டுரை வடிவிலும், வினு-விடைத் தொகுப்பாகவும் கிடைக்கப் பெறும் இந்த நூல் மகரிஷியின் தலைமையான உபதேசத்தையும் ஆன்ம விசாரணை முறையையும் தெளிவாய் விளக்குகிறது. அந்நூலினின்றும் சில பகுதிகள் [சற்றே எளிய நடையில்] கீழே வழங்கப்பட்டுள்ளன :—

"தூல தேகம் நானன்று; ஞானேந்திரியங்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும் நானன்று;

பிராணனும் நானன்று, மனமும் நானன்று, அறிவின்மை யாம் உறக்கமும் நானன்று என்று 'நேதி' செய்த பின் தனித்து நிற்கும் தூய உணர்வே நான்; அதன் சொரூபம் ஆனந்தம்.

சகல நினைவுகளையும் தோற்றுவிக்கின்றது மனம். நினைவுகளையெல்லாம் நீக்கிப் பார்க்கின்றபோது தனியாய் மனம் என்றொரு பொருள் இல்லை. ஆகவே நினைவே மனதின் சொரூபம். நினைவுகளைத் தவிர்த்து ஜகம் (உலகம்) என்றோர் அன்னியப் பொருள் இல்லை. விழிப்பிலும் கனவிலுமே நினைவுகள் எழுகின்றன; உலகமும் எழுகிறது. சிலந்திப் பூச்சி எப்படித் தன்னிடமிருந்தே வெளியில் நூலை நூற்று மறுபடியும் தன்னுள் இழுத்துக் கொள்கிறதோ அப்படியே மனமும் தன்னிடமிருந்து ஜகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னிடமே ஒடுக்கிக் கொள்கிறது. மனம் ஆத்ம சொரூபத்தினின்று வெளிப்படும் போது ஜகம் தோன்றும். ஆகவே ஜகம் தோன்றும் போது சொரூபம் தோன்றுது. சொரூபம் தோன்றும் (பிரகாசிக்கும்) போது ஜகம் தோன்றுது. மனதின் சொரூபத்தை விசாரித்துக் கொண்டே போனால் "தானே" மனமாய் முடியும். மனம் எப்போதும் ஒரு ஸ்தூலத்தை அனுசரித்தே நிற்கும்; தனியே நில்லாது. மனமே சூட்சும சரீரம் என்றும், ஜீவன் என்றும் சொல்லப் படுகிறது."

மனத்தில் தோன்றும் நினைவுகள் எல்லாவற்றிற்கும் நான் என்னும் நினைவே முதல் நினைவு. இது எழுந்த பிறகே ஏனைய நினைவுகள் எழுகின்றன. தன்மை தோன்றிய பிறகே முன்னிலை படர்க்கைகள், தோன்று

கின்றன; தன்மையின்றி முன்னிலை படர்க்கைகள் இரா.

நான் யார் என்னும் விசாரணையினாலேயே மனம் அடங்கும். நான் யார் என்னும் நினைவு மற்ற நினைவு களையெல்லாம் அழித்துப் பிணம் சுடும் தடிபோல முடிவில் தானும் அழியும். அதன்பின் ஆன்மாநுபவம் கிட்டும்.

பிற எண்ணங்கள் எழுந்தால் அவற்றைத் தொடர்ந்து பூர்த்தி செய்யாமல், 'அவை யாருக்கு உண்டாயின?' என்று விசாரிக்கவேண்டும். எத்தனை எண்ணங்கள் எழுந்தால் என்ன? ஒவ்வொரு எண்ண மும் கிளம்பும்போதே கவனமாய் 'இது யாருக்கு உண்டா யிற்று?' என்று விசாரித்தால், 'எனக்கே' என்று தோன்றும். பிறகு 'அந்த நான் யார்?' என்று விசாரித் தால் மனம் தன் பிறப்பிடத்திற்குத் திரும்பிவிடும்; எழுந்த எண்ணமும் அடங்கிவிடும். இப்படிப் பழகப் பழக, மனத்திற்குத் தன் பிறப்பிடத்தில் தங்கி நிற்கும் சக்தி அதிகரிக்கின்றது.

சூட்சுமமான மனம், மூளை இந்திரியங்கள் வாயிலாய் வெளிப்படும் போது ஸ்தூலமான நாம ரூபங்கள் தோன்றுகின்றன; மனம் இதயத்தில் தங்கும்போது நாம ரூபங்கள் மறைகின்றன. மனத்தை வெளிவிடாமல் இதயத்தில் வைத்துக் கொண்டிருப்பதற்குத்தான் 'அகமுகம்' அல்லது 'அந்தர்முகம்' என்று பெயர். இதயத்திலிருந்து வெளியிடுவதற்குத்தான் 'பகிர் முகம்' என்று பெயர். இவ்விதமாக மனம் இதயத்திலே தங்கினால் எல்லா நினைவுகளுக்கும் மூலமான 'நான்

என்பது போய் எப்போதுமுள்ள தான் மாத்திரம் விளங்கும். யாது செய்தாலும், 'நான்' என்னும் நினைப்பு கொஞ்சமும் இல்லாமலே செயல்படவேண்டும். இப்படிச் செயல்பட்டால், அனைத்தும் சிவமாய்—கடவுள் வடிவமாய்—தோன்றும். இவ்வாறு சும்மா இருப்பதாவது மனத்தை ஆன்ம சொரூபத்தில் லயிக்கச் செய்வதே. ஆன்ம சொரூபம் ஒன்றே யதார்த்தமாயுள்ளது. சொரூபமே ஜகம்; சொரூபமே நான்; சொரூபமே ஈசன்; எல்லாம் சிவ சொரூபமாம்.

மனம் அடங்குவதற்கு விசாரணையைத் தவிர வேறு உபாயங்கள் இல்லை. பிராணாயாமம், மூர்த்தி தியானம், மந்திர ஜபம், சாத்விக ஆகார நியமங்கள் முதலியவை மனத்தை அடக்க வெறும் சகாயங்களே ஆகும். மூர்த்தி தியானத்தாலும் மந்திர ஜபத்தாலும் மனம் ஏகாக்கிரகத்தை யடைகிறது. சதாசலித்துக் கொண்டிருக்கும் யானையின் துதிக்கையில் ஓர் சங்கிலியைக் கொடுத்தால் அந்த யானை எப்படி வேறொன்றையும் பற்றாமல் அதையே பற்றிச் செல்லுமோ அப்படியே சதாசலித்துக் கொண்டிருக்கும் மனமும் அதனை ஏதோ ஒரு நாமம் அல்லது ரூபத்தில் பழக்கினால் அதையே பற்றிக் கொண்டிருக்கும். இவ்விதம் ஏகாக்கிரத்தன்மையடைந்து அதனால் பலம் பெற்ற மனத்திற்கு ஆன்ம விசாரம் சுலபமாய் சித்திக்கும். இவ்வாறே மிதமாய் அருந்தும் சாத்விக உணவு நியமத்தாலும் மனத்தில் சத்துவ குணம் விருத்தியாகி ஆன்ம விசாரத்திற்கு அனுகூலமாகிறது."

தொன்றுதொட்டு வருகின்ற விஷய வாசனைகளை ஒடுக்கி சொரூப மாத்திரமாய் இருக்க முடியுமா; என்கிற கேள்விக்கு அவரது விடை இதுதான்:

"முடியுமா முடியாதா என்னும் சந்தேக நினைவுக்கு இடம் கொடாமல் சொரூபத்தையே விடாப் பிடியாய்ப் பிடிக்க வேண்டும். ஒருவன் எவ்வளவு பாபியாக இருந்தாலும் 'நான் பாபியாயிருக்கிறேனே! எப்படிக் கடைத்தேறப் போகிறேன்?', என்று ஏங்கி அழுது கொண்டிராமல், தான் பாபி என்னும் எண்ணத்தை அறவேயொழித்து சொருபத் தியானத்தில் ஊக்கமுள்ளவனுக இருந்தால் அவன் நிச்சயம் உருப்படுவான்.

உலகாயத விஷயங்களில் அதிகமாய் மனத்தைச் செலுத்தக்கூடாது. சாத்தியமானவரை அன்னியர் காரியங்களில் பிரவேசிக்கக் கூடாது. பிறர் எவ்வளவு கெட்டவர்களாகத் தோன்றினும் அவர்களை வெறுத்தல் ஆகாது, விருப்பு, வெறுப்பு இரண்டுமே வெறுக்கத் தக்கன. பிறருக்கு ஒருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்ளுகிருன். இந்த உண்மையை அறிந்தால் எவன் தான் கொடாது இருப்பான்? எவ்வளவுக் கெவ்வளவு தாழ்ந்து நடக்கிருேமோ அவ்வளவுக் கவ்வளவு நன்மையுண்டு.

மனத்தின்கண் எதுவரையில் விஷய வாசனைகள் இருக்கின்றனவோ அதுவரையில் 'நான் யார்' என்னும் விசாரணையும் வேண்டும். நினைவுகள் தோன்றத்தோன்ற அப்போதைக்கப்போதே அவைகளையெல்லாம் உற்பத்தி ஸ்தானத்திலேயே விசாரணையால் நசிப்பிக்க வேண்டும். கோட்டைக்குள் எதிரிகள் உள்ளவரை அதிலிருந்து வெளியே வந்து கொண்டேயிருப்பார்கள். வெளியே வர வர அவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்திக் கொண்டே இருந்தால் கோட்டை நம் கைவசப்படும்.

நினைவுகள் தோன்றத்தோன்ற அவற்றை மூலக் களத்திலேயே உடனுக்குடன் அழித்து விடுவதே வைராக்கியம் அல்லது பற்றின்மை ஆகும். முத்துக் குளிப்போர் எப்படித் தம் இடையில் கல்லைக் கட்டிக் கொண்டு மூழ்கிக் கடலடியிற்கிடக்கும் முத்துக்களை எடுக் கிறார்களோ அப்படியே ஒவ்வொருவரும் வைராக்கியத் துடன் தன்னுள் ஆழ்ந்து மூழ்கி ஆன்ம முத்தை அடைதல் வேண்டும்.

மனத்தை அடக்க வேண்டும். இதை அறிந்து கொண்டபின் மேன்மேலும் நூல்களைப் படிப்பதால் பயனில்லை. தன்னுள்ளே தான் இருக்க, ஆன்மாவைத் தன்னுள்ளே தான் தேடவேண்டுமே அல்லாமல் எப்படி நூல்களில் விசாரிப்பது? தன்னைத் தன்னுடைய ஞானக் கண்ணாலே தான் காணவேண்டும். நூல்கள் மூலம் கற்றது அனைத்தையும் ஒரு காலத்தில் மறக்கவேண்டி வரும்.

சுகம் என்பது ஆன்மாவின் சொரூபமே. சுகமும் ஆன்ம-சொரூபமும் வேறன்று. பிரபஞ்சப் பொருள் ஒன்றிலாவது சுகம் என்பது கிடையாது. ஆத்ம சுகம் ஒன்றே உள்ளது. மனம் வெளியில் வரும்போது துக்கத்தை அனுபவிக்கிறது. உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தியாகும் போதெல்லாம் மனம் தனது யதாஸ்தானத்திற்குத் திரும்பி ஆத்ம சுகத்தை அனுபவிக்கிறது. அப்படியே, தூங்கும் போதும், சமாதி, மூர்ச்சை காலங்களிலும், இச்சித்த பொருள் கிடைக்கிற போதும், வெறுத்த பொருளுக்குக்கேடு உண்டாகும் போதும் மனம் அந்தர்முகமாகி ஆத்ம சுகத்தில் திளைக்

கிறது. இவ்வாறு மனம் ஆன்மாவைவிட்டு வெளியே போவதும் உள்ளே திரும்புவதுமாக ஓய்வின்றி அலேகிறது. மரத்தடியில் நிழல் சுகமாயிருக்கிறது. வெளியிலோ சூரிய வெப்பம் கொடுமையாய்க் கொளுத்துகிறது. அறிவிலி மரத்தடி நிழலோரத்திலிருந்து வெளியே போவதும், வெயிலிலிருந்து நிழலுக்குச் செல்வதுமாக இருக்கிறான். ஆனால் விவேகியோ நிழலேவிட்டு நீங்கான். அதேபோல, சத்தியத்தை அறிந்த ஞானியின் மனமும் பிரம்மத்தைவிட்டு நீங்குவதில்லே. உண்மையில் உலகம் என்பது நினைவே. உலகத்தோற்றம் மறையும்போது—அதாவது நினைவு அற்ற நிலேயில்—மனம் ஆனந்தத்தை அனுபவிக்கின்றது. உலகம் தோன்றும் போது மனம் துக்கத்தை அனுபவிக்கின்றது."

உபதேச மஞ்சரி

வேதாந்தத்திலும் சைவ சித்தாந்தத்திலும் நன்கு தேர்ந்த நடேச முதலியார் எனும் பள்ளி ஆசிரியர் சமர்ப்பித்த கேள்விகளுக்கு மகரிஷி அருளிய விடைகளேக் கொண்டதே "உபதேச மஞ்சரி" என்கிற தொகுதி ஆகும். முதலியார் பின்னர் நடனானந்தர் என்ற பெயருடன் மகரிஷியின் பக்தராய் வாழ்ந்து, கவி முருகனாரைப்பற்றி 1953-ல் ஒரு வெண்பாத் தொகுதியையும், 1957-ல் மகரிஷியின் வரலாறு, அறிவுரைகள் பற்றி ரமண தரிசனம் என்ற கட்டுரைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார்.

உபதேசம், அப்பியாசம், அநுபவம், ஆரூடம் ஆகிய நான்கு அத்தியாயங்கள் கொண்ட உபதேச மஞ்சரி, முதிர்ந்த ஆன்மிக நாட்டமுள்ளவர்களுக்கான நூலே

ஆனாலும், சிந்திப்போர் அனைவருக்கும் உதவக்கூடிய திருத்தமும் தெளிவும் கொண்டது என்பது பின்வரும் வினா-விடைகள் மூலம் தெரியவரும் :—

பக்தி அல்லது சித்தாந்த மார்க்கத்தின் முடிவு எது?

மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் ஆண்டவனின் அடிமையாகச் செய்து வரும் சுய நலமற்ற பக்தியின் முடிவில் தன்னுடைய செயல்கள் என்பன எல்லாம் தலைவனுடையவையாகவே முடிகின்றன என்ற உண்மையை உள்ளவாறு உணர்ந்து சுதந்திரம் (மம காரம்) அற்று விளங்கலாம். சைவ சித்தாந்திகள் கூறும் பர பக்தி, இறைபணி நிற்றல் என்பவற்றிற்கும் பொருள் இதுவே.

ஞானம் அல்லது வேதாந்த மார்க்கத்தின் முடிவு எது?

'நான்' என்பது ஈசனையன்றி வேறாக இல்லை என்ற தத்துவத்தை உணர்ந்து அகங்காரம் (கர்த்ருத்வம், செய்பவன் நான் என்ற எண்ணம்) அற்று விளங்குவதே, எனலாம்.

பக்தி, ஞானம் ஆகிய இரு மார்க்கங்களுக்கும் முடிவு ஒன்றே என்பது எவ்வாறு?

வழி எதுவாயினும், அகங்கார மம காரங்களின் அழிவே வீடு ஆகும். அவ்விரண்டு மார்க்கங்களும் ஒன்றையொன்று ஆச்ரயித்து விளங்குகின்றன; ஒன்றின் அழிவே மற்றொன்றின் அழிவுக்கு ஏதுவாகும்; மனோவாக்குகளுக்கு எட்டாத நிலையை எய்துவதற்கு அகங்காரத்தைப் போக்குவிக்கும் ஞான மார்க்கம், மம

காரத்தைப் போக்குவிக்கும் பக்தி மார்க்கம், ஆகிய இரண்டினுள் ஒன்றே போதுமானது.

தற்போத இயல் யாது?

நான் நான் எனும் அகங்கார ஜீவனே தற்போதம் எனப்படும். 'சித்து' ஆகிய ஆன்மாவிற்கு நானெனும் எண்ணமில்லை; ஜடமாகிய தேகத்திற்கும் நானென்னும் உணர்வு இல்லை. சித்தும் ஜடமும் ஆகிய இவ்விரண்டிற்குமிடையில் அவாந்தரமாகத் தோன்றி விளங்குவதான இம் மாயா ஜீவனே சகல அனர்த்தங்களுக்கும் மூலம் ஆனதால், எந்த உபாயத்தாலேனும் இதை நாசமாக்கி விட்டால், உள்ளது உள்ளபடியே விளங்கும். இதுவே மோட்சம் எனப்படுகிறது.

'சும்மா இருக்கை' என்பது முயற்சியுள்ள நிலையா, முயற்சியற்ற நிலையா?

அது முயற்சியற்ற சோம்பல் நிலை அன்று. வெளிமுகத்தில் முயற்சிகள் என்று சொல்லப்படுகிற உலக விவகாரங்கள் அவ்வளவும் மனதின் சிறிய பகுதிகளால் மட்டும், பல இடைவெளிகளுக்கு நடுவில், செய்யப்படுகின்றன. அகமுகத்தில் சும்மா இருக்கை என்னும் ஆன்ம விவகாரமோ முழு மனத்துடனும் இடைவெளியின்றியும் செய்யப்படும் பூரண முயற்சியாகும்.

சாதகன் அனுஷ்டிக்க வேண்டிய நியமங்கள் எவை?

மித ஆகாரம், மித நித்திரை, மித வார்த்தைகள்.

இல்லற ஒழுக்கங்களுக்கிடையே மனச்சாந்தி எங்ஙனம் வாய்க்கும்?

ஞானியின் முயற்சிகள் பிறருடைய பார்வையிலுள்ளனவே அன்றி அவன் பார்வையில் இல்லாமையால் அவன் மாபெரும் வேலைகளைச் செய்து கொண்டிருப்பனாயினும் ஒன்றும் செய்யாதவனாகவே இருக்கிறான். ஆகவே, அப்படிப் பட்டவனுக்குப் புறச்செயல்களால் மனத்துறவுக்கும் சாந்திக்கும் சிறிதும் தடையில்லை. ஏனெனில், எல்லா தருமங்களும் தன்னை நம்பியிருக்கின்றனவேயொழிய தான் ஒரு தருமத்தையும் நம்பவில்லை என்ற தத்துவத்தை அறிந்தவனாதலால் அவன் தன்னை ஆதார்ரமாகக் கொண்டு நடக்கும் வேலைகள் அவ்வளவிற்கும் அமைதியுடன் சாட்சி மாத்திரனாகவே இருந்து கொண்டிருப்பான்.

பிரும்மச்சரியம் என்பதன் பொருள் யாது?

பிரும்ம விசாரமே பிரும்மச்சரியம் எனப்படும்.

தேகம் அழியும் வரை தொடரும் என்ற பிராரப்தத்தை (ஊழ்வினையை) தேகம் உள்ளபோதே கடத்தல் கூடுமா?

கூடும். அகங்காரமே கர்த்தா. தேகத்திற்கும் ஆன்மாவுக்கும் இடையே முளைத்த அவ் அகங்காரம் அடங்கி உரு அழிந்தபின் அதைச் சார்ந்திருந்த ஊழ்வினை மாத்திரம் எவ்வாறு உயிர்த்திருக்கும்? ஆகவே 'நான்' அற்ற இடத்தில் பிராரப்தம் கிடையாது.

சித்திக்கும் முக்திக்கும் சம்பந்தம் உண்டா?

விசார மார்க்கமே முக்தி தர வல்லது. சித்திகள் அவ்வளவும் மாயா சக்தியின் மொய்த் தோற்றங்களே. நித்திய சித்தியாகிய ஆன்ம சித்தியே சித்தி; தோன்றி

மறையக்கூடிய மாயா காரியங்கள் அல்ல. இத்தகைய செயல்கள் புகழ், போகம் ஆகியவற்றின் இச்சையால் நிகழ்த்தப்படுபவை. சிலருக்குக் கோரிக்கையின்றியே பழவினையால் ஏற்படுவதுமுண்டு. பிரும்மத்தோடு தனக்குள்ள ஐக்கிய நிலையே சகல சித்திகளையும் அடைவதாகும். ஐக்கிய முக்தி என்னும் மிகச் சிறந்த சாயுஜ்ய பதம் இதுவே.

பந்தமும் இல்லை, முக்தியும் இல்லை என்பதை அனுபவ வாயிலாய் உணர்ந்து முடிவு காணக் கூடுமா?

பந்தம், முக்தி ஆவன கேவலம் நிலைமாறுகையேயாம். அவை தமக்கென ஓர் உண்மை உருவம் உடையன ஆகா. 'பந்த-முக்திகள் யாருக்கு?' என விசாரிக்குங்கால், 'எனக்கு' எனத்தெரியவரும். உடனே 'நானார்?' என விசாரித்தால் 'நான்' என்ற ஒரு பொருளே இல்லை எனக் காண்போம். எஞ்சியதுதான் 'தானாய்' உள்ளது என உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாய் விளங்கும். புற நோக்கில் வெறும் பேச்சில் வீண் காலம் போக்குவதை ஓர் கணமேனும் விட்டு, உள்நோக்கிய ஆன்ம விசாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் யாவர்க்குமே இந்த உண்மை அனுபவரூபமாகத் தெள்ளெனத் தோன்றுதல் சகஜமே ஆகையால், அநுபூதிமான்கள் எல்லோருக்குமே 'தான்' ஆகிய ஆன்ம சொரூபத்தில் பந்தம், முக்தி ஆகிய ஏதும் இல்லை என்பது நிச்சயம்.

தனது சுபாவ நிலை என்ன என்பதை எல்லோராலும் அறிய முடியுமா?

தத்தம் சுபாவ நிலை இன்னது தான் என்பதைச் சந்தேகமின்றி எல்லோராலும் தெரிந்து கொள்ள முடியும். சராசரப் பிரபஞ்சம் யாவும் மறைந்துள்ள நித்திரையிலும், மூர்ச்சை நிலையிலும் 'நாம்' மறைவதில்லை. இது யாவர்க்கும் பொதுவான அனுபவம். ஆகவே எல்லோருக்கும் பொதுவான தூய உள்ளுணர்வே நமது சுபாவ நிலையாகும். ஞான நிலையிலும் சரி, அஞ்ஞான நிலையிலும் சரி, புதிது புதிதாய்க் கூறப்படும் புடைப் பெயர்ச்சிகள் (நிலை மாற்றங்கள்) அவ்வளவும் நமது சுபாவ நிலைக்கு மாறானவையே.

அத்தியாயம் 9

நூற்றிரட்டு: துதிப் பாடல்கள்

விருபாட்ச குகை வாசத்தின் இறுதியில் (சுமார் 1914-ல்) இயற்றப் பெற்ற அருணாசலத் துதியாம் ஐந்து பாடல்களும் மெய்யுணர்வை ஆராய்வோர்க்கு மிகவும் கவர்ச்சியாய் அமைந்துள்ளன. ஏனெனில், அவற்றில் சுய சரிதம், இதிகாசம், ஆர்வமிக்க பக்தி, ஆழ்ந்த தத்துவம் இவை யாவும் மாறி மாறிக் கலந்திழைந்தோடுகின்றன. அவை தமிழ்ப் புலவர்களை வேறு வகையிலும் ஈர்க்க வல்லவை. காரணம், ஆக்கியோரின் கவிதா சக்தியும், மொழியாட்சியும், யாப்புத் திறனுமேயாம்.

அட்சர மண மாலை என்னும் முதற் பாடல் முழுவதையும் ஒரு முறை அடியார்களுடன் மகரிஷி கிரிப் பிரதட்சிணம் செய்து வந்த சில மணி நேரத்துக்குள் இசைத்துக் கோத்துவிட்டார். தினந்தோறும் சாதுக்கள் ஊரில் பிச்சை தேடிச் செல்லும்போது பாடுவதற்கு ஏற்றதாய் ஒரு புத்தம் புதுப் பாடல் புனையுமாறு அன்பர்கள் வேண்டியதற்கு இணங்கி மகரிஷி இயற்றிய பாடல் இது. அதன் 108 சிறு செய்யுள்களும் மனத்தை உருக்கிப் பரவசமூட்டுபவை; எனவே பிரபலமும் பெற்றுள்ளன. விழிப்புற்ற ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே நிகழும் முடிவில்லாத உரையாடலைத் தெளி

வாய், அழகாய், அழுத்தமாய், இதமாய் அவை வெளியிடுகின்றன. மையல் கொண்ட மங்கை தலைவனைக் கூட ஏங்கும் ஏக்கத்தைக் கூறும் பல செய்யுட்கள் காதற் சுவை நிரம்பி உள்ளன. "மண மாலை" என்ற தலைப்பு அதனாலே தான். இன்பமும் வேகமும் கொண்ட கற்பனை வெள்ளம் தங்கு தடையின்றிப் பெருகி விரிகிறது. பரம்பொருளாம் அம் மலையைப் பற்பலவாய், ஆயினும் பொருத்தமாய், 'தாயே, தந்தையே, குருவே, சூரியனே, சந்திரனே, பெருங்கடலே, ரமணனே!' என்றெல்லாம் அழைக்கிறார்.

இவ்வாறு மாறி மாறித் தோன்றும் உருவகங்கள் மூலம் புலப்படும் உண்மை இதுதான்:—அவரது மன வெழுச்சி தம்மைச் சார்ந்ததாய், தமது சரிதையைக் கூறுவதாய் அல்லாமல், ஒவ்வொரு ஜீவனும் பரம்பொருளுடன் கலந்திட ஏங்கும் துடிப்பை வடிக்கும், பிறர்பொருட்டு எழுந்த எழுச்சியே ஆகும். ஏனைய பாரதச் சான்றோர்களைப்போலவே மகரிஷியும் சொல்லுக்கெட்டா ஒருமை உணர்வாகிய ஞானத்திற்கும் அவ்வுணர்வுக்கு வழி வகுத்து அதனை நினைவில் நிறுத்தும் சாதனமாகிய பக்திக்கும் இடையே முரண்பாடு காணவில்லை.

இந்த நூலுக்கு முகவைக் கண்ண முருகனார் வரைந்துள்ள ஆழ்ந்த விளக்கவுரை அதன் இலக்கிய நயத்தையும் அதனுள் புதைந்து கிடக்கும் தத்துவங்களையும் அனைவரும் அறிந்து கொள்ள உதவுகிறது: எங்கும் நிறைந்து அனைத்தையும் கடந்து நிற்கும் தூய உணர்வின் பெயரே சிவம்; அதன் உருவமே அண்ணாமலை. அம் மலையும் சிவனும் வேறன்று,

ஒன்றே என்ற உண்மையை "அருணாசல சிவ" என்று தொடர் பல்லவியாய் மீண்டும் மீண்டும் வந்து வலியுறுத்துகிறது.

மாலையிலிருந்து இதோ சில மலர்கள் :

2. அழகு சுந் தரம் போல் அகமும் நீயுமுற் (று)
அபின்னமா யிருப்போம் அருணாசலா.

9. எனையழித்(து)இப்போ(து) எனைக்கல வாவிடில்
இதுவோ ஆண்மை யருணாசலா.

13. ஓங்கா ரப்பொருள் ஒப்புயர்(வு) இல்லோய்
உனையார் அறிவார் அருணாசலா.

27. சகலமும் விழுங்கும் கதிரொளி இன! மன
சலசம் அலர்த்தியி(டு) அருணாசலா.

[இனன்—சூரியன். மனசலசம்—மனத்தாமரை]

28. சாப்பாடு உன்னைச் சார்ந்(து) உணவாய் யான்
சாந்தமாய்ப் போவன் அருணாசலா.

30. சீரை யழித்துநிர் வாணமாச் செய்(து) அருட்
சீரை யளித்தருள் அருணாசலா.

39. ஞமலியிற் கேடா நான் என் உறுதியால்
நாடி நின் உறுவேன் அருணாசலா.
(ஞமலி—நாய்; நின் உறுவேன்—உன்னை அடைவேன்)

55. நின்னெரி எரித்(து) எனை நீறாக் கிடு(ம்) முன்
நின்னருள் மழைபொழி அருணாசலா.

61. நைந்தழி கனியால் நலனிலை பதத்தில்
நாடியுட் கொள் நலம் அருணாசலா.
[நைந்தழி—அழகிய]

83. மேன்மேல் தாழ்ந்திடும் மெல்லியர்ச் சேர்ந்து நீ
மேன்மையுற் றனை என் அருணாசலா.

[மெல்லியர்ச் சேர்ந்து—எளிய மக்களோடு சேர்ந்து]

91. ராப்பகல் இல்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடுவோம் வா அருணாசலா.

101. அம்புவில் ஆலிபோல் அன்புரு உனில் எனை
அன்பாக் கரைத்தருள் அருணாசலா.

[அம்பு-நீர் ; ஆலி-பனிக்கட்டி]

108. மாலை யளித்(து) அரு ணாசல ரமண என்
மாலை யணிந்தருள் அருணாசலா.

நவமணிமாலையில் ஒவ்வொரு செய்யுளும் தனித் தனி வகையில் யாக்கப் பெற்று, தொகுப்பு முழுதும் ஆக்கியோனின் ஆற்றலைக் காட்டுகிறது. புராணக் கதையும் தத்துவமும் நெய்யப்பட்டுள்ளதை விளக்க பின் வரும் "மணிகள்" இரண்டுமே போதும்.

1. அசலனே ஆயினும் அச்சவை தன்னில்
அசலையாம் அம்மையெதிர் ஆடும் — அசல
உருவில் அச் சத்தி ஒடுங்கிட ஓங்கும்
அருணா சலம் என்(று) அறி.

[சலனமற்றவனாயினும் (தில்லைச்) சபையில் அசைவிலா அம்மை எதிரில் நடனமாடியவர், சக்தியைத் தன்னுள் ஒடுக்கி அசைவற்ற உருவில் அருணாசலக் குன்றாய் ஓங்கியுள்ளார் என்று அறிக]

2. சத்திய சிற்சுகம் அன்றிப் பர உயிர் சார்
அயிக்கம்
அர்த்த அத் 'தத்வ மசி' அரு ணப் பொருளாம்
அசலத்(து)
அர்த்தங் கனமது ஆகும் செவ் ஆடக ஆரொளி
யாம்
முத்தி நினைக்க அருள் அரு ணாசலம் முன்
னிடவே.

[அருண என்ற மூன்று எழுத்தின் பொருள் முறையே சத்-சித்-ஆனந்தம் மட்டுமன்றி, அனைத்து உயிர்களும் ஒன்றே என்கிற தத்துவமும், 'அது நீயே' என்பதும் ஆம். பொன்னொளி வீசும் அருணாசலத்தை நினை, நினைக்க முக்தி நல்கும் அது.]

பதிகம், அஷ்டகம் இவ்விரண்டு பாடல்களையும் மகரிஷி அருள் மடையாகப் பொழிந்தார்; அதாவது', பிறர் தூண்டுதல் இன்றித் தாமே எழுதி வைத்தார், என்பார்கள். நடையிலும் பொருளிலும் அவை முற்றும் வேறு பட்டிருப்பதால் இரண்டையும் ஒருவரே இயற்றினர், மேலும் பதிகத்தை முடித்தகையோடு மறு நாளே அஷ்டகத்தையும் எழுதினர் என்று நம்புவது கடினம். ஆனல் இதுவே உண்மையாய் நடந்தது. பக்திப் பாடலாய் பக்தர்களுக்காகவே இயற்றப்பட்ட பதிகம் இருமை உணர்விலே திளைத்து, தளர்வும் ஆர்வமும் மாறி மாறி இசையில் நிழலிட, முழுவதும் ஏக்கப் புலம்பலாய் அமைந்துள்ளது. பாடுபவர் வலையில் அகப்பட்ட மான்போலப் பதைக்கிருர்; அசைவிலா ஊமைச் சிலையாய்ச் சமைகிருர்; தாமரைத் தண்டைப்

பற்றி நிற்கும் மண்டுகம் ஆகிருர்; தேனை உறிஞ்ச அஞ்சும் வண்டாய் ஒளியில் மலர்ந்த மலரை வட்ட மிடுகிருர்.

அஷ்டகமோவெனில் மெய்ஞ்ஞானி யொருவர் தமது சுய அனுபவத்தைத் தெளிவாய்த் திருத்தமாய் உருவகங்கள் மூலம் உரிமையுடன் உரைத்து உறுதிப்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளது. உருக்கமே நிறைந்த பதிகம் முழுவதிலும் ஜீவனின் விம்மலும் பெரு மூச்சும் பெருகி வழிகிறது. அஷ்டகத்திலோ ஜீவபோதம் கடந்த ஞானி திட்டவட்டமாய் மெய்ப் பொருளை விளக்கிக் கூறுகிருர் என்பதைப் பின் வரும் செய்யுள்கள் உணர்த்தும் :

இருந்தொளிர் உனை விடுத்(து) அடுத்திடல் தெய்வம்
இருட்டினை விளக்கெடுத்(து) அடுத்திடலே காண்
இருந்தொளிர் உனையறி வுறுத்திடற்(கு) என்றே
இருந்தனை மதந்தொறும் விதவித உருவாய்
இருந்தொளிர் உனையறிகிலரெனில் அன்னோர்
இரவியின் அறிவறு குருடரே ஆவர்
இருந்தொளிர் இரண்டற எனது உளத்(து) ஒன்ருய்
இணை யறும் அருண மாமலை யெனும் மணியே ...

...நிழற் படி தகட் டில் விண்
மணியொளி படநிழல் பதியுமோ உன்னின்
மறுபொருள் அருண நல் ஒளிமலை உண்டோ...

கடலெழும் எழிலியால் பொழிதரும் நீர்தான்
கடல் நிலை யடைவரை தடைசெயின் நில்லாது:
உடல் உயிர் உளில் எழும் உளையுறும்
வரையில்
உறுபல வழிகளில் உழலினும் நில்லாது

இடைவெளி அலையினும் நிலையிலை புள்ளுக்(கு)
இடம் நிலம் அலது இலை, வரும் வழி செல்லக்
கடன் உயிர் வருவழி சென்றிட இன்பக்
கடலுனை மருவிடும் அருணபூ தரனே:

துதி பஞ்சகத்துக்கு மகுடம் வைத்தாற்போன்ற ஐந்தாம் பாடலான அருணாசலபஞ்சரத்னம், முதன்முதலில் வடமொழியில் 1917-ஆம் ஆண்டு இயற்றப்பெற்றது. பின்னர் ஓர் தமிழ் அன்பரின் வேண்டுகோளுக்கிணங்க 1922-இல் அப்பாடலை மகரிஷியே தமிழ் வெண்பாக்களாக வழங்கினர். 1917-இல் ஒரு நாள் காலை காவ்ய கண்ட கணபதி சாஸ்திரி மகரிஷியை அணுகி சமஸ்கிருதத்தில் செய்யுளொன்றை—அதுவும் கடினமான ஆர்யா சந்தத்தில்—இயற்றுமாறு கேட்டுக்கொண்டார். மேலும் அச் சந்தத்தைப் பற்றிய விளக்கம் கூறவும் செய்தார். சிறிது நேரத்துக்குப்பின், கருத்துக் கருவூலமாய் அமைந்த ஐந்து திருத்தமான வடமொழிப்பாக்களை மகரிஷி அருளி, சாஸ்திரியாரைத்திகைப்பில் ஆழ்த்தினர். அவற்றைப்பிறகு பின்வருமாறு மகரிஷியே தமிழாக்கித் தந்துள்ளார்:

அருள் நிறைவான அமுதக் கடலே
விரிகதிரால் யாவும் விழுங்கும்—அருண
கிரிபரமான் மாவே கிளர் உளப்பூ நன்ருய்
விரி பரிதி யாக விளங்கு.

சித்திரமாம் இஃதெல்லாம் செம்மலையே
நின்பாலே
உத்திதமாய் நின்றே ஒடுங்கிடுமால்—
நித்தியமும்
நானென்(று) இதய(ம்) நடித்திடுவை யால்
உன்பேர்
தான் இதயம் என்றிடுவர் தாம்.

அகமுகம் ஆர் அந்த அமலமதி தன்னால்
'அகம் இதுதான் எங்கெழும்' என்(று)
ஆய்ந்தே—அகவுருவை
நன்கறிந்து முந் நீர் நதி போலும் ஓயுமே
உன் கண் அரு ணாசலனே யோர்.

வெளி விடயம் விட்டு விளங்கும் அருணேசா
வளியடக்க நிற்கும் மனத்தால்—உளமதனில்
உன்னைத் தியானித்து யோகி யொளி காணும்
உன்னில் உயர் உறும் ஈ(து) உன்.

உன்னிடத்தில் ஒப்புவித்த உள்ளத்தால்
எப்பொழுதும்
உன்னைக் கண்(டு) எல்லாமும் உன்னுருவாய்
—அன்னியமில்
அன்பு செயும் அன்னோன் அருணாசலா
வெல்கும்
இன்புருவாம் உன்னில் ஆழ்ந்தே.

முதல் செய்யுளில் உணர்வும் உள்ளதும் ஒன்றே என்பதும், அனைத்தையும் தன்னுள்ளடக்கி ஒன்றோ டொன்று உறவுபடுத்தும் அறிவே அவன் சக்தி

என்பதும் அருள் நிறைவான அமுதக் கடல், அருணகிரி, கதிரவன், உள்ளத் தாமரை ஆகிய உபமானங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் செய்யுள் அண்ணு மலையை ஆன்மாவின் புறத்தோற்ற வடிவமாக்கி, அதன் மீது மாயை எழுப்பும் ஜகத் சித்திரத்தைக் காட்டி, மீண்டும் மலையை 'நான்' என்று நடிக்கும் ஆன்மானந்த மாய் உள்ளுக்கிழுக்கிறது. (இதய வெளியில் 'நான்' ஆக நடனமிடும் சிவனே அசைவற்ற அருணையாய் ஓங்குகிருர்.) மூன்ரும் செய்யுள், சாதகனும் அவன்தேடும் சித்தியும் மறைந்து ஆன்மா ஒன்றே தனித்து நிற்கும் சாதனையாம் ஆன்ம விசாரணை முறையை விவரிக்கிறது. கடைசி இரண்டு செய்யுள்கள், யோகம், பக்தி, கர்மம், ஆகிய மூன்றில் ஒன்றையேனும் பின்பற்றுவோர் வெற்றியே காண்பர் என்று உறுதி கூறுகின்றன. ஏனெனில், 'யான்' எனும் முனைப்புக் கரைந்த பின் ஆன்மா அதன் உண்மையுருவான இன்பக் கடலில் நீந்தி விளையாடுகிறது.

கற்பனைக் கதையைக் கைவிடாமல், அதன் உட் பொருளை விளக்கி, அதற்குப் புத்துயிரூட்டும் சிறந்த முறையைப் பின்வரும் இரு செய்யுள்களிலே காணலாம். முதற் செய்யுள் முருகனுரால் இயற்றப்பெற்றது; இரண்டாவது செய்யுள் மகரிஷியே அருளியது

அருணுசல தத்துவம்

புத்தியகங் காரம் புலம் பெய்தல் ஓங்கும்
மத்தியித யம்தான் மறையவனும் மாலும்
நத்தவறி யாது நலங்குலைய அன்னுர்
மத்தியொளிர் அண்ணு மலையினது மெய்யே.

தீப தரிசனம்

இத்தனுவே தானும் எனும் மதியை நீந்(து) அப்
புத்தியித யத்தே பொருந்தி அக நோக்கால்
அத்துவித மாமெய் யகச் சுடர் காண் கை பூ
மத்தியெனும் அண்ணு மலைச்சுடர் காண்
மெய்யே.

கடந்து நிற்கும் பரம்பொருளாம் உண்மைக் கடவுளின் தூலமான பிழம்புருவமே அண்ணுமலையாம். உடலற்ற மெய்யுணர்வின் பேரின்பமே மலை மீது கார்த்திகை இரவன்று தோன்றும் ஒளியாம்.

இந்தப் பாடல்களின் மூலம் நாம் காண்பது என்ன வென்ருல் கற்பனைக் கதையின் உட்பொருளை உணர்ந்து பிரிக்கையில் ஓர் அனுபவத்தை நினைவுபடுத்தி மீண்டும் மனக்கண்முன் நிகழ்த்திக் காட்டும் சக்தி குறைவதில்லை, உண்மையில் வளர்கிறது என்பதையே. பெயர், உருவம், பொருள், செயல் இவை ஒவ்வொன்றும் தனியே பிரிக்கக்கூடியதாயினும் ஒன்ருேடொன்று நெருங்கிப் பிணைவுபட்டவை. ஒரு மறை குறியீட்டை கணிதத்தில் எப்படியோ அப்படியே கவிதையிலும் பயன் படுத்தக் கூடும். மறை குறியைத் திறந்து விண்டு காட்டுவதால் கற்பிதம் அடியோடு அழிந்து விடாது.

பகுத்தறிவு, பழ நினைவு இரண்டையும் கையாளும் கவிஞனுக்கு விதை நெல்லை உமியோடு காக்கவும் தெரியும், அன்ருட உணவுக்காகக் குத்தி அரிசி எடுக்கவும் தெரியும். ஆற்றங்கரை மலர்ச் செடியில் மஞ்சள் மலர் மட்டுமன்றி கவிதை மனம் இனம் தெரியா பிறபொருள்

கள் எத்தனையோ காண்கிறது. காட்சியும் உணர்வும் ஒன்ருயும் தோன்றலாம், பிரிந்தும் தோன்றலாம். உண்மையும் கற்பிதமும் ஒன்றையொன்று உறுதிப் படுத்தக்கூடும். நில-இயல், பழங்கதை, சடங்குகள், இவற்றின் மறைபொருள் ஆகியவை தொன்றுதொட்டு மக்கள் மனத்திலும் சமூக வாழ்விலும் ஒன்றேடொன்று உறவாடியதன் இடைவினையை உதறியெறிந்தோமாஞல் சங்கேத மயமான முழுமை வாழ்வை முடித்துக்கட்டி, மனம் பேதித்த பேய்த்தனத்தை அரியாசனத்தில் அமர்த்துவதற்கு ஒப்பாகும்.

அத்தியாயம் 10

நூற்றிரட்டு: உபதேசப் பாக்கள்

உபதேச சாரம்

முருகனார் (1890—1973) ஓர் தமிழ்ப் புலவர்; கவிஞர்; காந்திஜியின் சுதந்திர இயக்கத்திலும் சமூகச் சீர் திருத்தத்திலும் ஈடுபாடு கொண்டு முதன் முதலில் இவர் பாடிய பல தேசியப் பாடல்கள் "சுதந்திர கீதம்" என்ற தலைப்பில் புத்தகமாய் வெளி வந்தன. ஆனால் 1923-ஆம் ஆண்டு மகரிஷியைக் காணவந்தவர், அன்னார் அருள் வலையிலே சிக்கியதும், முழுதும் புது மனிதரானார். அவர் வாழ்க்கையும் வாக்கும் முற்றிலும் மாறின. மகரிஷியின் மெய்யடியராகி அவரது நிழலாய் அவருடன் இருந்து, அவரது அருள் விலாசத்தைப் புகழ்ந்தும், உபதேசங்களை விளக்கியும் பாடி வந்தார். மகரிஷியின் !உண்மை உபதேசங்களை நன்கறிந்தார்: பல்வேறு துறைகளில், பல்வேறு பாவங்களுடன், பல் வேறு பண்களில் அமைந்த எண்ணற்ற பாடல்களை இயற்றியுள்ளார்.

மகரிஷியை சிவன், முருகன், தாய், தந்தை, அரசன், ஆண்டி, நாயகன், ஏமாற்றுபவன் என்றெல்லாம் வைத்து முருகனார் பாடிய செந்தமிழ்ப் பாக்களின் தொகுப்பே "ரமண சந்நிதி முறை" என வழங்கப்

பெறுகிறது. தவிர, "குருவாசக் கோவை" என்கிற தொகுப்பில் 1280 செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. ரமணர் அருளிய வாசகம் ஒவ்வொன்றையும் ரத்தின மாய்க்கருதிப் பாதுகாத்து, அருமையாய்ச் செதுக்கிய பொற் பேழைகளிலே பதித்து வைத்தாற் போன்ற அச் செய்யுட்கோவையே இந் நூலாம். மேலும், 'ரமண—அநுபூதி' பற்றிப் புனைந்துள்ள நூற்றுக்கணக்கான பாடல்கள் மூலம் மனங் கடந்து நிற்கும் உணர்வுப் பிரபஞ்சத்தில் விளையாடி அவர் கண்ட வெற்றிகளை விவரித்துள்ளார். இவ்வாறு அவர் தாமாகப் பொழிந் துள்ள ஏராளமான அரிய பாக்கள் ஒரு புறமிருக்க, மற்ருேர் பெருஞ் சாதனைக்காகவும் நாம் அவரைப்போற்றி அவருக்கு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டுள்ளோம். திட்பமும் நுட்பமுமான ஞானப் பாடல்களைத் தூண்டி வற்புறுத்தி மகரிஷியின் வாயிலாய் வரவழைத்ததே அச் சாதனையாம்.

உபதேச நூன்மாலையில் முதலிடம் பெற்றுள்ள "உபதேச உந்தியார்" அத்வைத வேதாந்தத்தின் சார மாயும், மகரிஷி கண்ட நேர்வழியின் தெளிவான விளக்க மாகவும் அமைந்துள்ளது. தீர்மானத்துடன் திட்ட வட்டமாய் மகரிஷியால் தொடர்ந்து ஒரே மூச்சில் எழுதி முடிக்கப் பெற்ற பாடல் இது ஒன்றே ஆகும்.

முன்ஞெரு காலத்தில் ரிஷிகள் பலர் சேர்ந்து தவம் புரிந்து, அரிய சித்திகள் பெற்று, அவ் வழியிலேயே முக்தி யும் பெற்று விடலாம் என்று முயன்ற கதையை முருகனுர் "உந்தியார்" செய்யுட்களாகப் பாடிவந்தார். அக் கதையில், பரமசிவன் பிக்ஷாண்டியாகவும், மகா

விஷ்ணு ஓர் மோகினியாகவும் அவர்கள் முன் தோன்றினர். அவள் அழகில் மதி மயங்கிய ரிஷிகள் யாகாதி சடங்குகளை மறந்து தடுமாறினர். ரிஷிபத்தினிகளோ அரனைக் கண்ணுற்றுக் கருத்திழந்து கடமைகளைக் கைவிட்டனர். கோபமுற்ற ரிஷிகள் மந்திர பலத்தால் ஓர் யானையையும் புலியையும் தோற்றுவித்து ஆண்டி மீது ஏவினர். சிவபிரானோ அம் மாய மிருகங்களைக் கொன்று தோல்களை உடையாக அணிந்து கொண்டார். தங்களைக் காட்டிலும் மேலான சக்தி வாய்ந்த ஒருவர் இருக்கிறார் என்பதை உணர்ந்த ரிஷிகள் மகேசனிடம் மன்னிப்புக் கோரி தங்களுக்கு நல்லுபதேசம் அருளும்படி மன்றாடினர்

கதையை இதுவரை கொண்டு வந்த கவி முருகனார், சிவபெருமான் முனிவர்களுக்கு அருளிய ஞானோபதேசம் என்ற உச்ச கட்டத்தில் நிறுத்திவிட்டு, மகரிஷியை அவர் வாய்மொழியாகவே அதனைக் கூறுமாறு வேண்டி நின்றார். இவ்வாறு எழுந்ததே "உபதேச உந்தியார்". விளையாட்டில் வரும் "உந்தீ பற" என்ற தொடருக்கு பற்பல பொருள்கள் கற்பிக்கலாம். தாய் தொப்புள்மீது குழந்தையை அமர்த்தி உந்தி உந்தி விளையாட்டுக் காட்டும்போது அவள் எண்ணுவாள் :—

ஆடு, குழந்தாய்,
விளையாடு,
வளர்ந்து பெரிய ஆளாகு;
பறவையாகிப் பறந்திடு,
முயன்று முயன்று பறந்திடு,
வளர்ந்து பறந்து இன்புறு.

கட்டுரை வரையவோ சொற்பொழிவாற்றவோ இணங்காத மகரிஷிக்கு இந்த நாடகம், ஞானம் வழங்க ஒரு தங்கமான வாய்ப்பைத் தந்தது. சிவன், சக்தி; ஆவி, உடல்; உணர்வு, செயல்; இவற்றின் ஒருமையாம் பேரின்பத்தைப் பெறும் வழியை விளக்கிச் செயல்முறை காட்டித் தெளிவாய், சுருக்கமாய், தாமே சிவனாய் தமிழிலே உபதேசித்துக் கதையை முடித்தார் அருணை மாமுனிவர்.

பாடலின் முதற் பகுதி கருப்பைபோல் மரபுப் பொருளாயும், பிற்பகுதி அதனின்று முழுமையாய் உயிருடன் தோன்றும் இயல்பான புத்தம் புதிய ஞான மாயும் அமைந்துள்ளன. கர்மம், பக்தி, யோகம் ஆகிய பாதைகள் ஞானத்திற்கு இட்டுச் செல்லும் தொடக்கப் படிகளும் உபகரணங்களுமே ஆகும். இவை அனைத் திலும் ஞானம் அடங்கியுள்ளது மட்டுமின்றி அதற்கென ஒரு தனிச் சிறப்பும் கொண்டு விளங்குகிறது.

மேற்சொன்ன கதையிலே திருமால் மோகினியுருத் தாங்கித் தம் வசீகரத்தோற்றம் ஒன்றினாலேயே ரிஷிகளின் அகங்காரத்தை ஒழிக்கிறார். ஆனால் ஆதி குருவும், வாலறிவின் மெய்யுருவும், யாகங்களின் அதி பதியும், வீடளிக்கும் வள்ளலுமான சிவபெருமான் உணர்வொன்றே உள்ளது என்ற உண்மையை உபதேசித்து உணர்த்துகிறார். இந்த வேறுபாட்டிலும் ஒரு பொருத்தம் இருக்கிறது. ஆனால் மூலக்கதை யினின்றும் இச் சிறு நூலைப் பிரித்துக் கருதுங்கால் அது மகரிஷியின் தனிப் பெரும் போதனையாய், தாமே தமது அனுபவப் பிரமாணமாய்க் கடைந்தெடுத்த அருள் மொழியாய் விளங்குகிறது. புராணப் பின்னணியைத்

தவிர்த்து இப்பாடலைத் தனியே பயின்று பொருள் உணர்ந்து செயல் படுத்துவதே தற்கால மாணவர்களுக்குத் தகுந்த முறையாகும் என்றுகூடக் கூறலாம்.

ஏனெனில், புராணத்தைப் பொய்யெனப் புறக்கணித்து, மாலையும் அரனையும் மறுப்போரும், விஞ்ஞான ரீதியாய் நிரூபிக்கப்பட்ட உண்மையை ஞானமாய் ஏற்கத்தானே வேண்டும்? அசைக்க முடியாத உறுதியும், ஐயமின்மையும், தேற்றத் தெளிவும், நேர்மையும், துள்ளித் துடிக்கும் வேகமும், இவையனைத்திற்கும் மேலாக, எளிதில் எவரும், செயலாற்றக் கூடியதுமான இந்த அறிவுரை ஒப்பற்ற, சிறப்பு மிக்க சிற்றிலக்கியச் சிந்தாமணியாகவே திகழ்கிறது. விஷயம் தெரிந்த விமரிசகர்கள் இதனை இக்காலத்திய உபநிடதம் என்று போற்றியுள்ளனர். தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம் ஆகிய நான்கு மொழிகளிலும் தனித்தனியே மகரிஷியினாலேயே ஆக்கப்பட்டுள்ள இப்பாடலை ரமணாசிரமத்திலும் மற்ற இடங்களிலும் வேதபாடத்தைத் தொடர்ந்து பாராயணம் செய்து வருகிறார்கள்.

காவ்ய கண்ட கணபதி சாஸ்திரி, திரு. பி. வி. நரசிம்ம சுவாமி, முன்னாள் முதல் நீதிபதி திரு. அனந்த நாராயணன் போன்றோர்களால் சரளமாகவும் பல கோணங்களிலும் உரையெழுதப்பட்டுள்ள இம்முப்பது பாட்களும் சுருதிக் கொப்பான மதிப்பை ஏற்கனவே பெற்றுள்ளன அதே சமயம் மற்றொன்றும் கவனத்திற் குரியது. முன்பெல்லாம் நீண்டகாலம் ஆழ்ந்து படித்தும் ஒழுக்கம் பயின்றும் பக்குவம் பெற்ற ஒரு சிலர் கற்கவே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்த உன்னத

மான ஞானபோதனைகள், இப்போது தங்கு தடையின்றி அனைவரும் படித்துப் பயிலும் வகையில் வெளியிடப்பட்டு வழக்கிலும் வந்துள்ளன. வழிவழி வந்த பாகுபாடுகள் முடிந்து, நேர்முகமான ஆன்மவிசாரப் பயிற்சி தொடங்கும் போது "மார்க்கம் நேர் ஆர்க்கும் இது" என்ற 17-வது பாடலின் அடி, பச்சை விளக்குப்போல் மேற் செல்ல அனுமதி அளிக்கிறது.

சுயநலம் கருதி நாம் செய்யும் வினை (செயல்) தொடர்ந்து இத்தகைய செயல்களைப் புரியும் இச்சையை நம் முன் தூவி, நம்மை வினைக்கடலினுள் வீழ்த்திவிடும். ஆனால் இறைவனுக்கு அர்ப்பணமாய், சுயநலம் கருதாது பிறர்பொருட்டுப் புரியும் (நிஷ்காம்ய) கர்மம் நமது கருத்தைத் திருத்தி, மனத்தூய்மை உண்டாக்கி, கதி வழி காண்பிக்கும். உருவ வழிபாடு, ஜபம், தியானம் முறையே உயர்ந்தவை. 'எண்ணுரு யாவும் இறையுருவாம் என எண்ணி வழிபடல் ஈசன் நற்பூசனை'. எல்லா உயிர்களுக்கும் செய்யும் தொண்டே உண்மையான, நிறைவான பூஜை என்கிறார் காவ்ய கண்ட கணபதி சாஸ்திரி. முருகனாரும் இங்ஙனமே பாடுகிறார் :—

எண்ணுவன வாம் எட்டு எழில் வடிவும் எந்தையாம்
அண்ணல் உரு என்னும் அபேதமதி— நண்ணினராய்
ஆங்கவற்றுக் கேற்றவாறு ஆற்று(ம்) வழி பாடனைத்தும்
ஓங்குசிவ பூசை யுணர்.

இவ்விதமாய் இயற்கையை வணங்கி உயிர்களுக்கு அன்புடன் பணிபுரிகையில் தியானமும் வழிபாடும் ஒன்ருகி உணர்வும் செயலும் ஒருங்கே இயங்க, வேற்றுமை யுணர்வு மறைய, மனித வாழ்க்கையே தெய் விகப் புனித வாழ்வாகிவிடுகிறது. நாம் வழிபடும் தெய்வம் செயற்கையன்றி இயற்கையாய் இருந்தாலும், கற்பித் நுண்மையின்றி தூல உண்மையாய் இருந் தாலும் கூட, வழிபாடும் சேவையும் தொடர்ச்சியின்றி விட்டுவிட்டே, நிகழ்த முடியும். ஆனுல் மௌன தியானமோ இடைவிடாது உள்ளாழ்ந்து, தூயதாய் நிறைவேறி, உணர்வே உள்ள பொருள் என்ற உணர்வை உறுதிப்படுத்தக்கூடியது. இதுவே "ஸோ ஹம்" பாவனை பயில்வதாகும். இவ்வகையில் தீவிர பக்தியை சாதனையின் மார்க்கமாகிற கர்மம். அதன் முடி வாகிற ஞானம் இவற்றினின்றும் பிரிக்க முடியாது. உள்ளதன் உள்ளத்துள் ஒன்றி உறைவது ஒன்றே உண்மையாம். கர்மம், பக்தி, யோகம் இவற்றின் குறிக் கோள் அதுவென்ருல், ஞானத்தின் பொருளும் முழுமை யும் அதுவே.

நாம் மூச்சு விடுவதை ஊன்றிக் கவனித்தால் அப் போது சுவாச இயக்கம் சமப்படுவதோடு மனமும் வெளி விஷயங்களை விட்டு உள் ஒடுங்கி நம் வசப்படுகிறது. உண்மையில். உயிரின் இயக்கமாகிற சுவாசமும் உயிரின் உணர்வாகிற உள்ளமும் ஒரே மரத்தின் இரு கிளைகளாய் ஒன்ருேடொன்று தொடர்பு கொண்டுள்ளன. தன் முனைப்புள்ள மனதை சுவாச ஒழுக்கத்தால் அடக்கி, ஒரே நினைவாய் ஒருமை யுணர்வுடன் ஒரே வழி செலுத் தினுல் அழித்தே விடலாம். மனதை உள்ளத்துள்

திருப்பி, அதன் உருவையும் இயல்பையும் தீவிரமாய் விசாரித்தால், தனியாக மனம் என்பதொன்று இல்லை என்பதும், மனம் எண்ணங்களின் தொடர்ச்சியே என்பதும், எண்ணங்கள் அனைத்தும் 'நான்' எனும் எண்ணத்திலிருந்து உதிக்கின்றன என்பதும் தெரிய வரும். இந்த 'யான்' எனும் எண்ணமே நம்மைத் தனியாய்ப் பிரித்து வைத்து, பிரிவுணர்வைக் கடுமையாய்க்காக்கவும் செய்கிறது.

'நான்' என்று எழும் இடம் யாது என்று நாடினல், மனம் மெய்யுணர்வை நேரிற் கண்டு தலைசாய்ந்துவிடும். இந்த மெய்யுணர்வாம் தூய அறிவே நமது உண்மை நிலை ஆகும். தூக்கத்தில் 'நான்' என்கிற எண்ணம் நீங்கி இந்தத் தூய அறிவு மட்டும் எஞ்சி நிற்பதால் 'நான்' எனும் சொல்லின் மூல முதற்பொருள் தூய அறிவேயாகும். உடல், உயிர், மனம், புத்தி, உறக்கம் யாவும் ஜடம், அறிபடு பொருள்; நிலையற்ற வெறும் தோற்றமே. நாமோ உணர்வு மயமாய், முற்றிலும் உணர்வாய் உள்ளோம். ஆனல் இந்த உணர்வை நாம் அறிய முடியாது; அந்த உணர்வாய் சும்மா இருக்கத்தான் முடியும். இந்த மெய்யுணர்வே நான் என்ற தன் மய நிட்டையில் நாம் அறிவு—அறியாமை இரண்டையும் கடந்த தூய உணர்வோடு ஒன்ருகிவிடுகிரேம். ஆதியும் அந்தமும் அற்ற உண்மையாய் அகண்டாகார ஆனந்தத்தில் ஆழ்கிரேம். இந்தப் பரமானந்த நிலையில் பந்தம்—வீடு என்ற இருமைப் பேச்சுக்கு இடம் இல்லை. அதன்பின் நிகழ்வது பிறர்க்கென வாழும் பெரு வாழ்வாய் இடையருது இறை பணி நின்றலாய் அமைகிறது. இவ்வாறு 'யான்'

அற்று வாழ்வதே உண்மைத்தவம். வீட்டை நாடி சாதகன் இயற்றும் தொண்டும், இயல்பாய், ஆனந்த மாய், தூண்டுதலின்றி ஞானி புரியும் பணியும் ஒன்ருய்த் தோன்றினும் ஒன்று சாதனையாய், மற்ருென்று லக்ஷண மாய் அமைகிறது.

மகரிஷியின் ஆன்ம விசாரணை தியானம் புரிவதற்கு மட்டுமே அல்லாமல் இனிய, வெற்றிகரமான வாழ்க்கை நடத்தவும் அப்பழுக்கற்ற சாதனை முறை என்ற அன்பர்கள் கருத்துக்கு இப் பாடலின் போக்கும் முடிவுமே போதிய சான்ருகும்.

உள்ளது நாற்பது

1928-ஆம் ஆண்டில், மீண்டும் முருகனுரின் முயற்சி காரணமாய் மகரிஷி அவ்வப்போது இயற்றிய சில பாடல்கள் ஒன்று திரட்டி மறுபார்வையிட்டுத் தொகுக்கப்பெற்றன. இவையே உள்ளது நாற்பது என்ற தலைப்புடன் ஒரு அரும் பெரும் நூலாயிற்று. பின்னர் இதனைக் காவ்ய கண்ட கணபதி முனிவர் இனிய சமஸ் கிருத சுலோகங்களாக மொழி பெயர்த்து ஸத் தர்சனம் என்ற தலைப்பையும் அளித்தார். இத் தொகுப்புக்கு டி. வி. காபாலி சாஸ்திரி, லக்ஷ்மண சர்மா ("யார்)", டாக்டர் டி. எம். பி. மகாதேவன், சுவாமி பூர்ணுநந்த தீர்த்தர் முதலானோர் எழுதியுள்ள வியாக்கியானங்கள் இந் நாற்பது பாடல்களை ஆழ்ந்து படிக்க உதவுவதோடு, சிற்சில சமயங்களில் விவாதத்துக்கும் இடமளித் துள்ளன.

இந் நாற்பதைத் தொடர்ந்து மற்ருெரு நாற்பது பாடல்கள் அனுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளன. இவ் வனுபந்தத்தில் ஏறத்தாழப் பாதிப் பாடல்கள் யோக

வாஸிஷ்டம் போன்ற புராதன வடமொழி நூல்களி னின்றும் மொழி பெயர்ப்புக்களேயாம். இந்தத் தொகுப் புக்கள் தமிழ் இலக்கிய மரபினையொட்டி, எடுத்தபொருளை நாற்பது செய்யுள் வரிசையில் விளக்கும் வகையில் அமைந்துள்ளன. (உதாரணமாக இனியவை நாற்பது, இன்னு நாற்பது). அதே சமயம் "உள்ளது நாற்பதா, ஒன்ரு?" என்றும் அத்தலைப்பு கேலியாய்க் கேட்கிறது.

அனுபந்தத்தையும் சேர்த்து மொத்தம் எண்பது பாடல்கள் ஒரு பொருளை படிப்படியாக விளக்கிக் கூறுவ தாக விமர்சகர்கள் கருதி அவற்றை 'விவேகம்' 'விசாரம்', 'அனுபவம்' என்ற பகுதிகளாய் வரிசைப் படுத்தியுள்ளனர். எனினும் இவ் வெண்பாக்கள் ஒவ்வொன்றும் வள்ளிதாய் நின்று, தெளிவாய் விளங்கி, உள்ள ஒரே பொருளைச் சுட்டிக் காட்டும் வழிக்கம்பமாய் உதவுகிறது. அந்தப் பொருளாவது பிரிக்கவொண்ணு, சொல்லவொண்ணு, அசைக்கவொண்ணு மெய்யுணர்வே யாம். எண்ணங்களால் ஆகிய நமது வாழ்க்கைச் சக்கரத்தின் வெளி வரம்பையும், தூய உணர்வாம் மைய அச்சைச் சுற்றிச் சுழலும் குடத்தையும் பிணைக்கும் ஆரைகளாய் இப்பாடல்கள் அமைந்துள்ளன. நிஜ ஆன்ம சொரூபத்தினின்றும் நம்மைச் சதா பிரித் தெறிந்து, வெளி வட்டார நிகழ்ச்சிகளிலே செலுத்தும் ஆற்றலாய் இயங்கும் அகந்தையின் மீது ஒவ்வொரு பாவும் தனித்த கனத்த தாக்கலாய் வந்து விழுகிறது.

மங்களம்

உள்ளது அலது; உள்ள உணர்வு உள்ளதோ?
உள்ள பொருள்

உள்ளல் அற உள்ளத்தே உள்ளதால்—
உள்ளமெனும்
உள்ள பொருள் உள்ளல் எவன் உள்ளத்தே
உள்ளபடி
உள்ளதே உள்ளல் உணர்

மரணபயம் மிக்குள அம் மக்கள் அரணாக
மரணபவம் இல்லா மகேசன்—சரணமே
சார்வர் தம் சார்வொடுதாம் சாவுற்றார்
சாவெண்ணம்
சார்வரோ சாவா தவர்.

இந்த இரு மங்களப் பாடல்களில் இருவேறு வழிகள் வகுத்துக் காட்டப்பட்டுள்ளன. உள்ளது, உணர்வு, உள்ளம் இவை மூன்றும் ஒன்றே என்ற உண்மையை முதற்பா வற்புறுத்துகிறது. 'உள்ளது', 'உள்ளல்', 'உள்ளம்'. 'உள்' என்று விள்ள முடியா முழுமையைத் தூய தனித் தமிழ்ச் சொற்களால் அழகாய் அழுத்தமாய் உணர்த்துகிறது. சென்ற காலமோ எதிர் காலமோ அற்ற 'உள்ளது' எனும் வினைச் சொல் மீண்டும் மீண்டும் எண் முறை வருகிறது; 'உள்ளம்' (இதயம் மூன்று முறையும் 'உள்ளல்' (நினைத்தல், உணர்தல்) மூன்று முறையும் 'உணர்வு' இருதரமும் வருகின்றன. இவ்வாறு இவ்வெண்பா முழுவதும் ஒலியாய், தொனிப் பொருளாய், குறிப்பாய், சொல்லால் மடக்கி வெளிப்படையாய் மனத்தை உள்ளே செலுத்தி மெய்யுணர்வின் மையமாகிற உள்ளத்துக்குள் இழுத்து விடுகிறது.

இறைவனை உருவகப்படுத்தி வழிபட விரும்புவது மனிதத் தன்மையாதலால், இரண்டாவது வெண்பா

மரண பயமுற்ற மக்கள் பரம சிவனைச் சரணடைந்து 'யான்', 'எனது' எனும் எண்ணம் அற, இன்றே இங்கு இறவா நிலை எய்துவதைப் புகழ்ந்துரைக்கிறது. இப் பாடலில், இருமையைக் காட்டும் முதல் இரண்டு அடிகளில் இயல்பாகப் பல வடமொழிச் சொற்கள் இடம் பெறுகின்றன. ஆனால் நமது இறப்பை இறைவனின் இறவா உண்மையில் இழைத்துவிடுவதைக் கூறும் பின் அடிகள் தூய தமிழ்ச் சொற்களால் ஒருமையை, முழுமையை, பற்றறுந்து இறவா வீடு பெறுதலை உணர்த்துகின்றன.

அகந்தையை அகற்றி, மெய்யுணர்வை நிறுத்தி வைத்து, உள்ளது உணர்வு ஒன்றே என்ற முழுமையான அனுபவத்தையே எளிய தெளிய வாசகங்கள் மூலமும், நிலைத்த அப்பியாசம் மூலமும் தருவதுதான் இந்நூலின் நோக்கமாம். இருப்பு, அறிவு இவற்றின் இயலைப் பாகுபடுத்தி சாத்திரம் செய்வதல்ல இந்த நூலின் நோக்கம். கொள்கையைப் பற்றிய தர்க்கங்களுக்கு இங்கே இடமே இல்லை. பன்மை, ஐயம், சழக்கு எல்லாம் அகந்தையின் விஷமங்களே ஆகும். மனதை அகமுகமாய்த் திருப்பி, உலகமும் அதன் தோற்றமும் எழுந்து மறையும் அடிப்படை உணர்வாகிற தூய உணர்வில் ஒன்றிவிடச் செய்கிறது. பெயரின்றி, உருவின்றி, எங்கும் என்றும் 'உளேன்' என்ற கேவல உணர்வு ஒன்றே 'உள்ளது' ஆகும். இந்த ஒரே உள்ள பொருளான மெய்யுணர்வை நாம் மறவாது, உறுதியாய்ப் பற்றி, அதனுள் ஒடுங்கி விடுதல் வேண்டும்.

உண்மையில் உள்ளது இந்த ஆதார, தன்மயமான உணர்வு ஒன்றே. இதுவே எண்ணற்ற உருவங்களாகவும் பல்வேறு உறவுகளாகவும் தோற்றம் அளிக்கும் ஆற்றல் உடையது. மெய்யுணர்விலே தோன்றும் இந்தத் தோற்றம் தான் நமது கண் முன்னே எழும் உலகமாகவும் அதைக் கண்ணுற்று அதில் நடமாடிவரும் நாம் எல்லோருமாகவும் காட்சியளிக்கிறது. இந்தக் காட்சியில் தோன்றும் பெயர்கள், உருவங்கள், அதைப் பார்ப்பவர்கள், ஆதாரத் திரை, ஒளிக்கும் ஒளி, இவை யாவுமே ஒரே தன்மய—உணர்வே ஆகும். அகந்தையே இந்தக் காட்சியைக் கடவுள், உலகம், ஜீவர்கள் என வெவ்வேருகப் பிரித்துப் பார்க்கிறது. அகந்தை மறையுங்கால் இம் மூன்றும் ஒன்றே எனக் காணக்கிடைக்கும். மனக் கற்பனையான இந்த ஜகம் நம் எல்லோராலும் தோற்றுவிக்கப்பட்டதே. தனி மனம் ஒவ்வொன்றும் அதைத் தனது நிலையினின்று நோக்கிக் கண்டு, வசப் படுத்தியோ விட்டுக்கொடுத்தோ இசைந்திணங்கியோ, அதாவது தான் கண்டு கடைப்பிடித்த சத்தியத்திற்கு ஏற்ப இன்புற்ருே, துன்புற்ருே, மாற்றியமைத்தோ ஒத்தும் ஒவ்வாமலும் உலகில் வாழ்கிறது. 'சத்' தான் மெய். இந்த மெய்யுணர்விலே உலகும் அதைப்பற்றிய அறிவும் தோன்றி மறைகின்றன; ஆனுல் தோன்றி மறையாது தனித்து ஒளிரும் தூய உணர்வாக 'சத், அல்லது மெய்பொருள் விளங்குகிறது. பெயரோ உருவமோ அற்ற இந்த மெய்யுணர்வை—எல்லையற்ற அந்த மெய்ப் பொருளை—நாம் அறியவும் அடையவும் முயன்றே அதற்கு நாம ரூபங்களைக் கற்பித்து கடவுளர் என வழிபட்டும் வருகிருேம். ஆயினும் அதனை நாம் உண்மையில் உணர்வது அனுபவத்திலே, அனுபவத்-

தின்மூலம், அனுபவமாய்த்தான். அப் பேருணர்வில் நமது சிற்றுணர்வு ஒடுங்கி, ஒன்றி, மறைவதே அந்த உண்மையைக் காண்பதாகும். பெயரும் உருவும் கொண்ட தொழுவோனும், அவன் வழிபடும் நாம ரூபம் கொண்ட கடவுளும் இரண்டறக் கலந்து சொல்லொணுப் பேரின்பத்தில் மறைதல் வேண்டும் (பாடல் 8). இக் கலப்பாகிற பரமானந்தத்தில் மனிதன் சரி நிகரான, ஆனல் தன் செயலற்ற பங்காளி, உண்பவன் அல்ல, உணவே ஆவான் என்ற கருத்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பெறுகிறது.

காண்பானுகிய தன்னைக் காணுமல் கடவுளைக் காண்பது மனேமயமான காட்சியைக் காண்பதேயாகும். எவரும் கடவுளைக் காணமுடியாது. கடவுளைக் கண்டதை நினைவு கூரத்தான் முடியும். 'யான்' என்ற நினைப்பு அடியோடு அழிந்து, பரம் பொருள் மட்டுமே பேரானந்தமாக நிலைக்கும் போதே ஒருவன் கடவுளைக் கண்டவன் ஆகிருன். இறைவனை அறிதல் இயலாது. ஆனந்தம் ஒன்றே அறியக் கூடியது அதுவும் நம்மை நாம் இழந்துவிடும் ஆனந்தத்தை, அவனுக்கு உண வாய், அன்னம் அல்லது போக்கியமாய் ஆகிவிடும் பேரானந்தத்தையே உணரக்கூடும் (பாடல் 20, 21).

இதயத்தில் தானுக ஒளிரும் பேரின்பத்தின் முதன்மையை 22-ம் செய்யுள் வலியுறுத்துகிறது. மதிக்கு ஒளி தந்து, மதிக்குள் ஒளிருகிறது, உள்ளுணர்வு. மதியை உள்ளே மடக்கி உள்ளத்தில் பதிக்காமல், இதயத்தை மதியால் அளப்பது எங்ஙனம்? சூரியனைக் காணக் கைவிளக்கு உதவுமா?

அறிவு கடந்த தூய உணர்வைத் துய்ப்பது எதிர் காலத்தில் என்றோ என்று குறிப்பிடமுடியாத நாள் ஒன்றுக்கு ஒத்திப்போடாமல், எங்கும் என்றும் உள்ள பொருளாகிய மெய்யுணர்வே இன்று நாம் காணும் இன்பம் என்று நம்பி, இங்கேயே இப்பொழுதே சிற்சில கணங்களேனும் நம்முள் அதனைக் கண்டும் கேட்டும் உணர்ந்தும் இன்புறப் பயிலுதல் வேண்டும். உண்மை யான அறிவு அறிவையும் அறியாமையையும் கடந்து நிற்கிறது, பொருள்களைப் பற்றிய சுட்டறிவு உண்மை அறிவு அல்ல என்று வலியுறுத்தப்படுகிறது. 'சத்' (தூய உண்மையான பரம்பொருள்), 'நான்' எனும் தன்மையாகிய மெய்யுணர்வு, இவ்விரண்டும் எங்கும் நிறைந்து எவராலும் அறியமுடியாதவை. ஆயினும், தனித்து நிற்கும் 'யான்' அற்ற முழுமையை, 'என்'னை யும் கடந்த உண்மையுணர்வை நாம் பேரின்பமாகத் துய்க்கலாம்.

ஆகவே, 'தன்மை' அல்லது, 'நான்' என்பதன் உண்மையைத் தீர விசாரித்தால், 'யான்' என்ற தனிப் பொருள் ஒன்றுமே கிடையாது, ஒரே உணர்வே 'நாம்' ஆய் உள்ளோம் என்பது விளங்கும். பிறகு 'நீ' என்ற முன்னிலை, அவன், அவள், அது என்ற படர்க்கைகள் ஒழிய, அனைவரும் 'நான்' ஆய், 'தான்' ஆய், உணர் வாய் ஒளிர்வது புலப்படும். எல்லா உயிர்களோடும் நாம் வேற்றுமையற்று, முற்றொருமையுற்று ஒரே உணர் வாய் உள்ளதே நமது இயல்பு, இப்படி யானற்று வாழ் வதே இயற்கையான வாழ்வு, உண்மை வாழ்வு என்பது தெரியவரும். ஆகவே, பிறருடன் நாம் மேலும் மேலும் ஒருமை பூண்டு, உணர்வே உண்மைப் பொருள்

என்பதைக் கண்டு, உணர்வைப்போற்றிப் பகிர்ந்து வாழும் இணக்கமான ஆன்மிக வாழ்வே இயல்பான மனித வாழ்வாகும், இத்தகைய இயற்கை வாழ்வைத் தள்ளிப்போடலாகாது. இங்கே இப்போதே இக்கணமே தொடங்க வேண்டும். நிகழ்காலத்திலே வாழ்தல், வாழ்க்கை நிகழ்த்துதல் என்று சிறப்பித்துக் கூறுதல் இந்த இயற்கை வாழ்வையே.

இறந்த காலமும் எதிர்காலமும் நிகழ்காலத்தைச் சார்ந்தே நிற்கின்றன. சென்றதும் வரப்போவதும் அந்தந்த காலங்களின் நிகழ்வேயாகும். எனவே, நிகழ்வு ஒன்றே இன்றைய உண்மை. நிகழும் உண்மையை நிகழ்கையில் இன்றே உணர்ந்தறியாமல் இறந்துபோனதையும், இனி வரப்போவதையும் கருதிக் காலம் கழிப்பது ஒன்று என்ற அடிப்படை எண்ணின்றி பெருங் கணக்குப் போடுவதற்கு ஒப்பாகும் பாடல் 15). சென்ற கால நினைவுகள், எதிர்காலத்தைப் பற்றிய எண்ணங்கள் யாவும் நிழல்களே. திடமாய்ப் பற்றி நாம் செயலாற்றக்கூடிய மெய்ந்நேரம் நிகழ்காலமே. எனவே சாதகன் இதோ இத் தருணம் முன் செல்லும் சமயத்தையே பொருட்படுத்தி, இக்கணமே உண்மை யுணர்ந்து, உரிய செயலை அனுயாசமாய்ச் செய்து முடிப்பான்.

நாம் உடல்கள் அல்ல, உணர்வே ஆவோம். ஆகவே, காலமும் இடமும் நம்முள் உள்ளன, நாம் அவற்றினுள் இல்லை (பாடல் 16). ஞானியும் தன்னை உணராத அஞ்ஞானியும் உடலைக் குறித்து 'நான்' என் றலும் அஞ்ஞானிக்கு நான் என்பது உடலைச் சார்ந்த எண்ணமே. ஞானிக்கோ 'நான்' என்பது எல்லையற்ற

உணர்வாய் ஒளிர்கிறது (பா. 17), அஞ்ஞானியும் ஞானியும் இவ் வுலகம் 'உண்மையே' என்பார்கள். ஆயினும் அஞ்ஞானிக்குப் பெயரும் உருவும் உள்ள உலகு ஒன்றே உண்மை. ஞானிக்கோ சச்சிதானந்தமான மெய்ப் பொருளே நாம் காணும் இவ் வுலகின் மூலமும் ஆதாரமும் ஆகும் (பா. 18).

விதி, மதி ஆகிய இரண்டினுள் எது வெல்லும் என்ற விவாதம் என்று தீரும்? விருப்பு வெறுப்புற்ற அகந்தையே விதிக்கும் மதிக்கும் பிறப்பிடம். ஆகையால் அகந்தை மறைந்த அன்றே இந்த பேதம் தீரும். (பா. 19).

ஜட உடல் 'நான்' என்று அறியாது, சொல்லாது மெய்யுணர்வு உதியாது, மறையாது. இவ் விரண்டிற்கும் இடையே உடலோடு தொடர்பு கொண்ட 'நான்' ஒன்று தோன்றுகிறது. உணர்வையும் உடலையும் முடிச்சுப் போடுவது இந்த 'நான்' என்ற எண்ணமே ஆகும். அதுவே பந்தம், சீவன், சூட்சும உடல், அகந்தை, சம்சாரம், மனம் அனைத்தும் ஆகும் (பா. 24). இந்த உருவற்ற பேய், உருவாம் உடலைப் பற்றி உருவெடுக்கிறது; உருவங்களை (எண்ணங்களை)ப் பற்றிக் கொண்டு நிலைத்து, ஒன்றை விட்டு மற்றொன்றைப் பிடித்துக் கொண்டு வளர்கிறது. அதனால் 'யார் நீ' என்று விசாரித்தால் அகந்தைப் பேய் ஓட்டம் பிடிக்கும் (பா. 25). அகந்தையானது ஏமாற்றிப் பிழைக்கும் மாப்பிள்ளைத் தோழனைப் போன்றது; அதன் உயர் நிலை எப்போதும் கவிழக்கூடியவே. (பல நாள் கல்யாணம் நடந்த முற்காலத்தில் ஒரு பேர்வழி இரண்டொரு நாள் உண்டு களித்து வளைய வந்தான். பெண் வீட்டார் அவனை

"மாப்பிள்ளைத் தோழன்" என்று நினைத்து உபசரித்து வந்தனர். ஆனால் "யார் இவன்?" என விசாரிக்கப் புகுந்தவுடன் ஆள் இருந்தவிடம் தெரியாமல் வெளியேறினான். அவன் மறைவால் யாதொரு நஷ்டமும் இல்லை)

விசாரணை எப்படி நடத்துவது? பயிற்சி முறை யாது?

எழும்பும் அகந்தை யெழும் இடத்தை நீரில்
விழுந்த பொருள் காண வேண்டி—முழுகுதல்
போல்
கூர்மதியாற்பேச்சு மூச்சடக்கிக் கொண்டுள்ளே
ஆழ்ந்தறிய வேண்டும் அறி. (பா. 28)

மனம் உள்ளே திரும்பி 'நான் யார்?' என வினவிய வண்ணம் இதயத்தை நெருங்க, 'நான்' என்ற எண்ணம் (கற்பிதம்) நாணமுற்றுத் தலை கவிழ்ந்து மறைகிறது. உணர்வு ஒன்று மட்டுமே 'நான் நான் தானே நான்' எனத் தானாகவே தோன்றுகிறது. நான் ஆகத் தோன்றினும் அது 'யான்' என்ற அகந்தை அன்று. அது பூரணமானது. அதுவே முழு முதற்பொருள் (பா. 30)

பயிற்சிக் காலத்தில் இருமை (துவைதம்), இறுதி நிலையில் ஒருமை (அத்வைதம்) என்று கூறுவது சரியல்ல. நெடுங்காலமாய் ஆன்மாவைத் தேடுபவனும் அதனைக் காணுங்காலத்தில் அடையப் பெறுபவனும் அதே தசமன் (பத்தாவது ஆள்) அன்றி வேறு யார்? (ஆன்மாவை மறந்து விட்டு தேடிக் கண்டு பிடிக்கிறோம் என்ற பொது மயக்கத்தை விளக்கும் பழங்கதை இது தான்: இளைஞர் பதின்மர் சேர்ந்து பிரயாணம் துவங்

கினர். வழி நடுவில் வெள்ளப் பெருக்கெடுத்த ஓர் ஆற்றைக் கடந்து செல்ல நேர்ந்தது. 'எவரையும் வெள்ளம் கொள்ளை கொள்ளவில்லையா, எல்லோரும் சரியாய்க் கரை சேர்ந்தனரா?' என்று தீர்மானிக்கும் பொருட்டு ஆள் கணக்கெடுத்தனர். ஒவ்வொருவரும் திரும்பத் திரும்ப எண்ணிஞலும் மொத்தம் ஒன்பதுதான் வந்தது. 'ஐயோ! பத்தாவது பேர்வழி வெள்ளத்தோடு போய் விட்டானே' என்று அவர்கள் உட்கார்ந்துபோய் ஒப்பாரி வைத்தனர். அப்போது அங்கு வந்த வழிப் போக்கன் விஷயத்தைக் கேட்டு அவர்களது முட்டாள் தனத்தைக் கண்டுகொண்டான். அவர்களைத் தனித் தனியாகத் தனக்கு முன்னே நடக்கச் சொல்லி, தன்னைக் கடக்கும் போது ஒவ்வொருவர் முதுகிலும் பளார் என்று ஓர் அடி வைத்து, அடிகளை எண்ணுங்கள் என்ருன். பத்தாவது அடி ஒலித்ததும் தான் அவர்களுக்குப் புரிந்தது முன்பு ஒவ்வொருவரும் தன்னை மறந்து விட்டு மற்ற ஒன்பது பேர்களை மட்டும் கணக்கிட்டிருக்கிருேம் என்பது)!. பலவேடங்களைத் தாங்கி வாழ்க்கை நாடகத் தில் பங்கெடுக்கும் நாம் நமது உண்மை சொரூபத்தை மறந்து விடும் மதியீனத்தையும் இக்கதை காட்டுகிறது. நாம் இதுவாய், அதுவாய், எதுவாய் இருந்தாலும், அப்படி இருக்கும் போதும், அதற்கு முன்னும் பின்னும், என்றும் எங்கும், 'நான்' ஆய், உணர்வாய் உள்ளோம்.

உள்ளது நாற்பதின் அநுபந்தம் சத்சங்கத்தின் மேன்மையை வலியுறுத்தும் வெண்பாக்களுடன் துவங்கு கிறது. இவை ஆதி சங்கரர் இயற்றிய சுலோகங்களின் மொழி பெயர்ப்பே. காலாதீதமான மெய்யுணர்வு சிறப் பாக மவுனத்தின் மூலம் அளிக்கப்படும் அனுபவமே

யாகும். ஞானிகள் முன்னிலையிலே தான் இவ்வுணர்வு எளிதில் கைகூடும்.

அனுபந்தத்தின் 6, 7, 8 ஆம் பாடல்கள், மகரிஷியின் அடிப்படைச் செய்தி எவ்வளவு எளிமையானது, தெளிவானது, பொது அறிவிற்கு உகந்தது என்பதைக் காட்டுகின்றன. உள்ளதும் உணர்வதும் ஒன்றே என்ற அவரது சித்தாந்தம் முழுவதையும் சுருங்கச் சொல்லுவதுடன் இம்மூன்று பாக்களும் வறட்டு வேதாந்த பரிபாஷை பேசி பயமுறுத்தாமல் ஆன்ம விசாரணை முறையையும் எடுத்துரைக்கின்றன. இவ்வகையில் இந்தத் தெள்ளிய பரிபூரணமான சித்தாந்தச் செல்வத்தை உண்மை நாட்டமுள்ள எவரும் எளிதாய் எட்டிப் பிடிக்கலாம். இவை ஒளிவு மறைவின்றி நேர்முகமாய் வெளியிடும் பொருளைக் கூசாமல் மனதில் ஏற்று, தயங்காமல் தமதாக்கித் தமது அன்றாட வாழ்வில் செயல்படுத்திப் பெரும் பயன் பெறலாம். கடவுள் என்றோ ஆன்மா என்றோ நாம் கருதும் முழு முதற் பொருள் உணர்வே ஆகும். இந்த உணர்வே மதியில் ஒளிர்ந்து, மதியை ஒளிர்வித்து, உலகை ஆக்கியும் காட்டும் ஒளியாய் உதவுகிறது; அவ் வுணர்வே ஒவ்வொரு இதயத்திலும் மறுக்க முடியாத 'நான்' என்கிற பிரக்ஞையாய் ஒலித்தும் பிரகாசித்தும் நிற்கிறது. இதுவே நாமாய் உள்ளது, நம்முள் உள்ளது; நமது உள்ளம், சுவாசம் இவற்றின் அமைதி, அசைவைக் கவனித்து, ஒழிவில் ஒடுங்கியும் உலகில் ஓடியும் திகழும் இந்த உணர்வே நாம் என்பதை எவரும் அறிதல் கூடும்.

ஸ்ரீ ராமருக்கு அவரது குரு வசிஷ்டர் அருளிய உபதேசங்களை மகரிஷி மற்றோர் பாடல் வரிசையாய்

அமைத்துள்ளார். காலத்துக்கும் இடத்துக்கும் அப்பாற் பட்ட அறிவுமயமான உண்மை இதயம் யாது, மெய் யுணர்வுக்கும் வீரச் செயலுக்கும் தொடர்பு யாது என்று வசிஷ்டர் உணர்த்துகிருர்: "உனது உண்மையான சொருபத்தைத் திடமாக அகத்திற் பற்றி, ஆசை போல் உலகில் விளையாடு, வீரா. உள்ளத்தே பற்றின்றி அமைதியாய், ஆனல் வெளியுலகில் எழுச்சியும் மகிழ்ச்சி யும், கிளர்ச்சியும் வெறுப்பும் முனைப்பும் முயற்சியும் உடையவன்போல் வேஷத்திற்கு ஏற்றவாறு வேலை களைச் செய்து வீரனுய் விளையாடு." இதையே வேறு விதமாகக் கூறினல், ஆன்ம தரிசனத்தில் நாட்டம், தீவிரமான முமுக்ஷுத்துவம் இவை அஞ்சா நெஞ்சம் படைத்த வீரனின் செயல்களுடன் தொடர்பு கொண் டவையே. ராமபிரானைச் செயலாற்றத் தூண்டும் கடமைக்குரல் நம்மையும் தட்டி யெழுப்பி வீரச் செயலில் ஈடுபடவே ஞானம் நாடுபவரின் செவியில் ஒலிக்கிறது. உலகிலே செயலாற்றுவதிலும் அறத்தை நிலை நாட்டு வதிலும் சாதகனுக்கும் சித்தனுக்கும் வித்தியாசம் கிடை யாது. சாதகன் ஓர் கட்டுப்பாட்டிற்குட்பட்டு நிட்காமிய மாய்ப் புரியும் பணி பிறருடன் ஒருமை காணும் வழியாக அமைகிறது. ஸ்ரீ ராமர், ஜனகர் போன்ற ஞானி களுக்கோ அதே செயல்கள் எண்ணமின்றி காரண மின்றி, இயல்பாகவே நடைபெற்று, ஒருமையின் இலக் கணமாய் விளங்குகின்றன. சாதகன் முயற்சி சித்தினது லட்சணம் ஆகிறது.

உள்ளது நாற்பதின் 35-ஆம் பாடலிலும் அனுபந் தத்தின் 15, 16 ஆம் பாடல்களிலும் மகரிஷி, சித்திகளில் மனம் செலுத்தல் ஆன்மிகப்பாதையில் இடையூறும்

கவனமாற்றமும் ஆகும் என்று கண்டித்துரைத்துள்ளார்.

'அகில வேதாந்த தத்துவசாரம் எது வென்ருல் அகம் செத்து அது ஆகும்போது, நான் என்ற அந்தத் தூய உணர்வு ஒன்றே மிச்சம் என்று கூறி இந்த நூல் முற்றுப் பெறுகிறது.

இந்த 80 பாடல்களைத் தொகுத்து உருக்கொடுத்து வரிசைப் படுத்திய முருகஞர் மீண்டும் மகரிஷியை ஒரு பணியில் ஈடுபடுத்தி, ஆன்ம வித்தை என்ற பாடலைப் பாடவைத்தார். கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனர் சரித்திரம் மூலம் உலகறிந்த 'ஐயே மெத்தக் கடினம்' என்ற மெட்டை வைத்து பொருளை மட்டும் மாற்றி 'ஐயே அதி சுலபம்—ஆன்ம வித்தை' என்று முருகஞர் பாடலைத் துவக்கினர். 'உள்ளங்கை நெல்லிக் கனி கூடப் பொய்யாகி ஒழிய, மிகு மெய்யாய் உளது ஆன்மா; மெய்யுணர்வு பேரின்பம், அவ்வளவு தெளிவானது, அடிப்படையானது, ஐயமற்றது; இதனை அறிவோன், அறிபடு பொருள் என்று பிரித்துக் கூறத் தேவையின்றி, வகையின்றி இன்பமே உள்ளது,' என்று இதுவரை பாடலைக் கொண்டு சென்ற முருகஞர் மேலே தொடர்ந்து கூறவேண்டியதை மகரிஷியால் மட்டுமே கூறமுடியும் என்று அந்தப் பொறுப்பை அவரிடம் விட்டு விட்டார். ஏனெனில், கவிஞன் "இனி மவுனமே" என்று நிற்க, ஞானியோ பேரின்ப நிலையையும் அனுபவ பூர்வமாய் விளக்கக் கூடியவன் அல்லவா? ஆகவே மகரிஷி தொடர்ந்து பல அடிகளைப் புனைந்து சாதனை யோடு அருளையும் குறித்துப் பாடி, முடிவில் ஓர் முத்திரை போல, கையொப்பம் வைப்பது போல, இதை உண்மை யில் பாடுவது முழு முதற் பொருளாம் நான் என்று

ஆன்மாவாய் உள்ளே ஒளிரும் அண்ணுமலேயே என்று அறிவிக்கிருர்.

கடைசியாக 1947 பிப்ரவரியில், ஏகான்ம பஞ்சகம் எனும் ஐந்து வெண்பாக்களே மகரிஷி இயற்றினுர். தெலுங்கில் வெண்பாக்களே ஆக்கிப் பார்த்தால் என்ன என்ற சில ஆந்திர அன்பர்களின் விருப்பப்படி இவை இயற்றப்பெற்றன. உயிர்த் துடிப்புடைய ஐந்து வெண் பாக்களே மகரிஷி தெலுங்கில் இயற்றி அவற்றைத்தாமே தமிழிலும் மொழி பெயர்த்தார். இப் பாடல் அவருக்கே தனியுரிமையான ஆன்ம விசார முறையைக் கேலி செய்யும் வகையில்—'நான் யார்' என்று கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்ளும் தேவை ஏற்படும் அளவுக்கா நமது பொது மயக்கம் என்று வருந்தி வியப்பது போல— அமைந்துள்ளது

தான் இருந்தும் தானுக, தன்னேத்தான்
"நான் எவன்?
யான் இருக்கும் தானம் எது?" எனக் கேட்—
பானுக்கு
"யான் எவன்? எவ்விடம் யான் உளன்?"
என்ற மது
பானனே ஈடு பகர்.
தன்னுள் தனு இருக்க, தான் சடவுடலம்
தன்னுள் இருப்பதாய்த் தான் உன்னும்—
அன்னவன்
சித்திரத்தினுள் உள்ளது அச் சித்திரத்துக்கு
ஆதார
வத்திரம் என்று எண்ணுவான்.

(தனு—உடல். உன்னும்—எண்ணும். திரைப் படத்தில் தோன்றும் துணி தோற்றம். படத்துக்கு ஆதாரமான திரை உண்மைத் துணி. அறிவு மெய் ஆதாரம்; உடலோ அதனுள் தோற்றம் என்றவாறு).

அத்தியாயம் 11

நூற்றிரட்டு : மொழி பெயர்ப்புக்களும் தழுவல்களும்

மகரிஷியின் பக்திப் பாடல்களைப் போலவே அவரது (பழைய நூல்களிலிருந்து செய்யப்பட்ட) தழுவல்கள் ஆகியவையும் ஞானமார்க்கத்தில் செல்வோருக்கு ஊக்கமளித்து உதவிபுரியும் நோக்கத்துடன் தோன்றியவையே. ஆன்ம விசாரத்தின் மூலம் ஆன்ம தரிசனம் எய்துவதற்கு அவர் வகுத்துத் தந்த முறையை உறுதிப்படுத்தி, விளக்கம் கூறும் பொருட்டு அவர் இயன்ற மட்டும் பண்டைய நூல்களைப் பயன்படுத்தினர். எழுதும் நடையிலும் பேசும் பேச்சிலும் ஒரு புதுமை, தனதென்ற தனித்தன்மை வேண்டுமே என்ற கவலை அவருக்குச் சிறிதும் இருந்ததில்லை. வழி வழி வந்த செம் பொன்னை, கைகண்ட அரு மருந்தை—தூய தங்கக் கட்டிகளான ஆதி சங்கரரின் கருத்துக்களை, இன்றும் நம்மிடை உயிருடன் உலவி நம்பினோரை உய்விக்கும் சிவன், கிருஷ்ணன் போன்ற கடவுளரை—பழமை என்ற பழியைச் சுமத்தி வெளியேற்ற அவர் உடன்படுவாரா?

நேற்று நடந்த விருந்தின் உண்டிவகைப் பட்டியல் இன்று நமக்கு உணவு ஆகும் என்றோ, சொல்லே அனுபவம் என்றோ எண்ணுவது பழமைக்கு அடிமைத்

தனம் என்ருல், அதைப் போலவே பாகுபாடின்றி பழைய தனைத்தையும் ஒரு மொத்தமாய் ஒதுக்கித் தள்ளுவதும், கண்மூடித்தனமாய் எதிர்ப்பதும் வேறுவித அடிமைத் தனமேயாகும். சொல்லிற்கும் பொருளுக்கும், சின்னத் திற்கும் அது குறிக்கும் உள்ளுணர்வுக்கும் இடையே உள்ள தொடர்பையும் வேறு பாட்டையும் நாம் நன்று புரிந்து கொண்டபின், நாம் புத்தம் புதிய மனதுடன் பகவத் கீதையை அல்லது சங்கார் நூல்களை மீண்டும் மீண்டும் பயில்வதன் மூலம் உண்மையான முன் னேற்றம் காணுவோம்.

ஏனெனில், இந்திய மரபில் முன்னேற்றம் என்பது ஒரு திசையில் நீளுவது மட்டுமின்றி சுற்றிச் சுற்றி மேன் மேலும் வளர்வதாகும். உணர்வே இந்தச் சுழன்ரேங்கும் வளர்ச்சிக்கு நிரந்தரமான நடுத்தூண். காலங்கடந்த பரலோகத்தில் வேரூன்றி, இகலோகத்தில் அன்றும் இன்றும் மலராய்க் கனியாய்த் தோன்றும் மகான்கள் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாகத் தோன்றினுலும் அவர்களைப் பழமை காரணமாய் இகழலாமா? மானிடர் களால் அன்று அடையப் பெற்றதும் இன்றும் அடையக் கூடியதுமான யானற்ற ஞான நிலைக்குச் சான்று களாகவும் வழி காட்டிகளாகவும் நாம் அவர்களை வரவேற்க அல்லவா வேண்டும்? வியவகாரிகம், பரமார்த் திகம், இம்மை மறுமை, ஆகிய இரு உலகிலும் ஒரேசமயம் வாழும் உரிமையுள்ள புண்ணியவான்கள் அவர்கள். அத்தகைய ஈருலக வாழ்வுரிமையை எய்தியபின், ரமண மகரிஷி காலம் கடந்த நிலைக்கும் காலத்துக்குட்பட்ட நிலைக்கும் இடையே நடமாடும் மரபை நீடித்துப் புனர் நிர்மானிக்கும் பணியில் தன்னிச்சையாய் ஈடுபட்டார்.

தொன்றுதொட்டுத் தொடர்ந்து வந்த இந்தத் திருக்கூட்ட மரபில் அவர் தமக்கு வாய்த்த பங்கைப்பணிவுடன் ஏற்றுப் பேராற்றலுடன் நிறைவேற்றினர். தமது ஆன்மிக அதிகாரத்தைப் பயன்படுத்தி, பழைய நூல்களை இக்காலத் தேவைக் கேற்பச் சுருக்கித் தந்து, அவற்றை ஜாதி, மதம், உயர்வு—தாழ்வு என்ற பேதமின்றி ஆன்மிக ஆராய்ச்சியில் ஆர்வமுள்ள அனைவருக்கும் உதவுமாறு தாம் வகுத்த செயல் முறைக்கு ஆதாரமாய்ப் பயன் படுத்தினர்.

1909-ம் ஆண்டிலேயே அருணசல முதலியார் என்பார், சாது நிச்சலதாஸ் இந்தியில் இயற்றிய "விசார சாகரம்" என்ற நூல் மிக நீண்டும் பொருள் விளங்காமலும் இருப்பதாகக் கூற, அவர் வேண்டுகோளுக் கிணங்க மகரிஷி அந்நூலினின்றும் சில பகுதிகளைப் பொறுக்கி வரிசைப்படுத்தி ஒரு சின்னஞ்சிறு நூலாய்த் தொகுத் துதவினர். "விசார மணிமாலை" என்ற இந்தத் தொகுப்பே தொடர்ந்து பல பதிப்புக்களில் வெளியிடப் பட்டுள்ளது. இந்த வின-விடையில் அத்வைத விசாரணை, அனுபவம் இவற்றின் அடிப்படைக் கேள்விகளும் பதில்களும் தெளிவாகவும் திருத்தமாகவும் காணப் பெறுகின்றன.

வடமொழிப் பரிச்சயமற்ற ஓர் அன்பருக்காக வேண்டி, ஆதி சங்கரரின் விவேக சூடாமணிக்கு ஓர் நீண்ட பொழிப்புரையை மகரிஷி எழுதியதோடுமட்டு மின்றி அதற்கு முன்னுரையாகச் சுருக்கம் ஒன்றையும் வழங்கினர். அம் முன்னுரையே ஆதிசங்கரரின் போதனை முழுவதையும் திரட்டி முறைப் படுத்தி வழங்கும் சிறு நூலாக அமைந்துள்ளது. மற்றும் சங்கரர் வசன

நடையில் அருளிய திருக் திருசிய விவேகம், செய்யுளால் அருளிய தக்ஷிணாமூர்த்தி தோத்திரம், ஹஸ்தாமலகம் போன்ற வேறு பல சிறு நூல்களையும் மகரிஷி தமிழில் விருத்தங்களாக மொழி பெயர்த்துள்ளார். சங்கரரின் "ஆத்ம போத"த்திலுள்ள 68 பாடல்களையும் தமிழ் வெண்பாக்களில் மொழி பெயர்க்கும் பணியை 1948-ஆம் ஆண்டில் செய்து முடித்தார். விருபாட்ச குகை வாச நாட்களிலேயே அச்சிறந்த சிறு நூலை விரும்பிப் படித்து வந்த பின்னர், நீண்ட விருத்தங்களாய் அமைந்த தமிழாக்கமொன்றைக் கண்டதும் அச் சிறு நூலை மூலத்தையொட்டிச் சுருக்கமாய்த் தமிழில் வெண்பாக் களாய் வடிக்க ஆவல் கொண்டிருந்தார். முமுட்சுவின் சந்தேக நிவர்த்திக்கான ஒப்புமைகளையும் வாதங்களையும் கோத்துக் கொடுக்கும் இப் பாடலின் உட்கருத்து இது தான் :— சமைத்த உணவைப் புசிக்கும் மானிட வர்க்கத் தினருக்கு நெருப்பு தேவை; ஆன்மிகப் பசியைத் தீர்க்கவோ ஞானத் தீ ஒன்றே இன்றியமையாத இறுதிச் சாதனம் ஆகும். கர்மம், பக்தி போன்ற பிற சாதனங் கள் எல்லாம் குறிப்பிட்ட இந்த விசாரண நிலைக்குக் கொண்டு வரவே ஏற்பட்டவை. இங்கிருந்துதான் உறவு—கோல் நட்டு உணர்வு கயிற்றினால் உள்ளதை உள்ளபடி கண்டும் விண்டும் உண்டும் களிக்கும் உண்மை வாழ்வு தொடங்குகிறது.

ஆகம நூல்களினின்றும் மொழிபெயர்ப்புக்கு உரிய பகுதிகளாக மகரிஷி பொறுக்கியவை சிவபெருமான் அன்னை பார்வதிக்கும் மைந்தன் குகனுக்கும் அருளிய உபதேசங்களே ஆகும். ஏனெனின் இங்கு ஞானமே போதனைப் பொருள்; மாணவர்களோ முற்றிலும் தகுதி

வாய்ந்தவர், அன்பிற்குரிய அணுக்கத் தொண்டர். ஆகவே தான் பூர்வாங்கப் படிகளான நியமங்களும் வழி பாட்டு முறைகளும் ஒரு மொத்தமாய் ஒதுக்கப் பட்டுள்ளன :

தெய்வமோ வேதமென தீயிற்செய்
வேள்வியோ
செய்வகை யிற் சேர் பலவான தட்சிணையோ—
எவ்வகையும்
இங்கில்லை நின்மலமாய் எங்கு முகம் ஆர்ந்த
தாய்த்
தங்கு ஆன்ம விஞ்ஞானம் சார்....
பலவிதமாம் சித்திகளும் பாதாள முன்பாய்
இலங்கும் இர சாயனமும் என்ப—உலகில்
பிரத்தியட்ச மாகவே பெற்றாலும்

பற்றாதே, விட்டுத்தொலை, என்று வற்புறுத்தப்படு கிறது.

பகவத் கீதையின் எழுநூறு சுலோகங்களினின்றும் 42 சுலோகங்களை மட்டுமே பொறுக்கிப் புது வரிசையில் கோத்துத் தமிழாக்கப்பட்டதே ரமணரின் **கீதா சாரம்.** பண்டைய நூலின் நிரந்தரச் சாற்றைப் பிழிந்தெடுத்து இக்கால மக்கள் எளிதில் ஏற்றுப் பயன்படுத்துமாறு சுருக்கமான, கவர்ச்சியான உருவில் வார்த்திருப்பதில் மகரிஷியின் கைத் திறனைக் காண்கிறோம். புலவர் களும், கவிதா ரசிகர்களும் கீதை முழுவதையும் படித் தறியக் கடன்பட்டவர்கள். கற்பவை மட்டும் கற்று அதன்படி நடக்க முயலும் சாதாரண மக்களுக்கோ **கீதா சாரம்** ஓர் வரப் பிரசாதமே ஆகும். ஏனெனில் வெளி

யுலகிலே நல்லுணர்வுடன் உறவாடி வாழவும், மெய் யுணர்வாகிய பேரின்பப் பெருங்கடலில் ஆடிக்களிக்கவும், ஆன்மிகப் பயிற்சியில் உறுதுணையாகவும் வழிகாட்டி யாகவும் அச் சிறு நூல் அமைந்துள்ளது. சாதகர்கள் ஆன்மிகப் பாதையில் முன்னேற முனைந்து நடப்பவர் கள்; அவர்கள் கீதையின் பதினெட்டு அத்தியாயங் களையும் நெட்டுருப்போட்டுத் திரும்பத் திரும்பப் பாராயணம் செய்வதில் பயன் யாதும் இல்லை. ஆனால் எந்த எந்தப் பகுதிகளை உடனடியாய்ப் பயின்று நடை முறையில் அனுசரிக்கக் கூடும் என்பதுதான் அவர்கள் கேள்வி. ஒவ்வொருவரும் திட்டவட்டமாய். உடனடி யாய், வாழ்க்கை வழியாய்ச் செயல்படவே கிருஷ்ண பகவானின் போதனையும் நட்பும் நமக்குக் கிடைத்துள்ளன என்று வற்புறுத்துவதில் மகரிஷி ரமணர் காந்திஜியுடன் சேர்ந்தவர் தாம். (ஒரு விசித்திர ஒற்றுமை. காந்திஜியின் *கீதா பிரவேசிகா* என்ற சுருக்கமும் 42 சுலோகங்கள் கொண்டதே. தம்மோடு சிறைவாசம் செய்த மகன் ராமதாஸ் படித்துப் பயன் பெறுமாறு 1932-ம் ஆண்டில் எரவாடா சிறையில் அதனைத் தொகுத்தார்).

மகரிஷியும் மகாத்மாவும் தனித்தனியே கீதையி லிருந்து தேர்ந்தெடுத்தவற்றில் ஒன்பது சுலோகங்கள் பொதுவானவை. அவையாவன: VI. 29, IX. 22, X. 10, XII. 54, XI. 15, XIII. 27, XVIII. 61, 62. இந்த ஒன்பதும் ஆழ்ந்தறியத் தக்கவை. காந்திஜியின் கடைசி பத்து சுலோகங்கள் பதினோராம் அத்தியாயத்தில் அருச்சுனன் பக்தி பரவசனாய்ப் பரமாத்வைத் துதிப்பவை. இவை பக்தியும் சிரத்தையும் வலுப்பெற்று நாராயணனை உளமாற வழிபடும் வகையில் அவனே பலராய்த்

தோன்றும் எண்ணிறந்ம ஜீவன்களுக்கு இங்கேயே இப் போதே தொண்டு புரியும் ஊக்கமளிக்கவே தொகுக்கப் பட்டவை. ஆனால் மகரிஷியின் *கீதா சாரம்* வலியுறுத்து வது மக்கள் சேவையில்லை; ஞானமும் பக்தியுமே ஆகும். கடமையுணர்ச்சி, சமூகத் தொண்டு, பரோபகாரம் இவை யெல்லாம் அறிவு வளர்ச்சியின் விளைவுகளே அன்றி காரணம் ஆகா. மெய்யுணர்வாம் கிருஷ்ணனே உண்மைப் பொருள். உலகும் உயிர்களும், அறிவு, உறவு இரண்டும் அவனே; அவனது தோற்றங்களே. எனவே எங்குமே, எல்லாமுமே கண்ணன் மயம்; அருச்சுனனும் உலகமும் அவனன்றி வேறன்று.

கீதா சாரம் ஞானத்தையும், *கீதா பிரவேசிகா* சேவையையும் வற்புறுத்தினாலும் இவ்விரு நூல்களுமே பகவத் கீதை இன்றையத் தேவைக்கு எவ்வளவு பொருந்தும், இன்றைய மக்களுக்கு எப்படிப் பயன்படும் என்பதை நன்கு விளக்குகின்றன. பிரபஞ்ச அமைப்பு, மனித இயல், சமூக அமைப்பு, சாவுக்குப் பின் வாழ்வு முதலியவற்றைப் பற்றிய பழங்கொள்கைகளை, காலத்தை யொட்டிப் போகிற போக்கில் வந்து சேர்ந்த கூளங்களை அகற்றி, ஈவு இரக்கமின்றிக் கொம்புகளைக் கழித்துத் தள்ளி, கீதையுள் புதைந்துள்ள கற்பகத் தருவை, தனக மாமணியை எடுத்துக் கொடுப்பதில் இவ்விரு சிறு நூல் களுக்கிடையில் அதிக பேதமில்லை. நன்கு ஆராய்ந்து ஒழுங்காய் நடைபெறும் வாழ்க்கையில், பல்வேறு நிகழ்ச்சிகள், அனுபவங்கள் மூலம் ஆன்ம வளர்ச்சியை யும், மக்கள் நலனையும் துரிதப் படுத்தும் ஆவலைப் பெருக்கி வழியையும் காட்டும் முனைப்பில் இரு நூல்களும் கண்ணும் கருத்துமாய் உள்ளன. பயபக்தியுடன் படிக்க-

வேண்டிய ஓர் புனித நூல் என்றோ அல்லது நற்சுவை நல்கும் கவிதை என்றோ சுட்டிக் காட்டி எட்டி நில்லாது, ஆன்மீகப் பயிற்சி முறையாகவும், யானற்றியலும் பணி, அன்பு, மெய்யுணர்வு ஆகிய இம் மூன்றினையும் இணைக்கும் சாதனைத் திட்டமாகவும் கீதையைக் கருதி இவ்விரு சுருக்கங்களும் கையாளுகின்றன.

ரமணரின் *கீதா சாரம்* (அதிலும் சாதுர்யமாய் இழைத்துக் கோத்துள்ள தமிழ் வெண்பா வரிசை) பெருக்கெடுத்து உயிர்த் துடிப்புடன் ஓடும் ஆருய்ப் பாய்கிறது. இந்த வேகத்தில் ஒரு நிறைவும் முழுமையும் உள்ளன. அன்னை கீதையின் இதயத்துடிப்பு, அது உலகுக்கு உணர்த்தும் பரம ரகசியம் தெளிவாய்த் திருத்தமாய் ஒலிப்பதைக்கேட்கலாம். வீட்டின்பம், பொறுப்புச் சுமை ஒன்று மற்றொன்ருய் மாற, ஜீவனும் பரமனும் இரண்டற ஒன்ருக, ஆன்மிக இதயம் மனிதனுக்குள் கச்சிதமாய் ஒட்டுப் பெறுவதை—இந்த நிகழ்ச்சி நம் கண்ணெதிரில் நிகழ்வதை—காண்கிறோம். இந்த மருத்துவச் செயல் ஈரடிக் காப்புடன் துவங்குகிறது

பார்த்தன் தேரில் நல் வார்த்தை யால் அவன்
ஆர்த்தி போக்(கும், அருண் மூர்த்தி காக்கவே.

சகல உயிர்களுள்ளும் முழுமையுணர்வாய் ஒளிரும் பரமபுருஷன் கிருஷ்ணனே உலகைக் கடந்து நின்றும், மறைத்தும், உணர்த்தியும், ஆட்டுவித்தும் செயல் படுகிருன். இங்கு அவன் நண்பனுய்த் தோன்றி, இருளையகற்றும் ஒளியைப் போல துன்பத்தை இன்பத்தால் அகற்றி நமது வாழ்வுக்கு மீண்டும் முழுமை தந்து ஞான மூர்த்தியாய் அருள்புரிகிருன். கணபதி வேறு,

அவன் வேரு? காப்புக் கடவுளும் அவனே, ஞானக் கடலும் அவனே.

மாயைக்கு இப்பால் நாம் நன்கறியும் "நான்" என்ற ஒருவனுக்கும், மாறி மாறி மறைந்து தோன்றி மாயத் திரைக்கு அப்பாலும் இப்பாலும் உள்ள "நான்" என்ற மற்றெருருவனுக்கும்—நம்முள் இயங்கும் இந்த இரு "நான்"களுக்கும்—இடையே நிகழும் அன்புப் போராட்டத்தை நாம் *கீதா சாரம்* என்ற நாடகத்திலே நடித்துப் பார்க்கிறேம். கதையமைப்பிலும் நோக்கத்திலும் *கீதா சாரமும் ராச லீலையும்* வேறல்ல. பேரின்ப ரசத்தை நன்கறிந்த கோபியர்கள், அருள் உருவாம் மோகனக் கடவுளைக் கண்டாலே போதும்; அன்போடு அன்பாய் அவனுடன் ஒன்றி இன்புறுகிருர்கள். ஆனுல் நாமோ (அருச்சுனனைப் போல் அலுவல், தர்க்கம், வாதம் முதலிய கொடுமைகளுக்கு அடிமையானவர்கள்!) தகுதிக் குறைவான மாணவர்—இப்படி உடனுக்குடன் வழங்கப் பெறும் ஐக்கியத்தை ஏற்று மகிழப் பின் வாங்குகிறேம். அருளுருவான ஒளியும், ராமபிரானைப் போல் வீரச் செயல் புரிந்தாக வேண்டும், அல்லது கண்ணனைப் போல் ஒரு பாடம் நடத்த வேண்டும்; வெறும் அழகால் மட்டும் நம்மை ஆட் கொள்ள முடியாது. மற்றெரு புராணத்தில் சிவபெருமான் அருளியதே *உபதேச சாரம்* ஆனது போல், இங்கே கிருஷ்ணன் கற்பித்த பாடத்தின் ரத்தினச் சுருக்கமே *கீதா சார*மாக உருப்பெறுகிறது.

உண்மையான மானிட வாழ்வு என்பது இடைவிடாது கற்றுணர்தல், உணர்வுத் திறன் வளர்தல், வளர்ந்து முதிர்ந்து "உணர்வே எங்கும் நிறைந்த நாமாய் உளம்" என்ற உண்மையில் அடங்குதல் ஆகும்.

மனம், உடல், வெளி உலகம் இம் மூன்றையும் அறிகிற க்ஷேத்திரஞனை நம்முள்ளே தேடி இன்புருவாய்க் காண்பதே ஞான நெறியில் முதற்படி. (சுலோகம் 2, 3 = கீதை அத் 13, சு. 1, 2). அறிபவனையும் அறியப் படுவதையும் பிரித்துப் பார்க்கும் போது, மனமும் அறிபடு பொருளாகவே தெரிவதால், மனமானது தன்னைவிட உயர்ந்த ஒரு சக்தியிடம்—மனத்தை அறியும் ஆனால் மனத்தால் அறிய முடியாத சக்தியிடம்—சரணடைய வேண்டியிருக்கிறது. இந்தப் போற்றலே "உள்ளது நான்" என்ற தூய மெய்யுணர்வு, எல்லா உயிர்களிலும் இன்புருவாய் உறையும் பரம புருஷன்.

நான்காம் சுலோகம் (= அத். 10, சு. 10) ஒன்றிலே ஆன்மிக அறிவின் சாரம் முழுதும் பொதிந்துள்ளதாக மகரிஷி கருதுகிறார் :

(4) ஆன்மாக்கள் யாவின் அகத்தும்
அமர்கின்ற
ஆன்மாயான் ஆவன் அருச்சுனா—ஆன்
மாக்கட்கு
ஆதியொடு மத்தியமும் அந்தமுமாம்
இவைகள்
ஆதியாம் யானே அறி.

இந்த "நான்" என்ற உள்ளுணர்வே எல்லா உயிர்களிலும் உறையும் இறைவனிடம் நம்மை இட்டுச் செல்லும் ஆட்சியாற்றல் வாய்ந்த மோப்பமாகிறது. கிருஷ்ணன், புத்தன், ஏசு, அல்லது பரமாத்மா என்று வெவ்வேறு பெயரிட்டாலும் இந்த இறைவன் ஒருவனே யாம்.

ஐந்திலிருந்து 9-வரை உள்ள சுலோகங்கள் (அத். 2, சு. 27, 20, 24, 17, 16) அழியும் உடலுக்கும் அழி வற்ற உணர்வுக்கும் இடையே தோன்றும் வேற்றுமைகளை வலியுறுத்துகின்றன. சாதகன் "நான் உடல் அல்ல, உணர்வே" என்பதை நன்கு அறிதல் இன்றியமை யாதது. உடலழிவை ஏற்பது சூரியனை நோக்கி நம்மை அச்சுறுத்தும் நிழலைப் பின்புறப்படுத்தி மறைத்து மறப்ப தாகும் மனமும் உலகும், அறிபவனும் அறிபடுபொருள் களும் ஆன்மா அல்ல; அவை "க்ஷேத்திரன்" (செயற் களன்) மட்டுமே. உணர்வாம் ஆன்மாவோ "க்ஷேத் திர"த்தை உள்ளடக்கியும் கடந்தும் நிற்கிறது.

பத்து முதல் 13 வரை (XIII. 32, XV. 6, VIII. 21, XV. 5) உள்ள சுலோகங்கள் மெய்யுணர்வின் மாண்பை விளக்குகின்றன; ஆன்மா விண்ணைப் போல எங்கும் நிறைந்து எதிலும் ஒட்டாது கதிரோன் ஒளியை ஒளிர் விக்கும்; அதுவே பரம பதம், அதை அடைந்தார் மடங் கார்; இருமையற்ற ஞானிகள் வாழும் அழியா வீடு; இவ் வுணர்வே சகல ஜீவராசிகளையும் உள்ளிருந்து இயக்கு கிறது; அனைத்துயிர்க்கும் பொதுவானது; அதே சமயம் இறைவனையும் மக்களையும் பிணைக்கும் பிணைப்பும் அதுவே என்று அறிவுறுத்துகின்றன.

இது வரை கொள்கை, சித்தாந்தம், படிப்பினை சுட்டிக்காட்டி விளக்கப்பட்டுள்ளன. ஆனால் அதைச் செயலாக்கி அனுபவ பூர்வமாய் உணர மேலும் பல சாதனைகள் தேவையாகின்றன. தன்னலம் கருதாத தொண்டினால் மனத் தூய்மை, தன்னை மறந்த வழி பாட்டால் பக்திப் பெருக்கு, உள்ளும் புறமும் உணர்

மையே நாடிக் காண்பதால் தெளிவு, இவை மூலமே நாம் முன்னேற வேண்டும். குறிக்கோளைக் காட்டி பாதையை வகுத்து வெளிச்சத்தையும் விரைந்து செல்லும் மோட்டார் வண்டியையும் தந்த பின், முறை தவறாது முன்னேற திசை திருத்தும் சக்கரத்தைப் பற்றி யும் ஞான நல்லாசிரியர் நினைவூட்டுகிறார். முன்னோர் வகுத்த சாத்திர விதியைக் குறிப்பிடும் பதினான்காம் சுலோகம் (XVI. 23) ஆழ்ந்த சிந்தனைக்கும் வாதப் பிரதி வாதத்திற்கும் இடமளிக்கிறது. "ஆன்மப் புரட்சி" என்று சொல்லிக்கொண்டு வழி வழி வந்த சமூக நெறி யினின்றும் விலகி, ஏறுமாறான அபாயமிக்க தனி வழியில் நடப்பதைக் கண்டிக்கும் கடுமையான எச்சரிக்கையாக இச் சுலோகம் அமைந்துள்ளது. இந்தச் சுருக்கமான, செயல்முறைப் பயிற்சிக்கான பாடவரிசை போன்ற கீதா சாரத்தில் இந்த ஒரு சுலோகம் தான் ஒழுக்கத்தைப் பற்றிப் பேசுகிறது.

"எவன் நூல் விதியை இகந்து இச்சை ஏவும்
அவ வழி தன்னை அடுப்பான்—அவன்
என்றும்
சாரானே சுத்தியொடு சாந்தி சுகத்தினையும்
சேரானே முத்திச் சிறப்பு."

தேவ-அசுரப் பண்புகளை விவரிக்கும் பதினாறும் அத்தியாயத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள ஒரே சுலோக மும் இதுவே ஆகும். இவ் வத்தியாயத்திலிருந்து காந்திஜி கூட எந்த சுலோகத்தையும் எடுக்கவில்லை; ஏனென்றால் இந்தப் பகுதியை ஆத்யாத்மிகமாக— அவரவர் தமக்குள்ளே தேவகுணம் அசுர குணம்

இரண்டையும் கண்டு—பொருள் கொள்ள வேண்டியது. ஆனால் பிறரிடம் உள்ள அசுரனையும் தன்னுள் தேவனை யும் மட்டுமே கண்டு களிக்கும் தற்கால மனிதன் அதைப் படித்து விபரீதமாய்ப் புரிந்து கொண்டு அகந்தையை வளர்க்கலாம். சாதகன் அசுரகுணமெடுத்து காமக்குரோத லோபங்களைப் பின் பற்றினால் அவனது ஆன்மிக முன் னேற்றம் தடைபட்டு விடும் என்று மகரிஷி இங்கே எச் சரிக்கிறார். நரகவாயில்களான புலனிச்சை, சினம், பேராசை இம் மூன்றையும் தவிர்த்தல் வேண்டும். கட்டுப் பாடு, தன்னடக்கம், கீதை உபதேசிக்கும் கர்மயோகம் இவையே "நூல் விதி" (சாத்திரம்) என்பதன் பொருள். ஒருவன் முடிவான முக்தி நிலையை, தானாய் இயல்பாய் நலம் புரியும் பெரு நிலையை அடையும் வரை பல நுட்ப மான சோதனைகளுக்கு ஆளாகிறான்; தெய்விகக் காட்சி காணவும், புகழ் எய்தவும், பிறர் மீது அதிகாரம் செலுத் தவும் ஆசைகள் எழும்புகின்றன. உண்மையான சாதகன் பணியை வளர்க்கும் துணிவைப் பெறுகிறான். அகந்தை யறலே (யான் இன்மையே) வீடும் வழியும் என்பதை அவன் அறிகிறான்.

ஆசை, கர்வம், அதிகாரம் ஆகிய அசுரர்கள் வசப் படாமல் தப்புவதற்கான நேர் வழியை சுலோகங்கள் 15, 16 (XIII. 27, XL. 54) குறிப்பிடுகின்றன. எல்லா உயிர் களிலும் ஒளியும் உணர்வுமான இறைவனைக் கண்டு அன்னியம் எண்ணாத அன்புடன் பேணுவதே இந்த வழி யாகும்.

சுலோகங்கள் 17, 18 (XVIL. 3, IV. 39) :— தன்னுள் ஒளிந்திருக்கும் அசுரனைக் கண்டபின்னரே, மற்றவர்

களிடம் உறையும் கடவுளைக் காணும் தகுதியை ஒருவன் பெறுகிறான். பிறருடன் ஒன்றிப் பரிந்து, அன்பு பூண்டு, தொண்டு புரியும் இயல்பு பெறுகிறான். அன்பு மயமான அறிவே மெய்யானது; பொருள் நிறைந்தது; ஆர்வம் மிக்கது. பரஸ்பரமானது. உணர்வு என்பது பிரித்தெடுக்கக் கூடிய ஒரு தனிப் பொருள் இல்லை. யோகியானவன் வீரன், பயிற்சி மிக்க பயில்வான். அவன் அனைவரிடமும் இறைவனைக் காண்கிறான். உணர்வாய்க் காண்கிறான், உயிருக்குயிராய்க் காண்கிறான். இவ்வாறு ஒவ்வொரு உயிரிடத்தும் இறைவனைக் கண்டு தொண்டு செய்யும் மனப்பான்மையை சிரத்தை மூலமே நீடிக்கச் செய்யல் வேண்டும். எங்கும் கடவுளே என்ற நம்பிக்கையை நடைமுறையில் செயலாற்றிச் சோதித்து உறுதி பெறுவதே சிரத்தை எனப்படும். சகல உயிரிடத்தும் குடிகொண்டுள்ள கடவுளை, அன்புப் பணிகளால் இறுகப் பிடித்து விடமுடியும் என்கிற நம்பிக்கையே—சிரத்தையே—புலன்களின் பிடியைத் தளர்த்தி தூய ஆன்ம விசாரத்திற்கு ஊக்கம் ஊட்டுகிறது. சிரத்தையுள்ளோனே புலன்களையடக்கி மெய்யறிவு மேவி மேலான சாந்தியினை விரைவில் எய்துவான்.

சுலோகங்கள் 19-21 (X. 10, 11, V. 16) கூறுவதாவது ஆன்ம விசாரம், பக்தி, தொண்டு இவற்றை இடைவிடாது ஆற்றி வரும் சாதகனும் அருள் ஒளி தோன்றும் என்பதே. மேன்மேலும் பெருகி வரும் உணர்வும், பிறரை நன்கறிந்து தொண்டு செய்யும் திறனும் அருள் கிட்டியதற்கு அறிகுறிகளாம். இந்த உணர்வாகிய பரிதியொளியில் உணர்வின் ஆற்றலால் உடல், மனம், புத்தி ஒன்றிலொன்று உயரும் வரிசைக்

கிரமத்தை அறிந்துகொண்டு நிஜ சத்துருவான ஆசையை ஜெயித்து விடுகிருன். (சுலோகங்கள் 22, 23 = III. 42, 43).

சத் சங்கத்தால் (ஞானிகளின் சேர்க்கையால்) சாதகர்களுக்கு விளையும் பெரும் பயனை சுலோகங்கள் 24, 25, 26 (= IV. 37, 19, V 28) விவரிக்கின்றன. ஆசை, சினமற்று நிட்காமிய கர்மம் புரிந்து ஞானத்திலே கர்மத்தை அகர்ம நீருக்கும் முனிவர்களின் ஆற்றலை இச் சுலோகங்கள் எடுத்துரைக்கின்றன. இத்தகைய ஞானிகளின் உதவியால் ஞான நாட்டமுள்ளவன் அலையும் மனதை ஆன்மாவிற் சேர்த்து சாந்தி அடைவான் (சுலோகம் 27, 28 = VI. 25, 26).

பொறி, உள்ளம், மதி இவற்றைத் தூய உணர்வால் ஒடுக்கி, அவ் வுணர்வு நிறைந்து நிலைபெற முக்தியைத் தேடினுல், அம் முனைப்பே முக்தியாய் அமையும். முக்தியே நமது உண்மை இயல்பு; ஆனுல் அந்நிலையை உணரவொட்டாமல் தடுப்பது ஆசை, அச்சம், வெறுப்பு என்பதை அறிந்திடுவான் (சுலோகம் 29 = V. 28). இவ்வாறு கண நேரம் நுகர்ந்த தூய உணர்வை நிரந்தரப் பிரக்ஞையாக நிலை நிறுத்துவதற்கான பயிற்சி, ஒழுக்கம் யாது? சகல உயிர்களிலும் தன்னையும், தன்னில் சகல உயிர்களையும் கண்டு, அனைத்தும் ஒன்ருய், பிறரின் சுகதுக்கங்கள் தனது சுக துக்கங்களே என்ற சம நோக்குடன் துய்ப்பவன் தூய உணர்வில் ஒன்றியவனுவான் (சுலோகம் 30 = VI. 29). தம்முள்ளும் பிறருள்ளும் உறையும் இறைவனை அன்னிய சிந்தனை அணுவும் இல்லாமல் வழிபடுவோர் முழுமையான மெய் யுணர்வு எய்தி, பிறரின் யோக க்ஷேமங்களைத் தாங்கும்

மன உறுதியும் பரிவும் வலிமையும் பெறுவார்கள் (சுலோகம் 31 = IX. 22). எங்கும் இறைவனைக் காணும் ஞானி அன்பிலும் ஆற்றலிலும் இறைவனுக்கு நிகராக, எங்கும் நானே, "யாவும் வாசுதேவ சொரூபமே" என்று உணர்பவன் இறைவனுடன் பரஸ்பர பிரியம் கொள் கிறான் (சுலோகம் 32 & 33 = VII. 17, 19).

"ஸ்திதப் பிரஞன்" (மெய்யுணர்வில் நிலைத்து நிற் பவன்) யாவன்? நமது ஆன்மீக வளர்ச்சியை அளக்கும் கஜக் கோல் யாது? இந்தக் கேள்விகளுக்கு கீதை தரும் விடையின் தொடக்கத்தையும் முடிவையும் 34, 35 (= II 55, 77) சுலோகங்களில் காணலாம்.

ஞானியானவன் கர்மத்தைக் கைவிடவேண்டிய தில்லை. ஆனால் முழுதும் பற்றின்றியே செயலாற்றக் கூடும். அவன் புரியும் கர்மம் அவனைப் பொருத்தவரை "அகர்மம்" ஆகிவிடுகிறது; ஏனெனில் பந்தமுறும் மனப் பான்மை அவனிடம் இல்லை. இக் கருத்து 36 முதல் 40 வரையுள்ள சுலோகங்களில் (= VII. 15, XIV. 25, III. 17, 18, IV. 22) விளக்கப்பட்டுள்ளது,

ஈசன் எல்லா உயிர்களுள்ளும் இதயத்திலே என்றும் திகழ்கிறான்; அவனைத் தஞ்சமடைந்தோர் அவனருளால் சாந்தியும் ஈறில்லாப் பரமபதமும் பெறுவர் என்பதைக் கடைசி இரண்டு (41, 42) சுலோகங்கள் (= XVII. 61, 62) வலியுறுத்துகின்றன.

மாற்றி மாற்றி உலகை உணர்வாகவும், உணர்வை உலகாகவும் கண்டு வீட்டின்பம் நாடும் "நான்", பொறுப் பேற்று அறம் புரியும் "நான்" இரண்டும் பின்னிக்

கிடப்பதை அறிந்து, நமக்கும் பிறருக்கும் இடையே நின்ற சுவரைத் தகர்த்தெறியும் முறையை நாம் இங்கே பயில் கிறோம். நமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் மறை கின்றன; கர்மம் சுயநலமின்றி நிகழ்வதால் விதையாய் வளராது பழமாய் இனிக்கிறது; இன்றையப் பொதுத் தேவையைப் பூர்த்தி செய்யும் அன்புப் பணியாய் அமை கிறது. இன்ப அலையாம், இயற்கை விளைவாம் அன்புப் பணி, நமது முழுமையை வளர்க்கிறது. இத்தகைய கர்மம் அகர்மமாய் முடிகிறது; ஏனெனில் இங்கே "செய்பவன்" என்று தனித்து நிற்கும் ஒருவன் இல்லை. நாம் புரியும் கடமையே கண்ணனின் திருவருளால் ஆனந்த மயமாய், உணர்வின் உயிராய் மாறி விடுகிறது. இறைபணியே சுதந்திரத்தின் பொருளும் பயனும் என்று உணர்கிறோம்.

உள்ளதும் நடப்பதும் ஒன்றாய், நித்தம் புதிதாய், நன்மையே பயக்கும் நல்வாழ்வுக்கான திறவுகோலாக விளங்குகிறது *கீதா சாரம்.* வழி வழி வந்த பழைய ஏற் பாட்டின் இதயத்தை உயிர்த்துடிப்புடன் புதிய ஏற் பாடான ரமண நூற்றிரட்டில்—இளமை மிளிரும் புதிய உடலில்—புகுத்திப் பதித்து இயங்க வைக்கும் அதிச யத்தைக் காண்கிறோம்.

அத்தியாயம் 12

உரையாடல்கள்

ஆ. தேவராஜ முதலியார் ஆங்கிலத்தில் எழுதிய "பகவானுடன் நாள் தோறும்" (மார்ச் 1945 முதல் ஜனவரி 1947 வரை) எனும் நூலும், சூரி நாகம்மா எழுதிய "ரமணாச்ரமக் கடிதங்கள்" (நவம்பர் 1945 முதல் ஜனவரி 1950 வரை உள்ள 50 மாத காலத்தில் எழுதப் பட்டவை) என்ற தெலுங்குக் கடிதத் தொகுப்பும் பல சுவையான வாழ்க்கைக் குறிப்புகளையும் மகரிஷியின் மதுர மொழிகளையும் உண்மையைப் பளிச்சென விளக்கும் போதனைகளையும் கொண்டவை. முனகல் வேங்கட ராமய்யா (ரமணானந்த சரஸ்வதி) என்பார் ஆங்கிலத்தில் குறிப்பெடுத்து வைத்து வெளியிட்ட "ஸ்ரீ ரமண மகரிஷி களுடன் உரையாடல்கள்" என்ற நூலில் 1935 முதல் 1939-ம் ஆண்டு வரை நிகழ்ந்த சம்பாஷணைக் குறிப்பு களும், ஆசிரமத்துக்கு வருவோர் கேட்ட கேள்விகளுக்கு மகரிஷி அளித்த விடைகளும் வியாக்கியானங்களும் நிறைந்துள்ளன.

இந் நூல்கள் உண்மை வழுவாது, சொன்னதைச் சொன்னபடியே எடுத்துக் கூறுவதோடு, பெரும்பாலும் மகரிஷியிடமே கொடுத்துச் சரிபார்க்கப்பட்ட வசனங் களைத் தாங்கி நிற்கின்றன. இவை அருண் மொழி

யமுறைதைச் சிந்தாது வழங்குவதோடு, அப்போதுள்ள சூழ் நிலையையும் நம் அகக் கண் முன் தோற்றுவிக்கின்றன. இந்த நூல்களைப் படிக்கும்போது மனிதரோடு மனிதராய் மகரிஷி பழகிய சகஜ பாவத்தை உணர்கிறோம். ஆன்ம விசார அடிப்படைத் தத்துவம் குறித்தும், சமயத்தை யொட்டி விசித்திரக் குழப்பங்கள், சிக்கல்கள் குறித்தும் அவர் பட்டப் பகல் வெளிச்சத்தில் பொது அறிவுப் பார்வையால் உண்மை விளக்கும் சமத்காரத்தைக்கண்டு வியக்கிறோம்.

உலகை பிரும்மத்தினின்றும் (மெய்யுணர்வினின் றும்) தனித்தோ பிரித்தோ காண்பது அசத்து, அதாவது பொய். ஆனால், ஜீவன் ஈசன் இரண்டுடனும் தோன் றும் பிரம்மத்தின் தோற்றமாக உலகைக் காணுங்கால் உலகினும் ஒரு மெய்ம்மை இருக்கத்தான் செய்கிறது. உள்ளது உணர்வே யாகையால், உணர்விலிருந்தே உலகம் தனது உண்மையைப் பெறுகிறது. பொன் அல்லது கல்லைப்போல உணர்வொன்றே உண்மைப் பொருள்; ஆபரணங்கள் சிலைகள் போல. ஜீவன், கடவுள், உலகம் உருவங்கள். பிறரைப் போல ஞானியும் இந்த உலகைக் காணத்தான் காண் கிறான், அதனில் வாழ்கிறான், நடமாடுகிறான். ஆனால் அதனை அவன் ஆன்மாவினின்றும் தனித்து நிற்பதாகக் காண்பதில்லை, "மனம் உலகத்தில் உழன்று கொண் டிருப்பதால், அதனின்று அம் மனத்தை ஆத்மாபிமுக மாகத் திருப்புவதற்காக உலகத்தின் அநித்யத் தன்மையை சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. நம்மை நாம் உணர்தலே முக்கியம். ஆகவே சற்று திருந்தச் சொல்வோமானால், உலகத்துக்கு 'அநித்யம்' என்று

பெயர் சூட்டுவதைவிட, உணர்வு என்ற முறையில் நாம் என்று முளோம் (நித்தியமாயிருக்கிறோம்) என்பதே சரி."

உள்ள பொருள் உணர்வு ஒன்றே, உலக நடப் பெல்லாம் அதன் பிரதி பலிப்புத் தொடரே என்று வற் புறுத்துவதன் நோக்கம் செயலாற்றலில் ஊக்கமிழக்கச் செய்வது இல்லவே இல்லை; அதற்கு மாருக, செய்பவன் 'நான்' எனும் அகம்பாவத்தையும், தன்னலம் கருதிக் கண் மூடிச் செயல்களிலே இழுக்கும் இச்சையையும் தளர்த்துவதே நோக்கம். "ஞானத்தாலேயே கைவல்யம் கைகூடுமென்று கர்ம நீக்கத்தை உபதேசித்த சங்கரர் எத்தனையோ நூல்களையும் பாஷ்யங்களையும் எழுத வில்லையா? தேச முழுதும் யாத்திரை செய்து வாதங்கள் புரியவில்லையா? செய்கைகள் நம்மைப் பந்தப் படுத்துவ தில்லை. செய்பவன் 'நான்' என்றும் தவருன மனப் பான்மையே பந்தப் படுத்துகிறது. சலிப்பின்றி, 'நான்' என்னும் எண்ணமின்றி செயலாற்றிக்கொண்டிருத்தலே 'அகர்மம்'. ஞானியின் அமைதி தீவிர இயக்கமேயாகும். சும்மா இருத்தல் சோம்பரல்ல. பம்பரம் முழுவேகத் துடன் சுற்றும்போது அதன் இயக்கம் காணப்படுவ தில்லை. அவ்வாறே தான் வெளித் தோற்றத்தில் செய லற்றுக்கிடப்பது போற் காணப்படும் ஞானியும் இடை யருது இயங்கிக்கொண்டே இருக்கிருன்."

மேலும் மேலும் உணர்வுடன் ஒன்றி உணர்வாய் இருத்தல் என்பது சிந்தனையால் அறிய முடியாதது; அனுபவத்தினல் மட்டுமே உணரத்தக்கது. "தேகாத்ம புத்தியே துவைதம்; அஃதறலே அத்வைதம். உணர்வே

நாமாய் உள்ளதே அத்வைதம். நாம் வேறு உணர்வு வேறு என்பதே துவைதம். இவ் வேறுபாடும் கூடக் கற்பனையே தான். இதையே நம்மாழ்வார் கூறுகிறார் :

யானே என்னை அறிய கிலாதே
யானே என்றன தே என் றிருந்தேன்
யானே நீ என் னுடைமையும் நீயே
வானோர் ஏத்தும் எம் வானவர் ஏறே."

[என்னை நான் அறியும் முன் 'நான், எனது' இருந்தன. அறிந்தபின் உள்ளது நீ யொன்றே]

நமக்குப் பிடித்தோ பிடிக்காமலோ, தெரிந்தோ தெரியாமலோ, தூய உணர்வாய் உள்ளபடி உள்ளபோது நாம் அனைவருமே அத்வைதிகளாகவும், எண்ணம் பேச்சு செயல் நிகழும்போது துவைதிகளாகவும் இருந்து வருகிறோம். நமது வாழ்வின் இவ்விரு நிலைகளையும் விளக்குவதற்காக மகரிஷி மேடை நாடகத்தை விடப் பொருத்தமான உவமையாய்ச் சினிமாவை எடுத்துரைப்பது வழக்கம். "சினிமாத் திரையும், சலனச் சித்திரங்களும், அவற்றைக் காண்பானும், சினிமா மெஷினை இயக்குவோனும், அனைத்தையும் விளக்கும் ஒளியும், யாவுமே ஆன்மா ஒன்றே. ஆன்மா பிரதிபலிக்கும் ஒளி, மனதை வெளிச்சமிடுகிறது. சினிமாக் காட்சி முழு இருட்டிலும் தோன்ருது, ஒரே வெளிச்சத்திலும் தோன்ருது. இருட்டினூடே செலுத்தப்படும் ஒரு ஏகதேச வொளியிலேயே அது தோன்றும். அவ்வாறே உலகத் தோற்றம் தன்னையுணராமையாகிய அவித்தையிருளினூடே ஆன்மாவின் ஆபாஸப் பிரகாசத்திலேயே

தோன்றுகிறது. முழு இருளாகிய உறக்கம் முதலான நிலைகளிலும், சுத்தவொளி மயமாம் ஆத்மப் பிரகாசத்திலும் அது தோன்ருது. ஏகமாம் ஆத்ம ஸ்வரூபம் நாநாவாய்த் தோன்றல் அவித்தையினுலேயே. திரைப் படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவரும் திரையில் நடிப்பவரும், காண்பவரும் காணப்படுபவரும், எல்லாம் ஒரே வகைத் தோற்றமே. அதாவது மானசீகமான மனிதன் மானசீகமான வையகத்தைக் கண்டு கொண்டிருக்கும் மாயம்!

"ஸத்வம் என்பது ஒளி; ரஜஸே காண்பவன்; தமஸே காணப்படும் பொருள். இங்கே ஒளி எனப் பட்டது ஆபாஸப் பிரகாசமே [போலி யொளியே]. உண்மையொளியில் திரிபேதும் தோன்ருது. ஆபாஸப் பிரகாசமாகிய மன-ஆகாசமே பூத-ஆகாசமாகவும் அதன்கண் காண்பானைக் காட்டிலும் வேறு போலத் தோன்றும் பற்பல விஷயங்களாகவும் விரிகிறது.

"திரிபு மயமான விவகார தசையிலும் சமாதி [அடிப் படை உணர்வு] இருந்து கொண்டேதான் இருக்கிறது. எத்தனையோ தோற்றங்கள் தோன்றிக் கொண்டிருக்குங் காலும், ஒரு தோற்றமும் அற்றபோதும் சினிமாத்திரை திரையே; அவ்வாறே தான் எவ்வளவு விவகாரத்திடையிலும், விவகாரம் ஏதும் சற்றுமற்ற உபசாந்தியிலும் திகழ்வது நிர்விகாரமாம் அகண்டாத்மா ஒன்றே. சினிமாத்திரை ஜடமாதலால், அதன் மீது சித்திரங்களைத் தோற்றுவிக்க வெளியே ஒரு ஆளும் பிற உபகரணங்களும் வேண்டியிருக்கின்றன. ஆனல் இங்கே ஸ்வரூபமாம் திரை தனக்கயலேதுமற்ற பரிபூரணம். திரை, ஒளி,

காண்பவன, சித்திரத்தில் நடமாடுவோர் எல்லாம் அவனே தான்."

நாம் உணர்வாய் உள்ளதை—நாம் உலகில் இல்லாது, நம்முள் உலகம் இருப்பதை—நாம் கனவில் அனுபவிக்கிறோம்; கவிதையின்பத்திலும், லலித கலா நுகர்ச்சியாகிய பலர் ஒருங்கே காணும் கற்பனைக் கனவு களிலும் உணர்வு ரூபமான உலகையே காண்கிறோம். உலக நடப்புக்கள் உண்மையானவை என்றும், கூட்டா கவும் தனித்தனியாகவும் நாமே எழுப்பிக் கொள்ளும் கற்பனை அல்ல என்றும் நாம் ஏமாறுவதற்குக் காரணம் என்னவென்றால் உடலைப் பற்றி நிற்கும் அகந்தைக்குள் நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வது தான். உலக வாழ்வு ஆகிய எழுதா நாடகத்தைப் பார்த்து, அதிலே பங்கும் கொள்ளும் நாம் மற்ற நடிகர்களைப் புரிந்துகொள்ளச் சோம்பி, அதே சமயம் கதை அமைப்பை மாற்றவேண்டித் துடிக்கிறோம். நமது உண்மை நிலை யாது, பிறர் உண்மை நிலை யாது என்று உணர்ந்தால் அன்பு பெருகும், துன்பம் குறையும்.

அண்ணல் ரமணர் தம்மை 'மகரிஷி' என்று ஒரு போதும் கூறிக்கொண்டதில்லை. எவரையும் தமது 'சீடன்' என்று கருதினதுமில்லை. 'உபதேசம்' கோரி அண்டுவோரின் வேண்டுதலை ஒரு முகமாய் மறுத்தவர். "நான் ஞானி என்றால் எனக் கயலாய் அஞ்ஞானி யென்றொருவன் இருப்பதற்கிடமில்லை. அவ்வாறின்றி, நானும் எல்லோரையும் போன்ற ஒருவனே என்னும் பக்ஷத்தில் அப்போது விடைசொல்வதற்கிடமில்லை" என்பார்.

ஞான போதகனுகச் செயல்பட அவர் மறுத்த போதிலும், முழுமையான அன்புடன்—தாய் சேயுடன், காதலன் காதலியுடன், குழந்தைகள் பிறருடன்—பழகுவதைப்போலப் பழகி, முழுமை வாழ்வு வாழும் கலையை நன்கு வாழ்ந்து காட்டிக் கற்பித்தார். ஞானியின் நிலையானது குழந்தையின் நிலையைப் போன்றதே என்கிருர். இருவரும் அகந்தை அற்றவர்கள். "அவ்வக் காரியம் நடக்கும்போது சிறுவர்கள் அதில் ஈடுபட்டிருப்பார்கள்; உடனே அதை மறந்து விடுவார்கள். அவர்கள் மனத்தில் அதனுல் ஸம்ஸ்காரங்கள் (வாசனைகள்) ஏற்படுவதில்லை. அதனுல் அவர்கள் பாதிக்கப் படுவதில்லை. ஞானிகளும் அப்படியேதான். ஒரு குழந்தைக்கும் ஞானிக்குமுள்ள வித்தியாசம் என்னவென்ருல் குழந்தையிடம் அடங்கியிருக்கும் வாசனைகள் காலக்கிரமத்தில் வெளிப்படும், ஞானியோ வாசனைகள் அனைத்திற்கும் மூலமாம் தேகாத்மபாவமே முற்றுமொழிந்தவன்." தெளிந்த ஞானத்தின் கபடமின்மையே ஞானியின் நிலை, அறியாமை அன்று. பகுதியில் முழுமையைக் காணும் அவர், தாய் குழந்தைக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொடுப்பதுபோல முழுமையான வாழ்க்கைக் கலையைப் படிப் படியாய்ப் புகட்டுகிருர். அச்சடித்த தாளைப் பார்த்து சூடிகையான குழந்தை அடுத்தடுத்த எழுத்துக்களை பெருமிதத்துடன் உரத்துப் படிக்கிருன். தாய் கண்ணில் தனியெழுத்துத் தென்படாவிட்டாலும் வாக்கியத்தின் பொருளை ஒரு பார்வையில் புரிந்து கொண்டு விட்ட போதிலும் குழந்தையோடு குழந்தையாய்—அதன் பொருட்டு அதனுடன்—எழுத்துக்களைக் காண்கிருள் அல்லவா?

இருமையில் எழும் ஐயங்களையும் இன்னல்களையும் அறிந்து கடந்து நிற்கும் ஞானி பொறுமையிலும்

அன்பிலும் அன்னையினும் சிறந்தவர். ஆகையால் அவரது போதனை அறிவும் அன்பும் கலந்து, முழுமை கற்பிக்கும் முறையாகவும், அதைக் குழந்தை தானே முயன்று, கண்டு, உணரும் முறையாகவும் அமைகிறது. சிக்கலான உண்மையை, வள்ளிதாய் உள்ளதைக் கூறு போட்டுப் பாராமல், முழுமையாய்க் கண்டு மற்றவரும் நடைமுறையில் தமதாக்கிக் கொண்டு, பின்பற்றி, திருந்தி வாழ அப் போதனை உதவுகிறது. குழந்தையைப் போலச் சீடனும் தன்னையறியாமல் நல்வழியில் முன்னேறுகிறான். எவ்வாறு என்று அவனுக்கே தெரியாவிடினும் துணிந்து நடந்து முன்னேறுகிறான். மண்ணில் ஊன்றிய விதை போல உள்ளுணர்வும் பகலிலும் இரவிலும், ஒளியிலும் இருளிலும், வளர்கிறது. அடிக்கடி நோண்டிப் பார்ப்பது தவறு. ஏனெனில் சிந்தனைக் கிளறல் அகந்தையை வளர்க்கலாம்.

"மறுபிறப்பு என்பது மீண்டும் முழுமையாவது; ஒருமையாவது குழந்தையாவது போன்றது." யானற்ற முழுமையே நம்முடன் பிறந்த நமது உண்மை நிலை. அதை உள்ளார்ந்து உணர்ந்து மீண்டும் பெறுதலே ஞானம் என்பது. என்றும் உள்ள இந்த முழுமையில் வேரூன்றி வளரும் அவிகல்ப நடத்தையானது எழுத்தறியாக் குழந்தையின் மாலறிவாகவோ, நூலறிவு கடந்த விஞ்ஞானியின் வாலறிவாகவோ இருக்கலாம். இவ்விரு நிலைகளையும் வெறும் சொற்களால் விளக்க முடியாது. மவுனத்தினாலோ, ஏற்ற தொண்டினாலோ அல்லது கற்பனைக் கதை, உவமை, சின்னங்களாலோதான் அந்த முழுமையுணர்வைக்காட்ட முடியும். வியாவகாரிக அல்லது உலகியல் வாழ்வு அனைத்துமே கற்பனைத் தோற்றமே.

யன்றி மெய்ப்பொருளில்லை என்று கருதிய மகரிஷி ரமணர், ஜீவத்துடிப்புடன் இன்றும் இயங்கும் சிவன், விஷ்ணு முதலிய கடவுளரின் நாம ரூபங்களையும் புராணக் கதைகளையும் லாகவமாய்த் தடையின்றிக் கையாண்டார். அவை யாவும் கதை, கற்பனை, சின்னங் களே என்றாலும் அதன் காரணமாய் அவற்றை இகழவோ உதறித் தள்ளவோ கூடாது என்பதை அவர் நன்குணர்ந்தார். ஏனெனில், மற்ற இந்துப் பெரியார் களைப் போலவே அவரும் இவ்வுலக வாழ்வைக் கவிதைக் கண், காரிய சித்திக்கான விஞ்ஞானக் கண் ஆகிய இரு கண்களாலும் நோக்கினர்.

"நாமும் இந்த உலகமும் எவ்வளவு வாஸ்தவமோ அவ்வளவு வாஸ்தவமாக சிவன், விஷ்ணு முதலாம் மூர்த்திகளும் கைலாசம் வைகுண்டம் முதலாம் உலகங் களும் இருக்கின்றன. அவைகள் நம்முள்ளே தான் இருக்கின்றன. அதே போலத்தான் நம் கண்களுக்குப் புலப்படும் உலகமும் நம்முள் அடங்கியது. வெளி உன்னுள் அடக்கம். உடல் அவ் வெளியில் இருக் கிறது. நீ அவ்வெளியில் இல்லை."

"காசி முதலியவற்றின் புனிதத் தன்மை வாஸ்தவத் திலும் நம்பிக்கையாலும் இருவிதத்திலும் உள்ளதே."

"உண்மையான கங்கை நம் முள்ளேயே இருக் கிறது. இடையருது நம்முள்ளே பெருகிக் கொண் டிருக்கும் ஞான கங்கையில் நீராடுவோமே!"

"அருணாசலத்தின் சக்தியை மறுக்க முடியாது. ஆனல் இந்த அருணாசலம் நம்முள்ளே உள்ளது; நமக்குப் புறம்பானது அல்ல."

"அண்ணாமலையின் ரகசியம் ஆத்ம ரகசியமே யாகும்." சிவன் பரமானந்த சொரூபம், புனிதத்தின் சின்னம், ஆதி அந்தமற்ற பரப்பிரும்மம், தூய தாய்த் தனித்து நிற்கும் உணர்வு. "சிவஞானிகளான நான்கு நாயன்மார்களும் நமது பாடல்களின் முதற் செய்யுளிலேயே இவ் வனுபவத்தை ஏறக்குறைய ஒரே மாதிரியான சொற்றொடரில் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதாவது, இறைவன் எப்பொழுதும் நம் நெஞ்சில் இருந்துகொண்டேதான் இருக்கிறான். ஆயினும் வெளிமுகத்திலேயே ஓடியலையும் மனம் அத்தகைய நித்ய சாந்நித்யத்தை உணர்வதில்லை. காலக்கிரமத்தில் பரிபாக முதிர்ச்சியால் தன்னுள்ளே இடையறுதிலகும் சிவஸ்வரூபத்தை உணருங்கால் 'இமைப் பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் வாழ்க' எனும் திருவாசகத் தொடக்க அடியின் பொருளை ஒருவன் அனுபவித்தறிகிறான். இவ் வனுபவத்தையே நாவுக்கரசர் 'ஏற்று யுனக்கே யிரவும் பகலும் பிரியாது வணங்குவனெப் பொழுதும்' என்று அழுத்தந் திருத்தமாய்க் கூறுகிறார்." இவ்வாறு நித்திய சாந்நித்ய உணர்வும், அனைத்தையும் கடந்து வியாபித்திருக்கும் பரமேசனும் ஒன்றே என் பதையே உள்ளது நாற்பது தொகுப்பின் முதலிரண்டு பாடல்கள் பறை சாற்றுகின்றன.

ரமண மகரிஷியின் உபதேசம் நடைமுறைக்கு முற்று முகந்தது; தனிப்பட்டது; நேர்முகமானது. சாதி, தகுதி அல்லது முன்னேற்பாடு போன்ற பாகுபாடுகளின்றி உண்மை நாட்டமுள்ளோர் அனைவருமே ஆன்ம விசாரணை வழியை மேற்கொள்ளுமாறு பணிக்கிறது.

இவ்வழி கேவலம் புத்தி பூர்வமான பயிற்சி அல்ல; கர்மம் அல்லது பிறருக்கு ஆற்றும் தொண்டினைத் துணையாகக் கொண்டு ஞானத்தை—தன்னுள் தன்னை நாடிக் காணும் முயற்சியை—மேற்கொள்வதேயாகும்.

புத்தர், ஏசுநாதர், சங்கரர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர் முதலியோர் பெற்ற ஆன்மானுபவத்தைக் குறித்துப் பலர் மகரிஷியைக் கேள்வி கேட்பது வழக்கம். அவர்களைப் பார்த்து அவர் பட்டென்று சொல்வது "மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுவானேன்? முதலில் உன்னையே நீ தெரிந்துகொள்!", என்பது தான். கடவுளைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆவலை அவர் கிளப்பவோ வளர்க்கவோ மாட்டார். அதற்கு மாறாக "கடவுளை சும்மா விட்டுவை. நீ யார், உன் நிலை யாது என்று அறிந்துகொள். மோட்சத்தை மூட்டை கட்டிவை. பந்தம் என்று ஒன்று உண்டா? நீ பந்தத்தில் இருக்கிறாயா? அப்படி பந்தப் பட்டிருப்பது யாது?" என அடுக்குவார்.

"ஆன்மானுபவம் இனி எப்போதோ வரப்போவதில்லை. இப்போதும் எப்போதும் இருப்பது அதுவே. ஆனால் அவ் வனுபவம் விளங்கவில்லையே என்னும் மயக்கம் இருக்கும் மட்டும் அவ்வெண்ணத்தைத் தொலைக்க முயன்றுதானாக வேண்டும். ஆதி அந்தமற்ற தூய உணர்வான ஆன்மாவை தேகத்தோடு சம்பந்தப்படுத்துவதாலேயே தப்பெண்ணங்கள் எழுகின்றன. மோட்சம் என்பது புதிதாயுண்டாவதில்லை. எப்போதுமுள்ள ஆனம சொரூபம் தடையற்றுத் துலங்குவதே மோட்சம். எப்போதும் உள்ளது

அறியாமையால் விளங்காதிருக்கிறது. அவ் வறியாமையே பிரதி பந்தம். அதனை அகற்றினால், எப்போதும் உள்ளது ஸ்வப்ரகாசமாய் விளங்குகிறது. நாம் அனைவரும் ஓர் உணர்வே. உண்மையில் உள்ளது அவ்வுணர்வாகிய ஆன்மா ஒன்றே. உபாதி வழியே அதுவே அகந்தையாகத் தோன்றுகிறது. உபாதிகளுடன் சம்பந்தப் படுத்தாது அதனை உள்ளபடி உணர்ந்தால் வரையற்ற ஒரே யுண்மை அதுவே. எத்தனையோ கோடிக் குமிழிகள் தோன்றினாலும் கடல் ஒன்றே; அவ்வாறே அனந்தகோடி அகந்தைகள் தோன்றினாலும் உண்மையாயுள்ளது ஆன்மா ஒன்றே. தோன்றி மறைபவற்றைப் பொருளாகக் கருதாது நிஜ ஸ்வரூபமாக நில். நுரையல்ல, குமிழியல்ல நீ; பெருங்கடலே நீ என அறி. புறத் தோற்றத்தைப் பொருளென்று கருதி மயங்காது உன்னுள்ளே மூழ்கிவிடு."

இப்படித் தன்னுள் மூழ்கலே "நான் யார்?" எனும் ஆன்ம—விசாரணை ஆகும். "அகந்தைக்குத் தனியிருப்பின்மையால் அது என்னவென்று பார்க்கப்போனாலே ஒடுங்கிவிடும்." 'மாப்பிள்ளைத் தோழன்' என்று மதிக்கப் பெற்ற ஆசாமியின் கதியே தான் அகந்தையின் தலை விதியும்! இவ் வகந்தை ஜட உடலைச் சார்ந்ததும் அல்ல, ஆன்மாவின் குரலும் அல்ல. "இந்த 'நான்' எங்கிருந்து எப்படிக் கிளம்புகிறது, அதன் தொடர்புகள் யாவை என்று ஏகாக்கிரமாய் விசாரித்துக் கொண்டே போனால் அது இடந்தெரியாமல் ஒளிந்து மறைந்து விடும். ஒரே யுண்மையாம் ஆன்ம ஸ்வரூபமே மிஞ்சி நிற்கிறது."

இது நேர் வழி. மற்ற வழிகள் மனதைத் தூய்மைப் படுத்த உதவலாம், அவ்வளவுதான். அவை சுற்று

வழிகள்; முதற்படிகள். கர்மம், யோகம், பக்தி போன்ற பிற மார்க்கங்களில் சாதகன் தனது தற்பற்றை விட முடியாததால் இன்றியமையாத இறுதிக் கேள்வி கால வரையின்றி தள்ளிப்போடப்படுகிறது. ஆனால் ரமணரின் நேர்வழியிலோ அந்த முடிவான வினை ஒன்றே முதல், இடை, கடைக் கேள்வியாகும். இந்தக் கேள்வி தொடக்கத்திலேயே எழுப்பப்படுகிறது. "நான்" என்பதை நாடுங்கால் இந்த "நான்" முழுமையானது, தழுவித் தழுவி உணரத் தக்கது. உணர்வும் செயலும் ஒருங்கே உறைவது என்று படிப்படியாய் நாமே அறிவதால், இடைவிடாது இந்தப் பயிற்சி நடக்கலாம்; அதனைத் தொடங்க எவ்வித முன்னேற்பாடுகளும் தேவையில்லை. தள்ளிப் போட சாக்குப் போக்கு எதும் கிடையாது. "அகந்தையை மாய்ப்பதே நாம் செய்யவேண்டிய ஒரே காரியம். அகந்தையொழிய வேண்டு மென்பதை யாவரும் ஒப்புகின்றனர். அதுவே முக்கியமானது அதை முதலில் நாம் சாதிப்போம்."

மகரிஷி காட்டும் வழி வெறும் தியானம் மட்டுமே அல்ல. அது தன்னைத்தானே நேர்மையாய், ஏமாற்றமின்றி, கடுமையாய் "நான் யார்? உள்ளதும் தோற்றமும் ஒன்றா, வேறா? உணர்வும் செயலும் ஒன்றா, வேறா?" என்று விசாரித்து ஒருமையறிவதே ஆகும். "ஆத்மானுபூதி எவர்க்கும் இயல்பாக இருந்து கொண்டேயிருக்கிறது. தியானம் 'கர்த்ரு தந்திரம்'—நமது முயற்சி; ஞானம் 'வஸ்து தந்திரம்'—பேருண்மையின் செயல்—ஆகும்."

'தெய்விக ஞான நிலையை வானிலிருந்து வரவழைக்கிறேன்' என்கிற பேச்சையெல்லாம் அவர் கண்டிப்பார்.

கேட்பார்: "இறையறிவு இதயத்தில் ஏற்கனவே இல்லையா? 'இதய வெளியிலே குடியுளான்' என்கிறார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. 'சூரியனுள் இருப்பவன் எவனோ அவனே மனிதனுள்ளும் இருக்கிறான்' என்கிறது உபநிடதம். 'பரலோகம் உன்னுள்ளே உள்ளது' என்கிறார் ஏசுநாதர். ஆகவே, மெய்ப் பொருள் நம்முள்ளே என்றும் உள்ளது என அனைவரும் ஒருங்கே கூறுகின்றனர். இப்படியிருக்க, யார் எதை எங்கிருந்து எப்படிப் புதிதாய்க் கொண்டு வரவேண்டும், கொண்டு வரமுடியும்? அறைக்குள் இடத்தையோ பகல் ஒளியையோ தூக்கிக்கொண்டு வருவதில்லை! அடைந்து கிடக்கும் ஓட்டை உடைசலைக் களைகிறோம்; ஜன்னலைத் திறக்கிறோம். அவ்வளவுதான்."

ஆன்மாவுக்கு ஒரு போதும் பந்தம் கிடையாது; ஆகவே அதற்கு 'விடுதலை'யும் தேவையில்லை. உடலைப் பற்றி நிற்கும் அகந்தையே எல்லாத் தொல்லைக்கும் மூல காரணமாகும்; அதுவே இன்னல்களை எழுப்பிவிட்டு, அதன்பின் அவற்றினின்றும் விடுதலை பெற ஏங்குகிறது. ஆயினும் இந்தத் தனிமை யுணர்வு மனக் கற்பிதமே. ஆகவே, முயன்று கொணரப்படவேண்டியது 'தன்னை அறிதல்' அன்று; உடல்களே நாம் என்னும் தவறான எண்ணத்தை விடுதலே விடுதலை ஆகும். இந்த அறியாமை இருளை அகற்ற காலம் தேவையில்லை. ஞானம் அடைந்தேற ஆண்டுகள் ஆகுமே, என்று ஒரு அன்பர் அலுத்துக் கொண்டபோது மகரிஷி கூறினார்: "ஆண்டுகளாவது! காலமே மனக் கற்பனை. நானென்னும் அகந்தை எழுந்த பின்னரே தேச கால வர்த்தமானங்கள் தோன்றுகின்றது. நாமோ தேச காலங்

களைக் கடந்து, தேசகாலப் பிரிவினை யற்று எங்கும் என்றும் உளோம்."

அநாத்மாவை நழுவ விடுவதே ஆன்மாவை அடைவதாம். "நாடிகள், குண்டலினிகள், ஆறு சக்கரங்கள் என்றெல்லாம் கவலைப்படவேண்டாம். இந்தச் சிக்கலான வேதாந்த நூல்கள் உண்மையை விளக்குவதற்கு மாறாக, விஷயங்களை விரித்து, மேலும் மேலும் குழப்பி விடுகின்றன. ஆன்மா தெளிவாய், எங்கும் என்றும் உள்ள அறிவாய் இருக்கிறது. சும்மா ஆன்மாவாய், உணர்வாய் இருந்தால் போதாதா? அநாத்மாவை விளக்குவானேன்?"

மதம் என்பதே "ஒரு பெரும் பகட்டு, பாசாங்கு விளையாட்டம்" என்று கூறுகிறார் மகரிஷி. "நமது யதார்த்த இயல் நிலை 'ஸச்சிதானந்தம், உண்மையுணர் வின்பம். இத்தூய பரமானந்த நிலைக்கு நம்மை இட்டுச் செல்வதே எல்லா மதங்களின் குறிக்கோளாகும். ஆயினும் இந்த சர்வ சகஜமான யுண்மையை யுணர்த்து வற்காக எத்தனை மதங்கள், கொள்கைகள், சித்தாந்தங் கள், வாதப்பிரதிவாதங்கள்! அப்பப்பா! என்ன செய்வது? விஸ்தாரத்தையும் வெளிக் கவர்ச்சியையும் சிக்கலையுமே யாவரும் விரும்புவதனாலேயே இத்தனை மதங்களும், கொள்கைகளும், அவற்றின் உட்பிரிவுகளும், அவற்றை ஆதரிப்போரும் மறுப்போருமாக விவகாரம் பெருகி விட்டது. அகண்ட சாம்ராஜ்யம் நமக்குள்ளேயே இருக் கிறது, நமது கைக் கெட்டும், நம்மிடையே உள்ளது. இதுவே எளிதினில் எளிய உண்மை. ஆயினும் மறைப் பேதுமின்றி உள்ளதுள்ளபடியேயுள்ள இவ்வுண்மையை

பக்குவம் முதிர்ந்த உள்ளங்களே உணரவல்லன. எப்போதுமுள்ள சர்வ சாதாரண உண்மையை அனைவரும் உணர்ந்து புது வாழ்வு தொடங்காமல் மக்கள் தன்னை விட்டு, ஸ்வர்க்கம், நரகம், மறு பிறவி முதலிய இதர விஷயங்களை ஆராய்வதிலேயே பெரும்பாலும் ஆர்வம் கொள்கின்றனர். உண்மையை நாடுவதில்லை விந்தை விநோதங்கள் மீதே நாட்டமெல்லாம். அவர்கள் மனப்பான்மை அப்படியிருப்பதால் வேத சாஸ்திரங்களும் அவர்கள் செல்லும் வழியே சென்று, முடிவில் ஆத்ம ஸத்யத்திற்கு அவர்களைத் திருப்ப வேண்டியிருக்கிறது. எங்கெங்கே சுற்றினாலும் முடிவில் தன்னிடமேதான் திரும்பிவரவேண்டும். இப்படி ஊரெல்லாம் சுற்றாமல் இப்போது இக்கணமே பிறப்பு, வருதல், போதல் திருப்பம் இவற்றிலிருந்து விடுபட்டு உணர்வாகத் தன்னை நாடித் தன்னில நின்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்! மாயையான அவித்தையை, அறியாமையை அகற்றுவதற்கு இவ்வளவு முயற்சிகளும் பயிற்சிகளும் தேவையா?"

இப்படித் திடீரென்று ஒரே மூச்சில் உள்ளே ஒடுங்கி சிந்தனையை உள்ளே திருப்பி, மெய்யுணர்வுடன் ஒன்றி நின்று, இம்மை-மறுமையின் ஒருமையை ஏற்றுப் புது வாழ்வு வாழ்க, என்று அறை கூவுவதைக் கேட்டால், வலுத்த பகுத்தறிவும் தாமச மனப்பான்மையும் கொண்டவர்களுக்குத் தூக்கி வாரித்தான் போடும். எனவேதான் சில மெத்தப் படித்த பண்டிதர்கள் மகரிஷியின் போதனை வெட்டொன்று துண்டிரண்டானது என்றும், அவரது முறை எளிதாகத் தோன்றினும் மிகவும் கடினமானதென்றும், அவரது பாதை ஆதியும் அந்தமும் ஒன்றாய் இடைப் படிகளற்ற செங்குத்தான குறுக்கு வழி

என்றும் திகைக்கிருர்கள். ஆனல் ஜோயல் கோல்ட் ஸ்மித் தமது "அனந்த மார்க்கம்" (The Infinite Way) முதலிய நூல்களில் கூறுவது போலவே, மகரிஷியும் இக் கணமே விடுதலே ("ஸத்யோ முக்தி") உண்டு என்ற உண்மையைத் தெளிவுறுத்துகிருர். ஆன்மாவாக, உணர்வாக, இருந்து இயங்கி வாழ்வதே உண்மை வாழ்வு ஆதலால் ஆன்மா வேறு நாம் வேறு என்று கருதும் இருமை மனப்பான்மையைக் கண்டு பொறுமை இழக்கிருர். கேவலத்தூய உணர்வோ, உறவுணர்வோ, தனியுணர்வோ, பொது உணர்வோ, எல்லா உணர்வும் ஒன்றே, அந்த உணர்வொன்றே மெய்ப்பொருள். எனவே உடல்களாக வளேய வராமல் எவ்வகையிலும் உணர்வாகவே இருந்து செயல்புரிவதன் மூலமாகத்தான் நாம் உண்மையான மனித வாழ்வு வாழ முடியும், என் கிருர் மகரிஷி. இத்தகைய மனித வாழ்வு வாழ்வதை ஒத்திப்போடலாகாது. அவ்வித மனித வாழ்வே தெய்விக வாழ்வு, அவ்வப்போது பரமானந்தப் பரவசத்தைப் பெறு வது; வீரச்செயல் புரிவது; தேவர் நிலேயே எய்துவது; எனினும் துணிந்து தொடங்கவேண்டியதுதான்.

உண்மையில், வீரர் வழி சென்று தேவர் நிலே பெறுவது ஒன்றே மக்களுக்கு வல்லான் வகுத்த வழி யாகும். பிற உயிர்களோடு போரிடும் அசுரராக மாறினல் தான் நாம் மனிதருக்குரிய இந்த நல் வழியை விட்டு விலக முடியும். மேலும் நாம் நம் உள்ளிருக்கும் ஆன்மாவுடன் பிணேக்கப்பட்டுள்ளோம். அதிலிருந்து நம்மைத் துண்டித்துக் கொள்ளவோ தப்பியோடவோ இயலாது. இறுதியில் உள்ள பொருள் அது ஒன்றே என்பதையும் உறுதியாய் அறிகிரேம். விவகார ரீதியி

மகரிஷி நமக்கு வகுத்துத் தந்துள்ள வாழ்க்கை முறை எளிதில் புரியக்கூடியதே; கத்தியைக் கையாளும் முறையைப் போன்றதே அது. உருண்ட கைப்பிடியை முழுமையாய்த் தழுவிப் பற்றி வெட்டுவாய்ப் பகுதியால் துண்டிக்கிறோம் அல்லவா? ஜீவர்களுடன் உறவாடும் போது உணர்வுப் பங்காளராய் உணர்வையே பற்றி, 'ங'ப்போல் வளைந்து கொடுத்து முழுமையெனும் அன்புடன் பழகி, ஆனால் கருத்துக்கள், நிறுவனங்கள் முதலிய ஜடப்பொருள்களை ஆராயும் போது கூரிய பகுத்தறிவைப் பயன்படுத்துவதே மனித இயல்பாம்.

சாதாரண மக்கள் இங்கே, இன்று முதல், இத்தகைய முழுமையுணர்வில் வாழத்துவங்கும் ஆற்றலைப் பெறுவதற்காகவே 'நான் யார்?' எனும் கேள்வியை மகரிஷி தந்துள்ளார். இந்த பீஜ வினாவை நாம் நமது இதயத்துள் விதைத்து, நமது இயற்கை நிலையில் வேரூன்றி நின்று, நமது ஸ்வதர்மத்தைப் பற்றிக் கொண்டு செயலாற்றினால், ஆன்மிக வேளாண்மை நன்கு நடைபெறும். கேள்விக்கு விடையை வெறும் சொற் சாகுபடி செய்யாமல் மெய்யுணர்வாம் மோன இன்பமாயும், துளிர்த்துப் பூத்துப் பழுத்து உலகுக்குதவும் செயலாகவும் அறுவடை செய்யலாம். என்றென்றும் பசுமையுடன் நம்முள்ளே புகுந்து வேலை செய்யும் இந்தக் கேள்வி மனத்துக்குத் தெளிவும் உரனும் தந்து தொன்று தொட்டுச் சிலரிடை வழங்கி வரும் ஞான மார்க்கத்தை இக்காலத்துக் கடை வீதிக்குக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு மனிதனும் கழிந்ததைக் கருதிக் களைக்காது, இக் கணம் முதல் உணர்வுடன் வாழ்ந்து, தனது சிற்றுலகைத் தாங்கும் பொறுப்பையேற்று, அன்

பினால் இன்பை வளர்த்து, திருவருள் நல்லாட்சியைப் பரப்பும் உரிமை வழியைக் காட்டுகிறார். "நான் யார்?" எனும் கோடரியை அகந்தையின் வேரில் வைத்ததும் பிரிவு மனப்பான்மை அழிகிறது; உணர்வின் வடிவாய், உணர்வின் விளைவாய்ச் செயலை மதிக்கிறோம். மதம், வர்ணம், ஆசிரமம், ஸ்வதர்மம் என்ற சம்பிரதாயப் புதர் மண்டிய காட்டை ஒரே மூச்சில் வெட்டி வீழ்த்தி, அருளொளியால் உரனைப் பெற்று, "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று முழுப் பொறுப்பையும் நாமே ஏற்று, புது வாழ்வாம் வீட்டை அடைகிறோம்.

ஜடப் பொருள்கள் சேனத்திலமர்ந்து மனித குலத்தைக் குதிரை யோட்டும் விந்தையுலகில் தனி மனிதனுக்கு இறைப்பணி புரியும் உரிமையும் திறமையும் வழங்குகிறார். யானற்று, ஆண்டவன் கருவியாய் இயங்கி, மெய்யுணர்வின் ஊற்றாய், தமருக்கு இயல்பாய் நலம் புரியும் பொறுப்பு மிக்க உறுப்பாக உலகில் ஒழுகத் தேவையான அறிவும் துணிவும் தருகிறார். மகரிஷி தீர்மானமாய் உரைக்கிறார்: "இதயத்தினுள் வீற்றுள்ள ஆன்மாவை அறிந்து அந் நிலை நிற்பவன், சரியா பிசகா என்றெல்லாம் சலனமுறான். பொறுப்பு அவனுடைய தல்ல. இறைவன் திருவருளே நடத்தும்போது எல்லாம் சரியாகவே யிருக்கும்." மனச் சாட்சியும் சோகைபிடித்த சிந்தனைகளுமே நம்மைக் கோழை யாக்குகின்றன; உள்ளொளியாம் ஆன்மாவை நம்பி, அவ்வப்போது தேவைக்கேற்ப இயல்பாய்ச் செயலாற்றினால் ஆண்மை மிகு வலிவு பெறலாம். இத்தகைய செய்கை நம்மைப் பந்தப் படுத்தாது; அது கர்மம் அன்று, அகர்மமாகிறது. "உள் நோக்கும் மனமும் உள்ள அந்தர் முகிக்கு சாத்

திரமோ வேதப்பிரமாணமோ தேவையில்லை. ஆன்மா ஏடுகளில் இல்லை; நம்முள்ளே ஒளிர்கிறது."

ஆன்ம விசாரத்தில் பக்தி, யோகம், அறிவுச் சர்ச்சைகள் எல்லாம் அடக்கம். ஆனல் வாசனைகள் ஒழிந்தால் தான் ஞானம் பிறக்கும். "மெய்ப்பொருளுக்காக எதையும் துறக்கத் தயாராக இருக்கவேண்டும். துறவு எவ்வளவோ அவ்வளவே முன்னேற்றம். ஆசைக்கிடம் கொடுத்து ஆசையை அடக்க முயல்வது நெய் வார்த்துத் தீயையணைப்பது போலாகும்! அத்தியாவசியமான கட்டுப்பாட்டிற்குப் பெருந்துணை ஞானம். ஆசைக்கு இருப்பிடம் மனமே என்றும் ஆனல் நீ மனமல்ல என்றும் அறிக. அறிந்ததும் ஆசை ஒடுங்கும். கெஞ்சும் ஆசைகளை மிஞ்சவிடாமல் மீண்டும் மீண்டும் அடக்கினல் அவை நாளடைவில் சோர்ந்து போம். உனது உண்மையான உருவம் உணர்வே என்பதை என்றும் மறவாதே."

பிறர் நலனுக்காகவோ, பொது இயக்கத்திலோ புரியும் தன்னலமற்ற சேவையானது மனத்தை விரிவுறச் செய்து தூய்மையாக்குவதுடன் அகந்தையின் வேகத்தைக் கெடுக்கும். நம் நாட்டின் விடுதலை இயக்கத்திலே தனி மனிதர் சிலர் பொதுப் பணியிலே இரண்டறக் கலந்து தாமும் விடுதலை பெற்றனர். நிஷ்காம கர்மம்' ஆன்ம விசாரத்திற்கு உறுதுணையாய் உதவுகிறது. காந்தியடிகளை இயக்கி அவர் சோர்வுறுது அவரை முன்செலுத்திக் கொண்டிருந்த ஆன்மீகச் சக்தியை மகரிஷி உணர்ந்தார்; இத்தகைய நிஷ்காம கர்மத்தில் ஈடுபட்டு, இறைவனுக்கு ஆன்ம சமர்ப்பணம்

செய்யவும் பயிலுமாறு பிறர்க்கும் அறிவுறுத்தினர். தொண்டும் தொழுகையும், மக்கட் பணியும் இறை வழி பாடும் அழகாய்க் கைகோத்து நடந்திடலாமே. "ஆடிப் பாடிய ஆய்ச்சியராம் கோபிகள் தயிர்கடையும் போதும் எண்ணமெலாம் கண்ணனுகை வாழ்ந்தனரே. பக்தியும் கர்மமும் இரண்டற இணைந்து இங்கு ஒரே யோகமா வதைப் பார்!" பக்தியே சரணுகதியாக மலரும். "ஆன்ம சமர்ப்பணம் செய்வது ஏதோ ஒரு கருத்திற்கோ ஏதோ ஒரு இறையுருவிற்கோ சத்குருவுக்கோ பொதுவாக மனித குல நன்மைக்கோ சத்தியம் சுதந்திரம் நியாயம் போன்றதோர் உயர் தத்துவத்திற்கோ இருக்கலாம்."

அறிவு வழியான ஞானமும், அன்பு வழியான பக்தி யும் நாடும் முடிவான லட்சியம் ஒன்றே. இரு வழி களிலுமே 'நான்' எனும் தனிப் பொருள் அழிவுறுகிறது. பக்தியிலே "எனது" என்பது முதலில் மறைகிறது. ஞானத்திலே "நான்" என்பதே முதலில் மறைகிறது. எனினும், ஞான மார்க்கத்திலும் ஆரம்பத்தில் அறிவுத் திறனுல் முழு முயற்சி இன்றியமையாதது. இம் முயற்சியை மேற்கொண்டு விடாது செய்யவும் தான் வேண்டும். குட்டிக் குரங்கு தாய் மந்தியைக் கட்டிப் பிடித்துக்கொள்வதுபோலப் பற்றிக் கொள்ளவேண்டும்; பூனைக் குட்டி மாதிரி தாய்ப் பூனை கவ்விச் செல்லும் என்று தளர்ந்து விடக்கூடாது. கடவுளும் குருவும் வழி காட்டி உதவுவார்கள்; ஆயினும் செல்ல வேண்டியது நீயே. "உனக்காகக் கண்ணுடி கதிரவனைக் காணுமா?"

எங்கே ஆரம்பிக்கலாம், குரு எப்போ வருவாரோ, சத்சங்கம் சனிக்கிழமை வாய்க்குமோ என்றெல்லாம்

காலம் கடத்தாது, இங்கே இன்றே இப்போதே துவங்கு. "சகல ஆன்மாவுக்கும் ஆன்மாவே 'ஸத்' (உள்ளது). சகல ஆன்மாவுக்கும் ஆன்மாவே 'ஸாது'. எனவே ஸத் சங்கத்திலிருந்து யாரும் எங்கும் விலகி இல்லை. குரு நம்முள் உள்ளார், வெளியே இல்லை. சாதகன் வழிபாட்டிலும் பக்திப் பரவசத்திலும் தியானத்திலும் புதைந்து நின்று விடல் கூடாது. 'நான் யார்?' என்று வினவி, தீவிர விசாரமான சாதனையைத் தொடங்க வேண்டும்."

உணர்வு ஒன்றே உள்ளதாகையால் மக்களின் சமுதாய வாழ்விலும் சரி, மனிதனுக்கும் இயற்கைக்கும் பொதுவான உயிரிலும் சரி, இடையருத் தொடர்பும் ஒருமைப்பாடும் உள்ளன. "மரமும் மனிதனும் ஒரே சேதனமே; மரத்தை அசையாது நிற்கும் மனிதனாகவும் (ஓர் உயி ,ாகவும்), மனிதனை நடமாடும் மரம் (யானற்ற கட்டை) என்றும் சொல்லலாம். செடி கொடிகள் எப் போதும் துயில்வாய்ப் பட்டுள்ளன. விலங்குகள் நனவி லும் கனவிலுமாக இயங்குகின்றன. தேவர்களோ எப் போதும் கண் இமையா விழிப்பாளர்கள். இம் மூன்று நிலைகளையும் அறிபவன் மனிதனே. மூன்றையும் கடந்து 'துரிய'த்தில் (நாலாவது நிலையில்) சமைந்தவன் யோகி ஆகிறான். கால தேசங்களுக்கு உட்படாத மகோன்னத உணர்வைப் பெறும் உரிமை மனிதனுக்கு மட்டுமே யுண்டு. மற்ற மூன்று நிலைகளும் வே றுபட்டுத் தனித்திருப்பவை; ஒன்று இருந்தால் மற்றவை இரா; ஆனால் மெய்யுணர்விலே இம் மூன்றும் அடங்கி யுள்ளன."

செயலும் சிந்தனையும் நிலையற்றவை. உள்ள பொருளாம் உணர்வுக்கடலில் அவை குமிழிகள் அல்லது சிற்றலைகள் போன்றவை 'சமாதி' ஒன்றே ஒருவனது இயல் நிலை; அதுவே நனவு, கனவு, துயில் என்ற நிலைகளின் அடி நீரோட்டம். அது ஆயாசப்பட்டு அடையப் பெறும் அனுயாச நிலை. தூங்காமல் தூங்கும் சுகம்; அகந்தை யிலா விழிப்பு நிலை. துய்க்கும் போதும் நினைவுறும் போதும் ஆழமாய்த் துலங்கும் இன்ப நிலை. உள்ளீடற்ற இன்பமயத் தூய உணர்வு, எண்ணமின்மை, இவையே இந்த நிலையின் அடையாளங்கள். "ஹரிஜன்" பத்திரிகையில் மகாத்மா காந்தி எழுதிய கருத்தொன்றைப் படித்து விட்டு மகரிஷி கூறினர்: "சிந்தையை யடக்கிச் சும்மா இருத்தல் பாமரனுக்கு எத்துணை அரிதோ, அத்துணை அரிது ஞானிக்குச் சிந்தையில் இறங்குவது!" எண்ணத்திலும் சொல்லிலும் செயலிலும் மனித வாழ்வின் உட்பொருளைக் காண முடியாது; மெய்யுணர்வின் இன்பத்திலே தான் காண முடியும் என்ற உண்மையை மகரிஷி நேர்முகமாகவும் மகாத்மா மறைமுகமாகவும் வற்புறுத்துகிறார்.

மெய்யுணர்வு—'ஸ்புரணை'; அனுபவம்—துய்க்கும் இன்பம்; வெறும் தர்க்க ரீதியானதோ சிந்தனையைப் பொறுத்ததோ அல்ல. இவ்வனுபவம் ஒருமை, முழுமை, சதாப் புதுமை வாய்ந்த ஆனந்தம். எண்ணங்கள் மறையும் போது "உள்ளது நான்" என்னும் ஸ்புரணை விருட்டென எழுந்து எண்ணக் கலப்பற்ற இன்ப உணர்வாய் நீடித்து நிற்கிறது. அறிபவனும் அறிபடும் பொருளும் இரண்டற ஒன்றி அறிவொன்றே நிற்பது அவ்வளவு கிட்டுவதற்கரிய அனுபவம் இல்லை. காதல்,

தாய்-சேய் அன்பு, பக்திப் பரவசம், தன்னை மறந்த வீரச் செயல், கவிதையின்பம், இசை யின்பம் போன்று பன் முறை நாம் அறியும் பொது அனுபவத்தை யொத்ததே அது. ஆயினும் நாம் உறக்கத்தையும் கனவையும் எப்படிப் பொருட் படுத்தாது உதறிவிடுகிறோமோ அப்படியே இத்தகைய தேற்றத் தெளிவாம் நேரங்களைப் பொன்னே போல் போற்றிப் பாதுகாத்து நினைவில் வைத்துக் கொள்ளுவது இல்லை. நமது உண்மையுரு வாம் இந்த இன்ப நிலையை நாம் அறிந்து, நினைந்து, உள்ளத்தில் இருத்தத் தெரிந்துகொண்டு விட்டால், நாம் ஏறிப் பிடித்தபேரின்பச் சிகரங்கள் மீதும் பீடபூமிகள் மீதும் அமர்ந்திருக்கத் தெரிந்து கொண்டால், நமது குழவிப் பருவத்தின் முழுமை யின்பத்தை நாம் இழக்கத் தேவையில்லை. மாலறிவு வாலறிவாய் வளரும் முழுமை யின்பமே பூமா வித்தை. அறிபவனும் அறிபடு பொருளும் ஒன்றாய்க் கரைந்து அறிவின்பமே நிற்கும் நிலை. இங்கே காணப் பிறிதொன்றில்லை, கேட்கப் பிறி தொன்றில்லை; இதுவே ஆன்மானுபவம்.

மூளியிலா முழுமை, இம்மையிலேயே குறைவிலா நிறைவு, அந்தமிலா ஆனந்தம் வேண்டும் என்றென்று ஏங்குகிறான் மனிதன். ஏனெனில் இந்த மாறாப் பேரின்பமே அவனது நிஜ ஸ்வரூபம், உண்மை இயல்பு. அவனது இன்பத்தை வெளியே அலைந்து தேடித்தேடி இளைத்தபின் அவன் உள்ளே நோக்குகிறான்; தனக் குள்ளே அதனைக் காணவும் காண்கிறான். இப்படி உள்ளே நோக்குதலும், உள்ளே புகுந்து உள்ளத்தைத் தேடுதலும் அவனது அறிவுத் திறனின் தொழிலே யாகும். "தனதாற்றலால் புத்தி எவ் வேதனையோ நாடி

முயன்று நிறைவுருது, தனக் கொளி தந்து தன்னை இயக்கிக்கொண்டிருக்கும் ஓர் பேரொளியை, ஓர் மஹா சக்தியை ஒரு பரவுண்மையைச் சரணடைகிறது. அகந்தை அவ்வாறு ஒடுங்கிய விடத்தே அகண்டான்ம சொரூபம் தடையின்றி யொளிர்கிறது. அதுவே வாழ்க்கைப் பயன், ஜன்ம சாபல்யம்.'' எனவேதான் மகரிஷி நாம் புத்தி பூர்வமாகப் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை ஒன்றே என்பதை விளக்குகிருர்: "உணர்வின்பம் ஒன்றே மெய்ப் பொருள். உள்ளது இது ஒன்றே என்ற அசையாத நம்பிக்கை கொண்டு, அதனை நாடி, முயன்று முயன்று, நேரடி அனுபவம் கிடைக்கப்பெற வேண்டும்'' ஆயினும் புத்தி பூர்வமான நம்பிக்கை வேறு, அனுபவம், மெய்யுணர்வு வேறு என்பதை மறத்தலாகாது.

முயற்சியற்ற இன்ப நிலை எய்தும் வரை விடா முயற்சி தேவையே. இந்த முயற்சியே 'ஆன்ம விசாரம்' என்று மகரிஷி ரமணரும், 'தொண்டு' என்று மகாத்மா காந்தியும் கூறுகிருர்கள். இவ் விரு முயற்சி முறைகளும் வேறு போலத் தோன்றினுலும் அடிப்படையில் ஒன்றே யாம். மனத் தூய்மை முதலா, ஆன்ம லாபம் முதலா என்று கேட்பானேன்? இரண்டினுள் எதனைக் கடைப் பிடித்தாலும் பயிற்சிப் போக்கில் உணர்வின் இன்பமும் பணியின் இனிமையும் புலனுகின்றன; சூழ்நிலையே மாறு கிறது; அயலார் நண்பராகின்றனர்; நிகழ்ச்சிகள் மங்கள கரமாகின்றன; எதோ ஒரு உன்னத சக்தி நம்மைத் தாங்குகிறது என்ற உறுதி பிறக்கிறது. "அன்றுட வாழ்க்கையே ஆன்மிகச் சாதனையின் பெரும் பகுதி ஆகும், ஆன்மீகமும் உலகியலும் இருவேறு களங்

களல்ல. இவை வெவ்வேருனவை என்னும் அஞ்ஞானமே நாம் புரியும் பெரும் தவறு; இன்னல்கள் அனைத்திற்கும் இதுவே காரணம்,"

ஏகாந்தத்தில் தியானிப்பதற்காகக் குகைக்குப் போக உத்தேசித்திருந்த ஒரு சுவாமியிடம் மகரிஷி கூறினர் : உலகத்தில் எல்லோரையும் போலவே எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தும் தம் உண்மை நிலையை மறவாது அவா ஏதுமின்றி வாழ்பவனே காஷாயம் அணிந்து தான் உலகைத் துறந்தவனெனக் கூறிக் கொள்பவனைவிடச் சிறந்த சன்னியாசி ஆவான்."

ஒரு கிறிஸ்தவர் ஆன்ம விசார முறையை மேற்கொண்டும் தான் பிறந்த வளர்ந்த மதத்தைப் பின்பற்ற முடியுமா என வினவியபோது, மகரிஷி கூறிய விடை யாவது : "நான் சொல்லுவதுதான் கிறிஸ்தவ மதத்தின் உட்பொருளும். பைபிளில் கூறப் பட்டுள்ள தேவ சாம்ராஜ்யமும் இவ்வுலகும் வெவ்வேறல்ல. தேவ சாம்ராஜ்யம் நம்முள்ளேயே இருக்கிறது, நம் கைவசம், நம்மிடையே உள்ளதே. இந்த உண்மையை உற்றுணர வேண்டும். ஞானி பரலோகமாய் உணரும் ஒன்றையே பிறர் இகலோகமாகக் காண்கின்றனர். காரணம் திருஷ்டிபேதமே."

சத்திய யுகம் இன்றே நம்மிடை உள்ளதை உணர்ந்து அல்லது நம்பி சத்திய யுக காரியாகவே சாதகன் வாழ வேண்டும். இதற்கு மாருக, சத்திய யுகம் என்றே ஒரு நாள் வரப்போகிறது என்று சொல்லிக் கொண்டு சத்திய யுக வாதியாக மட்டும் வாழ்பவன் சாதகன் ஆகமாட்டான். "தனக்கு மிஞ்சி தர்மம்"

என்பது போலவே சீர்திருத்தமும் நம்முடனே தான் ஆரம்பிக்க வேண்டும். "நாம் திருந்த, சமூகமும் திருந்தும். நம்மை நாமே தீரத் திருத்திக்கொள்வோம்; சமூகம் தானுகத் திருந்தும். சரணுகதி வலிவு தரும். வலிவு பெருகப் பெருகச் சூழ்நிலையும் மாறி மலரும்."

அத்தியாயம் 13

வாசகக் கோவை

மகரிஷியின் வாசகங்களை விரிவாய், விளக்கமாய், அதிகார பூர்வமாய்த் தொகுத்துத் தரும் நூல் "குருவாசக் 'கோவை" என்பதே. இது கவி முகவைக் கண்ண முருகனாரால் இயற்றப்பட்ட 1254 பாக்களும், மகரிஷியே இயற்றிய 28 பாக்களும் கொண்டது. சத்குரு ரமணர் திருவாய் மலர்ந்தருளிய சுடர்விட்டொளிரும் செம்பொருள் நல் முத்துக்களைச் சேகரித்து, அவ்வப்போது செந்தமிழ்ச் செய்யுளாகக் கட்டிய விலை மதிக்க வொண்ணு மாலையே இக் கோவை நூலாம். பாக்களை 231 அத்தியாயங்களில் முருகனர் முறையாய்ப் பாகுபடுத்தி அளித்திருப்ப தோடல்லாமல், பெரும்பாலானவற்றை மகரிஷியிடமே சமர்ப்பித்து அவர் பார்த்து ஆமோதித்த பின்னரே கோவையாய்த் தொகுத்துள்ளார். ஆங்காங்கே பொருளை விளக்கவோ, புதுக் கருத்துக்களைப் புகுத்தவோ ஸ்ரீ ரமணர் தாமே யாத்துத் தந்த பாக்களும் இக் கோவை யில் இடம் பெற்றுள்ளன.

ஆகவே, ஒரு விஷயத்தைப் பற்றிய சரியான ரமணோபதேசம் எது என்று நிர்ணயிக்க விரும்புவோ மாயின் அதற்குப் பிரமாணமாக முருகனரை முன்னிட்டுத் தோன்றிய உள்ளது நாற்பது, உபதேச வுந்தியார்,

குருவாசகக் கோவை என்னும் மூன்று நூல்களையே கூறலாம். இம் மூன்றுமே 'ஸ்ரீ ரமண பிரஸ்தானத் திரயம்' ஆகும் என்று சாது ஓம் அவர்கள் ரமணாசிரம வெளியீடான குருவாசகக் கோவையின் முன்னுரையில் கூறியுள்ளது மிகப் பொருத்தமே. மற்ற இரு நூல்களை மகரிஷியிடமிருந்து வரவழைத்தது ஒரு புறமிருக்க வாசகக் கோவையிற் பெரும்பாலானவற்றைத் தாமே செய்யுளாய் வடித்து, பொருள் விளங்க வகைப் படுத்தி, விரிவான ரமண ரத்தின நூலாக இயற்றிய சாதனையை ஸ்ரீ முருகனார் புரிந்துள்ளார். இக் கோவை குருவின் ஒப்புதல் பெற்றது. தமிழைச் சுவைக்கக் கூடியவர்களுக்கு என்றென்றும் இலக்கியமணம் வீசும் பாமாலையாகவும் அமைந்துள்ளது. தவத்திரு சாது ஓம் அவர்கள் இயற்றிய உரை கோவையைப் புரிந்துகொள்ளப் பேருதவியாய் அமைந்துள்ளது.

கோவை மூன்று பாகங்களாக—முறையே தத்துவ ஆராய்ச்சியியல், தத்துவ அநுசந்தான வியல், தத்துவ அனுபவவியல் என்று—பிரிக்கப் பட்டுள்ளது. அவற்றில் மாதிரிக்கு சில பாக்களைக் கீழே காணலாம். (மூலப் பாக்களின் சந்திகளை மட்டும் ஆங்காங்கே பிரித்துப் போட்டு அரும் பதங்களுக்கு உரையும் சேர்க்கப் பட்டுள்ளது) :

பாகம் I

தத்துவ விளக்கம் : ஆன்ம விசாரணைத் துவக்கமும் செயல் முறையும்

ஞானமயச் செம்பொருளாம் தன் மெய்
அநுபவந்தான்

மோனமயப் பண்பால் முயங்குவதாய்—நான்
எனும் பொய்த்
தன்மை தன் மெய்யாய்த் தழைத்தொளிரும்
சுத்த பரத்
தன்மயமாம் தாளே தலை. (16)

[முயங்கு—விளங்கு. தாளே தலை—திருவடி தலைமேல் ஆகுக.]

வாயு ளிருந்தே வலைநூல் வெளிப்படுத்தி
வாயுள் அதை மீள வயப்படுக்கும்—மாயச்
சிலந்திபோல் இவ்வுலகைச் சிந்தையும் தன்
உண்ணின்று
அலர்ந்தே அகப் படுக்கும் ஆல். (31)

[வயப்படுக்கும்—இழுத்துக் கொள்ளும். அகப்படுக்கும்—மறைத்துக் கொள்ளும். ஆல்—அசை.]

உலகின் மயற்கை யொழிந்தாலே உண்மை
குலவு பரமுத்திகை கூடும்—உலகுக்கு
வற்புறுத்தி உண்மை வழங்கல் பரத்தைக்குக்
கற்புறுத்துங் காமக் கதழ். (74)

[குலவும்—பிரகாசிக்கும். கதழ்—உக்கிரம்]

இனைத்தெனத் தன் உண்மை தெளிந்து
ஏய்ந்து இதயத்து என்றும்
தனித்த பரமாகத் தரித்தே—மனித்தனென
வேடத்துக் கேற்ப விளையாடுவாய் உலகத்
தோடு ஒத்துத் துக்க சுகம் உற்று. (81)

[இனைத் தென—இன்னது என்று. ஏய்ந்து இதயத்து—இதயத்திலே பொருந்தி.]

தேர்வதெலாந் தேர்ந்து சித்தி சேரநதாலும்
வேற்று நடை
சார்வது சான்ருேர்க்குத் தகவன்ரும்—
ஆவதனுல்
எவ்வினத்தோடே நீ இயல்வை வெளிக்கு
அவ்வினத்தோடு
ஒவ் வுறுமாய் போலே ஒழுகு. (82)

[வேற்று—தவருன. இயல்வை—தங்குவாயோ. ஒவ் வுறுமோ—நெறி முறைகளுக்கு ஒத்தவாறு.]

உடல் ஒழிந்து இல்லே உலகம்—உடலும்
உளம் ஒழிந்து ஓர் காலும் இல்லே—உளமும்
உணர்வொழிந் தோர் காலுமில்லே—
உணர்வேயும்
உண்மை யொழிந் தோர்காலு மில். (99)

[இல்—இல்லே.]

அநேக சித்தாந்த மவரவர்க் கேற்பச்
சொன்னுலுங் குரு ரமணத் தோன்றல்—
தனுது.
நிஜாநுபவமாக நிகழ்த்தி யாங் கேட்டது
அஜாத சித்தாந்தம் அறி. (100)

[தோன்றல்—அரசன். தனுது—தனது. நிகழ்த்தி-கூறி. அஜாதம்—பிறவாமை; உலகம், உயிர், கடவுள் என்ற மூன்றும் என்றும் உண்டாகவே இல்லே; உள்ள பொருள் உள்ளபடியே விளங்கிக் கொண்டுள்ளது, என்ற உண்மை.]

அர்ச்சுனற்குக் கண்ணபிரான் ஆதிக்கண்
சொற்றதூஉம்
உச்சமுறும் இந்த நிலே உண்மையே—
அர்ச்சுனன் தன்

சிந்தை கொளமாட்டாத் தியக்கத்தால் காண்டி
அதன்
பிந்தி உரைத்தான் பிற. (101)

[ஆதிக் கண்—ஆரம்பத்தில்; இரண்டாம் அத்தியாயத்தில். சொற்றது உம்—சொன்னதும். காண்டி—கண்டு கொள்க. பிந்தி...பிற—பின்வரும் 16 அத்தியாயங்களையும்.]

சீவன் ஆரென்று அகத்துத் தேற விசாரிப்பின்
சீவனே யின்றிச் சிவன் வெளியாம்—
ஆவலாய்க்
காணுறுவான் இன்றாகக் காணப்படும் உலகைப்
பேணுறல் உண்டாக வெறும் பித்து. (110)

[தேற—உறுதியாய் முடிவுரை.]

இறைவன் போல்ஏனை இரண்டு நிசமேல் அவ்
இறைவன் பரிபூரணத்தில்—குறைவாம்
இறைவன் பரிச்சின்னன் என்றாலொழியப்
பறையல் ஆகாது அப் பரிசு. (112)

[ஏனை இரண்டு—உலகம், உயிர். பரிச்சின்னன்—பகுக்கப்பட்டவன், பூரணனல்லன். பறையல்—கூறுதல். பரிசு—குணம். ஜீவனும் ஜகமும் ஈசனுள் அடங்கியவை: ஈசன் ஒன்றே உண்மை.]

மெய்யுறு முத்தர்க்கு வியத்தியுள தாம் என்னல்
பொய்யுறு பெத்தப் புலவோர் புல்லறிவே—
பொய்யறு மெய்
ஆய வியோமத்தவர் வியத்தி அவ் வியத்தி
நேயர் வியத்தி நிழல். (119)

[வியத்தி—தனியிருப்பு. பெத்த—பந்தப்பட்ட. புலவோர்—புலனறிவுடையோர். புல்லறிவு—அற்ப புத்தி. வியோமத்தவர்—பரவெளி வடிவினர். நேயர்—அன்பர். நிழல்—பிரதிபிம்பம்.]

நாடுவார் உள்ளத்துள் ஞானமே செம்
பொருளாய்
நீடலால் ஊனகத்தை நீங்கிய பின்—ஈடிலா
ஞானியவர் ஞானியிவர் என்ன அவர்
உண்மையிலே
ஊன் உருவர் தாமோ உரை. (120)

[நீடல்—நிலைத்து விளங்கல். ஊன் உருவர்—உடல் உருவங்கள்.]

அந்த மகான்மாவை இந்த மகான்மாவை
விந்தையொடு காண விழைகின்றீர்—
சொந்தமாம்
உந்தம் மகான் மாவுருவை ஓர்ந்துளத்துள்
உற்றுணரின்
எந்த மகான்மாக்களும் ஒன்றே. (121)

[உந்தம்—உம்முடைய, உமக்குள்ளிருக்கும்.]

'யான்' என்னுந் தன்மை இயற்பெயரோடு
ஏய்ந்த வினை
யான 'இருத்தல்' அரும் பொருளை—நான்
இன்றாய்
உள்ளபடி யான் உணர்கின் அன்னவனே
கள்ளமறு மெய்ப் புலவன் காண். (137)

[கள்ளமறும்—குற்றமற்ற.]

மூலமாய் ஏய்ந்த முனைவனது திருக் கூத்து
ஏலவே காணன் இதுவாகும்—ஞாலத்து
எழுமே அகந்தை எழும் அகிலம் அஃது
விழுமேல் அனைத்தும் விழும். (166)

[மூலமாய் ஏய்ந்த முனைவன்—முழு முதற் பொருளான கடவுள். ஏலவே—நன்றாய், ஆராய்ந்து. ஞாலம்—உலகம்.]

அரும்பாரச் சும்மைகள் நீராவி வலியாலே
துரும்பாகக் கொண்டு நெடுந்தூரம்—
விரைந்தோடும்
பொங்கு அழலின் வண்டியிலே போம் அறிஞர்
தம் சுமையைத்
தங்கள் தலை மேல் சுமவார் தாம். (172)

[சும்மை—சுமைத் திரள். பொங்கு அழலின் வண்டி—புகைவண்டி.]

அன்னதே போல அகில பரா சத்தியே
தன்னியல்பால் எவ்வெவையும் தாங்கலால்—
மன்னுயிர் தம்
சிந்தா குலச்சுமையும் சிற்சத்தி மேற்போட்டுச்
சிந்தா குலம் தவிர்தல் சீர். (173)

[சிந்தா குலச்சுமை—மனக்கவலைகளான சுமை. சிற்சத்தி—சித்—சக்தி.]

வளியல் அழிவெய்தும் வங்கத்தின் பாய்போல்
வெளியே பரந்து விடாமை—நளிகடல் வாய்த்
தாழப் படிந்து தரித்த நங்கூரம் போல்
ஆழப் புகுவது அறிது. (191)

[வளி—காற்று. வங்கம் கப்பல். நளி—பெரிய]

புறமுகத்துப் பாயும் தன் புத்திதனை உள்ளே
அற நிறுத்துக் காக்கும் அதுவே—அறவோர்
பதியாம் இதயப் பரசொரூபம் காணும்
அதிகார தீரம் அறி. (192)

[அதிகார தீரம்—தீவிரமான அதிகாரம்; முமுக்ஷுத்வம்.]

பரன் உலகு எங்கேயோ படிவதாய் எண்ணம்
மருவல் உடலகந்தை மாயம்—மருவுறத்தான்

எங்கும் இலே தன் னிதயத்தின் அன்றி அரன்
துங்க வுலகு என்று துணி. (194)

[மருவல்—தோன்றுதல். அரன்—சிவன். துங்க—பரிசுத்த.]

அந்த வுலகுக்கு அவகாசம் நல்கலொடு
விந்தையால் அத்தை விளக்கற்கும்—சொந்த
நிறைவொளியாய் நீ தான் நிகழகக் காண்டல்
காண்
இறைவன் உலகு உன்னுள் இருப்பு. (195)

[அவகாசம் நல்கல்—இடம் அளிப்பது காண்டல்—உணர்வது.]

மன்னிய பேரின்பால் மனந்தான் எதனை
யடைந்து
அன்னியத்தை நாடி அலேயாதோ—துன்னும்
நவ நவ ஞானநுபவ நல்கவ் வுளமாம்
சிவமே மனோரஞ்சிதம். (202)

[மன்னிய—நிலேபெற்ற. துன்னும்—நிறைந்த. நல்கவ் வுளம்—தரும் அந்த உள்ளம்.]

இழைத்தநாள் எல்லே இகந்துபிழைத்தோரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தான் மார்க்கண்டன்—
ஆற்றுசிவ
பூசனையால் வன்கால நாசனே ஆயின் கால
பாசம் நையா நிற்கும் பரிந்து. (205)

[இழைத்த நாள்—விதிக்கப்பட்ட வாழ் நாள். இகந்து—கடந்து. ஆயின்—ஆராதித்தல். நையா நிற்கும் பரிந்து—நைந்து அறுந்து போகும்.]

எண்ணுவனவாம் எட்டு எழில் வடிவும் எந்தை
யாம்
அண்ணல் உரு என்னும் அபேத மதி—
நண்ணினராய்
ஆங்கு அவற்றுக்கு ஏற்றவாறு ஆற்றும் வழி
பாடு அனைத்தும்
ஓங்கு சிவ பூசை யுணர். (206)

[எண்ணுவன—எண்ணத்தால் தோன்றுவன. ஓங்கு—சிறந்த.]

ஆன்ம வலியால் முடிக்கலாக வினையில்லை
ஆன்ம வலி யென்பது அருள்வலியாம்—
ஆன்மவலி
மாட்டாது தோள்—வாள் வலிமாட்டும்
என்னல் புலை
ஆட்டாய மாயை அழுக்கு. (215)

[புலை ஆட்டு ஆய—தேகாத்ம புத்தியின் லீலையாகிய. அழுக்கு—தோஷம்.]

ஆற்றல் அமைதிகளை அன்னியம் போல்
வெவ்வேருய்ச்
சாற்றுவார் உள்ளபடி தாம் அறியார்—சாற்றும்
அக நோக்கத்தால் அமைதி யாவதே ஏனை
முகநோக்கத்தால் ஆற்றலாம். (216)

[ஏனை—மற்ருெரு]

முத்தி நெறிக் கண் முயல் சாதகர் விவித
சித்திகளில் சிந்தைசெலுத்துவரேல்—மெத்திய
பந்தம் மேன்மேலும் பலப்படுமாற்ருல்
அகந்தைக்
கந்தம் மேன்மேல் கொழுக்குங் காண். (222)

[மெத்திய—மிகுந்த. கந்தம்—கிழங்கு.]

அவிச்சை நனவாம் கனு ஆசானுல் சீடர்
கவிச்சமயல் போய்த் தெளிவர் காணுய்—பவிச்ச
கனுவகத்துக் கண்ட சிங்கத்தாலே யானை
தனுது துயில் போய் விழித்தல் சான்று. (283)

[அவிச்சை—அவித்தை. கவிச்சமயல்—அஞ்ஞாத நித்திரை. பவிச்ச—உற்பவித்த, தோன்றிய.]

ஒரு சேடமாக வொளிர் ஒளியைக் காட்டித்
தரு மோன வள்ளலாய்த் தங்கும்—குருசீடர்
கண்ணேடு கண்ணிணை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. (286)

[சேடம்—மிச்சம்; நேதி செய்தபின் எஞ்சி நிற்பது.]

குறிப்பு: பின் இரு வரிகள் திருக்குறள் 1100.

கலிவீட்டி ஆண்டான் தன்காதலர்நெஞ்சத்தில்
கொலுவீற்றிருக்கும் குலாச்சீர் – மலைபோற்றும்
கண்டவர்கள் விண்டிலர்கள் விண்டவர்கள்
கண்டிலர்கள்
மண்டும் அடியார் மறை. (325)

[கலி வீட்டை—கலிதோஷம் அழித்து. மலை போற்றும்—மலை போன்றது மண்டும்—திரளும்]

ஒட்ப அடியாரோடு உறவுக் கலப்பு உவந்து
திட்பமுள அன்னுர் திருக்கூட்டத்து—உட்புக்கு
ஒளித்துத்தன் மெய்யுரு மற்ருேர் உருக்
கொண்டு ஆர்வம்
திளைத்து விளையாடும் சிவன். (334

[ஒட்ப—அருளொளி பெற்ற.]

இன்றியமையாது இயலுந்தன் உண்மைதனைத்
துன்று நானுர் எனவுட் சோதித்தல்—ஒன்றே
உயல் உணர்த்தும் பன்மதத்தும் ஊடுருவிச்
செல்லும்
உயிர் நாடியாக உணர். (338)

[துன்னும்—பொருந்தும், உறுதியான. உயல்—உய்யல், ஜீவித்தல்.]

அமையும் அதீதத்தை அகவெள் ளிடையில்
இமயமெனக் காட்டுமோர் சொல் இன்றேல்
—சமய
வருக்கமெலாஞ்சேர்ந்துபரவஸ்துவைஆய்வாத
தருக்கமெலாஞ் சந்தையிரைச்சல். (341)

[ஆய்வாத—ஆய்கின்ற வாத-தருக்கம் தர்க்கம், சர்ச்சை

உயிர்க்குயிராய் ஈசன் உறைந்தொளிரும்
உண்மை
மயக்கறவே தேர்ந்த மனத்தோர்—நயக்க
நிகழும் பரன் சந்நிதியாகும் ஏனோர்
இகழும் புழு முன்னெலாம். (345)

[மயக்கறவே—மயக்கமின்றி, தெளிவாக. நயக்க—விரும்பத்தக்கதாய்.]

சிவத்துக் குணவாய்ச் செழித்தொளிர் மெய்ஞ்
ஞானத்
தவத் தழலில் தம் மனத்தைப் பெய்தோர்—
சிவத்தின்
சொருபமேயாகத் துணிந்து வழிபட்டு
அருப சிவம் தேறல் அடைவு. (353)

சீவ போதத்தை ஒரு சேர விடுத்தால் சேர்வது
யாவதோ என்று ஐயம் எய்தற்க—மேவுகிளை
கைந் நழுவ விட்டால் இக் காசினியே போல்
ஆன்ம
மெய்ந் நிலையே சேர்தல் விதி. (354)

[ஜீவபோதம்-''நான்'' என்னும் தனிப்பட்ட உணர்வு. காசினி--பூமி.]

உடற்சிலுவை யாங்கண் உடல் அகந்தையேசு
உடற்றப்பட்டு ஆங்கே யொழிய—உடற்சியற
எஞ்சியமெய் ஆன்மாஇறையாய்இலங்கல்அவர்
உஞ்சு உயிர்த்து மீட்டும் எழல் ஓர். (365)

[உடற்ற—அறைய. உடற்சி—வருத்தம். இலங்கல்—விளங்குதல். உஞ்சு—உய்ந்து, ஈடேறி, ரட்சிக்கப்பட்டு. உயிர்த்து—உயிர்பெற்று.]

சார்வதன் முன்னம் அணுத் தானும் மாமேரு
வாய்ச்
சார்ந்தபின்மாருய்ச்சரிந்துநல்—கூர்ந்திடலால்
ஆர்தற்கு அரும் பேரவாப்போல யாங்காணேம்
தூர்தற்கு அரும் பாழ்ங் குழி. (371)

[சரிந்து நல்கூர்ந்திடல்—விழுந்து வறியோனுதல். ஆர்தர்க்கு—ஆருதற்கு, திருப்தியாக தூர்தற்கு—தூர்க்க, நிறப்ப.]

நானுர்எனத்தன்மெய்நாடும்உயிர்நானறுமெய்
யான ஆன்மாவாய் அறும். (388)

மிக்க ஞானன்ம விசாரமாம் செந்நெறிவாய்ப்
புக்கார் வழிமாறிப் போதலிலை—அர்க்கனென

நேரிதாம் அந்த நெறியே தன்
நேர்மைமையைத் தற்
சாரும் அவரவர்க்கு உணத்துந் தான். (393)

[புக்கார்—புகுந்தவர். அர்க்கன்—சூரியன். தற்சாரும் தன்னை (ஆன்மாவை)ச் சேரும்.]

இன்பப் பெருவாரி எங்கும் பரந்திருக்கத்
துன்பக் கொடுங் கனல் வாய்த் தோய்ந்து
அழுங்கல்—என்ப
கடமையாச்செய்தவத்தைக்காதலித்துச்செய்யா
மடமையால் ஆய மயல். (411)

[செய் தவம்—செய்யும் தவம். ஆய மயல்—உண்டாகிய மயக்கம்.]

குறிப்பு : ஆன்ம விசாரம் என்ற தவம் துன்பமன்று, இன்பத் தழுந்தல்.

பாய விசும்பில் பறைநெறியும் நீர் வாழ்வ
போய நெறியும் புலப்படா ஆறுபோல்
ஆன்மாவை நோக்கி யடைந்தோர்தாம்
சென்ற நெறி
தானும் புலப்படல் இன்று. (413)

[பாய விசும்பி—பரந்த ஆகாயம். பறை நெறி—பறவை சென்ற வழி.]

அறிவெனும் பொற் கோயில் அகத்தே விசுத்த
அறிவுருவமாக அரனை—அறிவால்
அறியா நிற்கின்றார் மெய் யாராதிக்கின்றார்
அறிவே பரமார்த்தமாம். (417)

[விசுத்த—பரிசுத்த.]

அறிவை யறிவால் அறிவதே உண்மை
நிறை வறிந்த ஞான நிவப்பாம்—அறிவால்
அறிவறியுங்கால் அவ் அறிவுக்கு அமைதி
இறையளவும் இல்லை அறி. (418)

[நிவப்பு—உயரம், உச்சி. இறையளவு—அணுவளவு.]

அறிவே அசங்கம் அறிவே அமலம்
அறிவே கடவுள் அணுக்கம்—மறவா
அறிவே அபயம் அறிவே அமுதம்
அறிவே அனைத்தும் அறி. (438)

[அசங்கம்—பற்றின்மை.]

ஆண்டவற்கு ஆன் மாயை அளி என்பர்
அவ் வான்மா
ஆண்டவனது அன்றி அயலாரதோ—
ஆண்டவன்பால்
வஞ்சத்தால் தான் கவர்ந்தமைக்கு இரங்கி
ஆண்டவன் தாள்
கஞ்சத்து ஏற்பித்தல் கடன்.

[அளி—அர்ப்பணம் செய் இரங்கி—வெட்கப்பட்டு வருந்தி. கஞ்சம்—தாமரை]

பிள்ளையார் தன்னையே பிட்டு அந்தவெல்லத்தீம்
பிள்ளையார்க்கு அர்ப்பிக்கும் பெட்பேயாம்—
தெள்ளிதாம்
ஆவிவடிவாகஅமர் இறைக்குநாம் உவந்து அவ்
ஆவியையே நல்கும் அது. (486)

[பெட்பு—தன்மை.]

தன்னை எவைக் குள்ளும் தரிசித்து எவைக்கும்
தாழ்
தன் அடியார்க்கேயும் தான் தாழ்ந்தோனாய்த்
—தன்னை விட
நொய்தற்ற தன்னியல்பாம் நொய்ம்மை உயர்
வால் அன்றே
எய்திற்று இறைமை இறைக்கு. (497)

[நொய்தற்ற—தாழ்மையுடையவர் இல்லாத.]

வீரமிலாத் துரும்புமேல் மிதப்ப ஆழிவாய்ப்
பார தரளம் கீழ்ப் படிதலால்—பாரகத்து
மேலிருந்தும்மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர். (499)

[வீரம்—உறுதி. ஆழிவாய்—கடலில். பார தரளம்—கனமான முத்து.]

பாகம் 2

தொடர்ந்து அப்பியசித்தல்

சொற்கள் பொருளைத் துலக் கற்கு நேர்மாறாய்
புற்கென்று அதனைப் புதைப்பனவாம்—
சொற்களால்
தாம்புதையும் செம்பொருளே தானாய்த் துலங்க
உளத்து
ஓம்புதி சொல் சிந்தை ஒருங்கு. (525)

[புற் கென்று—ஒளி மங்கி, பயனற்று ஓம்புதி—வைத்துக் காப்பாய்.]

பற் பலவாத் தோற்றும் பகிரண்டம் என்றாலும்
உட்பொருளாம் மெய்ப்பொருளோ ஒன்றே
காண்—சுற்றும்

பெருங்குடம் சேர் செக்கின் கண் பெய்த பல
எள்ளுட்
பொருந்திய நல்லெண்ணெயே போன்று. (543)

நிமிர்ந்து எழுதல் அன்றி நெருப்பு நெய்யாலே
அமர்ந்து தணிவெய்தாத ஆறே—சமைந்ததம்
காமங் கைகூடுங் களிப்பானே காமத் தீ
ஏமங் கொடுதணிதல் இன்று. (592)

[ஏமங்கொடு—திருப்பியடைந்து.]

கடைவால் அலது சுரங்கத்து மணி சோபை
படையாத அந்தப் பரிசே—தடையாய
சோதனையால் அன்றிச் சுடராது ஒருவன்செய்
சாதனையாம் உண்மைத் தவம். (619)

[கடைவால்—கடைதலால். ஒருவன் செய்—ஒருவன் செய்யும்.]

அன்பையேகாண்பதாய்அன்பையேகேட்பதாய்
அன்பையே தானுற்று அறிவாய்—இன்பமாம்
அன்பையே உண்பதாய் அன்பையே மோப்ப
தாம்
அன்பே ஆன்மாநுபவம். (655)

அகத்தும் புறத்தும் அரன் சகள பூஜை
நிகழ்த்து சிவநேயமுறு நெஞ்சே—
மிகுத்துணர்வாய்
எல்லா விடத்து மிறைவன் இருப்பு மறப்
பில்லா உணர்வோடு இயற்று. (660)

[சகள பூஜை—உருவ வழிபாடு.]

அல்லாவைநாளும்அடிதொழுவார்இன்பஞ்சேர்
எல்லா நலனும் ஒருங்குஎய்துவார்—பொல்லாப்

பழிபாவத்தாலே பரிதபிக்கும் சிந்தைத்
தழல்வாழ்வு உபசமனம் சார்ந்து. (663)

[உபசமனம்—அடக்கம், அமைதி.]

வேளைக்கு வேளையெனல் விட்டு நிரந்தரமாய்
நீளச்செயும் ஆன்ம நிட்டையால்—மூளை
யுழித்தராது ஊர்வா தனை யுரோமத்தை
மழித்தலே முண்டன மாண்பு. (675)

[மூளையுழி—மூளை வழியே. தராது—இடம் தராமல். ஊர்வாதனை—ஊர்ந்து வருகின்ற வாசனைகள், எண்ணங்கள்.]

உள்ளங்காலுள்ளேஉறத்தைத்துஉடற்றுங்கூர்
முள்ளின்பகை கீண்ட முட்போல—உள்ளத்து
அசுத்த நினைவை அகழ் ந்ததன்பின் பந்த
விசுத்த நினைவும் மிகை. (676)

[உறத் தைத்து உடற்றும்—நன்ருகத் தைத்துத் துன்புறுத்தும். கீண்ட—நீக்கியெடுக்க. அகழ்ந்தன் பின்—நீக்கிய பிறகு.]

முன்னதேதான்செய்தமுயற்சியேபக்குவத்தால்
பின்னே தான் ஊழ் உருவாய்ப் பேர்தலால்—
முன் அதனை
ஆற்றியதன்ருலே அரிது முயன்று அவ்வூழை
மாற்றலும் ஆம் என்றே மதி. (692)

[ஊழ்—பிராரப்த. போதல்—மாறுதல். ஆம்—முடியும். மதி—தெரிந்து கொள்.]

யானே பரமென்று இயம்பித் திரியாமல்
தானே பரமாய்த் தரித்திடுக—தான் அதுவாய்
நிற்றலா லன்றி நெடுங்குரலால் பற்பல கால்
சொற்றதனுல் போமோ துயர். (709)

[பற்பல கால்—பலமுறை. சொற்றதனுல்—சொன்னதால்]

சீவன் றனக்கும் செகத்துக்கும் ஈசனே
கோவிலாகும் திரம்கூர்ந்தறியான்—ஆவரணம்
ஏன்றதொரு கோவில் எடுத்து இறையைத்
தான் குறுக்கி
ஆன்ற வழிபாடு செய்வான். (711)

[கூர்ந்து—நுட்பமாய். ஆவரணம்—மறைப்பு, ஏன்றது — பொருந்திய. ஆன்ற—சிறந்த.]

உள்ளமெனும் மெய்ப்பொருள் தான்
உள்ளத்தினின்று உணர்வாய்
மெள்ள வெளிவந்து விரியுங்கால்—
உட்பொருட்கு
ஆன அபிதானம் பல்லாயிரத்துள் ஆயுங்கால்
நான் என்பதே முதலாம் நாடு. (712)

[அபிதானம்—பெயர்கள்.]

ஊசிக் காந்தம் வடக்கு ஒன்றல் என ஈசனடி
நேசித் தொழுகும் ஒரே நெஞ்சத்தார்—பாசக்
கடலாம் உலகில் கருத்துத் திகைத்துத்
தடுமாறுவார் அலர் தாம். (734)

[ஒன்றல்—ஒன்றுதல், நாடிநிற்றல். அலர்—அல்லாதவர்.]

அறிவாய்த் தனை நன்கு அனுசந்திக்கிற்போன்
செறிவான் அகமாம் சிவத்து. (742)

[அனுசந்திக்கிற்போன் — இடைவிடாது சிந்திப்பவன். செறிவான்—நிலை பெறுவான்.]

தன் சொரூபமாகத் தழைத்ததால் யாவன்
எவர்க்கு
என் செயினும் செய்கை தனக்கே. (808)

ஆகத்தினின்று அகன்றஆருயிரை மீட்டும்அவ்
ஆகத்தினில் சேர்க்கும் ஆற்றலிலார்—
சாகத்தான்

எந்த உயிர் தன்னையும் எவ் ஏதுகொண்டு
ஆகத்தின்
உந்தும் அதிகாரம் உரூர். (812)

[ஆகம்—உடல். உந்தும்—வெளியேற்றும். உரூர்—இல்லாதவர்.]

நீரிற் படகு நிகழ்வதலால் நீர் படகில்
ஊரின் பெருத்த இடையூறேயாம்—வாரிதி சூழ்
பாரில் வதிவதலால் பார்மனிதன் உள்ளத்துள்
சேரில் உயிர் வாழ்வு முற்றும் தீங்கு. (822)

[நிகழ்வதலால்—மிதக்கலாமே தவிர. ஊரின்—புகுந்தால். வாரிதி—கடல். வதிவதலால்—வாழ்வதால்.]

கொள்ளுங் குடமன்றிக் கொள்ளா மரக்கட்டை
வெள்ளத்து அமிழ்தல் விதியன்றே—
உள்ளத்துள்
பற்று நின்றூர் அன்றிப் பற்றூர் உலகியல்வாய்
உற்றுலும் மாழ்கல் உரூர். (823)

[கொள்ளும்—நீரை உட்கொள்ளும். பற்றுநின்றூர்—பற்றுபவர். மாழ்கல்—அழிதல்.]

அகந்தைத் தியாகம் அரிதிற் புரிந்தோர்
இகந்தொழிய மற்றென்றும் இன்று. (837)

[இகந்து—விட்டு.]

என்றன் மனம் என்றும் உன்றன் மனம்
என்றும்
துன்று அகமே பாசத்தொடக்காகும்—
மன்றவே
தெள்ளும் பரமான்ம சிற்சத்தியாய் உளவாறு
உள்ள மனம் ஒன்றே உணர். (842)

[துன்று அகமே—காணப்படும் போதே. தொடக்கு—வித்து, காரணம். மன்றவே—எப்போதும். தெள்ளும்—தெளிவான.]

பாகம் 3

அனுபவம்

தீது நலமாம் தொந்த திட்டியொடு காலம்இடம்
ஏது பலம் கன்மம் இவை யின்றியே—யாதும்
பிரிதாய் அறிய ஒரு பின்னமிலா உண்மை
அறிவே அனந்த விழியாம். (880)

[தொந்த—த்வந்த, இரட்டை. திட்டி—திருஷ்டி, பார்வை. கன்மம்—கர்மம்.]

சமாதி வடிவாய தவத்தால் இனிமேல்
தமாலனுபவிக்கப் படுஉம்—சமானமறும்
அப்பதம் மெய்யாக அமையுமேல் அஃதப்போது
ஒப்ப இப்போதும் உளது. (886)

[சமானமறும்—ஒப்பற்ற. ஒப்ப—சமமாக.]

அந்த நிலை இப்போது இன்றாகி மற்று
அப்போதே
வந்தடைவதாமேல் அவ் வந்த நிலை—
சொந்த முள
தம் இயல் பல்லாமையால் தம்மின்
அகல்வதன்றித்
தம்மிடம் நில்லாது தரித்து. (887)

[தம்மின்—தம்மிடமிருந்து.]

மனைவியொடு நாத்தூண் மருகியொடு மச்சான்
மனைவியோடு அனையாயு மற்றோர்—
நினைவால்

ஒருத்தியே தோன்றுவாள் உண்மையிலே
அன்னுள்
உருத் திரிதல் சற்றும் உருள். (907)

[நாத்தூண் (நார்த்தூண்) — நாத்தனூர். மருகி — மருமகள். உருத்திரிதல் — உருமாற்றம். உருள் — அடைவதில்லை.]

பொன்னில் தொடி போற் புனல் போம்
மசரதத்தில்
துன்னுகனுப் பட்டினத்தைச் சூழ ரண் போல்
—தன் மயமே
காணப்படுபவ எல்லாங் காண்பானில்
அன்னியமாயப்
பேணப் படுதல் பிழை. (923)

[தோடி—ஆபரணம். மசரதம்—கானல் நீர். துன்று—காணப்படும்.]

சத்து சித்து இன்பம் எனச் சுற்றினும்
வெவ்வேருக
உய்த்துணர்ந்தல் அல மூன்றும் ஒன்ருகும்—
ஒத்த
திரவமொடு மாதுரியம் சீதளங்கன் மூன்றும்
பொருவறு நீர் ஒன்றேதான் போன்று. (979)

[திரவம்—திரவத் தன்மை. மாதுரியம் — இனிமை. சீதளம்—குளிர்ச்சி. பொருவறு—ஒப்பற்ற.]

சத்தியமே அன்றி அசத்தியமோ புத்திதரு
வித்தையோ அன்றி அவித்தையோ—சித்த

இரம்மியமோ அன்றி அரம்மியமோ யாவும்
பிரம்மமே; அன்று பிற. (987)

சுகம் என்பது ஆன்ம சொரூபமே ஆன்ற
சுகமன்றி இல்லை சொரூபம்—சுகமென்பது
ஒன்றே உளது அவ் உறுதியுணர்ந்து
ஆன்மநிலை
நின்றே துய் இன்பம் நெடிது. (1029)

[நெடிது—எப்போதும்.]

ஆறு பொறி வழியாய் அண்டமெலாம்
கண்டாளும்
வீறு படைத்த அக வெஞ்சூரைச்—சீறி
மடக்கி இதயத்து மடித்தோனே பேரின்பு
அடுக்கும் குமாரன் அறி. (1031)

[கண்டாளும்–கண்டு அனுபவிக்கும். வெஞ்சூர் — கொடிய சூரன். அடுக்கும்—உடைய. குமாரன்—முருகன்.]

அசை படக் காட்சி அகிலமும் ஆன்மா
அசை வுறும் உண்மை உணர்வு.
உணர்வுருவான அவ் வுண்மைத் திரைமேல்
புணர்வன அம்முப் புடி (1047-8)

[அம்முப்புடி—அந்த திரிபுடி: அறிபவன், அறிவு; அறிபடு பொருள் என்ற மூன்று.]

எழலும் விழலும் இயல்பெனக்கொண்டு
என்றும்
உழலும் அகங்கார உயிராய்ச்—சுழலும்
சகடக்காலன்று சலியாது உளமெய்
அகடச்சே ஆன்மா அறி. (1052)

[சகடக்கால்—வண்டிச் சக்கரம். அகடச்சு—மையத்தி லுள்ள அச்சு.]

ஆன்ம பர தத்துவமல்லாத பிற தத்துவத்தைத்
தான் மயங்கி ஆய்ந்து தடுமாறல்—ஊன
மயிர் வினைஞன் குப்பையை வாரித் தள்ளாது
செயிர் பட நன்கு ஆய்ந்த திறம். (1076)

[மயிர் வினைஞன்—அம்பட்டன். செயிர்பட—வருந்திக் கொண்டு.]

சீவன் எனவும் சிவன் எனவும் உண்மையிலே
யாவதும் உண்டோ இருவேறு – மேவும்
அமிழ்தின் இயன்ற ஆண்டான் அடிமைப்
பாவை
தமில் வேறுபாடு உண்டேல் சாற்று. (1081)

[அமிழ்தின் இயன்ற—அமிர்தத்தால் செய்யப்பட்ட. தமில்—தமக்குள்.]

நினைந்துநினைந்துஅன்பர் நெடும்பாவனையால்
புனைந்த உருவேதான் பொருந்தல்—அனந்த
உரு நாமம் ஏவினும் மாய உபாதியால் மெய்
அருவம் அறிவே அரன். (1099)

[அரன்—சிவன்.]

தன்மயராம் பூரணர்க்குச் சித்திகளால் சால்
புரைத்தல்
இன்னுழையும் செங்கதிரின் துன்னணுச்சீர்—
வன்னம்
நிகழ்த்துவதனுலே நிறைசுடர் ஞாயிற்றின்
மகத்துவம் நன்கு ஓதல் மதி. (1170)

[சால்பு—மேன்மை. இன்னுழையும்—இல் நுழையும், வீட்டுக்குள் புகும். துன்—துவாரம். வண்ணம்—வர்ணம், ஒளி]

ஆதல்இலை அல்லாஅழிவும் இலை பெத்தர்இலை
சாதனைகள் செய்வாரும் சற்றும் இலை—
மேதகவை
வெஃகுவார் தாம்இல்லை வீடுற்றார் தாமும்இலை
இஃதே பரமார்த்தம் எண். (1227)

[இலை—இல்லை. பெத்தர்—பந்தமுற்றோர். மேதகவு—மேன்மை, வீடு. வெஃகுவார்—வருந்தி விரும்புவோர்.]

அத்தியாயம் 14

ஒப்பீடுகள் : முடிவுரை

உயிர்த்துடிப்பும் பேராற்றலும் வாய்ந்த தர்மத்தை வகுத்துத் தந்த இந்திய வாழ்வுத் திட்டத்தில் வீட்டுப் பேறு அல்லது ஒருமையுணர்வு ஒன்றே வேரும் கனியுமாம். இத் திட்டத்தையே ஆதி சங்கரரும் ராமானுஜரும் பளிங்குப் பேழையிலிட்டுக் காப்பது போல வருங்கால சந்ததியருக்காக படித்துப்பயின்ற ஒரு சிலர் கையிலே ஒப்படைத்துச் சென்றனர்.

நம் வாழ்நாளில் காந்திஜியும் ரமண மா முனிவரும் இப்பேழையை உடைத்தெறிந்து அதனுள்ளிருந்த வித்துக்களைப் பரவலாக விசிறி விட்டனர். பண்டிதர் கட்டிக் காத்த இந்து மதத்திற்கும், பாமரம் பின்பற்றும் இந்து மதத்திற்கும் இடையே, ஞானத்திற்கும் கர்மத்திற்கும் இடையே, உயர் குலத்தோருக்கும் பொது மக்களுக்கும் இடையே நின்ற சுவர்களைத் தகர்த்து விட்டனர்.

உண்மை உயிர் வாய்ந்த தன்னாட்சி (ஸ்வராஜ்யம்) —"தீதும் நன்றும் பிறர் தர வாரா"—என்பது வேதம் போற்றும் அக வீடே என்று காந்திஜி அயராது பன்முறை விளக்கியுள்ளார். முன்னம் சங்கரர் சலியாது செயல் புரிந்து பூவுலகும் தம் பொன்னாடும் முற்றிலும் ?

மாயமில்லை என்று காட்டியதைப் போலவே, ஸ்ரீ அரவிந்தர் இப்பௌதிக உலகையும் மக்கள் சமுதாயத்தையும் விட உள்ளுணர்வே தம் உண்மை உலகென்பதைப் பல்லாண்டு காலம் தனிமையில் வாழ்ந்து நிரூபித்துள்ளார்.

வாழ்வில் அன்பும் பொறுப்பும், அன்னியரிடம் வெறுப்பின்றி தம் நாட்டு மக்களோடு மனம் ஒன்றித் தொண்டு புரியும் நல்லறமாகிய நாட்டுப் பற்று, அவரவர் கடமையை ஏற்றுத் திறம்பட உழைத்தல்—இவையே நடைமுறை வேதாந்தம்; நாணயமான, நாட்டு மண்ணில் விளைந்தஇந்து மதப் பயிர். இந்த இந்து தர்மம் எங்கே? இதற்கு மாருக, தலைவிரித் தாடுதல், திடுக்கிடச் செய்யும் ஸித்திகள் காட்டுதல், ஜெட்—விமானத்தில் உலகம் சுற்றும் யோகிகளும் பாதி பழுத்த ரிஷிகளும் பொறுப்புணர்ச்சியினின்றும், தப்பியோட வழிகாட்டும் உபாயங்களும், திடீர் சமாதி போன்ற போலி ஆன்மீகப் பாய்ச்சல்களும் இன்று காணப்படுகின்றன.

விவேகானந்தரும், காந்திஜியும், அரவிந்தரும் நன்கு உணர்ந்தும் உணர்த்தியும் உள்ள உண்மை யாது? 'வீடு வேறு, அறம் வேறல்ல; ஒரே உயிரோட்டம் இவற்றை ஊடுருவி ஒன்றுபடுத்துகிறது, என்பதே. நாட்டு மக்களிடம் அன்பு செலுத்திப் பணி புரிதல்—மனத்தூய்மைக்கு வழி வகையானாலும் சரி, மனத் தூய்மையின் விளைவானாலும் சரி—உண்மையான ஆன்மீக வாழ்வின் அம்சம் எனக் கருதி, பொதுத் தொண்டை உயர்த்தி வைத்தனர். கடமையாற்றுதல் ஆன்மிக வாழ்வுக்குப் புறம்பானதல்ல. பணி புரிதல், மக்கள் நலனுக்காக உழைத்தல் ஆன்மிகத்தில் ஊன்றும் பயிற்சியாகப் பயன்படலாம். அரசியலும் பொது நலத்

தொண்டும்—ஏன், தனி வாழ்வும் குடும்பவாழ்வும்கூட—எல்லாம் சேர்ந்தே அறம் உருவாகிறது. அறத்துக்குப் புறம்பான மானிட வாழ்வு ஏது? பொருள், இன்பம் இரண்டையும் ஒழுங்குபடுத்தும் சக்தியாக இயங்கி, அதே நேரத்தில் வீட்டின்பத்தால் தான் சக்தி பெற்று இயங்கு வது அறம்.

அறத்தின் இந்த இருவகை இயல்பினை விளக்கும் இக் கண்ணோட்டத்தில்தான் ஆகஸ்ட் 15, 1917-ல் மகரிஷி அருளிய ரமண கீதையின் பத்தாம் அத்தியாய மாய் அமைந்த சங்க வித்தையின் ஆழ்ந்த பொருளை நாம் உணரல் வேண்டும். அவ் வத்தியாயமும், உள்ளது நாற்பது அனுபந்தத்தின் 26—27 செய்யுள்களும், மற்றும் அருண் மொழித் தொகுப்பில் காணும் பல குறிப்புக்களும் தெளிவுறுத்துவது யாதெனில், காந்திஜியைப் போலவே மகரிஷியும் சமூக உறவுப் பிணைப்புகளையும் அனைத்துலக மக்களிடை ஒருமைப் பாட்டையும் பெரிதும் மதித்தார், சமத்துவ மனப்பான்மையை நல்லறத்தின் அறிகுறி யாகவும் அளவு கோலாகவும் கருதினார் என்பதே. அவர் ராமபிரானின் தன்னலமற்ற வீரச் செயல்களை முன் மாதிரியாக எடுத்துக் காட்டினார். ஞானத்தைக் கர்மத் துடன் இணைத்து காந்திஜி புரிந்து வந்த மகத்தான சத்திய சோதனைகளை பரிவன்போடு நோக்கி வந்தார்.

ஞானம் என்பது ஏதோ ஒன்றை அறிவது அன்று; உள்ளது உணர்வே என்ற ஒருமையுண்மையைத் துய்த்து மகிழ்ந்து முழுமையாய், யானற்று இயல்வதே யாகும். நமது கண்களை நாம் காணமுடியாது; கண் களைப் பயன் படுத்தி புறப் பொருளைக் காணத்தான் முடியும். உள்ளதை உணர முடியாது. உணர்வாய்

இருத்தலே மெய்யுணர்வு, மெய்ப் பொருள், 'உள்ளது நான்', 'நான் எனும் உணர்வே உள்ளது' என்ற பின் வேறு நினைவுக்கோ பேச்சுக்கோ இட மில்லை. இந்த தூய மெய்யுணர்வான பரம்பொருளே 'சிவன்' என்பது. "சிவன் உன் முன்னே காட்சியளிப்பார் எனக் காத் திராதே!", என்கிறார் ரமணர். இதற்கு மாறாக, சிவனாகவே திகழத் துணிந்து ஆயத்தமாக வேண்டும். அகந்தை தேயத் தேய, உணர்வு வளர்ந்து பெருகப் பெருக, "சிவமாதல்" நிகழ்கிறது. எதையும் அதுவே வாகி அறிதலே உண்மையான, முழுமையான அறிவு ஆகும். ஏனைய அறிவு வகை சுட்டறிவு, பகுத்தறிவு அரை குறை அறிவுதாம். இத்தகைய மெய்யறிவே பிறருடன் தன்மயமாகும் உறவுக்கு, உணர்வாய் உள்ள ஒருமைப் பாட்டுக்கு வழி கோலுகிறது. மேலும் அது உலகிலுள்ள பற்பல உயிர்களிலும் நாராயணனையே கண்டு, அவனுக்கே அன்பு செலுத்தி, தொண்டுபுரிந்து, ஆராதனை செய்யும் ஆற்றலை அளிக்கிறது.

மகரிஷியின் தூய வேதாந்தமாகிற ஞானமார்க்கமும் மகாத்மாவின் செயல்முறை வேதாந்தமாகிற கர்ம யோகமும் ஒரே அடிப்படையில் எழுந்தவையே; அதாவது அகந்தை ஒன்றே—யான், எனது என்ற பற்றே—ஆன்மிக வாழ்வுக்குத் தீங்கு விளைப்பதாம். காந்தியடிகள் தமது கீதைப் பேருரைகளில் (1926) கூறுகிறார் :

"அகந்தைப் பற்று எவ்வளவு விலகுகிறதோ அவ்வளவுதான் நாம் சத்தியத்தைப் பின்பற்ற முடியும். அண்ட சராசரங்கள் அனைத்தும் ஈசனுள் அடக்கம் என்று கண்டவுடன் திருடனும் புலியும் கூட நாமேயன்றி வேறல்ல என்று உணர்வோம். இந்த ஒருமையுணர்வு

வரும் வரை நமக்கு ஞானம் வரவில்லை என்று உறுதியாகக் கூறலாம்...

"நன்மை புரிவதே மனித இயல்பு; ஏன் எனில் ஆன்மாக்கள் அனைத்தும் ஒன்றே. உயிர்கள் வெவ்வேறாகத் தோன்றினும் இது தோற்றமே; உண்மைப் பொருள் ஒன்றே. இதனை உணர்ந்தவுடன் மனிதனின் அகந்தை கரைந்து விடும்."

மேலும், 1935-ல் ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் காந்திஜி கூறுகிறார் : "மறு பிறப்பை நம்பவேண்டுமாயின் 'நான்' என்றொன்று இருப்பதை நம்பவேண்டியதாகிறது. 'நான்' கிடையாது, உள்ளது இறைவன் ஒருவனே என்றால், யாருக்கு எப்படி மறுபிறவி? 'நான் இல்லை, உள்ளது இறைவனே' என்று அறிவதே மறு பிறவி, இல்லையா?...இந்த அறிவு உள்ளத்திலே தான் உதிக்கும். மூளையால் தர்க்கம்தான் செய்யலாம்! ஆனால் வறட்டுவாதத்தால் யாது பயன்? தொண்டு ஒன்றே அறிவுக்கு—முக்திக்கு—வழியாகும்"

மகரிஷியோவெனில் அறிவு பெற—முக்தி பெற—சேவையுடன் ஆன்ம விசாரமும் தேவை என்கிறார்.

காந்திஜி ரமணமகரிஷியை எப்படி மதித்தார் என்று அளவிடப் பல சான்றுகள் உள்ளன. சங்கர்லால் பாங்கர், பாபு ராஜேந்திரப் பிரசாத். ஜமுனாலால் பஜாஜ் போன்ற தம்மைச் சார்ந்த எவரேனும் மனக் குழப்பம் அல்லது சோர்வு வயப்பட்டால், காந்திஜி அவர்களிடம் "ரமணாச்ரமம் சென்று அங்கு ஒரு மாதம் தங்கிவிட்டுத் திரும்பிவா" என்று கூறுவதுண்டு. அவ்வாறு அங்கு சென்று ஓரிருவாரங்கள் தங்கி அவர்களும் மனத்தெளிவு

பெற்று, தத்தம் பொறுப்புச் சுமைகளை ஏற்கத் தயராய்த் திரும்பிவிடுவார்கள்.

தியானமும் செயலும், அமைதியும் அசைவும், ஒரே இயந்திரத்தின் ஒன்ருேடொன்று ஒத்துழைக்கும் உறுப்புக்களே. எந்திரத்தில் விரைவாய்ச் சுழலும் மேற் கல்லின் அரைப்புத் திறன் கீழ்க் கல்லின் உறுதியான அசை வின்மையைப் பொறுத்துள்ளது. இப்படித்தானே மேல் தாடை கீழ்த்தாடை, சக்கரம்-அச்சு; ஏன், தில்லைத் திருக் கூத்தனின் இரு பாதங்களும் கூட? இவ்வாறே அமைதியும் ஆற்றலும் ஒன்றையொன்று தழுவி நிற்கின்றன.

நம் காலத்திலேயே தூய உணர்வாகிய ஸத் அல்லது சாந்தி ரமணமகரிஷியாக உருவெடுத்து நிற்க, மகாத்மா காந்தியோ சக்தியாகவே—சத்தியத்தின் மூலமே சத்தியத்தை உணர்ந்து, ஸத் தினுள் அடங்கி, சத்தியத்திலிருந்து சத்தியத்திற்குச் செல்லும் சக்தியாகவே—இயங்கினர். உணர்வான சாந்தியும் செயலாற்றலான சக்தியும் ஒரே மெய்ப்பொருளின் இரு தோற்றங்களே.

காலஞ்சென்ற சரோஜினி நாயுடு இவ்வாறு கூறியுள்ளார்: "இன்று நம்மிடையே இரு மகான்கள் வாழ்கின்றனர். ஒருவர் நமக்கு அமைதி அளிக்கும் மகரிஷி; மற்ருெருவர் நம்மைக் கணநேரமும் அமைதியாய் விட்டு வைக்காத மகாத்மா! ஆனுல் இவ் விருவருமே பாரதத்தின் ஆன்மீக மறுமலர்ச்சிக்காக உழைக்கிருர்கள்." ஒரு நோயற்ற சமுதாயத்தில், ஞானியும் கர்மயோகியும் அவரவர்க்கு உரித்தான கடமையாற்றுகின்றனர்; உயிருள்ள உடலில் கண்களும் கைகளும் செயல்படுவது போலவே.

ஞான நாட்டத்தில் செயல் முழுமையுடன் உணர்வாய் ஒழுகும் விதத்தில், ஜிட்டு (J.) கிருஷ்ணமூர்த்திக்கும் ரமண மகரிஷிக்குமிடையே கருத்தைக் கவரும் ஒற்றுமை தோன்றுகிறது. இருவரும் சாதகனை —ஆன்ம விசாரணை நடத்துபவனை—எண்ணத்தின் எல்லைக்கு இட்டுச் சென்று அங்கே அவனைத் தனிமையில் விட்டு விடுகின்றனர்; அறியாமைக்கப்பாலுள்ள மெய்யறிவுக்கடலில் மூழ்கி முத்துக்குளிப்பது சாதகனின் பொறுப்பு. பேராற்றலும் மிகத் தெளிந்த செயலுமாய் நம்முள்ளே பொதிந்துள்ள உணர்வை, வற்றாத ஊற்றினைப் பீறிட்டு வெளிக் கொணரும் சாதனம் யாதென்று இருவருமே ஒன்றைத் தான் வற்புறுத்துகின்றனர். அதாவது தனிமனிதன் தனது சூன்யத்தை ஏற்பதே என்கின்றனர். எனவே, இருவரும் நம்மைக் காலத்திற்கும் எண்ணத்திற்கும் அப்பாற்பட்ட மெய்யுணர்வின் முழுமையினுள் அழைத்துச் செல்கின்றனர்.

இருவருமே உள்ளபடி உணர்வாய் நாம் அதுவாகும் மெய்யறிவு ஒன்றே உண்மை வாழ்வுக்கு ஆதாரமான முழுமை அறிவு என்றும், பிறவகை அறிவுகளெல்லாம் அரைகுறையான, காரியார்த்தமான சிற்றறிவே என்றும் வலியுறுத்துகிறார்கள். இக்கணம் உள்ளதை உள்ளபடி காண்பதற்குப் பழைய நினைவுகள் இடையூறாய் நிற்பதால், வாசனைகளிலிருந்து விடுபட்டு இப்போது நிகழ்வதை நிலைக் கண்ணாடிபோல் பிடித்துக் காட்டும் கருவியாகவே நமது மனம் பயன்படல் வேண்டும் என்று இருவரும் கூறுகின்றனர். எண்ணங்களும் சொற்களும் உண்மையை மறைப்பதால் பேச்சைவிடப் பன்முறை சக்தி வாய்ந்தது மவுனத்தில் நிகழும் உள்ளக் கலப்பு,

என்று இருவரும் கருதுகின்றனர். இருவர் நோக்கிலும் அனுபவிப்பவன் ஒரு தோற்றம், அனுபவமே உள்ள பொருள். சிந்தனையாளன் சிந்தை கிளப்பிக்காக்கும் ஓர் கற்பனைப் படைப்பே.

இருவருமே வரையறுக்கப்பட்ட கொள்கை எதனையும் போதிக்கவில்லை; அதற்கு மாருக ஒரு நோக்கை, அணுகு முறையை, விசாரணை வழியைக் காட்டுகிருர்கள். இனி வரும் பிறவிகள் என்றும், பரலோகங்கள் என்றும் எங்கோ கவனத்தைச் செலுத்தாமல், உடனடியாய் நடைமுறையிலே நேருக்குநேராய் உள்ளது யாது என்று துருவிப் பார்க்குமாறு இருவரும் ஊக்குவிக்கிருர்கள். சமயக் கட்சி வெறி, மறை பொருள் கவர்ச்சி, ஸித்தி-ரித்தி-வாணிபம் இவை எல்லாம் மனித உணர்வின் வக்கரிப்புகள், மனித ஒருமைப்பாட்டைத் தகர்ப்பன என்று கண்டிக்கிருர்கள். நாளை, மறுநாள் என்று ஒத்திப் போடாமல், இன்றே இங்கே மனிதன் உணர்வு பரிணமித்து, இயல்புமாறி, மனிதனுக வளர்ந்து, சமூகத்தையும் முன்னேற்றி, ஆன்மிகத்தை வளர்த்து எல்லா உயிரிலும் முழுமையைக் காணமுடியும், காணவேண்டும் என்று இவ் விருவரும் வலியுறுத்துகிருர்கள். தன்னிழப்பால், தாய்மை அன்பால் அனைத்தையும் அரவணைக்கும் ஆற்றல் ஒன்றிலேதான் இவ்விருவரும் நம்பிக்கை கொண்டவர்கள். இந்த அன்பின் ஆற்றல் ஒன்றுதான் சீர்குலைந்து சின்னுபின்னமாய்க் கிடக்கும் உலகை உய்விக்கவல்ல சக்தி என்று கருதுகிருர்கள்.

எனினும், இப் பெயரிலாப் பேரின்பத்தைக் கிருஷ்ணமூர்த்தி மவுனத்தின் மூலமாகவோ அல்லது வழி வழி வராத புதுமொழி மூலமாகவோ உணர்த்த

முயலுகிறார். உள்ளங்கள் உண்மையில் ஒன்றிவிட்டால் அவ்வுறவே தனக்கேற்ற மொழிதனை உருவாக்கிக் கொள்ளும் என்பது இவரது துணிபு. ஆனால் மகரிஷியோவெனில் தொன்று தொட்டுத் தலைமுறை தலைமுறையாய் உலக சமயங்கள் வாயிலாய் வந்துள்ள புராணக் கதைகள், உவமைகள், சின்னங்கள், நியாயங்கள் முதலியவற்றைத் தாமும் ஏற்றுக் கையாண்டு பயன்படுத்துகிறார். பழக்கமாகிவிட்ட பயிற்சிகளைச் சாதகர்கள் கைவிடுமாறு அவர் கண்டிப்பதில்லை. ஆனால் பிற பயிற்சிகளுக்குத் துணையாகவோ மாற்றாகவோ ஆன்ம விசாரத்தை மெல்ல மெல்ல மேற்கொள்ளுமாறு ஊக்கமளிப்பார்.

கார்லைல் தமது ஸார்ட்டர் ரிஸார்ட்டஸ் ("புத்தாடை பூண்ட தையற்காரன்"), எனும் நூலிலே சமயங்களின் தெய்வீக உயிரைத் தாங்கிச் செல்லப் புதிய உடலும், அந்த உடலை உடுத்தப் புதிய ஆடையும் வேண்டுமே' என்று கதறினார். ஐயோ, பாவம்! அதன் விளைவே நாஸிஸம் எனும் வெறியாட்டம் என்று தோன்றுகிறது.

புராணக் கதைகள் மக்களிடையே தாமாகத் தோன்றுகின்றன, தழைக்கின்றன; அப்படியே வியாசர், வால்மீகி போன்ற மாமுனிவர்களும் அம்மக்களிடையே தோன்றுகின்றனர். புராணங்களையும் மகரிஷிகளையும் முயன்று உழைத்து உருவாக்கமுடியாது. அரும்பயிராகிய மகரிஷிகளைப் புறக்கணித்தலும், மகாத்மாக்களைக் கொன்று ஒழித்தலும் முடியும்; புராணங்களைத் தவருகப் பயன்படுத்தவும் அல்லது கவனிப் பாரின்றிச்சல்லரித்து

மறையவிடுதலும் முடியும். சரித்திரம், தத்துவம், மன வியல் முதலிய பலவித கண்ணேக்கிலும், பகவன் தாஸ், ஆனந்த குமாரசுவாமி, ஜிம்மர், டேனியலூ, சித்பவா னந்தர் போன்ற அறிஞர் பலர், புராணக் கதைகள் இன்றும் உயிர்த்துடிப்போடு நிலவுகின்றன, அவை மக்கள் வாழ்வை வளமாக்க வல்லவை என்று விளக்கி யுள்ளார்கள். இந்த உண்மையையும் கதைகளில் பொதிந்துள்ள ஆழ்ந்த உட்கருத்துக்களையும், அருட் செல்வங்களையும் ரமண மகரிஷியும் காந்தியடிகளும் நன்கு அறிந்து பயன்படுத்தினுர்கள்.

கடவுளர் எவ்வாறு தோன்றினர்கள், எந்த உட் பொருளை உருவகப்படுத்துகிருர்கள் என்று தெரிந்தால் அவர்களுடைய சக்தி குறைவானேன்? தாய்-தந்தை-குழந்தை, ஆண்டான் அடிமை போன்ற உறவுகள் இன்றும் அறநெறியை விளக்கவில்லையா? நவயுக மனிதனின் ஆசாபாசங்களையும் நேர்மையாக்கி நிறை வுறச் செய்யவும் உதவவில்லையா? பக்தி என்று சொல்லிக்கொண்டு கடமையைத் தப்பியோடி சமுதாயப் பொறுப்புக்களைத் தட்டிக்கழித்தல் பெருந்தவறுகும் என்று மகரிஷியும் மகாத்மாவும் எச்சரிக்கின்றனர். அன்று சங்கரரும் ராமானுஜரும் போதித்தருளிய உண்மையான, உயிருள்ள வேதாந்தத்தையே இவ்விருவரும் புதுப் பாணியில், இன்றைய மொழியில் உணர்த்துகின்றனர்.

பொது அறிவு, பகுத்தறிவு, காரண-காரியத் தொடர்பு, எதையும் கைவிடாமல் ஒவ்வொருவரும் தமது ஆன்மாவைக் கண்டு ஆன்மாவாக இருந்து, உயிருள்ள இந்தப்பிரபஞ்சத்திலே நோயற்ற வாழ்வு வாழும் ஓர்

உறுப்பாக இயங்கி, அவ்வப்போது தூய உணர்வின் பேரின்பப் பரவசத்தைத் துய்த்து. இயல்பாய் வந்தடையும் கடமைகளை நிறைவேற்றி, இன்பத்திலும் துன்பத்திலும் நேர்மையை, முழுமையை கடைப்பிடித்து மனித இயல்பைக் காக்கும் வழியை மகரிஷி காட்டுகிறார்.

அடக்கமாய், தூய மனதுடன் ஆன்ம விசாரத்தில் இறங்கும் எவரும் இறுதியான உறுதிப் பொருளை 'சிக்கெனப்பிடித்து உள்ளிருத்தி', இன்பமாய் உணர்ந்து, ஆற்றலாய்ப் பயன்படுத்தும் உரிமையுள்ளவரே. வானத்தில் தோன்றும் ஞாயிறு நம்மனைவருக்கும் தவறாது ஒளியும் வெப்பமும் பரப்புவது போலவே, ஆன்மாவாகிய இம் மெய்யுணர்வு நமது உள்ளத்தில் எழுந்து நமது தனி வாழ்வையும் பொது வாழ்வையும் மலர்விக்கும். 'நான் யார்' எனும் விசாரம் துவங்கியதுமே அகந்தை எனும் இருள் மெள்ள மெள்ள அகன்று மெய்யுணர்வின் ஒளியில் கலந்து மறைவது இயற்கையே.

பெரும்பாலும் மோனமாய் கற்சிலைபோல் அமைதியாய் அமர்ந்திருப்பார் மகரிஷி. ஆனால் அவரது பக்தர்கள் யாரேனும் உற்சாக மிகுதியால் ராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள், அரவிந்தர் போன்ற சான்றோரை அவரோடு ஒப்பீடு செய்து அவர்களைச் சற்றுக் குறைத்துக் கூறினால், உடனே நிமிர்ந்து உட்கார்ந்து விமர்சகனின் குற்றத்தைத் தமதாய்ப் பாவித்து சினத்தைவிட விசனத்துடன் "நமது அகந்தை இப்படியெல்லாம் பேசச் சொல்லுகிறது" என்பார்.

மகரிஷியை வேதாந்திகளுள் ஓர் மஹாவேதாந்தி என்று கருதி, அவரது போதனைகளைப் பாகுபடுத்திப்

பட்டியல் போட்டு ஆராய்வோமானால், அவர் உண்மை மதிப்பைக் குறைப்பதோடு நமக்கு நாமே வறுமை வரவழைத்துக் கொள்வதும் ஆகும். அவரை ஒரு மனிதராக—முழுமையான மானிடத்தின் வடிவமாக—நமது யுகத்தின் புருஷோத்தமராகக் காண்பதுதான் நேர்மையும் அறிவும் ஆகும். ரமணர் முன்னிலையில் அவரது அமைதியின் ஆற்றலை அறிவாளிகள் கண்டு கொள்ளவோ விண்டுரைக்கவோ திணறினார்கள்; பறவைகளும் விலங்குகளும் குழந்தைகளும் பாமரரும் எளிதில் உணர்ந்தனர். ஆகவே, மகரிஷியை மலையுச்சி மேலமர்த்தி பொது மக்களை விட்டுப் பிரித்துப் பேசுதல் சரியன்று. அவரது தனித் தன்மையின்மை மகத்தானது, வியக்கத் தக்கது. ஆனால் இந்த இன்மைத் தன்மையே அவரை நமது நாட்டுமக்களின் உண்மைப் பிரதிநிதியாக்குகிறது. அவர் எல்லா மனிதருளும் மறைந்துறையும் மூலப் பிரதியாவார். மரத்திலே தோன்றி ஒளியை நாடி, மரத்தை வளர வைக்கும் இலையாய், இனிக்கும் கனியாய், மனிதப் பரிணாமத்தின் மையக் கருவாய், வருங்கால மனிதனுக்கு முன்-மாதிரியாய், மனித குலத்தின் வளர்ச்சி வேகத் துடிப்பாய் விளங்குகிறார்.

கார்ல் யுங் என்ற மனவியல் விஞ்ஞானி கூறுகிறார்:

“ஸ்ரீ ரமணர் இந்திய மண்ணின் உண்மைப் புதல்வர். கலப்படமற்ற தூய்மை உரு; காணக் கிடைக்கா அரிய காட்சி. இந்தியாவின் அப்பழுக்கற்ற வெண்மை வெளியில் அவர் புத்தொளி வீசும் வெண்மையொளி.

“ஸ்ரீ ரமணரின் வாழ்விலும் போதனையிலும் நாம் இந்தியாவின் சிறப்புத் தூய்மையை, உலகப் பற்றற்ற, பற்றறுக்கவல்ல மனித குலத்தின் தூய்மையைக் காண்

கிறேம். பல்லாயிரம் ஆண்டுகளாய் ஒலித்து வரும் கீதமே அது. இந்த கீதம் ஒரே ஒரு மாபெரும்சுருதியின் அடிப்படையில் எழுந்து, ஆயிர வண்ண மெட்டுக் களுடன் படர்ந்து, இந்திய ஆத்மாவின் சக்தியால் மீண்டும் மீண்டும் இளமை எய்தி என்றும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. அதன் இன்றையத் திருவ வதாரம் ஸ்ரீ ரமணரே ஆவார்...

"ஸ்ரீ ரமணரின் வாழ்வும் வாக்கும் இந்தியர்களுக்கு மட்டுமின்றி மேலை நாட்டினருக்கும் பெரும பயன் தரக் கூடியவையே. அவை சுவை மிகுந்த பதிவுச் சான்றுகள் மட்டுமல்ல தன்னை மறந்து, தற்கட்டுப் பாடின்றி, தடு மாறித் தவிக்கும் மனித குலத்திற்கு எச்சரிக்கையாகவும் அவை அமைந்துள்ளன."

பால் தில்லிச் என்பார் தமது "கிறிஸ்தவமும் உலக மதங்களின் பரஸ்பர எதிர்படுதலும்" என்ற நூலிலே கூறுகிறார் :

"பக்தி, சிந்தனை, செயல் இவற்றின் மூலம் அவரவர் தத்தம் மதத்தின் ஆழத்தில் மூழ்குங்கால், தனித்த மதம் என்பதே பொருளற்றதாகிவிடுகிறது. அப்போது மதம் சுட்டிக்காட்டுவது மதத்தின் சிறப்பியல்பை ஊடுருவிச் சென்று, ஓர் ஆன்மிக விடுதலையாக உயர்கிறது ; மனித வாழ்வின் இறுதிப் பொருளைப் பிற மதங்களிலும் உள்ள தாகக் காண்கிறது."

இந்த ஆன்மிக விடுதலையை, எங்கும் நிலவும் ஆன்மிக சாந்நித்யத்தைதான் மகரிஷி ரமணர்—ஜீவன் முக்தர் என்ற முறையில்—போதித்தார் ; வாழ்ந்து

காட்டினர். ஒவ்வொரு தர்மத்துக்கும், சமுதாயத்துக்கும் குறிக்கோளாய், அவற்றைக் கடந்தும் நிற்பதாய் உள்ளது வீடு அல்லது மோட்சமே. ஆனல் இந்த மோட்சம் எங்கோ வெகுதூரத்திலுள்ள லட்சியம் அல்ல; ஒவ்வொருவரும் எப்போதும் மெய்யுணர்வோடு ஒன்ருயுள்ள உண்மையே என்று விளக்கினர்.

உணர்வோடு ஒன்றி, எதுவும் அதுவே தானய்த் துலங்கும் தன்மையை உணர்வதே உண்மையை ஏற்றுக் கடைபிடித்தலாகும். இதன் மூலம் அவரவர் தத்தம் சமுதாயத்தையும்—மனித குலத்தையுமே—பொறுப்புள்ள உறுப்பாய்த் தாங்கும் பணிவும், உய்விக்கவல்ல உணர்வுப் பிரஞ்ஞையாய் இயங்கும் துணிவும் பெறுகின்றனர்.

நூல் அட்டவணை

கணபதி சாஸ்திரி,

காவ்ய கண்ட — ஸ்ரீ ரமண கீதை (சமஸ்கிருதம்) உபதேச சாரம் [வியாக்கியானம்] (ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை 606603.)

சாது ஓம் — ரமண வழி (ஸ்ரீ ரமணாச்ரமம்) உபதேச வுந்தியார் (ஸ்ரீ ரமணாச்ரமம்) சாதனைச்சாரம்: குரு வாசகக் கோவை—உரை (ஸ்ரீ சாது ஓம், திருவண்ணாமலை—3)

நடனானந்தா, சுவாமி — ரமண தரிசனம் (ஸ்ரீ ரமணாச்ரமம்)

முருகனார் — ரமண சந்நிதி முறை (ஸ்ரீ ரமணாச்ரமம்) குருவாசகக் கோவை (ஸ்ரீ ரமணாச்ரமம்)

ரமண மகரிஷி — நூற்றிரட்டு (ஸ்ரீ ரமணாச்ரமம்) பகவத் வசனாம்ருதம் என்னும் திருவருண்மொழி (ஸ்ரீ ரமணாச்ரமம்)

ஆங்கில நூல்கள்

Anantamurti — *Life and teachings of Sree Ramana Maharshi* (Author, Bangalore,

Anantanarayanan, M.— *Quintessence of Wisdom or Thirty Verses* (Sri Ramanas'amam, Tiruvannamalai)

Blyth, R.H. — *Zen in English Literature* (Hokuseidu, Tokyo)

Brunton, Paul — *Search in Secret India* (Rider)
—Maharshi and his Message (Sri Ramanasramam)

Chadwick — *A Sadhu's Reminiscences* (Sri Ramanasramam)

Chidbhavananda, Swami — *Facets of Brahman* (Ramakrishna Tapovana, Tiruparaiturai Tamil Nadu)

Cohen — *Guru Ramana* (Sri Ramanasramam,
—*Reflections on "The Talks"* (Sri Ramanasramam)

Danielou, Alain — *Hindu Polytheism* (Routledge Kegan Paul, London)

Devaraja Mudaliar — *Day by Day with Bhagavan* (Sri Ramanasramam)
—*My Reminiscences* (Sri Ramanasramam)

Goldsmith, Joe — *The Mystical I* (George Allen & Unwin)

Gregg, Richard B. — *What is all this about and What am I?* (Navajivan, Ahmedabd)

Kapali Sastri — *The Maharshi* (Sri Ramanasramam)
The Cardinal Teaching (Sri Ramanasramam)

— *Commentary on Sat Darsan* (Sri Ramanasramam)

Mehta, Rohit — *The Nameless Experience* (Bharatiya Vidya Bhavan)

Mountain Path — Quarterly (1964 January onwards) (Sri Ramanasramam)

Nagamma, Suri — *Letters from Sri Ramanasramam* (Sri Ramanasramam)

Narasimhaswami, B. V. — *Self-Realization: Life and Teachings of Ramana Maharshi* (Sri Ramanasramam)
—Commentary on "Upadesa Sara" (Sri Ramanasramam)

Osborne, Arthur — *Ramana Arunachala* (Sri Ramanasramam)

— *Ramana Maharshi and the Path of Self Knowledge* (Rider)

— *Teachings of Ramana Maharshi* (Sri Ramanasramam)

Ramachandran, T.P. — *The Concept of Vyavahar in Advaita Vedanta* (Madras University)

Sadhu Om — *Path of Sri Ramana* (City Book House, Kanpur)

Sarma, D.S. — *Hinduism Through the Ages* (Bharatiya Vidya Bhavan)
—*Renascent Hinduism* (Bharatiya Vidya Bhavan)

Sartre, Jean Paul — *Being and Nothingness* (Washington Square Press, New York)

Tillich, Paul — *Dynamics of Faith* (Harper)
The Courage to Be (Collins—Fontana Library, London)

Wel Wu Wei — *Fingers Pointing to the Moon* (Routledge)
— *Ask the Awakened* (Routledge)
— *Why Lazarus Laughed* (Routledge)
— *All Else is Bondage* (Oxford University Press)
— *The Open Secret* (Oxford University Press)
— *Posthumous Papers* (Oxford University Press)

"Who" — *Mahayoga* (Sri Ramanasramam)

Zimmer, Heinrich — *Pilosophies of India* (Pantheon Book)
— *Myths and Symbols in Indian Art and Civilization* (Pantheon Books)

புத்தரும் சங்கரரும் காட்டிய ஞானமார்க்கத்தையே தான் இந்நூற்றுண்டிலே நம்மிடை வாழ்ந்த ஸ்ரீரமண மகரிஷி அவர்களும் எடுத்துரைத்தார்; கடைப்பிடித்துக் காட்டினர். அன்பு, அமைதி, அடக்கம் முதலிய நற்பண்புகளின் திருவுருவாகத் திகழ்ந்த அவரது வாழ்க்கையின் விவரங்களையும், ஆன்ம விசாரத் தத்துவத்தையும், இந்நூலாசிரியர் எளிய நடையில் விளக்கியுள்ளார் சிந்தனை அகமுகமாம் ஆன்மவிசாரம் ஓர் முழுமையான வாழ்க்கைப் பாதை என்பது மட்டுமல்ல, அதுவே இன்றைய மனிதனின் மனக் குழப்பங்களைத் தீர்த்துத் தெளிவான பொது வழியையும் காட்டும் என்பதை இந்நூல் உணர்த்தும்

இந்நூலாசிரியர் பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்கள் சென்னை ராஜதானிக் கல்லூரியிலும், சட்டக் கல்லூரியிலும் பட்டம்பெற்று ஆக்ஸ்ஃபோர்டு சர்வகலாசாலையிலும் பயின்றவர். இருபது ஆண்டுகளுக்கு மேலாக அண்ணுமலை பல்கலைக் கழகத்திலும், சென்னை ராஜதானிக் கல்லூரியிலும் ஆங்கிலப் பேராசிரியராகச் சிறப்புப் பணியாற்றிய பின், முகமதியக் கல்லூரியின் முதல்வராக 1948 ல் நியமனம் பெற்றுர். அதனை அரசாங்கக் கலைக் கல்லூரியாக உருவாக்கி விஸ்தரித்த சீரிய பணியிலே பெரும்பங்கு பெற்றுர். சென்னைக் கல்வித்துறையிலிருந்து 1953 ல் ஓய்வு பெற்றவுடன் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழின் கூட்டாசிரியராகச் சேர்ந்தார். பின்னர், 1960 முதல் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் இந்திய அரசு வெளியிட்ட "காந்தி நூற்திரட்டின் தொகுப்பாசிரியராயிருந்தார்.

1940 க்கும் 1950 க்கும் இடையே பலமுறை திருவண்ணுமலை சென்று ஆசிரமத்தில் தங்கி மகரிஷியுடன் உரையாடும் பேறுபெற்ற ஆசிரியர். 1963-ல் டில்லி ரமண கேந்திரத்தை நிறுவினுர். தற்போது சென்னையில் வசித்து வருகிறுர்.

ரூ. 12.25

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா